Koviloor Digital Library

அறுபத்து மூன்று நாயன்மார்கள் வரலாறு

ACC No: 355398
5-5

கோச்செங்கண்ணாயனார் சிவத்தொண்டு சிவசபை
சென்னை

Koviloor Digital Library

Koviloor Digital Library

5-5

சிவசிவ

திருச்சிற்றம்பலம்

அறுபத்து மூன்று நாயன்மார்கள் வரலாறு

சைவத்தின் மேல் சமயம் வேறில்லை அதிற்சார் சிவமாம்
தெய்வத்தின் மேல் தெய்வம் இல்எனும் நான்மறைச் செம்பொருள்
வாய்மை வைத்த சீர்திருத் தேவார மும் திருவாசகமும்,
உய்வைத் தரச் செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்துணையே.

வெளியிட்டோர் :

கோச்செங்கண்ணாயனார் சிவத்தொண்டு சிவசபை

448/9, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
தண்டையார்பேட்டை, சென்னை-81

உரை ஆசிரியர் :

சிவ. த. வெங்கடேசன்

செயலர், கோச்செங்கண்ணாயனார் சிவத்தொண்டு சிவசபை
தொலைபேசி : 96772 26260

Please visit : www. chennaisivapathigal.blogspot.com

Koviloor Digital Library

சிவசிவ
திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்

1. அருளுரை III
2. முன்னுரை VII
3. அகர வரிசை X
4. திருத்தொண்டர்த்தொகை XI
5. 63வர் குரு பூசை விவரம் 310
6. பன்னிரு திருமுறை, சாத்திர விளக்க அட்டவணை 314

நூல் குறிப்பு

தலைப்பு : 63 நாயன்மார்கள் வரலாறு
உரையாசிரியர் : சிவ. த. வெங்கடேசன்
நான்காம் பதிப்பு : தை மாதம், ஜனவரி 2022
படிகள் : 3000
அளவு : கிரவுன் 1/8
தாள் : 11.6 kg (60 gsm)
பக்கம் : 321+15 = 336
விலை : ரூ. 50/–
அச்சிட்டோர் : மணி ஆப்செட்,
நூம்பல் கிராமம், திருவேற்காடு
சென்னை – 600 077 செல்: 9444409824

நூல் கிடைக்குமிடம்: 448/9, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
தண்டையார்பேட்டை, சென்னை – 81
செல் : 96772 26260

கோச்செங்கண்ணாயனார் சிவத்தொண்டு சிவசபையில் வெளியிட்டுள்ள புத்தகங்கள்

1. சென்னை 444 சிவாலய வழிகாட்டி நூல் ரூ.30/–
2. பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ பதினாறு திருப்பதிகங்கள் ரூ. 5/–

Koviloor Digital Library 5-5

சிவாயநம

அருளுரை

திருத்தவத்துறை. ச.வேதநாராயணன்,
கிழக்குத் தாம்பரம், சென்னை

சைவ சமயத்தின் மறுமலர்ச்சி ஆறாம் நூற்றாண்டு அளவில் உதயமாயிற்று. சுமார் 400 ஆண்டு காலம் களப்பிரர் ஆட்சியில் வேறு மதங்கள் தலைதூக்கி இருந்தன. சைவத்தை உய்விக்க எமையாளும் ஈசன் இருவரை நியமித்தான். நன்றாகப் புடமிடப்பட்ட முதியோர் ஒருவரையும் கருவிலேயே திருவுடையவரான குழவி ஒருவரையும் தேர்ந்தெடுத்தான். வெவ்வேறு வாழ்க்கைப் பின்னணியிலிருந்து வந்தவர்களுக்கு ஒரேவொரு விதமான நோக்கத்தை அளித்து சைவத்தை மேம்படுத்தி சைவத்தின் மேற் சமயம் வேறில்லை என்பதை உறுதிப்படுத்த தென்னாடுடைய சிவன் அவர்களைத் தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைத்தான். அவர்களால் இங்கே அமண, சாக்கியர்களின் சிறப்பு இறங்கத் தொடங்கியது. திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தருக்குப் பின்பு வந்த சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் மற்ற மதத்தினரால் இன்னல் அடையவில்லை.

பெரியபுராண மாக்கதை உண்டாவதற்கு முக்கியமான அடியார் விறன்மிண்டரே. எதிர்மறையில் அவர் ஆற்றிய செயல்தான் திருத்தொண்டர் தொகையாகவும், அதன் வாயிலாக பெரியபுராணமாகவும் பரிணமித்தது.

பெரியபுராணம் ஒரு காப்பியம் என்றே உணர்கிறேன். ஓர் காப்பியத்திற்கு மூன்று தகுதிகள் வேண்டும். 1. தன்னிகரில்லாத் தலைவன் 2. கருப்பொருள் 3. வருணனைகள். இங்கு அடியார்கள் யாவரும் தலைவர்கள். சிவனின் திருத்தாள் ஒன்றே அடையப்பட வேண்டியது. பெரியபுராணத்தில் வரும் வருணனைகள்

Koviloor Digital Library

நம்மை அங்கேயே அழைத்துச் செல்கின்றன. சீவக சிந்தா மணிக்கு மேலாக இந்நூல் சோழ மன்னனை வசப்படுத்தியது.

இந்நூலில் போற்றப்படும் சிவனடியார்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலிய வழிகளின் மூலம் வீடுபேறு அடைந்தனர். இவர்களின் வரலாற்றை வெளிக் கொணர்ந்துள்ள சிவ.த.வெங்கடேசனின் எழுத்து என்னைக் கவர்கிறது. எளிய நடையில் ஆற்றொழுக்காக முக்கியமான நடப்புக்களை சிறப்பு எழுத்துக்களில் காட்டியுள்ளது போற்றுதற்குரியது. மேலும் இந்நூலில் வரும் தலங்களின் தற்காலப் பெயரும், அவை அமைந்துள்ள இடங்களின் குறிப்பும் பயணிப்போருக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

அதிலும் சிறப்பு ஒவ்வொரு நாயனார் வரலாற்று இறுதியிலும் ஆசிரியர் தந்துள்ள கருத்துக்கள். இன்றைய நிலவரத்தைச் சுட்டிக் காண்பித்து உண்மையில் சிவனடியார் எப்படி இருக்க வேண்டும் என்று காட்டியுள்ளது. ஆசிரியருடைய ஆதங்கம், ஆர்வம் முதலியவற்றை வெளிக்கொணர்கிறது. இந்நூலை வெளியிட ஆசிரியர் எடுத்துக்கொண்ட காலம், பயணங்கள், முயற்சிகள் எல்லாம் அன்னாருடைய எழுத்துக்கள் விளக்குகின்றன. திரு வெங்கடேசனுடைய எழுத்துப்பயணம் மேலும் வெற்றிநடை போடட்டும் என்று வாயார மனதார வாழ்த்துகின்றேன்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியாரவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

Koviloor Digital Library

உ

ஓம் நமசிவய ஓம்

அருளுரை

அன்னை.சிவ.நா.ஞானேஸ்வரி, சிவசபா,
ஓம் குடில், மப்பேடு, கிழக்கு தாம்பரம், சென்னை

என்றும் நிலையாகவும், எப்போதும் மெய்யாகவும் விளங்கும் பரம்பொருளை வாழ்வின் பொருளாக கொண்டு வாழ்ந்த **"சிவநேச செல்வர்களின்"** வரலாறு இது.

அம் மாண்புமிகு அடியார்கள் வாழ்ந்த காலத்தே நாம் அனைவரும் உண்டு, புல்லாக – பூடாக – புழுவாக ஏதோ ஒன்றாக திருவருளின் கருணையால் ஆறறிவு பெற்ற மானிட பிறவி பெற்றதும் அவ்வடியார்கள் பெற்ற பெரும் பேற்றினை நாமும் பெற்றிட உறுதுணையாக இருக்கும் நாயன்மார்களின் வரலாறு இது.

சென்னை சிவப்பதிகள் **444 வழிகாட்டி** நூலினை தந்த **சிவ.த.வெங்கடேசன்** அவர்களின் இந்த 63 நாயன்மார்கள் வரலாறு. இன்றைய கால கட்டத்தில் என்னென்ன வகையில் நமது சிந்தனை, செயல்பாடுகள் செம்மைப்பட வேண்டும் என்பதை ஒவ்வொரு நாயன்மார்களின் வரலாற்றின் நிறைவிலும் கருத்து வடிவில் தெரிவித்திருப்பது மிகவும் பயன் உள்ளதாகவும், பாராட்டுக்கு உரியதாகவும் உள்ளது.

Koviloor Digital Library

ஏட்டு கல்விக்கு முக்கியத்துவம் தரும் பெற்றோர்கள் தம் குழந்தைகட்கு (ஆண்–பெண் இருபாலர்க்கும்) அழியாத, நிலைபெற்ற சம்பத்தை பெற இறை சம்பந்தம் (சிவதீக்கை) செய்து தர வேண்டியது முக்கிய கடமையாக கொள்ள வேண்டும். அறிந்து தொட்டாலும் அறியாமல் தொட்டாலும் நெருப்பு சுடும் என்பது போல், இறைவனுடன் தினம் உறவாடும் பழக்கம் வழக்கமாகும் போது நம்மை அறியாது நம் ஆன்மா மேன் நிலைக்கு உயர்த்தப்படும் என்பதில் சந்தேகமேதுமில்லை.

நாயன்மார்களின் வரலாறு பள்ளிகளில் பாடமாக்க வேண்டும். இன்று அந்த கல்வியில் வளர்ந்த நாளைய தலைமுறையின் கைகளில் சமுதாயம் சீரும் சிறப்பும் பெற்று இறை நிலை நிற்கும்.

சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

– திருமூலர்

நாள் : 6.3.2016
இடம் : சென்னை–126

இறைபணியில் என்றும்
அன்னை ஞானேஸ்வரி, சிவசபா

Koviloor Digital Library

சிவாயநம

முன்னுரை

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரிய சிவபெருமானின் திருவடியை அடைந்த எண்ணில் அடங்காதவர்களில் அறுபத்தி மூன்று நாயன்மார்களில் ஒருவரான, 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டர்தொகை என்னும் திருப்பதிகத்தினை சிவபெருமானே தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்ற முதல் வரியை எடுத்துக் கொடுக்க, இப்பூமியில் வாழ்ந்து சிவன் கழல் சேர்ந்த அறுபது நாயன்மார்களையும் ஒன்பது தொகையடியார்களையும் விளக்கி திருப்பதிகத்தைப் பாடினார்.

இப்பாடலை ஆதாரமாகக் கொண்டு 11–ம் நூற்றாண்டில் திருநாரையூரில் அவதரித்த நம்பியாண்டார் நம்பி, திருத்தொண்டர் திருஅந்தாதி என்னும் 89 பாடல்கள் அடங்கிய வகை நூலினை இயற்றினார். இப்பாடல்கள் நான்கு வரிகள் கொண்டதாகவும், நாயன்மார்களின் பிறந்த ஊர், வாழ்க்கை குறிப்புக்களை கொடுத்ததோடு, சுந்தரமூர்த்தி சுவாமி களையும், அவரது தாய் தந்தையரான இசைஞானி, சடையனார் ஆகியோரையும் இணைத்து அறுபத்தி மூவராக நமக்கு வழங்கினார்.

12–ம் நூற்றாண்டில் குன்றத்தூரில் (சென்னை) அருள்மொழித்தேவர் என்ற பெருமகனார் அவதரித்தார். அவரது மரபின் பெயர் சேக்கிழார் ஆகும். இவரே திருத்தொண்டர் தொகை, திருத்தொண்டர் திருஅந்தாதி

Koviloor Digital Library

என்னும் நூலினை ஆதாரமாக கொண்டும், முதல் ஏழு திருமுறைகளை மிக ஆழமாக படித்தும் பல திருத்தல யாத்திரை செய்தும், பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணத்தை 4273 பாடல்களில் நாயன்மார்களின் வரலாற்றை விரித்து (கற்பனையில் அல்ல) நடந்த உண்மைகளை உள்ளபடி எழுதி நூலாக வெளியிட்டார். இந்நூலே பெரியபுராணம் என அழைக்கப்படுகிறது. இவ்வாறு தொகை, வகை, விரி என்ற அமைப்பும், அறுபத்தி மூன்று அன்பர்களின் வரலாற்றையும் உள்ளடக்கிய இலக்கியம் இது ஒன்றே.

இப்பெரிய புராணத்தை எழுதிய சேக்கிழார் பெருமானே, தில்லையில் (சிதம்பரம்) பெரியபுராணத் தொடர் சொற்பொழிவாக சித்திரை மாதம் திருவாதிரையில் தொடங்கி அடுத்த ஆண்டு சித்திரை திருவாதிரையில் நிறைவு செய்தார். அப்போது மன்னராக இருந்த அநபாயச்சோழன் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து வந்த சிவனடியார்களுக்கு அவ்வோராண்டிற்கு அடியவர்கள் தங்கும் வசதியையும், உணவும் வழங்கினார்.

சேக்கிழார் பெருமானின், பக்தி சுவை சொட்ட சொட்ட பாடிய பெரியபுராணத்தை பல அடியவர்கள் உரை செய்தும், பேசியும் வருகிறார்கள். இவ்வழியில் எனது குருநாதர் மயிலாடுதுறை பேராசிரியர் கு.சுந்தரமூர்த்தி ஐயாவின் பெரியபுராண சொற்பொழிவை அடியவன் திருவருளால் கேட்கும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றேன். இந்நிலையில் சென்னை சிவப்பதிகள் 444 என்னும் நூல் வெளியிட சிவத்திரு மயூரபிரியா (கைலாஸ் பிரிண்டர்ஸ்) அவர்களின் தொடர்பு கிடைக்கப்பெற்று அதன் பயனாக திருவேட்டீஸ்வரன் கோயிலில் நடைபெற்று வரும் அறுபத்தி மூவர் குருபூசையில்,

Koviloor Digital Library

அந்தந்த நாயன்மார்களின் குரு பூசை நாளில் அந்த நாயன்மார்களின் வரலாற்றை பேசும் வாய்ப்பு திருவருளால் அடியவனுக்கு கிடைக்கப் பெற்றது. அதனால் ஏற்பட்ட ஆர்வத்தாலும், திருவருள் உந்துதலாலும் தன் கருத்து அல்லாது, சேக்கிழார் பெருமான் வழியில் அறுபத்தி மூவர் வரலாற்றை எளிய முறையில் அமைக்க ஆவல் ஏற்பட்டது. இந்நூலை படித்த பின் இவ்வடியார்களின் பெருமையை நமது வருங்கால வாரிசுகளுக்கு சிறு வயதிலிருந்தே கற்பித்து பக்தி, ஒழுக்கம் மிக்க நன்மக்களை உருவாக்குவோமாக.

நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணிகண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழ எடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டர்த் தொகை முன் பணித்த திருவாளன்
வாசமலர் மென் கழல் வணங்க வந்த பிறப்பை வணங்குவோம்.

– சேக்கிழார் பெருமான்

அடியவன்
சிவ.த.வெங்கடேசன்,
செயலர், கோச்செங்கண்ணாயனார்
சிவத்தொண்டு சிவசபை

குறிப்பு : பெரியபுராணத்தில் தங்களுக்கு தேவைப்படும் விளக்கங்களை அறிய அடியவன் தொகுத்துள்ள சைவ நெறி விளக்க வினாவிடை பகுதியை www. chennai sivapathigal.blogspot.com என்ற இணைய தளத்தில் காணவும். மேலும் தொகை அடியவர்களான ஒன்பது பேரும் தனி நபர் அல்ல. அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட அன்பர்கள் திருக்கூட்டம் ஆகும். எனவே நாமும் தொகை அடியார்களின் வரலாற்றுக்கு வரிசை எண் தராது இந்நூலை அமைத்துள்ளோம்.

Koviloor Digital Library

அகர வரிசை

அதிபத்தர்	195
அப்பாலும் அடிச்சார்ந்தார்	239
அப்பூதி அடிகள்	95
அமர்நீதியார்	14
அரிவாட்டாயர்	40
ஆனாயர்	43
இசைஞானியார்	263
இடங்கழியார்	221
இயற்பகையார்	4
இளையான்குடிமாறர்	6
உருத்திரபசுபதியார்	52
எறிபத்தர்	17
ஏயர்கோன் கலிக்காமர்	148
ஏனாதிநாதர்	21
ஐயடிகள் காடவர்கோன்	204
கணநாதர்	184
கணம்புல்லர்	207
கண்ணப்பர்	24
கலிக்கம்பர்	197
கலிய நாயனார்	199
கழறிற்றறிவார்	172
கழற்சிங்கர்	218
காரியார்	210
காரைக்காலம்மையார்	89
குங்குலியக்கலயர்	33
குலச்சிறையார்	86
கூற்றுவர்	186
கோச்செங்கண்ணாயனார்	248
கோட்புலியர்	227
சடையனார்	262
சண்டேசுவரர்	61
சத்தியார்	202
சாக்கியர்	161
சித்தத்தைச் சிவன்பாலே	234
சிறப்புலியார்	163
சிறுத்தொண்டர்	164
செருத்துணையார்	223
சுந்தரமூர்த்திநாயனார்	266
சோமாசிமாறர்	160
தண்டியடிகள்	154
திருக்குறிப்புத்தொண்டர்	58
திருஞானசம்பந்தர்	107
திருநாவுக்கரசர்	67
திருநாளைப்போவார்	54
திருநீலகண்டர்	1
திருநீலகண்ட யாழ்ப்பாணர்	256
திருநீலநக்கர்	99
திருமூலர்	151
திருவாரூர்பிறந்தார்	236
தில்லைவாழந்தணர்	XIV
நமிநந்தியடிகள்	103
நரசிங்கமுனையரையர்	193
நின்றசீர்நெடுமாறர்	212
நேச நாயனார்	247
பத்தராய்ப் பணிவார்	232
பரமனையே பாடுவார்	233
புகழ்ச் சோழர்	189
புகழ்த்துணை நாயனார்	225
பூசலார்	240
பெருமிழலைக்குறும்பர்	87
பொய்யடிமையில்லாத புலவர்	188
மங்கையர்க்கரசியார்	244
மானக்கஞ்சாறர்	37
முப்போதும் திருமேனி தீண்டுவார்	237
முருக நாயனார்	50
முழுநீறு பூசிய முனிவர்	238
முனையடுவார்	216
மூர்க்கர்	158
மூர்த்தியார்	46
மெய்ப்பொருள்நாயனார்	9
வாயிலார்	214
விறன்மிண்டர்	12

Koviloor Digital Library

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய

திருத்தொண்டத்தொகை

இறைவன் - புற்றிடங்கொண்டார் இறைவி - அல்லியம் பூங்கோதை
வன்மீகநாதர், வீதிவிடங்கர் பண் : கொல்லிக்கௌவாணம்

தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்
திரு நீலகண்டத்துக் குயவனார்க்கு அடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான் தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிக வல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்
விரி பொழில் சூழ் குன்றையார் விறன்மிண்டற்கு அடியேன்
அல்லி மென் முல்லைஅந்தார் அமர் நீதிக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 1

இலை மலிந்த வேல் நம்பி எறிபத்தற்கு அடியேன்
ஏனாதிநாதன் தன் அடியார்க்கும் அடியேன்
கலை மலிந்த சீர் நம்பி கண்ணப்பற்கு அடியேன்
கடவூரில் கலயன்தன் அடியார்க்கும் அடியேன்
மலை மலிந்த தோள் வள்ளல் மானக்கஞ்சாறன்
எஞ்சாத வாள் தாயன் அடியார்க்கும் அடியேன்
அலை மலிந்த புனல் மங்கை ஆனாயற்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 2

மும்மையால் உலகு ஆண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவாற்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்

Koviloor Digital Library

மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டு எழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச் சண்டிப் பெருமானுக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 3

திரு நின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கரையன்தன் அடியார்க்கும் அடியேன்
பெரு நம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக்குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்
ஒரு நம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலி புனல் சூழ் சாத்த மங்கை நீலநக்கற்கு அடியேன்
அரு நம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 4

வம்பு அறா வரிவண்டு மணம் நாற மலரும்
மதுமலர் நற்கொன்றையாற் அடிஅலால் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டம் மிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசிமாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 5

வார் கொண்ட வனமுலையாள் உமை பங்கன் கழலே
மறவாது கல் எறிந்த சாக்கியற்கும் அடியேன்
சீர் கொண்ட புகழ் வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங்குடி மேய சிறுத்தொண்டற்கு அடியேன்

Koviloor Digital Library

கார் கொண்ட கொடைக் கழறிற்றறிவாற்கும் அடியேன்
கடல் காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேல் கூற்றன் களந்தைக் கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 6

பொய் அடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழில் கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற்கு அடியேன்
மெய் அடியான் நரசிங்க முனையரையற்கு அடியேன்
விரி திரை சூழ் கடல் நாகை அதிபத்தற்கு அடியேன்
கை தடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழல் சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 7

கறைக்கண்டன் கழல்அடியே காப்புக் கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக் கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்ற சீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக் கொண்ட செம்பவளம் இருள் அகற்றும் சோதித்
தொன் மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல் நம்பி முனையடுவாற்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 8

கடல் சூழ்ந்த உலகுஎலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல் சூழ்ந்த தார் நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாம் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்

Koviloor Digital Library

புடை சூழ்ந்த புலி அதள்மேல் அரவு ஆட ஆடி
பொன் அடிக்கே மனம் வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல் சூழ்ந்த வேல் நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 9

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திரு ஆரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச் சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 10

மன்னிய சீர் மறை நாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகு ஆண்ட செங்கணார்க்கு அடியேன்
திருநீலகண்டத்துப் பாணனார்க்கு அடியேன்
என்னவனாம் அரன் அடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திரு நாவலூர்க் கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமை கேட்டு உவப்பார்
ஆரூரில் அம்மானுக்கு அன்பர் ஆவாரே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

சிவாய நம

தில்லைவாழ் அந்தணர் (தொகை அடியவர்)

உலகெ லாம்உணர்ந் தோதற் கறியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

தில்லையில் (சிதம்பரம்) ஆனந்தக் கூத்தினை, தினமும் கண்டும், அக்கூத்தப் பெருமானுக்கு பூசனைகளை செய்து வரும் சிவபூசை செல்வர்களே தில்லைவாழ் அந்தணர் ஆகும். சிவபெருமான், தன்னை அடைய பல (ஆகமங்களை) வழிகளை உமையம்மையிடம் கூறிய பின் எளிதாக தன்னை அடையும் வழி சிவபூசையே என இயம்புகிறார்.

புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அது கண்டு அருள்புரியாநிற்கும்
எண்ணிலி பாவிகள் எம் இறை ஈசனை
நண்ணறியாமல் நழுவுகின்றாரே

என்பது திருமூலர் வாக்கு ஆகும்.

சிவபூசையின் மேன்மையை நமக்கு உணர்த்தவே சுவாமி 'தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கு அடியேன்' என்ற வரியை திருத்தொண்டர் தொகைக்கு முதல் வரியாக அருளிச் செய்தார். சிவபூசை செய்யும் அன்பர்களுக்கு சுவாமியே அவ்வடியார்க்கு அடியவராகிறார்.

Koviloor Digital Library

1. திருநீலகண்ட நாயனார் வரலாறு

தில்லையில் (சிதம்பரம்) குயவர் குலத்தில் அவதரித்து சிவபெருமான் மீது மிகுந்த அன்புடைய அன்பர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சிவபெருமானை நினைந்து 'திருநீலகண்டம்' என்ற வார்த்தையை எப்போதும் வாயார சொல்லி மகிழ்வார். தனது குலத்தொழிலின் வழியே திருவோடு செய்து சிவனடியார்களுக்கு கொடுத்து மனைவியாருடன் இல்லற வாழ்வு நடத்தி வந்தார்.

ஒருநாள் தனது இளமையின் ஆதிக்கத்தால் ஒரு பரத்தையிடம் (விலை மாது) சென்று பின் இல்லம் வந்து தன் மனைவியிடம் சேர விரும்பி அணுகினார். தனது கணவனின் செயலை அறிந்த அவர் மனைவியார் "எம்மை தீண்டாதீர் இது திருநீலகண்டத்தின் மீது ஆணை" என்றாள். திருநீல கண்டத்தின் மீது ஆணை என்றதாலும், எம்மை என்று பன்மையில் கூறியதாலும், தன் மனைவியை மட்டுமன்றி எந்த பெண்களையும் தொடாது மனதாலும் நினையாது வாழ்ந்து வந்தார். இந்நிகழ்வு பிறர் அறியாத வகையில் இருவரும் வாழ்ந்து முதுமை அடைந்தனர்.

நீலகண்டரின் பெருமையை உலகறிய செய்ய சிவபெருமான், சிவயோகியாக கோவணம் அணிந்து, திருநீறு பூசிக் கொண்டு நீலகண்டர் குயவனாரின் இல்லம் சென்று, தான் வைத்திருந்த ஒரு திருவோட்டை கொடுத்து அதை பத்திரமாக வைத்திரு, பிறகு நான் கேட்கும் போது தர வேண்டும் என்று சொல்லிக் கொடுத்துச் சென்றார்.

Koviloor Digital Library

குயவனார் பாதுகாப்புடன் அத்திருவோட்டினை ஓரிடத்தில் வைத்தார். சிவபெருமான் அத்திரு ஓட்டினை மறையும்படி செய்து, சில காலம் கழித்து முன்போல் வேடத்தோடு, குயவனார் இல்லம் வந்து திருவோட்டினை கேட்டார். குயவனார் தான் வைத்த இடத்தில் திருவோடு காணாது திகைத்தார். பின் குயவனார் சிவயோகியிடம் சென்று தாங்கள் கொடுத்த திருவோடு காணாமல் போனதால் புதிய திருவோடு தருவதாக கூறினார்.

அதைக் கேட்ட சிவயோகி பொன்னால் ஆன திருவோடு கொடுத்தாலும் அதை ஏற்க மாட்டேன் என்று கூறி திருவோடு தொலைந்தது உண்மையென்றால் உனது மகனின் கையைப் பிடித்து குளத்தில் மூழ்கி சத்தியம் செய் என்று கூறினார். குயவனார் தனக்கு குழந்தையில்லை என்பதை கூறக்கேட்ட, சிவயோகி, உன் மனைவியின் கையைப் பிடித்து குளத்தில் மூழ்கி சத்தியம் செய் என்று கூறினார்.

அதற்கு குயவனார் ஒரு சபதத்தால் என் மனைவியுடன் சேர்ந்து கை பிடித்து நீரில் மூழ்க இயலாது, தனியே குளத்தில் மூழ்கி சத்தியம் செய்கிறேன் என்றார். அதனை ஏற்க மறுத்த சிவயோகி, தில்லைவாழ் அந்தணர்களிடம் முறையிட்டார். அந்தணர்கள், குளத்தில் மூழ்கி சத்தியம் செய்க என ஆணையிட்டனர். குயவனார் அப்படியே செய்கிறேன் என்று கூறி சென்றார். தனது மனைவியை அழைத்துக் கொண்டு திருப்புலீச்சுரத்து திருக்குளத்தில் ஒரு மூங்கில் தண்டின் இருமுனைகளையும் இருவரும் பிடித்து கொண்டு குளத்தில் மூழ்க முற்படும்போது, சிவயோகி கையை பிடித்துத் தான் மூழ்க வேண்டும் என்று கூற, அப்போது தான் தனது வாழ்வில் கடைப்பிடித்து வந்த சத்தியத்தை அனைவருக்கும் வெளிப்படுத்திய பின், மூங்கில் கொம்பை பிடித்தவாறே மூழ்கினார். மூழ்கி எழும்போது இருவரும் இளமையுடன் வெளி வந்தனர். தேவர்கள் மலர் மழை பொழிந்தனர். சுவாமி

Koviloor Digital Library

விடை(நந்தி) மீது எழுந்தருளி இருவரும் இவ்இளமையுடன் என்றும் நம்முடன் சிவலோகத்தில் இருப்பீராக என அருளினார். திருவருளால் இருவரும் சிவபெருமான் திருவடியில் சேர்ந்தார்கள்.

திருப்புலீச்சரம் : சிதம்பரத்தில் இளமையாக்கினார் கோயில் என்ற திருக்கோயிலே திருப்புலீச்சரம் ஆகும். (வியாக்கரபாதர்) புலிகால் முனிவர் வழிபட்ட தலம் இன்றும் திருநீலகண்ட நாயன்மார் அவரது மனைவியாருடன் மூழ்கி எழுந்த குளம் உள்ளது.(மேற்கு கோபுரம் அருகில் உள்ளது).

கருத்து : குயவனார் இல்லம் என்பது சிறிய ஒரு அறையுடைய குடிசையாக இருந்திருக்கும். அந்த ஒரு அறையில் தன் மனைவியுடன் இருந்தும் தனித்து வாழ்ந்தார். மேலும் நீலகண்டரின் மனைவியார் நாயனாரின் சத்திய வாக்கிற்கு ஏற்ப தன்னை கட்டுப்படுத்தி நாயனாருடன் ஒரே அறையில் வாழ்ந்தார் என்பதை எண்ணிப்பார்க்கவும்.

ஒருவனுக்கு ஒருத்தி என்ற இல்லற அறத்தில் வாழ்வது சிறப்பு. மேலும் நம் திருமண வாழ்க்கை நம் பெற்றோர்களால் அமைக்கப்படுவது மிகச் சிறப்பு.

மாதர்பால் கொண்ட இச்சை நீக்கி வாழ்வது மிக கடினமான செயல் என்பதை உறுதிபடுத்தவே சுந்தரமூர்த்தி சுவாமிகள் நீலகண்ட நாயனாரை முதல் நாயன்மாராக முன் வைத்து திருத்தொண்டர் தொகையை பாடியுள்ளார்.

பேய் போல் திரிந்து பிணம் போல் கிடந்து பெண்ணைத் தாய்போல் நினைத்து தவம் முடிப்பது எக்காலம்?

– பத்திரகிரியார்

திருநீலகண்ட நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

2. இயற்பகை நாயனார் வரலாறு

இயற்பகையார் என்ற சான்றோர் பூம்புகாரில் வாணிபம் செய்யும் மரபில் தோன்றி, சிவபெருமான் மீது மிகுந்த அன்பு கொண்டு வாழ்ந்தார். சிவனடியார்கள் கேட்பதை மறைக்காது தன்னிடம் உள்ளதை கொடுத்து வாழும் நாளில், இயற்பகையாரின் தொண்டினை உலகறிய செய்ய சிவபெருமான் ஒரு காமுகன் போல வேடம் கொண்டு, தன் உடலில் நகக்குறி, பற்களின் குறியை திருநீறினால் மறைத்து வேதியர் போன்று வடிவம் கொண்டு இயற்பகையாரின் இல்லம் வந்தார். இயற்பகையார் வந்த அடியாரை அன்போடு வணங்கி வரவேற்றார். அவ்வேதியர் உன்னிடம் ஒன்று வேண்டி வந்தேன் அதை நீ தருவதாக இருந்தால் கூறுகிறேன் என மொழிந்தார். அதற்கு இயற்பகையார் என்னிடம் உள்ளது எதுவாகிலும் அது உங்கள் உடைமை என்று கூற வேதியர், உன் அன்பு மனைவியை வேண்டி வந்தேன் என கூறினார். இயற்பகையார் மகிழ்ந்து பின் தன் மனைவியிடம் கூற, அவர் கலங்கி பின் தெளிந்து இயற்பகையாரை வணங்க, இயற்பகையாரும் தன் மனைவியை வணங்கினார்.

வேதியர், இயற்பகையாரிடம் நான் உன் மனைவியுடன் செல்லும்போது, உன் மனைவியின் சுற்றத்தாரிடமிருந்து என்னை காத்து ஊர் எல்லை வரை காவலுக்கு நீ வரவேண்டும் என்று கூறினார். இயற்பகையார் வாள்,கேடயம் அணிந்து கொண்டு, உடன் புறப்பட்டார். அப்போது மனைவியாரின் உறவினர்கள் ஆயுதத்துடன் தடுக்க முற்பட்டனர். வேதியராக வந்த சுவாமி பயந்தது போல நடிக்க, இயற்பகையாரின் மனைவியார் வேதியரிடம் தன் கணவர் இவர்களை வெல்வார் பயம் வேண்டாம் எனக் கூறினார். இயற்பகையார் உறவினர்களை முதலில் எச்சரித்தார். அவர்கள் கேட்க மறுத்ததால் அவர்களை வாள் கொண்டு வெட்டி

Koviloor Digital Library

வீழ்த்தினார். வேதியர் வேடத்தில் வந்த சிவபெருமான் (திருச்சாய்க்காடு) பூம்புகார் எல்லை தாண்டி சென்றவுடன் இனி நீ செல் என்று இயற்பகையாரிடம் கூறினார். இயற்பகையார் தனது மனைவியாரை திரும்பி கூட பார்க்காது தனது இல்லம் நோக்கி செல்லும் போது அவ்வேதியராக வந்த சிவபெருமான் இயற்பகை முனிவா ஓலம் நீ வருவாய் ஓலம், அயர்பிலாதவனே ஓலம், அன்பனே ஓலம், ஓலம் என மொழிய, அதனை கேட்ட இயற்பகையார் யாரோ அடியார்க்கு துன்பம் தருகிறார்களோ என நினைத்து வாள் கொண்டு ஓடி வர, வேதியரை காணாது தன் மனைவி மட்டும் தனியே நிற்க, வானத்தில் விடை மீது சுவாமியை கண்டார். நிலத்தில் விழுந்து தொழுதார். எல்லையில்லா இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி என வணங்க, சுவாமி, தெய்வ பக்தி நிறைந்த உன் மனைவியுடன் சிவலோகம் வருவாயாக என மொழிந்தார். வானவர்கள் பூ மழை பொழிந்தனர். இயற்பகையாரும் அவரது மனைவியாரும் சிவலோகம் செல்ல, வெட்டுண்ட சுற்றத்தார்கள் அனைவரும் வானுலகம் சென்று இன்பம் பெற்றனர்.

பூம்புகார் – இவ்வூர் சீர்காழி அருகில் உள்ளது. பல்லவனீச்சரம் என்பது திருக்கோயிலின் பெயர். இவ்வூர் பதிகத்தில் திருஞானசம்பந்தர் பாடலில் இராவணன், பிரம்மன், திருமால் சமணர் பற்றிய பாடல்கள் இடம் பெறாததை காண்க.

கருத்து : இவ்வுலகிலுள்ள உயிர்கள் எவையும் தனது துணையை பிறர்க்கு தராது வாழும். இவ் இயற்கைக்கு எதிராக இவரின் செயல் இருந்ததால் இயற்பகை நாயனார் என்று அழைக்கப்பட்டார். எவராலும் செய்ய முடியாத செயலை செய்த இவரின் செயலை, உலக இயல்போடு வாழும் நம்மால் அறிய முடியாது.

இயற்பகை நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

3. இளையான் குடி மாற நாயனார் வரலாறு

இளையான்குடி என்ற ஊரில் மாறன் என்ற பெயருடன் வேளாள மரபில் அவதரித்தார். சிவபெருமான் மீது மிகுந்த அன்பு கொண்டவர். சிவன் அடியவர்களை கண்டதும் அவர்களை வணங்கி, இல்லத்திற்கு அழைத்து வந்து நல்விருந்து அளிப்பார். இவ்வாறு மாறனார் செய்து வந்ததால் அவரது செல்வம் மேலும் பெருகியது. சிவபெருமான், செல்வத்தில் மட்டுமன்றி வறுமை வந்தாலும் இத்தொண்டை மாறனார் செய்வார் என்பதை உலகறிய செய்ய மாறனாரின் செல்வத்தை குறையும்படி செய்தார். மாறனார் வறுமையுற்ற போதும் தனது வீட்டுப் பொருட்களை விற்று அடியவர்களுக்கு அமுது செய்வித்து வந்தார்.

ஒருநாள் மிகவும் வறுமையின் காரணமாக மாறனாரும், அவரது மனைவியும் அன்று முழுவதும் உணவு உண்ணாத நிலையில், அன்று இரவு மழை பெய்து கொண்டிருக்கும் போது சிவபெருமான், தவவேடத்துடன் அடியவராக மாறனார் இல்லத்திற்கு வந்தார். மாறனார் அடியவரை வரவேற்று, அவர் ஆடையின் ஈரத்தை நீக்க உதவினார். பின் தன் மனைவியாரிடம் சென்று அடியவரின் பசியை எவ்வாறு நீக்குவது என கேட்க, அவரது மனைவி வீட்டில் சமைப்பதற்கு ஒன்றும் இல்லை கடன் தருவாரும் இல்லை கடன் வாங்க ஏற்ற காலமும் இதுவல்ல என கூறி, மாறனாரிடம் நீங்கள் இன்று காலையில் நமது வயலில் விதைத்த விதை நெல்லை கொண்டு வந்தால் அடியார்க்கு உணவு படைக்கலாம் என

Koviloor Digital Library

கூறக் கேட்ட நாயனார், தனது நீர் நிரம்பிய வயலை நோக்கி கூடையினை எடுத்துக் கொண்டு இருளில் மழையில் நனைந்து கொண்டே முன்பு தான் சென்ற பழக்கத்தில் தனது வயலினை அடைந்தார். பின் நீரில் மிதக்கும் முளை நெல்லை கையில் வாரி கூடையில் இட்டு இல்லத்திற்கு வந்தார். மாறனாரின் மனைவியார் வாசலில் நின்று அந்த முளை நெல்லை வாங்கி சேறு நீங்க கழுவி, நெல்லை வறுத்து அரிசியாக்க அடுப்பிற்கு விறகு இல்லாது நிற்க, மாறனார் தனது குடிசையில் வேய்ந்துள்ள கொம்புகளை இழுத்து விறகிற்காக கொடுத்தார்.

பின் அவரது துணைவியார் நெல்லினை வறுத்து அரிசியாக மாற்றி அதனை சோறு (திருஅமுது) செய்து குழம்பு கூட்டு முதலியவைக்கு என்ன செய்வது என கணவனாரை கேட்டவுடன் மாறனார் புன்செய் நிலத்தின் குழியில் உயர்ந்து வளர்ந்து முளைத்திருக்கும் கீரைகளை பறித்து வந்து கொடுக்க அக்கீரையை நீரில் கழுவி பொறியல், கூட்டு என பலவிதத்தில் சமைத்தார். பின் தனது கணவனாரை அழைத்து சமைத்த உணவினை காட்டினார். பின் இருவரும் (தூங்குவது போல் இருக்கும்) அடியவரை எழுப்ப முயன்றனர். அப்போது அடியவராக வந்த சிவபெருமான் சோதி வடிவமாக தோன்றினார். மாறனாரும் அவரது துணைவியாரும் திகைத்து நின்றனர். சிவபெருமான், ஏலவார் குழலியோடு காட்சி கொடுத்து அன்பனே அன்பர்களுக்கு அமுது செய்வித்து வந்த நீ, உனது மனைவியோடு எமது சிவலோகம் சேர்ந்து, சங்கநிதி பதுமநிதி இரண்டையும் உடைய குபேரன் இனி உங்களின் கட்டளைப்படி தனது செல்வத்தை உலகுக்கு அளிப்பான் என்று மொழிந்தார்.

Koviloor Digital Library

இளையான்குடி மாற நாயனார் அவரது மனைவியுடன் சிவலோகம் சேர்ந்து இன்புற்றார்.

இளையான்குடி – இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகில் இவ்வூர் உள்ளது.

கருத்து : செல்வம் உள்ளவரை சிவத்தொண்டு செய்வது, வறுமை வந்தபோது இறைவனின் செயலில் நம்பிக்கையில்லாது தொண்டை தொடராது விட்டு விடுவது உலகத்தாரின் செயல். இங்கு நாயனார் வறுமையிலும், தனது தொண்டை தொடர்ந்து செய்து வந்ததால், பணத்தின் மீது பற்றில்லாத இந்த நாயனார்க்கு குபேரன் இவரது ஏவல்படி நடக்க ஆணையிட்டார் சிவபெருமான். எனவே தொண்டு செய்வது பெரிதல்ல. தொடர்ந்து செய்வதே பெரிது என்பதே இவ்வரலாறு நமக்கு வழங்கும் பாடம்.

அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு செல்ல வேண்டுமானால் நம் இந்திய பணத்தை டாலராக மாற்றிக்கொண்டு செல்ல வேண்டும். ஏனென்றால் அந்நாட்டில் நம்முடைய பணம் செல்லாது. அதுபோல இப்புவியில் இறைவன் நமக்கு வழங்கிய பொருள் செல்வத்தை அருள் செல்வமாக மாற்ற முயல லேண்டும். அப்படிப்பட்ட அருள்செல்வம் நம்மை தொடர்ந்து வரும் தொல்லை இரும் பிறவி தொடர விடாது நம்மை சிவபெருமானின் திருவடியை சேர்க்கும்.

இளையான்குடிமாற நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

4. மெய்ப்பொருள் நாயனார் வரலாறு

திருக்கோயிலூரில் மலாடர் மரபில் தோன்றி மன்னராக மெய்ப்பொருள் நாயனார் நல்லாட்சி செய்து வரும்போது, தான் தேடிய செல்வங்கள் அனைத்தும் சிவபெருமானை நினைத்து திருநீறு பூசும் சிவனடியார்களுக்கே என நினைத்து வாழ்ந்து வந்தார். அந்நாளில் அவரிடம் பலமுறை போரில் தோற்ற முத்தநாதன் என்னும் பகை அரசன் மெய்ப்பொருள் நாயனாரை வெல்லும் ஆசையால் ஒரு சூழ்ச்சி செய்தான். அவன் சிவனடியார் போன்று உடம்பெல்லாம் திருநீறு பூசி தலைமுடியை முடித்து கட்டி, கையில் சில புத்தகங்களை எடுத்து அதன் உள்ளே கத்தியை மறைத்து வைத்து, பொய் தவ வேடம் கொண்டு மன்னரின் மாளிகை சேர்ந்தான். வாயில் காவலர்கள் தடுத்தும் கேளாது உள்ளே செல்ல முயன்ற போது மெய்ப்பொருள் நாயனாரின் மெய் காவலரான தத்தன் என்பவர் முத்தநாதனை தடுத்து மன்னவர் உறங்குகிறார் என்று கூறினார் அதனை கேளாது மன்னவரின் படுக்கை அறைக்கு நுழைந்தான் பொய்வேட முத்தநாதன். மன்னர் உறங்கி கொண்டிருக்க, அரசியார் அருகில் அமர்ந்து கொண்டிருந்தார். சிவனடியாரை கண்ட அரசியார், மன்னரை எழுப்பினார். எழுந்த மன்னர் தன் எதிரில் சிவனடியார் வேடத்தில் இருந்த முத்தநாதனை கண்டு வணங்கினார்.

சிவனடியாராக வந்த முத்தநாதன் மன்னரிடம் “உங்கள் சிவபெருமான் அருளிய சிவஆகம நூல்களில் எங்கும் இல்லாதது ஒரு நூல் என்னிடம் உள்ளது. அதனை

Koviloor Digital Library

தங்களிடம் தனிமையில் விளக்கவே வந்தேன் என்று கூறினான். மன்னவனும் தன் மனைவியையும் மெய்காவலனையும் வெளியில் இருக்கும்படி கூறி, சிவனடியார் வேடத்தில் வந்தவரை நாற்காலியில் அமரச்செய்து, மன்னவர் தரையில் அமர்ந்து வணங்கும்போது சிவனடியாராக வந்த முத்தநாதன் புத்தகத்தில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து, தான் எண்ணிவந்தபடி மன்னவரை கத்தியால் குத்தினான். இச்செயலை அறையின் வெளியில் நின்றவாறு கண்காணித்து வந்த தத்தன் விரைந்து வந்து முத்தநாதனை தாக்க முற்படும்போது இரத்தம் வழிந்த நிலையிலும் தடுத்து, தத்தா! இவர் நமர். இவருக்கு நம் மக்களால் எந்த தீங்கும் வாராது பாதுகாத்து இவரை ஊர் எல்லையை தாண்டி விட்டு விட்டு வரும்படி கூறினார். அவ்வாறே முத்தநாதனை ஊர் எல்லையில் விட்டு வந்த தத்தனை கண்டபின் தனது அரசு ஊழியர்களையும் சுற்றத்தார்களையும் பார்த்து முழு திருநீறு அணிந்த சிவனடியார்களை பாதுகாத்து வாழுங்கள் என கூறி கூத்தப்பெருமானை நினைத்தபடியே இருக்க சிவபெருமான், நாயனார் நினைத்தபடியே தன் வடிவம் காட்டி தேவர்களுக்கும் எட்டாத சிவலோகத்தில் இருக்கும்படி அருளிச் செய்தார்.

திருக்கோவிலூர்: திருவண்ணாமலை அடுத்துள்ள ஊர். திருக்கோயிலூரே முன்பு திருக்கோவலூர் ஆகும். இஃது அட்டவீரட்ட தலத்தில் ஒன்று. பாடல்பெற்ற திருத்தலம்.

கருத்து : உடல், உலகு, உறவு அனைத்தும் மறையும் பொய்பொருள், பந்த பாசத்தை நீக்கி உயிர்க்கு முக்திக்கு வழங்கும் சிவபெருமானே மெய்ப்பொருள். சிவனடியார் வேடம்

Koviloor Digital Library

பூண்டு வந்த முத்தநாதன் "உங்கள் சிவபெருமான்" என்று கூறியபோதே வந்தவர் சிவனடியார் அல்லர் என மெய்ப்பொருள் நாயனார் தெரிந்து கொண்ட பிறகும் அவரை அமரச்செய்து வணங்கியது திருநீறு மீதும், அடியவர் மீதும் கொண்ட அன்பை நமக்கு வெளிப்படுத்துகிறது. எனவே சிவபெருமானை நினைந்து சிவாய நம என திருநீற்றை நெற்றியில் எப்போதும் மங்காமல் பூசியும், அவ்வாறு பூசி வரும் அன்பர்களை சிவமாம் தன்மையால் காண்பவரே மெய்பொருளான சிவபெருமானின் திருவடியை அடைவர்.

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன் – 628

என்பது திருவள்ளுவரின் வாக்கு. ஞானிகள் இவ்வுலகத்தில் வாழும் உயிர்களின் நலத்திற்காக தன்னையும் இழப்பர்.

எவரேனும் தாம் ஆக இலாடத்து இட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி
உவராதே அவர் அவரைக் கண்டபோதே
உகந்து அடிமைத்திறம் நினைந்து அங்கு உவந்து நோக்கி
இவர் தேவர் அவர் தேவர் என்று சொல்லி
இரண்டு ஆட்டாது ஒழிந்து ஈசன் திறமே பேணிக்
கவராதே தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியை காணலாமே.

– திருநாவுக்கரசர் 6–61–3

மெய்ப்பொருள் நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

5. விறன்மிண்ட நாயனார் வரலாறு

சிவபெருமானை நோக்கி தவமிருந்து பரசு பெற்ற தவமுனிவரான பரசுராமன் வாழ்ந்த மலைநாட்டிலுள்ள செங்குன்றூரில் வேளாண்மை குலத்தில் விறன்மிண்டர் எனும் அன்பர் வாழ்ந்து வந்தார். அவர் சிவபெருமான் மீது மிகுந்த அன்பு கொண்டும், சிவனடியார்கள் மீது பரிவுடையவராகவும் விளங்கினார்.

சிவபெருமான் எழுந்தருளியுள்ள பலபல ஊர்களிலுள்ள திருக்கோயில்களை வழிபட விரும்பி, திருத்தல யாத்திரை செல்லும் போது முதலில் அங்குள்ள சிவனடியார்களை வணங்கிய பின் மூல மூர்த்தியான சுவாமியை வணங்கும் இயல்பு கொண்டு விளங்கினார். இவ்வாறு வழிபட்டுக் கொண்டே திருவாரூர் அடைந்து, அங்கு சிவனடியார்கள் தங்கும் "தேவாசிரியன்" எனும் மண்டபம் உள்சென்று அடியவர்களை வணங்கிய பின் திருமூலட்டானம் சென்று புற்றிடங்கொண்ட நாதரை வணங்கி மகிழ்ந்து இருக்கும் காலத்தில், திருவாரூர் திருக்கோயிலுக்கு இறைவனை வணங்கச் சென்ற நம்பி ஆரூரன், அன்று அதிக அளவில் அடியார்கள் தங்கி இருந்ததை கண்டு தேவாசிரியன் மண்டபதிற்கு சென்று அவ் அடியவரை வணங்காது, இவர்களோடு சேர்ந்திருப்பது எந்நாளோ? என மனத்தினுள் நினைந்தவாறே திருக்கோயிலுக்குள் சென்றார் இறைவன் காட்சி தந்து அருளினார்.

Koviloor Digital Library

அடியாரை வணங்காது திருக்கோயிலுக்குள் செல்லும் நம்பி ஆரூரரை கண்ட விறன்மிண்டார், அடியாரை வணங்காது செல்லும் நம்பிஆருரரனோடும் உமக்கு அருளும் பிறை சூடிய சிவபெருமானோடும் இனி பேச மாட்டேன் எனக்கூறினார். அம்மொழியை கேட்ட நம்பி ஆரூரன் வியந்து, நிற்க, திருவாரூர் தியாகேசப் பெருமானும், "அடியவரோடே யாம் உள்ளோம்" என அசிரீரியராக மொழிந்து, நம்பி ஆரூரருக்கு திருத்தொண்டர்த் தொகை பாட தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்ற முதல் வரியை எடுத்துக் கொடுத்தார். இத்திருப்பதிகமே அறுபத்தி மூன்று நாயன்மார்களையும் நமக்கு வெளிப்படுத்திய பாடல்களாகும். எனவே "திருத்தொண்டர்த் தொகை" பாடுவதற்கு காரணமாக விளங்கிய விறன்மிண்ட நாயனார், சிவபெருமான் அருளினால் திருவாரூரில் நெடுநாள் வாழ்ந்து சிவகணங்களுக்கு நாயகராக சிவலோகத்தில் சேர்ந்தார்.

செங்குன்றூர் : இவ்வூர் தற்போது கேரளாவில் கோட்டயம் அடுத்துள்ள செங்கனூர் ஆகும்.

கருத்து : அடியவரின் பெருமையை சிவபெருமான் நம்பி ஆரூரர்க்கு உணர்த்தியும், அறுபத்தி மூன்று நாயன்மார்களின் பெருமையை திருத்தொண்டர் தொகை மூலமாக வெளிப் படுத்தி உள்ளதையும், தன் மீது கோபம் கொண்ட அன்பரையும் சிவகணத்தின் தலைவராக அமர்த்திய செயலையும் திருவிளையாட்டாக செய்தார் நம் சிவபெருமான்.

விறன்மிண்ட நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

6. அமர்நீதி நாயனார் வரலாறு

வணிகர் குலத்தில் பொன்னி நன்னாட்டில் பழையாறை எனும் ஊரில் அமர்நீதி என்ற சான்றோர் வாழ்ந்தார். சிவபெருமானின் திருவடியை எப்போதும் சிந்தித்து, சிவனடியார்களுக்கு போர்வை, கீள் (கோவணம் கட்டும் இடைத்துணி), கோவணம் முதலியன தொடர்ந்து கொடுத்து வந்தார். இதனால் மிகுந்த செல்வமுடையவராக வாழ்ந்தார். பழையாறை அருகிலுள்ள திருநல்லூர் எனும் ஊரில் உள்ள சிவாலயத்தில் நிகழும் திருவிழாவிற்கு அமர்நீதியார், தனது சுற்றத்தாருடன் சென்று அங்கு திருமடம் அமைத்து, அத்திருவிழாவிற்கு வருகை தரும் சிவனடியார்களுக்கு உணவு வழங்கியும், அவர்களுக்கு தேவையான உடைகளை வழங்கியும் வரும்போது ஒருநாள், சிவபெருமான் அடியவராக பிரம்மச்சாரி வடிவு கொண்டு இரண்டு கோவணம் கட்டிய கொம்பை கையில் எடுத்தும், திருநீறு பையும், தர்ப்பையும் வைத்துக் கொண்டும் கரிமான் தோலை இடுப்பில் கட்டிக் கொண்டு, அத் திருமடத்திற்கு எழுந்தருளினார். அமர்நீதியார் அச் சிவனடியாரை வரவேற்று, தங்களை காண அடியவன் என்ன தவம் செய்தேனோ எனக்கூறி மகிழ்ந்து. அடியவரை உணவு உண்ண அழைத்தார்.

அதற்கு அவ்வடியவர் பொன்னியில் நீராடி வருகிறேன் எனக்கூறி தான் வைத்திருந்த கொம்பின் நுனியில்

Koviloor Digital Library

கட்டியிருந்த இரண்டு கோவணத்தில் ஒன்றை எடுத்து அமர்நீதியாரிடம் இக்கோவணத்தின் பெருமையை நீவீர் அறிவீர் எனவே இதனை பாதுகாத்து தருவீர் எனக் கூறி கொடுத்து, நீராட சென்றார். அமர்நீதியாரும் அக் கோவணத்தை மற்றைய கோவணத்தோடு வைக்காமல் தனியாக பாதுகாத்து வைத்தார். சிவபெருமான் அக்கோவணத்தை மறையும்படி செய்தார். பின் அவ்வடியவர் பொன்னியில் குளித்து வந்தது போல் மீண்டும் திருமடம் வந்து தான் கட்டியுள்ள கோவணமும் ஈரம், கொம்பில் கட்டியுள்ள மற்றொரு கோவணமும் ஈரம். எனவே நான் கொடுத்த கோவணத்தை கொடுக்கும்படிகேட்க, அமர்நீதியார் தான் பாதுகாத்து வைத்த அடியவர் கோவணம் காணாது திகைத்தார். பின் வேறு ஒரு புதிய கோவணம் கொண்டு வந்து பெற்றுக் கொள்ளுமாறு அடியவரிடம் நடந்ததை கூறி தனது பிழையை பொறுத்தருளுமாறு வேண்டினார்.

அதனை கேட்ட அடியவர் சினந்து, எனது கோவணமே வேண்டும் என மொழிந்தார். பின் சற்று கோபம் தணிந்து உன்னிடம் கொடுத்த அக்கோவணம் கிழித்த, அதே துணியில் செய்த இக்கோவணத்தின் எடைக்கு எடை கோவணம் தருக என கூறி தன் கொம்பின் நுனியில் கட்டி இருந்த மற்றொரு கோவணத்தை எடுத்து தராசின் ஒரு பக்கத்தில் வைத்தார். அமர்நீதியாரும் மகிழ்ந்து புதிய கோவணம் ஒன்றை மற்றொரு தட்டில் வைத்தார். ஆனால் தராசு நேராகாது கண்டு வியந்தார். பின் வைத்திருந்த அத்தனை கோவணமும், பட்டு ஆடை, பஞ்சு பொதி தனது செல்வங்கள் அனைத்தையும் வைத்தார். தராசு நேராகாது கண்டு, அடியவரிடம் நானும் எனது மனைவியும் மகனும் இத்தட்டில் அமர அனுமதி அருளும்படி வேண்டினார்.

Koviloor Digital Library

அடியவரும் இசைந்தார். அமர்நீதியாரும் அவரது துணைவியாரும், மகனாரும் திருநல்லூர் பெருமானை வணங்கி தராசினை வலமாக வந்து ஐந்தெழுத்து ஓதி திருநீறு மீது நாங்கள் கொண்ட மாறாத அன்பு உண்மையானால் இத்தராசு நேர் நிற்க எனக்கூறி தராசில் மூவரும் மகிழ்ந்து ஏறினார்கள். இறைவனின் கோவணமும், அமர்நீதியாரின் அன்பும் நிகரானது போல் தராசு நேரானது. கற்பக மலர்களை வானோர்கள் பூ மழையாக பொழிந்தனர். அடியவராக வந்த சிவபெருமான் விடைமீது உமையுடன் எழுந்தருளி சிவபதம் கொடுத்து அருளினார். சுவாமி அருளாலே அத்தராசு விமானம் போல் மாறி மூவரோடு சிவலோகம் சென்று அடைந்தது.

பழையாறை – கும்பகோணத்திலிருந்து ஐந்து கி.மீட்டரில் உள்ள ஊர். திருநாவுக்கரசு நாயனாரால் பாடல் பெற்ற திருத்தலம்.

கருத்து : கோவணம் என்பதற்கு மறை (வேதம்) என்று பொருளும் உள்ளது. பஞ்சமா பாதகம் உயிரினை பற்றாது தடுத்து மானம் காப்பதே அருமறைகளாகும். அஃது அறம், பொருள், இன்பம், வீடு என்பதேயாகும். முதல் மூன்று கோவணம் நாயன்மாரும், அவரது துணைவியாரும், மகனும் ஆகும். வீடுபேறு என்ற கோவணம் சிவபெருமானேயாகும்.

மன்னுகலை துன்னு பொருள் மறை நான்கே. வான் சரடா
தன்னையே கோவணமா சாத்தினன் காண் சாழலோ!

– திருவாசகம்

அமர்நீதி நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

7. எறிபத்த நாயனார் வரலாறு

சோழ வள நன்நாட்டில் கரூர் எனும் மூதூரில் பசு தானாக வந்து சிவலிங்கத்தின் மீது பால் சொரிந்ததால் திருஆனிலை என வழங்கப்பட்டு வரும் திருக்கோயில் உள்ளது. அத்திருக்கோயிலை விட்டு நீங்காது சிவபெருமான் மீது அன்பு கொண்டு வாழும் தொண்டர்களுக்கு எவரேனும் இடையூறு செய்தால் அவர்களை தனது பரசு (கோடாரி போன்ற ஆயுதம்) கொண்டு வெல்லும் ஆற்றலுடையவராக திகழ்ந்தார் எறிபத்தர் என்ற சிவனடியார்.

இந்நிலையில் சுவாமி மீது மிகுந்த அன்பு கொண்ட சிவகாமியாண்டார் என்னும் அடியவர் ஆனிலை இறைவர்க்கு தினமும் அர்ச்சனைக்கு (பள்ளித்தாமம்) மலர்களையும், இலைகளையும் பறித்து கூடையில் நிரப்பி அக்கூடையை கொம்பின் நுனியில் கட்டி தூக்கிக் கொண்டு திருக்கோயிலுக்கு கொண்டு வருவதை வழக்கமாக கொண்டிருந்தார். ஒரு நாள் இவ்வாறு பூப்பறித்து திருக்கோயிலுக்கு கொண்டு வரும் போது அந்நாட்டு மன்னரான புகழ் சோழரின் பட்டத்து யானை அமராவதி நதியில் நீராடி விட்டு களிப்புடன் வரும் போது யானை செல்லக்கூடாத தெருவின் வழியே செல்வதை பாகர்கள் தடுக்காததால் அப்பட்டத்து யானை அத்தெரு வழியே சென்று

Koviloor Digital Library

கொண்டிருந்த சிவகாமியாண்டாரின் மலர்க் கூடையை பிடித்து இழுத்து பூக்களை எல்லாம் தரையில் விழும்படி செய்தது. சிவகாமி யாண்டார் பதைத்து பொங்கி தனது கையில் பிடித்திருந்த கொம்பை யானையின் பின்னே அடிக்க முயன்றும் அந்த யானை மிக வேகமாக செல்ல, பின் செல்ல இயலாது தரையில் விழுந்தார். மிக்க துயரத்தோடு சிவபெருமானை நோக்கி பலமுறை சிவதா? சிவதா? என அழுது, இன்று இறைவர்க்கு மலர் கொண்டு செல்ல முடியாமல் போனதை நினைத்து அழுதார். அவ்வழியே எதிரே வந்த எறிபத்தர், சிவகாமியாண்டாரை வணங்கி உங்களுக்கு துன்பம் செய்தது யார் எனக் கேட்டார்.

பட்டத்து யானை மலர்களை பறித்து எறிந்ததை கேள்வியுற்ற எறிபத்தர் பாய்ந்து சென்று தனது பரசு கொண்டு அப்பட்டத்து யானையின் துதிக்கையை வெட்டி வீழ்த்தினார். அவ் யானையும் கதறி வீழ்ந்து இறந்தது. இதனை கண்டு எதிர்த்து வந்த மூன்று பாகர்களையும் இரண்டு காவலர்களையும் எறிபத்தர் வெட்டி வீழ்த்தினார். அங்கிருந்து தப்பி ஓடிய சில காவலர்கள் ஓடி அரண்மனைக்கு சென்று வாயிற் காவலரிடம் நடந்ததை கூறி மன்னனிடம் அறிவிக்குமாறு கூறினார். புகழ்ச் சோழ மன்னன் தனது சேனைகளுடன் பட்டத்து யானையை வீழ்த்திய இடத்திற்கு வந்தார். அங்கு எறிபத்தர் சிவனடியார் வேடம் தரித்து பரசு ஆயுதத்தை கையில் ஏந்தியபடி நின்று கொண்டிருந்தார். எறிபத்தரின் சிவனடியார் கோலத்தை கண்ட மன்னன் இச்செயல் செய்தவர் இவராக இருக்க மாட்டார் என மனதில் நினைத்து, இத்தீங்கு செய்தவர் யார் என மன்னவன் கேட்டவுடன் தப்பி ஓடிய ஒரு பாகன், மன்னரிடம் அருகில்

Koviloor Digital Library

சென்று இத்தீங்கு செய்தது இவரே என எறிபத்தரை காட்டினான். உடனே மன்னர் குதிரையிலிருந்து இறங்கி இவ் அடியார்க்கு யானை என்ன தீங்கு இழைத்ததோ என மனதினுள் அஞ்சினார். மன்னவன், எறிபத்தர் அருகில் சென்று வணங்கி யானை செய்த குற்றத்திற்கு தாங்கள் அளித்த தண்டனை போதுமா? அருளிச் செய்யுங்கள் என வேண்டினார். எறிபத்தர் மன்னவனை நோக்கி சிவகாமி யாண்டார்க்கு யானை செய்த குற்றத்தையும், அதனை தடுக்காத பாகர்களின் செயலை கூறினார். மன்னன் உடனே எறிபத்தர் பாதத்தில் விழுந்து வணங்கி, நடந்த இந்த குற்றத்திற்கு அடியேனையும் கொல்ல வேண்டும் என்று எறிபத்தரிடம் தங்கள் பரசு புனிதமானது எனவே எனது வாளால் என்னை துண்டிக்க வேண்டுகிறேன் என்று மன்னவன் தனது வாளை எடுத்து எறிபத்தரிடம் கொடுத்தார்.

எறிபத்தரும் ஒருவேளை மன்னர் தன்னையே மாய்த்து கொள்வாரோ என அஞ்சி அவ்வாளை எறிபத்தர் வாங்கிக் கொண்டார். மன்னரின் அன்பு உள்ளம் கண்ட எறிபத்தர் தன்னையே மாய்த்துக் கொள்ள அவ்வாளை ஏந்தினார். உடனே மன்னவன் விரைந்து எறிபத்தரின் கையை பிடித்துக் கொண்டார். அப்போது சிவபெருமான், வானத்தில் அனைவரும் கேட்கும்படி எறிபத்தரின் அன்பை உலகிற்கு காட்டவே இவ்வண்ணம் செய்தோம் என அசரீரியாக கூறி யானையையும், பாகர்களையும், வீரர்களையும் உயிர்ப்பித்து எழும்படிச் செய்தார். எறிபத்தரும் புகழ்சோழரும் அசரீரியாக பேரொலி வந்த விண்ணை வணங்கினார்கள். சிவபெருமான் புதிய மலர்கள் நிறைந்த கூடையை சிவகாமியாண்டாரிடம் கிடைக்கும்படி செய்தார். திருவருளின் திறம் கண்டு அனைவரும் வியந்து நின்றார்.

Koviloor Digital Library

மன்னவன் பட்டத்து யானை மீதேறி அரண்மனை செல்ல சிவகாமியாண்டார் பூக்கூடை சுமந்து கொண்டு கருவூர் திருஆனிலை கல்யாணபசுபதீஸ்வரர் திருக்கோயிலுக்குள் சென்றார். எறிபத்தர் தொண்டர்க்கு காவலராய் வாழ்ந்து, கொன்றை அணிந்த செஞ்சடையை உடைய சிவபெருமானின் திருவடியை சேர்ந்தார்.

கரூர் : திருச்சிராப்பள்ளி குளித்தலை வழியாக இவ்வூரை அடையலாம். திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற திருத்தலம். இறைவர் – சுயம்பு.

கருத்து : திருக்கோயிலுக்கு சொந்தமான நிலத்தை கையகப்படுத்துவது, திருக்கோயிலுக்கு செலுத்த வேண்டிய வாடகை குத்தகை தர மறுப்பது. கோயிலை சுற்றியும் அசுத்தம் செய்வது, நந்தியம்பெருமான் காதில் வாயை வைத்து சொல்வது, சண்டேசப் பெருமான் முன்பு கை விரலால் சுடக்குவது, ஆலயத்தை குப்பையாக்குவது, இது போன்ற சிவ அபராத செயல்களை நாம் செய்யாதது மட்டுமின்றி பிறர் செய்வதையும் தடுத்து இன்று உள்ள சமூக நீதி வழியில் சிவ அபராதம் நடவாது பார்த்துக் கொள்வது நமது கடமையாகும். எறிபத்தர் என்ற உயிர், ஐந்தெழுத்து என்ற பரசால் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலமாகிய மத யானையை துண்டித்தப் பின் அம் மத யானை பாகர்கள் மூவர், வீரர்கள் இருவர் ஆக ஐவரான ஐம்புலன்களின் செயல்களையும் ஐந்தெழுத்து என்ற பரசு கொண்டு வெட்டியெறிந்தார். மும்மலத்தையும், ஐம்புலன்களையும் சாராது இருப்பதே வீடுபேறு அடையும் வழி. இதனை ஐந்தெழுத்தாகிய சிவாயநம எனும் திருநாமம் பந்த பாசத்தை நீக்கி வீடுபேறு தரவல்லது.

எறிபத்த நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

8. ஏனாதிநாய நாயனார் வரலாறு

எயினனூர் என்ற ஊரிலே ஈழகுல சான்றோர் மரபிலே போர் செய்யும் கலைகளை கற்றுத்தரும் முதன்மை சான்று பெற்ற தலைவராக ஏனாதிநாதர் வாழ்ந்து வந்தார். அவர் சிவபெருமான் மீதும், மங்கள திருநீறு மீதும், மிகுந்த அன்பு கொண்டு திகழ்ந்தார். அவர் திருநீற்றை தானும் பூசி, அனைவரையும் நெற்றியில் திருநீறு பூசும்படி அன்புடன் சொல்லி வருவார். திருநீறு அணிந்து வருபவர்களை கண்டவுடன் அவர்களை வணங்கி மகிழ்வார்.

அவ்வூரிலேயே போர் செய்ய கற்றுக் கொடுக்கும் தொழிலை செய்து வந்த அதிசூரன் என்பவர் இருந்தார். அவர் தானே போர் பயிற்சி அளிக்கும் முதன்மை சான்று பெற்ற தலைவனாக வேண்டுமென ஏனாதிநாதர் மீது பொறாமை கொண்டு போர் புரிய அழைத்தான். அதிசூரன் தன்னால் பயிற்சி பெற்ற வீரர்களுடன், ஏனாதிநாதர் மற்றும் அவரால் பயிற்சி பெற்ற வீர்களுடன் கடுமையாக போர் புரிந்து, தோல்வியுற்று பிழைத்தால் போதும் என்று எஞ்சிய தனது சீடர் களுடன் ஒடி தனது இல்லம் சேர்ந்தான். அன்று இரவு முழுவதும் அவன் தூங்காது ஏனாதிநாதரை வஞ்சனையால் வெல்ல வேண்டும் என முடிவு செய்தான். மறுநாள் தனது ஏவலனை அழைத்து ஏனாதிநாதரிடம் சென்று நம்மிடையே நடக்கும் முதலுரிமை போரில் எதற்காக பல வீரர்கள் இறக்க வேண்டும், எனவே நாம் இருவர் நேருக்கு நேர் போர் புரியலாம்

Koviloor Digital Library

என்று அழைத்தான். அவ்வாறே ஏவலாள் கூறியதை கேட்ட ஏனாதிநாதரும் தனித்து போரிட ஒப்புக் கொண்டார். ஏனாதியார் திருநீறு அணிந்த அடியவர்க்கு ஒருபோதும் தீங்கு செய்ய மாட்டார் என்பதை அறிந்திருந்த அதிசூரன் நெற்றியில் நிரம்ப திருநீறு பூசி தனது கேடயத்தால் தன் முகத்தை மறைத்துக் கொண்டு போர் புரிய தான் அழைத்த இடத்தில் நின்று கொண்டிருந்தான்.

ஏனாதிநாதர் வந்தவுடன் அதிசூரன் போர் புரிவது போல முன் சென்றான். தனது முகத்தை மறைத்து பிடித்திருந்த கேடயத்தை ஏனாதிநாதர் வாளால் விலக்கும்போது அதிசூரன் அணிந்திருந்த திருநீற்றை கண்டவுடன் முன்பு இவர் நெற்றியில் காணாத திருநீறு இப்போது கண்டேன் அதுபோதும் எனக்கு, என்று போரிடாமல் ஆயுதம் இல்லாதவரை கொன்ற பாவம் இவ்வடியார்க்கு வரலாகாது என தனது கேடயத்தையும், வாளையும் ஏந்தி நிற்பது போல பாவனை செய்தார். உடனே அதிசூரன் (தனது வாளால் ஏனாதிநாதரை வெட்டி வீழ்த்தினார்) தான் எண்ணி வந்ததை முடித்தான். சிவபெருமான் விண்ணில் தோன்றி ஏனாதிநாத நாயனார்க்கு தன் உடன் என்றும் பிரியாத அன்பருளி சிவலோகம் சேர்த்தார்.

எயினனூர்: தற்போது ஏனநல்லூர் என்று வழங்கப் படுகிறது கும்பகோணத்திலிருந்து மன்னார்குடி செல்லும் வழியில் பாடல்பெற்ற திருத்தலமான திருக்கருக்குடி (மருதாந்த நல்லூர்) அருகே உள்ள ஊராகும்.

Koviloor Digital Library

கருத்து : திருநீறு என்பது ஒரு சமயத்தில் இருக்கிறோம் என்ற அடையாளத்திற்கு அணிவது அன்று. சிவபெருமானின் திருவடியை எளிதில் அடைய நம்முடைய நெற்றியில் மங்காமல் எப்போதும் திருநீற்றை சிவபெருமானை நினைந்து அணிய வேண்டும். திருநீற்றுச் சாம்பல் நம் வாழ்க்கை நிலையற்றது என்பதை நமக்கு உணர்த்தி, நிலையானது சிவபெருமானின் திருவடியே என்பதை உணர்த்தவல்லது.முடி சார்ந்த மன்னனும் முடிவில் பிடி சாம்பல்.

நாம் செல்லும் இடமெல்லாம் திருநீற்றின் முக்கியத் துவத்தை நம் சமுதாயத்தினர்க்கு சொல்லும் கடமை நமக்கு உள்ளது. பிற சமயத்தினர் தனது சமயத்தின் அடையாளத்தை விரும்பி வெளிப்படுத்தி அணிகின்றனர். ஆனால் நம் சமயத்தவர் பலர் நெற்றியில் முழு நீறு அணிவதே இல்லை. எல்லா சிறப்புக்களையும் வழங்கும் திருநீற்றை வெட்கப்படாமல் நெற்றியில் மூன்று பட்டையாக மகிழ்ச்சியாக அணிவோமாக.

ஒரு சிவனடியார் உருவாகிய மகிழ்ச்சியில் தன் உயிரை விடத் துணிந்த ஏனாதி நாயனாரின் பெருமையை விளக்குதல் அரிது.

திருநீற்றுப்பதிகம்

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆலவாயான் திருநீறே

– திருஞானசம்பந்தர்

ஏனாதிநாய நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

9. கண்ணப்ப நாயனார் வரலாறு

பொத்தப்பி நாட்டில் உடுப்பூர் என்ற வனப்பகுதியில் வேடுவ குல தலைவனாக நாகன் அவரது மனைவி தத்தை என்ற இருவருக்கும் பல காலமாக குழந்தைபேறு இல்லாமல் இருந்தது. அக்குல மக்களின் தெய்வமான முருகவேளை வணங்கி விழா எடுத்தார்கள். இறைவன் திருவருளால் தத்தை கருவுற்று ஒரு ஆண் மகவை பெற்றாள். பிறந்த குழந்தை மிகவும் உறுதியாகவும், திண்மையாகவும் இருந்தமையால் திண்ணன் எனப் பெயரிட்டனர்.

திண்ணன் இனிதே வளர்ந்து வில் பிடிக்கும் வயது வர அவரது தந்தையார் ஒரு மங்கள நாளில் வில் விழா செய்து அவ்விழாவில் வேடுவ குல வில் பயிற்சியாளர்களைக் கொண்டு வில் பயிற்சியை தொடங்கி வைத்தார். திண்ணன் முறையாக வில் வித்தை பயின்று பதினாறு வயது எய்தினார். அந்நிலையில் ஒருநாள் வேடுவ குல மக்கள் அனைவரும் ஒன்று கூடி நாகனிடம் சென்று தங்களது புனங்களில் (மலைப்பகுதியிலுள்ள நிலப்பகுதி) காட்டு மிருகங்கள் நெருங்கி பல இன்னல்கள் செய்து வருகின்றன என முறையிட்டனர். வேடுவ குல தலைவரான நாகன் தனக்கு வயது முதிர்ந்து விட்டதால் வேட்டையாட தன்னால் இயலவில்லை. எனவே எனது மகன் திண்ணனை உங்களுக்கு தலைவனாக அமர்த்துகிறேன் என மொழிந்தார். இதனைக்கேட்ட வேடுவ குல மக்கள் அனைவரும் பெருமகிழ்ச்சியை அடைந்தனர். ஒரு மங்கள நாளில்

Koviloor Digital Library

திண்ணனை அழைத்து தனது புலித்தோல் இருக்கையில் அமரச் செய்து வேடுவகுலத் தலைவனாக்கினார். மறுநாள் திண்ணன் வேட்டைக்கு வில், அம்பு மற்றும் போர் கருவிகளை ஏந்திச் செல்ல, அவருக்கு மெய்க்காவலனாக நாணன், காடன் என்ற இருவரும் உடன் சென்றனர். அவர்களுடன் வேடுவகுல வீரர்களும் பல வகை ஒலிகளை எழுப்பி செய்து மிருகங்களை விரட்டி, வேட்டையாடினார்.

அப்போது இடி ஓசை போன்ற சத்தத்துடன் கத்திக்கொண்டு பன்றி ஒன்று வேடுவர்கள் விரித்த வலையிலிருந்து தப்பி ஓடியது. அதனைக் கண்ட திண்ணன் அப்பன்றியை துரத்திக் கொண்டு ஓடினார். இரண்டு மெய்க்காவலரும் பின் செல்ல அப்பன்றி வெகு தூரம் ஓடி ஒரு மரத்தின் கீழ் நின்றது. அப்பன்றியை திண்ணன் நெருங்கிச் சென்று தன் வாளால் இரு துண்டாக வெட்டினார். இதனைக் கண்ட நாணனும், காடனும் மிக மகிழ்ந்து திண்ணனின் வீரத்தைக் கண்டு வணங்கினர். மேலும் திண்ணனை நோக்கி, பல காத தூரம் வந்து விட்டோம் எனவே இப்பன்றியை நெருப்பில் இட்டு உண்டு, நீர் அருந்திய பின் வேட்டையாட செல்லலாம் எனக் கூறினர். அதற்கு திண்ணன் மிக தண்ணீர் தாகமாக உள்ளது. இவ்வனத்தில் தண்ணீர் எங்கே கிடைக்குமென கேட்க, அதற்கு நாணன் தேக்கு மரங்கள் அடர்ந்த இக்குன்றை கடந்தால் பொன் முகலி ஆறு ஓடுகிறது என கூறினார். வெட்டுண்ட பன்றியை காடனும், நாணனும் தூக்கிக் கொண்டு செல்ல, திண்ணனும் அவர்களுடன் பொன்முகலி ஆற்றினை நோக்கி நடந்தார். வெகு தூரம் செல்ல சிவந்த கண்களையுடைய காளையை

Koviloor Digital Library

வாகனமாக உடைய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்காளத்தி மலையை திண்ணன் கண்டார். கண்டவுடன் நாணனே! இக்குன்றின் மேல் செல்வோம் என கூற, நாணனும் குன்றின் உச்சியில் குடுமித்தேவர் இருப்பார், “கும்பிடலாம் வா’யென கூறி பொன்முகலி ஆற்றின் கரையை அடைந்தனர்.

திண்ணன், நாணனை நோக்கி இம்மலையை கண்டதும் என் மேலுள்ள பாரம் நீங்கியது போலவும், சுவாமியை காண என் ஆசை பொங்கி வருவதோடு என் மனம் வேறு எதையும் நினைக்கவில்லை என்று கூறினார்.பின் காடனை நோக்கி நீ இப்பன்றியை தீக்கோலில் இட்டு பக்குவப்படுத்து அதற்குள் நாணனோடு இத்திருமலைக்கு மேல் சென்று வருகிறேன் எனக் கூறி பொன் முகலி ஆற்றினை கடந்து, நாணன் முன் செல்ல இருவரும் திருமலையை சென்று அடைந்தனர். அப்போது நண்பகல், ஆதலின் திருமலை மேல் உச்சி கால பூசை தேவர்களால் தேவ வாத்தியம் முழங்க நடந்து கொண்டிருந்தது. இவ்வோசையை திண்ணன் கேட்டு நாணனிடம் சொல்ல, அதற்கு நாணன் ஏதோ தேனீக்களின் ஓசையாக இருக்கும் என கூறினான். திண்ணனார் முற்பிறவியின் தவத்தால் சுவாமியை நோக்கி விரைந்து ஓடி ஏக நாயகரான சிவபெருமானை கண்டார்.கண்டவுடன் அச்சிவலிங்கத் திருவுருவை தழுவியும், மோந்தும் அருகே நின்றார். திண்ணனுக்கு சுவாமி தனியே இருப்பதை கண்டவுடன் கண்ணீர் அருவி போல கொட்டியது. பின் நாணனிடம் பச்சிலையும், பூவும், சுவாமி மீது வைத்திருப்பது யாரோ? என வினவினார். அதற்கு நாணன் உன் தந்தையுடன் இங்கு வந்திருக்கிறேன். அப்போது பிராமணன் ஒருவர்

Koviloor Digital Library

பச்சிலை, பூ, நீரும் கொண்டு இறைவனுக்கு நீராட்டி பூச்சூட்டியும், ஏதோ சொல்லி ஊட்டியும் செல்வார் எனக் கூறியதை கேட்ட திண்ணனார், சுவாமி தனியாக இருக்கிறாரே என்று சுவாமியின் அருகிலேயே இருந்தார். பின் சுவாமிக்கு உணவு தருவார் யார் என்று கூறி உணவுக்காக புறப்படுவார். பின் மீண்டும் சுவாமி அருகிலேயே வந்து விடுவார். கன்றை பிரியாத தாய் பசுவினைப் போல் சுவாமி மீது அன்பு செலுத்தினார். தான் விரும்பி உண்ணும் உணவை இறைவனும் விரும்புவார் என நினைத்து சுவாமிக்கு இறைச்சியை படைக்க வேண்டும் என்று தனது வில்லையும், அம்பையும் எடுத்துக் கொண்டு நாணன் பின்னே வர திண்ணன் விரைந்து காடனை நோக்கி வந்தார். காடன் நாணனை நோக்கி ஏன் இவ்வளவு நேரம் என கேட்க அதற்கு நாணன், சுவாமியைக் கண்டவுடன் அவரை விட்டு வர மனமில்லாது அங்கேயே நின்று விட்டார்.

இப்போது கூட சுவாமிக்கு உணவு எடுத்துச் செல்லவே வந்துள்ளார் என கூறினான். திண்ணன், வாயில் பொன்முகலி ஆற்று நீரை நிறைத்து, மலர்களை தனது குடும்பியில் சொருகி கொண்டு, தேக்கு மர இலையில், பதப்படுத்திய பன்றி இறைச்சியை எடுத்துக்கொண்டு மீண்டும் திருமலைக்கு புறப்பட்டார். நாணனும், காடனும் இந்நிலையை நாம் திண்ணனின் தாய் தந்தையர்க்கு கூற வேண்டும் எனக்கூறி புறப்பட்டுச் சென்றனர்.திண்ணனார் காளத்தியப்பரிடம் சென்று தனது வாயிலுள்ள நீரை சுவாமி மீது நீராட்டி தனது குடும்பியில் சொறுகியிருந்த மலர்களை சுவாமி சிரசின் மேலிட தன்னுடைய தலையை சுவாமியின் சிரசின் மீது வைத்து பூக்களை உதிர்க்கும்படி தலையை ஆட்டினார். அதற்கு பின்

Koviloor Digital Library

தான் கொண்டு வந்த இறைச்சியை சுவை பார்த்து, சுவையுள்ள பகுதியை மட்டும் சுவாமியின் முன் படைத்து அமுது செய்து அருளும் என்றார். கதிரவனும் மறைய இரவு முழுவதும் வில் ஏந்தியபடி சுவாமிக்கு காவலாக அருகிலேயே நின்றார். இரவு காலம் முடியும் நேரத்தை குருவி இனங்களின் ஓசை கொண்டு அறிந்து சுவாமிக்கு இறைச்சி அமுது செய்விக்க வேண்டுமென சுவாமியை வணங்கி புறப்பட்டார்.

அப்போது காளத்தியப்பருக்கு தொடர்ந்து பூசை செய்து வரும் சிவகோச முனிவர், பூக்களையும் நீரினையும் எடுத்துக் கொண்டு சுவாமி அருகில் வரும்போதே இறைச்சியையும், எலும்பினையும் கண்டு அதிர்ச்சியுற்று இந்த அநீதியை செய்தவர் யார்? நாய்களின் கால் தடத்தையும், செருப்பு அடியின் சுவட்டையும் பார்த்து வேடுவர்களே இவ்வாறு செய்திருக்க வேண்டும் என நினைத்து மிகவும் கவலைக் கொண்டார். பின் இறைச்சியையும், எலும்பினையும் தூய்மை செய்து மீண்டும் பொன்முகலி ஆற்றில் குளித்து விட்டு வந்து திருக்காளத்தியப்பருக்கு வழிபாடுகளை செய்தார். அவ்வழிபாட்டின் போது “எல்லோர்க்கும் சிவபெருமானே முழு முதற் கடவுள்” என கூறும் மந்திரங்களையே ஓதி தனது தபோவனம் சென்றார்.

திண்ணனார், பன்றி, மான் முதலிய மிருகங்களை வேட்டையாடி அவற்றை தீயிலிட்டு நல்ல பதம் வரும்படி வெந்தவுடன் முன்பு போலவே சுவை பார்த்து, சுவையான பகுதியை தேக்கு இலையில் வைத்து அதனை ஒரு கல்லில் வைத்து அதன் மீது தேன் ஊற்றியும், முன்பு போலவே நீரும் மலரும் எடுத்துக்கொண்டு திருக்காளத்தி மலை மீது ஏறி

Koviloor Digital Library

சுவாமி அருகே சென்று முன்பு போலவே பூசித்து சுவாமியிடம் இறைச்சியும் தேனும் கலந்து கொண்டு வந்துள்ளேன் என்று கூறி காளத்தியப்பருக்கு அமுதூட்டினார்.

இரவெல்லாம் விழித்து காவலிருந்து விடியும் முன் மீண்டும் வேட்டைக்குச் சென்றார். சிவபூசை செய்ய வந்த சிவகோச முனிவர் முதல் நாள் போலவே இறைவர் முன்பு இறைச்சி கிடப்பதை கண்டு மிகவும் மனம் தளர்ந்து பின் அவ்விடத்தை தூய்மை செய்து பூசனை முடித்து தன் திருமடம் சென்றார். அதன்பின் திண்ணனார் வழக்கம் போல பூசனை செய்ய வந்தார்.

இந்நிலையில் திண்ணனாரின் தாய் தந்தையர் திருக்காளத்தி மலை வந்து திண்ணனாரை பலவாறு அழைத்தும் பயனில்லாமல் திரும்பி சென்றனர். இவ்வாறாக ஐந்தாவது நாள் தொடர்ந்து தூய்மை செய்து பூசனைகளை சிவகோசரியார் முடித்து சிவபெருமானிடம் நாயகனே இவ்வாறு அசுத்தம் செய்பவரை அறியமுடியவில்லை. அவர்கள் யாராக இருப்பினும் திருவருளாலே ஒழித்து அருளவேண்டும் என வேண்டிக் கொண்டார். அன்று இரவே சிவகோசரியார் கனவில் சிவபெருமான் வெளிப்பட்டு இவ்வாறு செய்வது ஒரு வேடுவன். அவன் என்மீது கொண்ட அன்பை தவறாக கருதாதே, அவனுடைய நற்செயல்களை கேள். அவனுடைய வடிவெல்லாம் என்மீது கொண்ட அன்பு, அவனுடைய அறிவெல்லாம் என்னை மட்டுமே அறியும் அறிவு, அவன் செயல் எனக்கு மிகவும் இனிமையாக உள்ளது. இதனை நீ அறிவாயாக என்று கூறி மேலும் நாளை நீ பூசனை முடித்து மறைந்திருப்பாய் அப்போது திண்ணன் என்னிடத்து கொண்ட அன்பை நீ காண்பாயாக

Koviloor Digital Library

என உரைத்தார். சிவகோசரியார் கனவில் தனக்கு இறைவன் உணர்த்தியபடி திருக்காளத்தி யப்பருக்கு பூசனைகளை முடித்து பின்புறமாக ஒளிந்து கொண்டார்.

திண்ணனார் ஆறாவது நாளாக முன்பு போல பூசனைப் பொருள்களையும், பல புதிய மலர்களையும் கொண்டு ஆறுசேர் செஞ்சடை நாதனை காண, விரைந்து வர, அப்போது பல தீய சகுனங்கள் முற்பட திண்ணனார் சுவாமியை நோக்கி வரும் முன் சற்று தூரத்திலேயே இறைவனின் கண்களில் ஒன்றில் (வலது கண்) இரத்தம் வடிவதை கண்டார். கண்டவுடன் மிக விரைவாக ஓடி வர வாயிலுள்ள நீர் சிதறியது. இறைச்சி கையிலிருந்து விழுந்தது. குடுமியிலுள்ள மலர்கள் சிதறியது. சுவாமி முன்பு மயங்கி விழுந்தார்.

சுவாமி கண்ணில் வழியும் இரத்தத்தை கையால் துடைத்தும் இரத்தம் நிற்காது வழிந்தது. வேறு வேடுவர் அல்லது மிருகங்கள் ஏதாவது இவ்வாறு செய்தனவோ என நினைத்து வில்லையும், அம்பையும் எடுத்துக் கொண்டு தேடினார். எவரும் காணாது மீண்டும் காளத்தியப்பரின் திருவடியில் கதறி அழுது கட்டிப்பிடித்து கண்ணீர் பெருக நின்றார். பின் பச்சிலைகளை கொண்டு இரத்தம் வடிவதை நிறுத்தலாம் என பச்சிலைகளை தேடிச் சென்றார். பச்சிலைகளை எடுத்துக் கொண்டு வந்து அதனை பிழிந்து சுவாமியின் கண் மேல் வார்த்தார். அதன் பிறகும் இரத்தம் நிற்காது வழிவதை கண்டு யோசனை செய்தார். அப்போது அவருக்கு ஊனுக்கு ஊண், கண்ணுக்கு கண் என்ற பழமொழி நினைவிற்கு வர தன் கண்ணை எடுத்து இறைவர் கண்ணில் அப்பினால் குருதி நிற்கும் என முடிவு செய்து கொண்டு சுவாமியின் முன்பு சென்று அம்பினால் தன் வலது

Koviloor Digital Library

கண்ணை எடுத்து அப்பினார். உடனே குருதி நின்றது. அதனை கண்டவுடன் நிலத்தில் பாய்ந்து தோள் கொட்டி ஆடி, நான் செய்த யோசனை மிகவும் சரி என்று கூறிக்கொண்டு கூத்தாடினார்.

அந்நிலையில் சிவகோச முனிவருக்கும், அனைத்து உயிர்களுக்கும் திண்ணனாரின் பக்தியை வெளிப்படுத்த சுவாமி தனது இடது கண்களில் இரத்தம் வழியும்படி செய்தார். இதனைக் கண்ட திண்ணனார் மிக வருந்தியபின், நான் இதற்கு மருந்து தெரிந்து கொண்டேன் என்று மகிழ்ந்து அடையாளம் வேண்டும் என்பதற்காக தனது இடதுகாலை தூக்கி சுவாமியின் குருதி வழியும் இடது கண்ணில் ஊன்றி, அம்பினால் தனது இடது கண்ணை எடுக்க முற்பட்ட போது மகாதேவராகிய சிவபெருமான் தோன்றி தனது திருக்கரத்தால் திண்ணனாரின் அம்பு ஏந்திய கையை பிடித்துக் கொண்டு அமுத வாக்காக " கண்ணப்ப நிற்க" என்று மூன்று முறை மொழிந்தார். நடந்த அனைத்தையும் சிவகோச முனிவர் மறைந்திருந்தவாறே கண்டார். பிரம்மன் முதலான வானவர்கள் பூ மழை பொழிந்தனர். வேத ஒலிகள் ஒலித்தன. சிவபெருமான், கண்ணப்ப நாயனாரை என்றும் சிவலோகத்தில் என்னோடு வலப்பக்கத்திலேயே இருப்பாயாகயென அருள்புரிந்தார்.

திருக்காளத்தி : சென்னையிலிருந்து தடா சென்று இடப்புறம் திரும்பி வரதய்யப்பாளையம் அடுத்து இவ்வூரை அடையலாம். இவ்வூர் ஆந்திர மாநிலத்தில் உள்ளது. மூவர் பாடல் பெற்ற தென் கயிலாயம் ஆகும். மூலவர் சுயம்பு.

கருத்து : அ. பல காலம் ஆகம முறைப்படி வழிபட்டு வந்த சிவகோச முனிவர் சுவாமியை காணும் பேறு பெற்றதற்கு ஆகமங்களே அறியாத கண்ணப்ப நாயனாரின் தூய அன்பே காரணமாகும். அறுபத்து மூவரில் ஐந்தே நாட்கள் பூசை செய்து இறைவனை அடைந்தது கண்ணப்ப நாயனாரே ஆவார்.

Koviloor Digital Library

பூக்கள் கொண்டு அவன் பொன்அடி போற்றினால்
காப்பர் நம்மை கறைமிடற்று அண்ணலே

– என்பது திருநாவுக்கரசர் வாக்கு.

ஆகவே நமது இல்லங்களில் சிவலிங்கத் திருமேனி அமைத்து மகிழ்ச்சி பொங்க சுவாமிக்கு நீராட்டி மலர் சூட்டி வரவும். சிவபூசை நமக்கு எல்லா நன்மைகளையும் வழங்கும் சிவபூசை பற்றிய விளக்கங்களை அறிய அடியவன் தொகுத்துள்ள சைவ விளக்க வினா விடை பகுதியை www. chennai sivapathigal.blogspot.com என்ற இணைய தளத்தில் காணலாம்.

சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்
பாத்திரம் சிவம் என்று பணிந்திரேல்
மாத்திரைக்குள் அருளும் மாற்பேறரே

திருநாவுக்கரசர் (5–60–3)

ஆ. கண்களை தோண்டி வைத்து விட்டால் முக்தி அடைந்து விடலாம் என்று நினைப்பது தவறு. கண்களை எதன் பொருட்டு தோண்டி எடுத்தார் என்பதை நினைக்க வேண்டும். சிவலிங்கத்திலிருந்து இரத்தம் வடிதலைக் காண்பவரும், சுவாமியிடம் எதனையும் எதிர்பாராத தன்மை ஆகிய இவ்விரண்டும் உடையவரே கண்ணப்ப நாயனாரின் செயலை செய்ய தகுதியானவர். மேலும் கண்ணப்பர் மாமிசம் சாப்பிட்டு சுவாமியை அடைந்தார். எனவே மாமிசம் சாப்பிடலாம் என்று வாதிடுபவர் உள்ளார்கள். உண்மை என்னவென்றால் கண்ணப்ப நாயனார் சுவாமியை பார்த்த அந்த நொடியிலிருந்து எந்தவித உணவோ, நீரோ அருந்தவில்லை.

கண்ணப்ப நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

10. குங்கிலியக் கலய நாயனார் வரலாறு

சிவபெருமான், மார்கண்டேயருக்காக எமனை காலால் காய்ந்த பதியான திருக்கடவூரில் அந்தணர் மரபில் கலயர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் அமிர்தகடேஸ்வர சுவாமிக்கு தினமும் குங்கிலியத் தூபத்தை இடுகின்ற திருப்பணியை செய்து வந்தார். சிவபெருமான் திருவருளால் வறுமை வந்தடைந்த நிலையிலும், தூபமிடும் திருப்பணியை தொடர்ந்து செய்து வந்தார். தனது நிலங்களை விற்றும், ஏனைய செல்வங்கள் அத்தனையும் நீங்கிய நிலையில் அவருடைய குடும்பத்தினரும் உறவினரும் இரண்டு நாட்களாக உணவு உட்கொள்ளாது கண்டு மிகவும் வருந்தினார். கலயனாருடைய மனைவியார், தான் அணிந்திருந்த மங்கல தாலியை நூலிலிருந்து கழற்றி நூலை மட்டும் அணிந்து கொண்டு அத்தாலியை கலயனாரிடம் கொடுத்து நெல் வாங்கி வரும்படி கூறினார்.

அத்தாலியை எடுத்துக்கொண்டு கலயனார் செல்லும் போது ஒரு வணிகன் உயர் வகை குங்குலிய பொதியினை ஏற்றிக் கொண்டு எதிரே வந்தான். அதனைக் கண்டவுடன் கலயனார்க்கு கங்கை ஆற்றினை தலையில் தாங்கிய சிவபெருமானுக்கு இது ஏற்றது என கூறி தான் கொண்டு வந்த தாலியை அவ்வணிகனுக்கு கொடுத்து விட்டு அதற்கு பதிலாக குங்குலிய பொதியை விருப்பத்துடன் பெற்றுக் கொண்டு

Koviloor Digital Library

விரைந்து திருக்கடவூர்வீரட்டானம் திருக்கோயிலுக்கு சென்று பண்டாரத்தில் (பாதுகாப்பான அறை) சேர்த்தார். பின் சிவபெருமானின் திருவடியினை போற்றியபடியே அமர்ந்திருந்தார்.

இந்நிலையில் கலயனாருடைய இல்லத்தை குபேரன் (இருநிதி கிழவோன்) நெருங்கி பொன்பாத்திரத்தில் நெல்லும் அரிசியையும், திரவியங்களும் நிரப்பி வைத்தார். அப்போது கலயனார் மனைவி உறங்கும் நிலையில் இறைவன் கனவில் தோன்றி, செல்வமும், தானியமும் இல்லத்தில் நிறைந்துள்ளதை உணர்த்தினார். உடனே விழித்து கனவில் கண்டபடியே உள்ளதை கண்டு இறைவனின் திறத்தை வியந்து உணவு தயாரிக்க பாகசாலைக்கு (சமையல் அறை) விரைந்தார்.

திருக்கோயிலில் அமர்ந்திருந்த கலயனார்க்கு அறியும்படி சிவபெருமான் அசரீரியாக " நீ மிகவும் பசித்திருப்பாய் இல்லம் சென்று உனது மனைவி சமைத்துள்ள பால் சோற்றினை உண்பாயாக என மொழிந்தார். கலயனார் தான் உணவு தயாரிக்க பொருட்கள் வாங்கி தராத நிலையை உணர்ந்தும், இறைவனின் வாக்கிற்கு அஞ்சி இல்லத்திற்கு விரைந்தார். இல்லத்தில் பொற்குவியல்களையும், தானியங் களையும் கண்டபோது இறைவனின் அருள் திறத்தையையே கண்டார். பின் வாழை இலையிட்டு சிவபெருமானின் அன்பர்களோடும் தன் குழந்தைகளோடும் சேர்ந்து கலயனார் உணவு உட்கொண்டார்.

சிவபெருமான் திருவருளாலே மிகப்பெரிய செல்வந்தராகி, சிவனடியார்களுக்கு தினமும் பால், தயிர், கூட்டு, பொரியல் என மிகச் சிறப்பாக திருஅமுது செய்வித்து

Koviloor Digital Library

வரும் நாளில், திருப்பனந்தாள் என்ற ஊரில் தாடகேச்சரம் எனும் திருக்கோயில் மூலவரான (சிவலிங்கத் திருமேனி) இறைவர் சாய்ந்த நிலையில் இருப்பதை கண்டு மன்னன் மிக வருந்தி தனது யானைப்படை, குதிரைப்படை, போர் வீரர் கொண்டு நிலை நிறுத்த முயன்று முடியாது இருப்பதை கேள்வியுற்ற கலயனார், திருப்பனந்தாள் விரைந்து வந்தார். அப்போது யானை, குதிரை படைவீரர்கள் இறைவனை நேராக நிமிர்த்த முடியாது சோர்வுற்றிருந்தனர்.

அதனை கண்ட கலயர் வருத்தம் கொண்டு இவர்கள் அடைந்துள்ள களைப்பை நானும் அடைவேன் என்று பூ சுற்றிய கயிற்றால் சுவாமி மீது சுற்றி மறுமுனையை எடுத்து தனது கழுத்தில் சுற்றி இழுத்தார். உடனே சிவபெருமான் கருணையால் சிவலிங்கத் திருமேனி நேராக நிலைப்பட்டது. தேவர்கள் கற்பக மலர்களை வானிலிருந்து பொழிந்தனர். மன்னன் கலயனாரின் திருவடியில் விழுந்து வணங்கி மகிழ்ந்தார். சில நாள்கள் கழித்து திருக்கடவூருக்கு வந்து சிவத்தொண்டு செய்து வரும் நாளில் திருஞானசம்பந்தரும் அப்பர் பெருமானும் கலயரின் இல்லத்திற்கு வருகை தந்தனர். அவர்களுக்கு சிறப்பாக அறுசுவையுடன் திருஅமுது கொடுத்து திருப்பணி பலவும் செய்து சிவபெருமானின் திருவடி நிழலில் சேர்ந்தார்.

திருக்கடவூர் : தற்போது திருக்கடையூர் என்று வழங்கப்படுகிறது. சென்னையிலிருந்து சிதம்பரம்–சீர்காழி வழியே இவ்வூரை அடையலாம். மூவர் பாடல் பெற்ற திருத்தலமாகும். தற்போது அவ்வூரில் சுவாமியின் பெயரான அமிர்தகடேசுவரர் கோயில் எனக் கேட்டால் தெரியவில்லை.

Koviloor Digital Library

அபிராமி கோயில் என்றால் தான் தெரிகிறது. அட்டவீரட்ட தலங்களில் ஒன்று.

கருத்து : சிவபெருமான் மீது நாம் வைத்திருக்கும் அன்பும் செய்து வரும் தொண்டும் எந்த நிலையிலும் மாறாது இருக்க வேண்டும் என்பதை நமக்கு உணர்த்தவே சிவபெருமான், கலய நாயனாருக்கு முதலில் வறுமையுறும்படி அருள் செய்து, பின் மிக உயர்வையும் கொடுத்து அவர் இவ்விரு நிலையிலும் எப்படி மாறாது திருத்தொண்டு செய்து வருகிறார் என்பதை கலயநாயனாரின் மூலம் நமக்கு உணர்த்துகிறார்.

திருக்கடவூர் வீரட்டம் திருமுறை

பொள்ளத்த காயமாய பொருளினை போகமாதர்
வெள்ளத்தைக் கழிக்க வேண்டில் விரும்புமின் விளக்குத் தூபம்
உள்ளத்திரி ஒன்று ஏற்றி உணருமாறு உணரவல்லார்
கள்ளத்தை கழிப்பர் போலும் கடவூர் வீரட்டனாரே

பெரும்புலர்காலை மூழ்கிப் பித்தர்க்கும் பத்தர் ஆகி
அரும்பொடு மலர்கள் கொண்டு ஆங்கு ஆர்வத்தை உள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினால் இடவல்லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர் வீரட்டனாரே

– திருநாவுக்கரசர்

குங்குலியக்கலய நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

11. மானக்கஞ்சாற நாயனார் வரலாறு

கஞ்சாறு எனும் ஊரில் சேனாபதிகுடி மரபில் மானக்கஞ்சாறனார் திருஅவதாரம் செய்தார். வற்றாத செல்வந்தராக வாழ்ந்து வந்தார். சிவனடியார்கள் இது வேண்டும் என்று கேட்கும் முன்பே அவர்களின் மனம் அறிந்து கொடுத்து வந்தார். கூத்தப்பெருமானின் அருளாலே கற்பின் வடிவமாக திகழ்ந்த பெண்ணை மணந்தார். அவர்களுக்கு பிறவியெனும் கொடிய சூழலிலிருந்து பிழைக்கும் வழியை அமைத்து தரும் வண்ணம் ஒரு பெண் குழந்தை பிறந்தது. இப்பெரு மகிழ்ச்சியை மங்கல வாத்தியமுடன் சிவனடியார்க்கு எல்லாம் அளவிலாத கொடைகளை வழங்கியும் மகிழ்ந்தார். அப்பெண் குழந்தை இனிதே வளர்ந்து திருமணம் செய்யும் பருவம் அடைந்தாள். ஏயர்குல மன்னவருக்கு இப்பெண்ணை மணம் முடிக்க எண்ணி வயதாலும், அறிவாலும் முதிர்ந்த முதியோர் ஒருவர் மானக்கஞ்சாறர் இல்லத்திற்கு வந்தார். அம்முதியவரை வரவேற்று அவர் கூறியதை ஏற்று தனது மகளை ஏயர்குல மன்னவருக்கு திருமணம் செய்து கொடுக்க மானக்கஞ்சாறர் ஒப்புக் கொண்டார். இச்செய்தியை கேட்ட ஏயர்குல மன்னவனும் மிக மகிழ்ந்தார். இருவீட்டாரும் சேர்ந்து மதிநூல் வல்லவர் (சோதிடர்) களை கொண்டு கல்யாணம் செய்வதற்கு உரிய மங்கல நாளை குறித்தனர்.

அத்திருமணநாள் நெருங்க மானக்கஞ்சாறர் தனது ஊரையும் தன் இல்லத்தையும் அலங்கரித்து, பொன் பாத்திரங்களில் முளைப்பாலிகையிட்டும், முன்புற முகப்பிட்டும் கல்யாணகளை கட்டும்படிச் செய்தார்.

Koviloor Digital Library

மானக்கஞ்சாறரின் மகளை திருமணம் செய்ய ஏயர்குலத் தலைவனாகிய கலிக்காமனாரும், அவர்களது உறவினர்களும் புறப்பட்டு கஞ்சாரூரை சேர்வதற்கு முன் சிவபெருமான் சிவனடியாராக நெற்றியில் திருநீறும், சிகையும், கரியநிற மயிரினால் முறுக்கி செய்யப்பட்ட பூணூல் (பஞ்சவடி) அணிந்தும், பிறவியை மாற்றுகின்ற திருநீற்று பையும், நெருப்பின் மீது மூடியிருக்கும் சாம்பல் போன்று தனது திருமேனி முழுவதும் திருநீறு அணிந்தும், மானக்கஞ்சாறரின் இல்லத்திற்குள் நுழைந்தார். அம் மாவிரத முனிவரை கண்ட மானக்கஞ்சாறார் மிக மகிழ்ந்து வரவேற்று பணிந்தார். முனிவரும் இம்மங்கல ஏற்பாடு யாருக்கு என கேட்க, மானக்கஞ்சாறர் தனது மகளின் திருமணம் நடக்க இருப்பதை கூறினார். முனிவரும் மிக மகிழ்ந்து இத்திருமணத்தோடு மற்றும் ஒரு மங்கலம் உனக்கு நடக்க உள்ளது என மொழிந்தார்.

மானக்கஞ்சாறர் மணக்கோலம் கொண்டிருந்த தனது மகளை அழைத்துக் கொண்டு வந்து அம்முனிவரிடம் ஆசி வழங்கும்படி கூற, அம்மணப்பெண்ணும் முனிவரிடம் ஆசிபெற அவர் திருவடியில் வீழ்ந்து வணங்கினார். அது சமயம் நீண்டு வளர்ந்திருந்த அப்பெண்ணின் கூந்தலை கண்ட முனிவர் அருகில் இருந்த மானக்கஞ்சாறரை நோக்கி இத் தெய்வப் பெண்ணின் தலைமுடி தனக்கு பஞ்சவடிக்கு (பூணூல்) ஆகும் எனக் கூறினார். உடனே மானக்கஞ்சாறர் தனது வாளை உருவி தனது மகளின் கரிய நீண்ட கூந்தலின் அடியில் அரிந்து அம்முனிவரிடம் கொடுக்க அதனை வாங்குவார் போல நின்ற முனிவர் மறைந்தார். மாறாத இளமையுடைய விடைமீது (காளையப்பர்) உமையோடு சிவபெருமான் விண்ணிலிருந்து நிலம் வரை முழுவதும் நிறைந்தபடி திருக்காட்சியை அருளினார். மானக்கஞ்சாறர் இறைவனின்

Koviloor Digital Library

திருவடியை வணங்கினார். கணநாதர்கள் போற்றிசைப்ப, இமையோர்கள் சூழ்ந்து துதிசெய்ய, திருமணத்திற்கு வந்தவர்கள் இந்நிகழ்வை கண்டு களித்திருக்க மானக்கஞ்சாற நாயனாரை, சுவாமி சிவலோகம் சேர்த்தார்.

ஏயர்கோன் கலிக்காமனாரும் திருமணம் நடக்கும் இடம் வந்தார். நடந்த அரிய செயல்களை கேட்டு மகிழ்ந்தார் பின் தான் அவ்வேளையில் இல்லையே என வருந்தியும் பின் அத்துன்பம் நீங்கியவராய், முன்பு இருந்த நிலையினை போல் வளரப்பெற்ற, கூந்தலுடன் இருந்த பூங்கொடியை திருமணம் செய்து தனது சுற்றத்தார்களுடன் தனது ஊர் சென்றார்.

கஞ்சாறூர் : தற்போது ஆனந்த தாண்டவபுரம் என வழங்கப்படுகிறது. இத்திருத்தல இறைவன் பெயர் பஞ்சவடீஸ்வரர் மயிலாடுதுறை அருகில் உள்ள ஊராகும்.

கருத்து : மானக்கஞ்சாற நாயனார் சிறுவயதிலிருந்தே கடைபிடித்து வந்த நற்செயலான சிவனடியாரை கண்டதும் அவர்கள் மனம் அறிந்து கொடுக்கும் வழக்கமே பின் சிவனடியாராக வந்த சுவாமி கேட்டவுடன் கொடுக்கும் உறுதியை கொடுத்தது. நாம் ஒவ்வொருவரும் தொடர்ந்து கடைப்பிடித்து வரும் நல்ல செயல்களை கொண்டே இறைவன் நமக்கு அச்செயல் வழியே வெற்றியையும், முக்தியையும் நல்குவார். நாம் உயிரையாவது விட்டுவிட துணிவோம் . ஆனால் கல்யாணத்திற்கு அலங்கரிக்கப்பட்ட நம் மகளின் கூந்தலை அரிய துணிவோமா? எண்ணிப் பாருங்கள்.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார் – திருக்குறள்

மானக்கஞ்ச நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

12. அரிவாட்டாய நாயனார் வரலாறு

கணமங்கலம் எனும் ஊரில் வேளாண்மை குலத்தில் மிகுந்த செல்வந்தராக தாயனார் எனும் பெயருடன் சான்றோர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவ்வூரில் உள்ள திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் செஞ்சடை வேதியரான சிவபெருமானுக்கு திருஅமுதுக்காக (நிவேத்யம்) செந்நெல் அரிசியில் செய்த சோறும், செங்கீரையும், மாவடு கொத்தும், தினமும் எடுத்துச் சென்று இறைவனுக்கு படைத்து வந்தார். இத்திருத்தொண்டை சுவாமி மகிழ்ந்து ஏற்றுக்கொண்டு தாயனார்க்கு வீடுபேறு வழங்கவும், எவ்வளவு வறுமை வந்தாலும் மனம் தளராது தாயனார் மகிழ்ந்து செய்யும் திருத்தொண்டை உலகறிய செய்ய, சிவபெருமான் தாயனாரின் வழிவழி வந்த செல்வங்கள் அனைத்தும் சென்ற வழி அறிய முடியாதபடி நீக்கினார். வறுமை அடைந்த நிலையிலும், தாய் இல்லாத சிவபெருமானுக்கு அன்புமிக பெறுக தாய்போல ஊட்டி வந்தார்.

செந்நெல் விளையும் வயல்வெளியில் நெல் அறுக்கும் கூலி வேலை செய்து அக்கூலிக்காக செந்நெல் பெற்றும் இறைவர்க்கு அமுதிற்கும், கார் நெல் வயலில் பணி செய்தால் அக்கார் நெல்லை தனக்கு உணவுக்காகவும் பயன்படுத்திக் கொள்வார். இந்நிலையில் அனைத்து வயல்வெளியிலும் இறைவன் திருவருளால் செந்நெல்லே பயிராகியது. தாயனார் மிக மகிழ்ந்து கூலிக்கு அதிக செந்நெல் பெற்று அனைத்தையும் இறைவனுக்கே திருஅமுது செய்வித்து வந்தார்.

Koviloor Digital Library

செந்நெல் சோற்றை தான் உண்ணாது இறைவர்க்கு மட்டுமே திருஅமுது செய்வித்ததால், உண்ண உணவு இன்றி வருந்திய நிலையில், அவரது மனைவியார் வீட்டின் பின்புறம் வளர்ந்திருக்கும் இலைகளை கொய்து, கறி செய்து கொடுத்து வந்தார். இவ் இலைகளும் இல்லாது போகவே, தண்ணீர் மட்டும் குடித்து தன் திருத்தொண்டை தொடர்ந்து செய்து வந்தார். இந்நிலையில், ஒருநாள் செந்நெல்சோறும், செங்கீரையும், மாவடுவும் ஒரு கூடையில் எப்போதும் போல எடுத்துச் செல்ல அவரது துணைவியார் மண்குடத்தில் (பசு வழி கிடைக்கும் ஐந்து பொருள்களின் கூட்டு) பஞ்ச கவ்யம் கையில் எடுத்துக் கொண்டு அவர் பின் சென்றார்.

அப்போது நாயனார் பசியின் காரணமாக கால் தடுமாறி விழும் வேளையில் அவரது துணைவியார் பஞ்சகவ்ய பாத்திரத்தை மூடி இருந்த தன் வலதுகை கொண்டு தாயனாரை சாயாது பிடிக்க அவ்வேளையில் தாயனார் சுமந்து வந்த கூடை கீழே விழுந்து இறைவர்க்கு வைத்திருந்த அனைத்தும் வயல்வெளியில் காணப்படும் வெடிப்பின் உள் விழுந்து விட்டது. இதனை கண்ட தாயனார் இறைவரின் உணவிற்கு இனி நான் எங்கே போவது? எனக் கூறிக் கொண்டே, தனது அரிவாளால் தனது கழுத்தை அறுத்து கொள்ளும் நிலையில், சிவபெருமான் தனது இடது கரத்தால் தாயனாரின் கையை பிடித்துக் கொண்டும் அதே வேளையில் மாவடுவை கடிக்கும் ஓசையை (விடேல் விடேல்) தாயனார்க்கு கேட்கும்படியும் செய்தார். தாயனார் திகைத்து நிற்க அவரது கழுத்தின் வெட்டு காயம் மறைந்தது. இரு கைகளையும் கூப்பி நின்று, இறைவனிடம் இவ்வயல்வெளி வெடிப்பில் உள்ள திருஅமுதை அமுது செய்யும்படி வேண்டினார். அப்போது இடப வாகனத்தில் சிவபெருமான் எழுந்தருளி நீ செய்த செயல் மிக

Koviloor Digital Library

நன்று. நீயும் உனது மனைவியும் என்றும் நமது உலகு நீங்காது இருப்பீர்களாக என அருளினார். இறைவனுக்கு அமுது செய்விக்க முடியவில்லையே என அரிவாளால் அஞ்சாது அறுக்க முற்பட்டதால் "அரிவாள் தாய நாயனார்" என திருநாமம் பெற்றார்.

கணமங்கலம் : திருத்துறைப் பூண்டி அருகில் தண்டலை நீள்நெறி எனும் பாடல்பெற்ற சிவாலயத்தின் அருகில் உள்ள ஊராகும்.

கருத்து : செல்வம் நீங்கியும், பசியிலும் இருந்த நாயனார் தொடர்ந்து தான் செய்து வந்த திருத்தொண்டிற்கு இடையூறு வந்ததும், தன்னை மாய்த்து கொள்ளும் துணிவும் அவரது துணைவியாரின் குணநலமும் நாம் எண்ணத்தக்கது மேலும் திருக்கோயில் மூலவராகவுள்ள சிவலிங்கத் திருமேனியில் மட்டும் சுவாமி உள்ளார் என்ற நிலையிலிருந்து வயல்வெளியின் வெடிப்பில் சிந்தியவைகளை திருஅமுது செய்க எனக் தாயனார் கூறியது. முக்தி நிலையை அடைந்த உயிர்களுக்கு இடம், காலம் ஆகிய பேதங்கள் கிடையாது. இறைவனுக்கு மட்டுமே நிவேதித்த செந்நெல் சோற்றை தான் உண்ணாது இருந்ததும், சிறுவயதிலிருந்து உண்டு வந்த மாமிசத்தை கண்ணப்ப நாயனார் தான் உண்ணாது இறைவனுக்கு படைத்து பட்டினி கிடந்ததையும் எண்ணுக.

குறிப்பு : செந்செல் – இந்த நெல் வழி செய்த சோறு வெண்மையும், கடினமின்றியும் சுவையும் கூடியிருக்கும்.

கார் நெல் : சோறு கடினமாகவும், பருத்தும் வெண்மையின்றியும் இருக்கும்.

அரிவாட்டாய நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

13. ஆனாய நாயனார் வரலாறு

ஆயர் குலத்தில் திருமங்கலம் எனும் வளமான ஊரில் ஆனாயர் அவதரித்தார். அவர், சிவபெருமான் திருவடியன்றி வேறொன்றையும் விரும்பாதவராக வாழ்ந்து வந்தார். தினமும் அவர் பசுக் கூட்டங்களை காட்டிற்கு கொண்டு சென்று தீய விலங்குகளிலிருந்து காப்பாற்றியும் நோய் வராமல் காத்தும் அப் பசுக்கூட்டங்கள் மேலும் பல்கி பெருகும்படி மேய்த்து வந்தார். பழமையான நூல்களில் கூறியுள்ள மரபின்படி மூங்கிலை எடுத்து துளைகள் செய்து அவ் அழகிய புல்லாங்குழலில் சிவபெருமானுடைய திருஐந்தெழுத்து மந்திரத்தை ஏழிசையில் கூட்டி இசைப்பார்.

இவ்விசைஅமுதம் அண்ட சராசங்கள் அனைத்தும் இன்புறும்படி தன் கருணையை சேர்த்து வாசிப்பார். இவ்வாறு வாசித்து வரும்போது ஒருநாள் ஆனாயர் மிக பொலிவுடன் தன்னை அலங்கரித்துக் கொண்டு நெற்றியில் நிரம்ப திருநீறு பூசியும், தனக்கு கீழ் பணி செய்யும் ஆயர்களுடனும், பசுக்கூட்டத்தினை மேச்சலுக்காக கொண்டு சென்ற பின் அப்பசுக்களை எல்லா இடங்களிலும் பரவி மேய்க்கும்படி துணை ஆயர்களிடம் கூறிய பின் ஆனாயர், மலர்கள் பூத்துக் குலுங்கும் கொன்றை மரத்தின் அருகில் வந்தணைந்தார். அவர் கண்களுக்கு அக்கொன்றை மரத்தில் தொங்கி கொண்டிருக்கும் காய்கள் சிவபெருமானுடைய சடைகளை போல தோன்றியது. கொன்றை மலர்ச் சரங்கள் சுவாமி சடையின் மேல் உள்ளது போல தெரிய, அக்காட்சியை கண்டு

Koviloor Digital Library

மனம் உருகி ஒன்றுபட்ட சிந்தையினால் புல்லாங்குழலை எடுத்து மடை திறந்த வெள்ளம் போல சிவபெருமானை துதித்து திருஐந்தெழுத்து இசையை புல்லாங்குழலில் வாசிக்க, அவ்விசை தேவலோகத்திலுள்ள கற்பக மரங்களில் சொரியும் தேனுடன் அமுதமும் கலந்து செவிகளில் சேர்வது போன்ற இனிமை பொருந்தியவாறு இருந்தது. ஆடும் மயில், பசுக்கூட்டங்கள், ஆயர்கள் என அனைவரும் தன்னை மறந்து ஆனாயரிடம் ஒன்றி இருக்க, பாம்பு, மயிலின் மேல் விழ, சிங்கம் யானையுடன் வர, புலியின் பக்கத்தில் புல்லை வாயில் வைத்திருக்கும் மான்களும் உணர்வு ஒன்றிய நிலையில் சேர்ந்திருக்க, அந்நிலையில் மேலும் மேலும் வாசிக்க அண்ட சராசரங்களும் ஒரே தன்மையை அடைந்தன. இந்த இசை அனைத்து லோகங்களையும் கடந்து பொய்யர்கள் சென்று அடைய முடியாத பொன் அம்பலத்தில் நடனம் புரியும் சிவபெருமானின் திருச்செவியில் சென்று அடைந்தது. ஆனாயரின் குழலின் ஓசையை கேட்டு சிவபெருமான் உமையொடு நந்தி மீது ஏறி அவர் எதிரில் நின்றார்.

ஆனாயரிடம் பெருமான், “எப்போதும் இவ் இசையை யாம் என்றும் கேட்க இந்த நிலையுடனே நம்மிடம் சேர்வாயாக” என மொழிய ஆனாயரும் சுவாமியின் அருகில் சென்றார். அந்நிலையில் வானவர்கள் கற்பக மலர்களை சொரிய முனிவர்கள் வேதங்கள் ஓத, ஆனாயர் புல்லாங்குழலை வாசித்தபடியே சிவலோகம் சேர்ந்தார்.

திருமங்கலம் : திருச்சிராப்பள்ளியிலிருந்து டோல்கேட் வழி (லால்குடி) திருத்தவத்துறை செல்லும் வழியில்

Koviloor Digital Library

மாந்துறையிலிருந்து இடது புறம் நகர் என்ற ஊர் வழியே இப்பதியை அடையலாம். சுவாமி திருநாமம் சாமவேதீஸ்வரர் ஆகும்.

கருத்து : "வேதம் நான்கிலும் மெய்ப்பொருள் ஆவது , நாதன் நாமம் நமச்சிவாயவே" என்ற திருஞானசம்பந்தரின் வாக்கின்படி, மெய்பொருளான சிவத்தை அடைய திருஐந்தெழுத்தை எம்முறையிலாவது தொடர்ந்து சொல்ல சொல்ல, சிவகதி கிட்டும். திருஐந்தெழுத்தின் தூலம், சூட்சமம், அதிசூட்சமம், காரண, அதிகாரண பஞ்சாட்சரம் பற்றிய விபரம் அறிய சைவ சித்தாந்த சாத்திர நூலில் உண்மை விளக்கம் என்ற நூலினை படித்து தெரிந்து கொள்ளலாம். மேலும் திருப்பதிகங்களை சத்தமாக படிப்பது, இசைகருவிகளை ஒலித்து வழிபாடு செய்வது, நம்முடைய மனம் இறைவனிடத்து ஒருநிலை பட உதவுகின்றது. ஒரு நிலைப்பட்ட மனமே தியானத்திற்கு தகுதி அடைகிறது.

திருமுறை

இன் இசை வீணையர், யாழினர் ஒருபால்;
இருக்கொடு தோத்திரம் இயல்பினர் ஒருபால்;
துன்னிய பிணை மலர்க் கையினர் ஒருபால்;
தொழுகையர், அழுகையர், துவள்கையர் ஒருபால்;
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்;
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
என்னையும் ஆண்டுகொண்டு இன் அருள் புரியும்
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே!

– திருவாசகம்

ஆனாய நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

14. மூர்த்தி நாயனார் வரலாறு

மூன்று உலகங்களிலும் மேலானதும், திருஆலவாய் எனும் திருக்கோயில் அமையப்பெற்றதும், அருள்மிகு சொக்கநாதப் பெருமான் எழுந்தருளி இருக்கும் பேறு பெற்ற பழமையான (மதுரை) மதுராபுரியில், சிவபெருமானின் திருவடியையே பற்றாகக் கொண்ட மூர்த்தியார் எனும் அன்பர் வாழ்ந்து வந்தார். அவர் நாள்தோறும் திருக்கோவில் சென்று திருஆலவாயுடையார்க்கு அணிவிக்கும் சந்தன காப்பிற்காக சந்தனத்தை அரைத்து கொடுத்து வந்தார். அந்நாளில், கன்னட நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்த வடுக மன்னன் மதுரைக்கு படையெடுத்து வந்து பாண்டியனுடன் போரிட்டு ஆட்சியை கைப்பற்றினான். அம்மன்னன் சமண நெறியில் இருந்ததால், சிவநேயச் செல்வர்களை மிகவும் துன்புறுத்தி வந்தான். அவ்வழியே மூர்த்தி நாயனார்க்கு பல இடையூறுகளை செய்தான். ஆனால் மூர்த்தியார் சந்தனம் அரைத்து கொடுப்பதை தொடர்ந்து செய்து வந்தார். பின் மன்னன் சந்தனக் கட்டைகள் எங்குமே கிடைக்காதபடி செய்தான். மூர்த்தியார் சந்தனக் கட்டைகள் எங்கு தேடியும் கிடைக்காமல் தன் மனத்தினுள் "இக்கொடிய மன்னன் இறந்து பட, திருநீறு உயர் நன்னெறியுடன் வாழும் சிவ அன்பர் நம் நாட்டிற்கு மன்னவராக வருவாரா?" என நினைத்தார்.

நட்டம் புரியும் சிவபெருமானுக்கு சந்தனம் அரைப்பதை

Koviloor Digital Library

இவர்கள் நிறுத்தலாம் ஆனால் அதனை அரைத்து வந்த என் கையை தடுக்க அவர்களால் முடியாதென்று வட்ட வடிவமாகவுள்ள பாறையின் மீது தன் முழங்கையை வைத்து தோலும், நரம்பும், எலும்பும் கரையும்படி தேய்க்க, தேய்க்க எலும்பினுள் இருந்த மூளைவெளியே வரும் நிலையில், அதனை கண்டு பொறுக்காத சிவபெருமான் அசரீரியாக "அன்பின் மிகுதியால் நீ செய்வதை நிறுத்து, பல கொடுமைகளை செய்து வரும் இம்மன்னன் போரிட்டு பெற்ற இந்நாட்டினை நீ முறைமையாக ஆட்சி செய்து, திருப்பணிகள் பல செய்து எமது பேருலகம் எய்துவாயாக என மொழிந்தார்.

அம்மொழியை கேட்ட மூர்த்தியார் அஞ்சி தனது கையை கல்லில் தேய்ப்பதை நிறுத்தினார். உடனே கையில் ஏற்பட்டிருந்த புண் மறைந்து, பழைய பொலிவுடன் திகழ்ந்தது. மூர்த்தியார் சிவபெருமானின் பற்றையே மெய்யாக கொண்டு (துறவு) சிவ தத்துவமான ஞானஒளி நிறைந்தவராக விளங்கினார். அந்நாள் இரவே வடுக கர்நாடக மன்னன் வாழ்நாள் முடிந்தது.

சிவப்பற்றை கொண்டு வாழும் அன்பர்கள் இவ்வுலகத்தில் இல்லாது சிவலோகத்திற்கு விரைந்து செல்வார்கள். சிவனடியார்களுக்கு தொல்லை செய்யும் கொடியவனான மன்னன் கடுநரகம் போவதற்காக இவ்வுலகை விட்டு விரைந்து சென்றான். அம்மன்னனின் உறவினரும், அமைச்சர்களும் ஈமக் கடன்களை முடித்தனர். பின் அமைச்சர்கள் ஒன்று கூடி மன்னனுக்கு பிள்ளைகள் இல்லாததால், பழமையான நூல்களில் உள்ளதுபடி பட்டத்து யானையின் கண்களை ஆடையினால் கட்டி அந்த யானை

Koviloor Digital Library

எவரை தூக்கி வருகிறதோ அவரையே மன்னனாக ஏற்று முடிசூட்டுவோம் என முடிவு செய்து பட்டத்து யானையை அழைத்து அதன் கண்களை துணியினால் கட்டி இந்நாட்டின் அரசாட்சியை ஏற்க மன்னவனை தூக்கி வா என கூறி அனுப்பினார்கள். அந்த யானை எல்லா வீதிகளின் வழியே சென்று சொக்கநாத பெருமான் திருக்கோயில் கோபுரத்தின் முன் வந்தது. திருக்கோயில் உள்ளிருந்த மூர்த்தியார் யானை வருவதை கேட்டு அறிந்து இறைவனின் அசரீரியாக சொன்ன ஆணையை நினைத்து, அச்சம் நீங்கி திருக்கோயிலின் வெளியே வந்தார். யானை மூர்த்தியாரை வணங்கி, அவரைத் தூக்கி தனது பிடரியின் மீது அமர்த்திக் கொண்டது.

அமைச்சர்களும், மக்களும் மூர்த்தி நாயனாரின் அடி வணங்கி அவருக்கு முடிசூட்ட முற்பட, மூர்த்தியார் திருநீறே எனக்கு அபிடேகம். ருத்ராட்சமே எனது அணிகலன். கீரிடமே எனது சடை என சிவசாதனங்களான இம்மூன்றையும் தரித்து முடிசூட்டிக் கொண்டவுடன் சொக்கநாதப்பெருமானை வழிபட்டார். துறவு ஒழுக்கத்தில் ஐம்புலன்களையும் வென்று ஆட்சி செய்த மூர்த்தி நாயனார் பிறநாட்டு மன்னவர்கள் அவரின் பாதங்களை பணிந்து போற்றும்படி ஆட்சிசெய்தார். மக்கள் அனைவரையும் சைவ ஒழுக்க நெறியினை பின்பற்றி வாழும்படி நெடுங்காலம் ஆட்சி செய்து சிவபெருமானின் திருவடியினை அடைந்தார்.

மதுரபுரி : கடம்பவனநாதர், சொக்கநாதர், சுந்தரேஸ்வரர் என்ற திருநாமத்துடன் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலித்து வரும் மதுரையே ஆகும். இறைவனின் அறுபத்தி நான்கு

Koviloor Digital Library

திருவிளையாடல்கள் நடந்த இடமாகும். நாயனார் சந்தனம் இழைத்த வட்டக்கல் இன்றும் சொக்கநாதர் கோவிலில் காணலாம்.

கருத்து : கலிய நாயனார் கழுத்தை அறுத்து இரத்தத்தால் விளக்கெறிக்க முற்பட்டது. கணம்புல்லர் தனது தலை முடியினை கொண்டு விளக்கெறித்தது. இங்கு மூர்த்தி நாயனார் தனது கையையே சந்தனமாக இழைக்க முற்பட்டது. இதனை எண்ணிப் பார்த்தால் இறைவனுக்காக செய்யும் செயலின் திண்மையை நம்மால் உணர முடியாது.

தொடர்ச்சியாக செய்து வந்த திருத்தொண்டு நிற்பதை தாங்க முடியாமல், பக்தி மேலீட்டால் செய்த அருட்செயல்களே ஆகும். இதனை இறைவன் சந்தனமாகவே ஏற்பார். எனவே நம்முடைய செயல்கள் அனைத்தும் சிவபெருமான் மீது கொண்ட அன்பின் வெளிப்பாடாகவே இருக்க வேண்டும். உலகு, உடல், அவ்வுடலால் வரும் உறவு, எல்லாம் நீர்க்குமிழி போல் மறையும். எனவே இவை மூன்றும் நித்தியம் இல்லாதது என்றும் உயிர்க்கு உயிராய் இருப்பவர் இறைவனே. இந்த உண்மையை உணர்வதே ஞானம். இவ்வுடல் தந்தை வழி வந்தது. உறவுகளை தாய் சொல்ல, குருநாதனாக இவ்வுலகு நமக்கு தினமும் பாடம் சொல்லி கொடுக்கிறது. இம்மூன்றையும் நமக்கு தொடர்பு செய்வித்தது இறைவன் தான் என்ற பக்குவம் பெற்ற உயிர், அவன் பேரொளியில் கலந்து விடுகிறது.

மூர்த்தி நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

15. முருக நாயனார் வரலாறு

திருப்புகலூர் எனும் ஊரில் அந்தண மரபில் தோன்றி, சிவபெருமான் மீது நிறைந்த அன்பால் உருகும் மனத்தினையுடையவராக முருகனார் என்ற திருபெயருடன் ஒருவர் வாழ்ந்து வந்தார்.

அவர் சிவஆகமங்களை பயின்று அதன்படி அதிகாலையில் குளித்து வாசனை மிகுந்த மலர்களை பறித்து அம்மலர்களை மாலையாக தொடுத்து, திருப்புகலூரில் உள்ள திருக்கோவிலில், உள்ள வர்த்தமானீச்சுரம் எனும் திருமூலட்டானத்தில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்க மூர்த்தியையே ஆத்மார்த்த மூர்த்தியாகக் கொண்டு சுவாமிக்கு புனித நீராட்டி, சந்தனம் கொண்டு திருமேனியில் பூசியும், நறுமணப்புகையிட்டும் அன்பினால் தொடுத்த மலரை இறைவனுக்கு சூட்டி அழகு பார்ப்பார். திருஐந்தெழுத்தை எப்போதும் ஓதிக் கொண்டே இருப்பார். முப்போதும் இவ்வாறு சிவபூசை செய்து வரும் போது, சிவஞானத்தை குழைத்து தந்த பால் சோற்றினை உண்ட திருஞானசம்பந்தப்பெருமான் திருப்புகலூர் வருகை தந்தார். முருகனார் அவரை வணங்கி தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்று உபசரித்து நண்பரானார். சிவபூசையின் பயனாக திருஞானசம்பந்தப் பெருமானின் திருமணத்திற்கு சென்று பேரொளியில் புகுந்து சிவபெருமானின் திருவடியை அடைந்தார்.

திருப்புகலூர் : திருநாவுக்கரசு பெருமான் முக்திபெற்ற

Koviloor Digital Library

திருத்தலமும், சுந்தரமூர்த்தி நாயனார்க்கு இறைவன் செங்கல் கட்டிகளை தங்கக் கட்டிகளாக மாற்றி கொடுத்த பெருமையுடைய இவ்வூர் மயிலாடுதுறை – சன்னாநல்லூர் வழி இவ்வூரை அடையலாம். மூவர் பாடல் பெற்றத் திருத்தலம்.

கருத்து : இறைவனை அடைய எண்ணில்லாத வழிகள் (ஆகமங்கள்) இருந்தும், சிவபூசையே இறைவனை அடைய சிறந்த வழி. பூக்கொண்டு அர்ச்சிப்பதே பூசை ஆயிற்று. இன்றே சிவபூசையை மகிழ்ந்து தொடங்குவோமாக.

குறிப்பு : சிவபூசைக்கு உகந்த மலர்கள் எட்டு அவை : புன்னை வெள்ளெருக்கு, சண்பகம், நந்திவர்த்தம் (நந்தியா வட்டை) பாதிரி, குவளை, அலரி, செந்தாமரை என்பனவாகும். சிவபெருமானை நினைந்து அகபூசை செய்ய தேவையான எட்டு அவை. கொல்லாமை, ஐம்பொறி அடக்கம், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு ஆகியவை ஆகும். இவ்விரு பூசைகளையும் தொடர்ந்து செய்து வருதலே சிவப்புண்ணியம் ஆகும்.

திருமுறை

வாசநலம் செய்து இமையோர் நாள்தோறும் மலர் தூவ
ஈசன் எம்பெருமானார் இனிதாக உறையும் இடம்
யோசனை போய்ப் பூக்கொணர்ந்து அங்கு ஒரு நாளும் ஒழியாமே
பூசனை செய்து இனிது இருந்தான் புள்ளிருக்கு வேளூரே!
– திருஞானசம்பந்தர்

பூக் கைக்கொண்டு அரன் பொன் அடி போற்றிலார்
நாக்கைக் கொண்டு அரன் நாமம் நவில்கிறார்
ஆக்கைக்கே இரை தேடி அலமந்து
காக்கைக்கே இரையாகி கழிவரே – திருநாவுக்கரசர்

முருக நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

16. உருத்திர பசுபதி நாயனார் வரலாறு

திருத்தலையூர் எனும் ஊரில் அந்தண மரபில் தோன்றி சிவபெருமானிடம் அடிமைத்திறமும், அன்பும் கொண்ட பசுபதி என்ற இறைவனின் திருநாமத்தையே தன் பெயராக கொண்ட வேதியர் வாழ்ந்து வந்தார். சிவபெருமான் மீது பாடப்பெறும் வேத மந்திரத்தில் ருத்ரம் என்ற பகுதியை அன்புடன் பாடுவதில் வல்லவராக இருந்தார். அந்த ருத்ர மந்திரத்தை குளத்தில் கழுத்தளவு நீருள்ள இடத்தில் நின்று தனது இரு கைகளையும் கூப்பியபடி சிவபெருமானை நினைந்து பெரும் பகலிலும், மாலையிலும் தவறாமல் சிலநாள் பாடி வந்தார். அவ்வாறு பாடிய இனிய ருத்ர ஓசையில் சிவபெருமான் மகிழ்ந்தார். ஆதிநாயகர், தனக்கு மேல் (தலைவர்)பதியிலாத சிவபெருமான், பசுபதியாரை சிவலோகம் சேர்த்தார். உருத்திர மந்திரம் கொண்டு சுவாமியை அடைந்ததால் அவர் உருத்திர பசுபதி நாயனார் ஆனார்.

திருத்தலையூர் : இவ்வூர் மயிலாடுதுறை அடுத்து பேரளம் வழியே கொல்லுமாங்குடி அருகில் உள்ளது.

கருத்து : குளத்தில் கழுத்தளவு நீரில் ஓதிய சில நாளிலே சிவபெருமான் ஆட்கொண்டதையும் கண்ணப்ப நாயனார் ஐந்தே நாள் சிவபூசையிலேயே திருவடி சேர்ந்ததையும் எண்ணிப்பார்த்தால் இறைவன் உயிர்கள்

Koviloor Digital Library

பக்தியால் செய்யும் செயலின் (நாட்கள்) எண்ணிக்கையை பார்ப்பதில்லை. உறுதியான அன்பினால் செய்யும் செயலையே கண்டு அருள்கிறார்.

ஸ்ரீ ருத்திரம்

யசூர் வேதத்தின் மையப் பகுதியாகவும் வேதத்தில் தலை சிறந்ததாகவும் கருதப்படுகிறது. யசூர் வேதம் ஏழு காண்டங்களை கொண்டது. அதில் நான்காவது காண்டத்தின் மையப்பகுதியில் ஸ்ரீ ருத்ரம் உள்ளது. இந்த ஸ்ரீ ருத்ரத்தில் அடங்கியுள்ளவை யாவன.

1. நமகம் - வணக்கம் செய்தல்
2. சமகம் - வேண்டியதை கேட்டுப் பெறுதல்
3. லகுந்யாசம் - சிவமாம் தன்மையில் தன்னை உணர்தல்
4. ஸ்ரீ மகாந்நியாசம் - வேள்வி, அபிஷேகம், அர்ச்சனை செய்யும் முறைகளையும் விளக்கப்பட்டுள்ளது.

திரியம்பகம் யஜாமஹே சுகந்திம் புஷ்பவர்த்தனம்!
உர்வாருகமிவ பந்தனான் - ம்ருயோர் - முக்ஷீயமாம் ருதாத்!

விளக்கம் : முக்கண்களை உடையவரும், நறுமண முடையவரும் கருணையால் அடியவரை காத்து வரும் சிவபெருமானை பூசித்து வெள்ளரிப்பழம் காம்பிலிருந்து விடுபடுதல் போல மரணமில்லா பெருவாழ்வான இறைவன் திருவடியை அடைவோம்.

உருத்திரபசுபதி நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

17. திருநாளைப்போவார் நாயனார் வரலாறு

பூஞ்சோலைகள் சூழ்ந்த ஆதனூர் என்ற சிற்றூரின் எல்லையில் வயல்வெளிகளின் அருகே புலைப்பாடியில் நந்தனார் என்ற பெயருடன் சிவஅன்பர் வாழ்ந்து வந்தார். அவர் பறை அடித்து செய்திகளை ஊருக்குள் சொல்லும் மரபினை சேர்ந்தவர். அம்மரபின் தொழிலை செய்து வந்த அவருக்கு ஊர் மக்கள் மானியமாக கொடுத்த நிலத்தின் வருமானத்தை தம்முடைய உணவுக்காக பயன்படுத்திக் கொண்டும், தனது தொழிலினால் வரும் வருமானத்தை, சிவாலயங்களில் பயன்படுத்தும் பேரிகைக்கு தோலும், வீணை,யாழ் ஆகிய கருவிகளுக்கு நரம்பும், சிவபெருமானுக்கு அர்ச்சனைக்கு உரிய கோரோசனையும், கொடுத்து வந்தார்.

அக்காலத்தில் சில குலத்தை சேர்ந்தவர்களை கோயிலுக்குள் சென்று இறைவனை வழிபட அனுமதி மறுக்கப்பட்டு இருந்தது. அதனால் நந்தனார் பிறவாயாக்கை பெரியோன் ஆகிய சிவபெருமானின் பல திருக்கோயிலுக்கு சென்று திருவாயில் வெளியில் இருந்தவாறே வழிபட்டு ஆடியும், பாடியும் மகிழ்வார். இவ்வாறு செல்லும் வழியில் புன்கு மரம் தல மரமாகக் கொண்ட திருப்புன்கூரில் உள்ள சிவலோகநாதர் கோயிலுக்கு முன் சென்று நின்றார்.

திருக்கோயிலின் வாசலில் இருந்தபடியே இசையோடு பாடிக்கொண்டே இறைவனின் சிவலிங்கத் திருவுருவத்தை நேரே காணவேண்டுமென முயன்றார். ஆனால் இறைவனின்

Koviloor Digital Library

எதிரில் இருந்த நந்தியப்பெருமானின் உருவம் இறைவனின் சிவலிங்க திருமேனியை சரிவர காண முடியாதபடி மறைத்தது. அப்போது சிவபெருமான் நந்தியம்பெருமானை விலகும்படி செய்து நந்தனார்க்கு, நேராக காட்சி தந்து அருளினார். பிறந்த பிறப்பு இனி வாராமல் சிவலோகம் சேர்க்கும், தன் நிகரில்லாத தலைவனான சிவபெருமானை கும்பிட்டு மகிழ்ந்து, பின் அத்திருக்கோயிலின் பின்புறம் பள்ளமாக இருந்த இடத்தை குளமாக தோண்டினார். அதன்பின் திருக்கோயிலை வலமாக வந்து திருவாயிலின் முன் பணிந்து, ஆனந்த கூத்தும் ஆடி பின் தனது ஊர் சென்றார்.

இவ்வாறு பல பதிகளை வணங்கி வரும் நாளில், தில்லை (சிதம்பரம்) சென்று அம்பலவாணரை காண மிக காதல் உணர்வு கொண்டவராக ஆனார். இரவு முழுவதும் நாளை தில்லை செல்வேன் என்று உறங்காது நினைத்துக் கொண்டே இருப்பார். விடிந்ததும் தான் பிறந்த குலத்திற்கு (தில்லை) அங்கு செல்ல முடியாதே என்று எண்ணுவார். இந்த எண்ணமும் சிவபெருமானே தமக்கு தருகிறார் என, அவரே நினைத்துக் கொள்வார். அதன்பின் சிறிது நேரத்தில் சுவாமி மீது ஆசை மீதுர நாளை தில்லை போவேன் என்பார். இவ்வாறு பல நாட்கள் செல்ல பொறுக்க முடியாமல் ஒரு நாள் (சிதம்பரம்) தில்லை சென்று அடைந்தார்.

தில்லையின் எல்லையில் நின்று பணிந்து எழுந்து, அங்கு வேள்வியினால் வரும் புகையினை கண்டும், வேதங்கள் ஓதும் மறையவர்களின் கூட்டத்தை கண்டதும், தன் குலத்தினை நினைந்து பயந்து திருக்கோயில் மதிலின் புறத்தே நின்று, தில்லையின் எல்லையிலே இருந்தபடியே அத்திரு

Koviloor Digital Library

நகரத்தையே இரவும் பகலுமாக வலம் வந்து அம்பலத்து ஆடும் ஆனந்த கூத்தனை எப்படி கண்டு கும்பிடுவது என நினைந்தவாறே ஒரு இடத்தில் அயர்ந்து தூங்கும்போது, சிவபெருமான், நந்தனார் கனவில் வந்து சிரித்தபடி, உன்னுடைய பிறவி நீங்க, தீக்குழியில் மூழ்கி வெளியே வரும்போது தில்லை வாழ் மூவாயிரம் மறையவர்களும் உன் பின்னே வருவார்கள் என மொழிந்தார். அன்று இரவே இறைவன் தில்லை மூவாயிரம் மறையவர் கனவிலும் தனித்தனியே தோன்றி திருத்தொண்டருக்கு தீக்குண்டம் அமைத்து தரும்படியும் கூறினார்.

தில்லைவாழ் அந்தணர் அனைவரும் சிவபெருமான் மொழியினை கேட்டு அதன்படி தென்திசை திருக்கோபுரத்து வாயிலின் முன் தீக்குண்டம் அமைத்து திருத்தொண்டரான நந்தனாரிடம் வந்து கூறினர். இதனைக் கேட்ட நந்தனார் மிக மகிழ்ந்து நான் உய்ந்தேன் என மொழிந்து தென் திருவாயில் அடைந்து சிவபெருமானின் திருவடிகளை மனதில் கொண்டவாறே அத்தீக்குழியை வலம் வந்தார். கைகளை கூப்பி நடமாடும் கூத்தப்பெருமானின் திருவடிகளை நினைந்தவாறே அவ் அழலில் புகுந்தார். அப்போது நந்தனார் இழி உடல் எனக்கருதிய அவரது உடலை இறைவன், புண்ணிய உருவம் கொண்ட முனிவரின் வடிவத்தையும், மார்பில் முப்புரி நூலும், தலையில் சடைமுடியும் கொண்ட ஞான உருவினை தந்தார். செந்தழலின் மேல் அந்தணராக வெளியேறுவதை கண்டு வானத்தில் துந்துபி நாதம் முழங்க வானவர்கள் மகிழ்ந்து பூ மாரி பொழிந்தனர். தில்லை வாழ் அந்தணர்கள் கைகூப்பி வணங்கினர். மிகச் சிறந்த அடியவர்கள் அனைவரும் திருநாளைப்போவாரை வணங்கினார். தில்லைவாழ்அந்தணர்கள் புடை சூழ திருக்கோயிலின்

Koviloor Digital Library

திருக்கோபுரத்தை வணங்கி உள் சென்று விரைந்து திருச்சிற்றம்பலத்தின் உலகு நன்மை பெறும் பொருட்டு நடமாடும் ஆனந்த கூத்தனிடம் சென்று மறைந்தார்.

அந்தணர்கள் அதிசயப்பட்டனர். அரு முனிவர்கள் துதித்தனர். அந்தமில்லா ஆனந்த பெருங்கூத்தர், திருநாளை போவார்க்கு என்றும் தன்னை பிரியாத முக்திப் பேற்றினை நல்கினார். நாளை போவேன் என்று பல நாள் சொல்லி ஒருநாள் சென்ற அந்நாளே திருநாள். எனவே இவருக்கு திருநாளைப்போவார் நாயனார் என்ற திருநாமம் பெற்றார்.

ஆதனூர் : சென்னையிலிருந்து கும்பகோணம் பாதையில் திருப்புன்கூர் கூட்டு ரோடு வழியே திருப்புன்கூர் அடைந்து அங்கிருந்து ஆதமங்கலம் எனும் பெயரில் இவ்வூர் உள்ளது.

கருத்து : நம்மிடம் உள்ள தாழ்வு மனப்பான்மை இறைவனை அடைய தடையாக இருப்பதை, இறைவன் நமக்கு எடுத்துக் காட்டவே திருநாளைப்போவார் நாயனாரின் வரலாற்றின் வழி நமக்கு அறிவுறுத்துகிறார். எக்குலத்தில் பிறந்தாலும், கொல்லாமை, புலால் உண்ணாமை, பிறர் பொருளை விரும்பாமை, களவு செய்யாமை, பிறர் மனதை துன்பப் படுத்தாமை, போதைப் பொருட்களை உண்ணாமை, சான்றோர்களால் ஒதுக்கப்பட்ட எந்த குற்றத்தையும் செய்யாது, சிவபெருமான் இல்லாத இடம் இல்லை அவரே அனைவருக்கும் தலைவர், முக்திபேறு நல்கும் ஒரே கடவுள், மாயப்பிறப்பு அறுக்கும் மன்னன் என்ற ஒரு நிலைய மனம் வைத்து உணர்ந்தவரே முக்திபேறுக்கான தகுதி உடையவர். அவர்கள் எக்குலத்திலும் பிறந்தாலும் தன்னை தாழ்வாக கருத வேண்டியது இல்லை.

திருநாளைப்போவார் நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

18. திருக்குறிப்புத்தொண்டர் நாயனார் வரலாறு

சான்றோர்கள் வாழும் தொண்டை நாடான காஞ்சிபுரத்தில் ஏகாலியர் (வண்ணார்) குலத்தில் அன்பர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சிவனடியார்களின் மனத்திலுள்ள தேவைகளை குறிப்பு அறிந்து செய்து வரும் பண்பு உடையவர். ஆதலின் அவரை திருக்குறிப்புத்தொண்டர் என அனைவராலும் அழைக்கப் பெற்றார்.

சிவனடியார்களை கண்டால் அவர்களின் ஆடைகளை வாங்கி அழுக்கு நீக்கி தூய்மை செய்து கொடுத்து வந்தார். இத் தொண்டின் மூலம் தன் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மல அழுக்கையும் நீக்கி வந்தார். இவ்வாறு தொடர்ந்து தொண்டு செய்து வரும் நாளில் ஒரு நாள், சிவபெருமான் குளிர்காலத்தில் மெலிந்த உடலுடனும், ஏழை போன்று மிகுந்த அழுக்குடைய கந்தையை (பல துணிகளை மேலே மேலே வைத்து தைக்கப்பட்ட போர்வை) அணிந்து, குறுநடையுடன் சிவனடியாராக திருக்குறிப்புத் தொண்டர் முன்பு வந்தார். திருக்குறிப்புத்தொண்டர் வந்த அடியவரை கண்டவுடன் மயிர் கூச்சரிக்க பணிந்து விழுந்து வணங்கி தாங்கள் அணிந்துள்ள கந்தையை தாருங்கள். அதனை தூய்மை செய்து தருகிறேன் என்று கூறினார்.

அடியவராக வந்த சிவபெருமான் என் உடல் இரவு குளிரை தாங்காது எனவே சூரியன் மறைவதற்குள்

Koviloor Digital Library

துவைத்து உலர்த்தி தரவேண்டும். இல்லையேல் என்னை குளிரில் வருத்தும் நிலை வரும் என்று கூறினார். அதனை ஏற்று அடியவரின் கந்தையை வாங்கி நறுமணம் மிக்க நீரில் நனைத்த பின் ஆவியிலிட்டு எடுக்க நண்பகல் ஆனது.

விரைந்து துவைக்க தொடங்கும்போது, சிவபெருமானின் அருளால் மழை பொழிய ஆரம்பித்தது. அம்மழை இடைவிடாது மாலை வரை பெய்ய, திருக்குறிப்புத்தொண்டர் மழை நிற்கும் நிற்கும் எனப் பார்த்து நிற்காது இரவும் வந்தது. அடியார்க்கு தான் செய்த இடையூரை நினைத்தும், மழை ஆரம்பிக்கும் போதே ஆடையை வீட்டிற்கு உள்ளே எடுத்துச் சென்று காற்றில் உலர்த்தியிருக்கலாமே என நினைந்து மயங்கி விழுந்தார். பின் எழுந்து அவ் அடியார்க்கு செய்த தீங்கிற்கு இத்துணி துவைக்கும் பாறையில் மோதி உயிர்விடலாம் எனத் தன் தலையை பாறையில் மோதிய நேரத்தில் சிவபெருமான் பாறையிலிருந்து திருக்கரத்தை வெளிப்படுத்தி திருத்தொண்டர் தலையை மோத விடாமல் பிடித்துக் கொண்டார். அவ்வேளை வான் மழை நின்று தேவர்கள் விண்ணில் மலர் மழை பொழிந்தனர். சிவபெருமான் மழ விடையில் உமையுடன் காட்சி கொடுத்தார். திருக்குறிப்புத் தொண்டர் தலைக்கு மேல் கை கூப்பி தொழுது நின்றார். சிவபெருமான் திருக்குறிப்புத்தொண்டரை நோக்கி, மூவுலகிலும் (மேல்,நடு,கீழ்) உன் புகழ் பரவவே இவ்வாறு செய்தோம். இனி என்றும் என் உலகு இருப்பாயாக என அருளி ஏகம்பம் அடைந்தார்.

காஞ்சிபுரம் – சென்னையிலிருந்து 80 கி.மீல் உள்ள ஊர். மூவர் பாடல் பெற்ற திருத்தலம்.

Koviloor Digital Library

கருத்து : அ. திருக்கயிலையில் சிவபெருமான் உமையம்மைக்கு தன்னை அடைய பல (வழிகளை) ஆகமங்களை அருளிய பின் யாம் விரும்புவது பூசனையே என்று கூறியதை கேட்ட உமை காஞ்சி மாநகரில் கம்பை ஆற்றின் கரையில் ஏகாம்பரநாதரை பூசிக்க, அப்போது ஆற்றில் வெள்ளம் கண்டு நடுங்கி இறைவனை பாதுகாக்க அணைக்க ஏகாம்பரநாதர் எதிர்பட்டு அருள, உமை கைகளை கூப்பியவாறே இன்னும் என் பூசையை ஏற்று அருள்வீர் என பூசை செய்ய முற்பட சுவாமி "நின் பூசனை என்றும் முடிவதில்லை நம்பால்" என மொழிந்தார். நாம் செய்து வரும் எல்லாவிதமான இறைத்தொண்டும் சுவாமி நமக்கு வழங்கிய பெறும்பேறு என்று நினைத்து தொடர்ந்து, உறுதியுடன் செய்து வருதலே இறைவனின் திருவடியை சேர்க்கும்.

ஆ. இவ்வரலாற்றில் நாம் கவனிக்க வேண்டிய இடம் நாயனார் வீட்டிற்கு எடுத்துச் சென்று கந்தையை காற்றில் காய வைத்திருக்கலாமே என மாலையில் நினைத்தது. சிவபெருமானின் ஐந்து தொழில்களான ஆக்கல், அழித்தல், படைத்தல், மறைத்தல், அருள்பாலித்தல் என்பதாகும். இதில் மறைப்பாற்றல் நாயனார்க்கு முக்தியை வழங்க காரணமாயிற்று. சிவபெருமானையே தன் வாழ்வின் முன் வைத்து வாழும் உயிர்களுக்கு இறைவன் மறைப்பாற்றலை அருளாற்றலாக வழங்குகிறார். திருக்குறிப்புத்தொண்ட நாயனார் தான் செய்திருக்க வேண்டிய வேலையை மறந்தது திருவருள் செயல் ஆகும். இறைவனையே மறந்து வாழ்வது நாம் செய்யும் செயலாகும். காஞ்சிபுரத்தில் திருக்குறிப்புத்தொண்ட நாயனார் வழிபட்ட சிவாலயம் உள்ளது.

திருக்குறிப்புத்தொண்டர் நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

19. சண்டேசுவர நாயனார் வரலாறு

திருநீற்றின் செம்மையை செம்மையாக கொண்ட ஒன்றுபட்ட உள்ளமும், உபநயனம் (தீக்கை) பெற்றும், மூவகை வேள்வி செய்தும், நான்கு வேதங்களை முறைப்படி பயின்றும், ஐம்புலன்களை தன்னுடைய அறிவின் வழி செலுத்தியும் வாழும் நெறியான அந்தணர்கள் வாழும் ஊரான சேய்ஞலூர் என்ற ஊரில் யக்ஞதத்தன், பவித்திரை என்ற தம்பதியருக்கு விசார சருமன் என்ற மாதவத்தோர், அந்தணர் மரபில் திருஅவதாரம் செய்தார். அவருக்கு ஐந்தாவது வயது தொடங்கிய நிலையில் முன்பிறவியின் பயனாக அவர் உள்ளத்தில் சிவமணம் பூத்தது. விசார சருமனார்க்கு ஏழு ஆண்டு நிரம்பியவுடன் அவரது தந்தையார் உபநயனம் (முந்நூலணியும் கலியாணம்) செய்துவித்து முதுமறையோரைக் கொண்டு அவருக்கு பிரம்ம உபதேசமும் செய்வித்தார்.

விசாரசாருமனார் சிவஞானம் பெறவல்ல மறைகளை படித்தும், பல கலைகளையும் பயின்றார். இவருக்கு ஒதுவித்த ஆசிரியர்கள் வியக்கும்படி அவர்கள் சொல்லி கொடுக்கும் முன்பே அதனை அறிந்தும், எல்லா அறிவுக்கும் எல்லை சிவபெருமானின் திருவடியே என்ற உணர்வில் எழும் சிந்தனையை கொண்டிருந்தார்.

Koviloor Digital Library

இவ்வாறு நிகழும் நாளில் ஒருநாள் விசாரசருமனார் தன் உடன் பயிலும் மாணவர்களுடன் செல்லும்போது, பசுக் கூட்டங்கள் எதிரில் வர அப்பசுக் கூட்டத்தில் சில நாட்களுக்கு முன் கன்று ஈன்ற பசு ஒன்று, அக் கூட்டத்தை மேய்த்து வரும் ஆயரை (மேய்ப்பர்) முட்டுவது போல் கொம்பினை அசைக்க முற்பட்டது. அதனை கண்ட அவ் ஆயர் கோலினை எடுத்து அப்பசுவினை அடித்தார். இதனை கண்ட விசாரசருமனார், கோபம் கொண்டவராக வெகுண்டு அச்செயலை தடுத்து அந்த ஆயருக்கு பசுவின் பெருமைகளை எடுத்துரைத்தார். பின் நானே இப்பசுக் கூட்டங்களை மேய்ப்பேன் என்று கூறியதை கேட்ட மேய்ப்பனும் விசாரசருமரை வணங்கி மேய்ப்பதை விட்டு விட்டு சென்று விட்டார். விசாரசருமனார் தன்குல சான்றோரிடமும், தந்தையாரிடமும் அனுமதி பெற்று அப்பசுக் கூட்டங்களை மேய்க்கும் கோலும், கயிறும் கொண்டு குடுமி அசைய, மார்பில் பூணூலும் தவழ, அரைக்கு கட்டிய கோவணம் ஒளி வீச, மேய்ச்சலுக்கு புறப்பட்டார். மிகுந்த புல் உள்ள இடங்களில் பசுக்களை செலுத்தி மேயச் செய்தும், பசுக்கள் செல்ல முடியாத இடங்களில் தனது கையினால் பறித்து கொடுத்தும், தூய்மையான குளிர்ந்த நீரினை அப்பசுக்கள் பருகும்படி செய்தும் பால் சொரியும் காலத்தில் அப்பசுக்களின் உரிமையாளரிடம், கொண்டு சேர்த்து, தனது இல்லத்திற்கு வரும்போது தின வேள்விக்கான சமித்துக்குச்சிகளையும் வேள்வியில் தீயினை கடையும் கோலினையும் எடுத்துக் கொண்டு இரவு முன்பே தனது இல்லம் சேர்வார். இவ்வாறாக நாள்கள் பல கழிந்தன. பசுக்கள் எல்லாம் தூய புல்லினை உண்டும், நன்னீரை பருகியும் மிகுந்த மகிழ்ச்சியில்

Koviloor Digital Library

இருந்ததாலும், தனது கன்றுகளை பிரிந்தாலும், அக்கன்றினை நினைந்து வருந்தாமல் தம்முன் நிற்கும் மறைக்கன்றாகிய விசாரசருமரை கண்டு தாய் உணர்வு மேலிட அப்பசுக்கள் கறக்காமலேயே பாலினை தானாக பொழிந்தன. இதனால் வழக்கமாக வழங்கும் பாலினையும் அப்பசுக்கள் குறையாது வழங்கி வந்தன.

சிவபெருமான் திருவருளால், தானாகவே வெளிப்படும் பாலினை கண்டவுடன் விசாரசருமருக்கு சிவபெருமானுக்கு திருமஞ்சனத்திற்கு ஆகும் என்ற முற்பிறவியின் தவத்தால் எழுந்த ஆசையில் சிவபூசை செய்ய விரும்பியவராக ஆனார். அத்தி மரத்தின் கீழ் மண்ணி ஆற்றின் மணல் மேட்டில் விளையாட்டாக, சிவலிங்கத் திருமேனியை மணல் கொண்டு செய்தும், கோபுரம் போலவும், சுற்று ஆலயமும் மணலால் அமைத்தார். பின் இலையால் கோத்த பூக்கூடையில் ஆத்திமலர்களையும், அருகில் பூத்த மலர்களையும், செந்தளிர்களையும், நறுமணம் வெளியேறாமல் பாதுகாத்து அருகில் வைத்துக் கொண்டார். பின் எதிர்பட்ட ஒரு பசுவின் காம்பை தீண்டியவுடன் அப்பசு அன்பின் வெளிப்பாட்டினை காட்ட கனைத்து விசாரசருமனார் நீட்டிய குடத்தை பாலால் நிறைத்தது.

சிவலிங்கத் திருமேனி மீது மலர்கள் கொண்டு (ஆவாகணம்) சிவபெருமான் எழுந்தருள வேண்டுதல் ஆகிய பூசைகளை முடித்து, திருமஞ்சனத்திற்கு பாலினை சுவாமி மீது பொழிந்து அர்ச்சனைகள் செய்து மகிழ்ந்தார். இச்சிவபூஜைக்கு பால் வழங்கிய பசுக்கள் தனது உரிமையாளர் வீட்டிற்கு குறைவு

Koviloor Digital Library

இலாத பாலினை வழங்கின. இவ்வாறு பலநாள் சிவபூசையை சிறப்பாக விசாரசருமனார் செய்து வரும் வேளையில் அவர் அன்பின் திறத்தை அறியாத அயலோன் ஒருவன், அவ்வூரில் வாழும் அந்தணர்களிடம் சென்று விசாரசருமன் பாலினை கறந்து கீழே ஊற்றுகிறான் எனக் கூறினான். அவ்வூர் அந்தணர்கள் ஒன்று கூடி யக்ஞதத்தனை அழைத்து, விசார சருமனாரின் செய்கையை நேரே கண்டு உண்மையை அறியாத அந்தணர்கள், பாலை கீழே ஊற்றுவதாக புகார் கூறினர்.

யக்ஞதத்தன் இனிமேல் இவ்வாறு நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறி இல்லம் சென்றார். மாலை வழிபாட்டினை முடித்துக் கொண்டு இரவு தன் மகனிடம் நடந்ததை கூறாமல், விடிந்ததும் விசாரசருமனார் பசுக்கூட்டங்களுடன் மேய்க்கச் சென்றதும் அவரை பின் தொடர்ந்து மறைந்து சென்று மேய்ச்சல் புரியும் இடத்திற்கு அருகே ஒரு குரவ மரத்தின் மேல் எவரும் அறியாத வகையில் மறைந்திருந்தார். விசாரசருமரும் வழக்கம் போல் நீராடி, மலர் கொய்து, பால் குடம் நிறைந்து அபிடேகம் செய்வதனை கோபமுடன் கண்ட யக்ஞதத்தன் மரத்திலிருந்து இறங்கி ஒரு கொம்பினை எடுத்து அவரின் முதுகில் அடித்து, கொடிய மொழிகளால் பேசி (திட்டி)னாலும், விசாரசருமனார் பொங்கிய அன்பினால் சிவபூசையை ஒன்றிய மனத்தராய் புறஉணர்வு இன்றிச் செய்து கொண்டிருந்தார். இவ்வாறு அடித்தும் அதனை உணராது சிவபூசையிலே திளைத்திருந்ததை கண்ட யக்ஞதத்தன் பொறாது தனது காலால் திருமஞ்சன பால் குடத்தை இடறி சிந்தும்படி செய்தான். அதனை கண்ட விசாரசருமர் இக்கொடிய செயலை செய்தது தன் தந்தை என்று அறிந்ததும், தன் அருகே இருந்த கோலை எடுக்க அது மழுவாக மாறியது. அதனை தன் தந்தையின் கால்களின் மீது எறிந்தார்.

Koviloor Digital Library
அம்மழு இரண்டு கால்களையும் வெட்டியெறிந்தது. குற்றம் செய்தவருக்கும், அவருக்கு துணை சென்றவர்க்கும் தண்டனை வழங்குவது போல் பால் குடத்தை உதைத்த, தூக்கிய காலையும், அக்கால் தூக்கும்போது தாங்கிய காலையும் சேர்ந்து இருகாலையும் வெட்டி எறிந்தார். யக்ஞதத்தன் கீழே விழுந்தான். தனது பூசைக்குரிய தடையை நீக்கியவராய் விசாரசருமர் முன்போல பூசையை தொடர்ந்தார். அப்போது பூத கணங்கள் சூழ, முனிவர்கள் வேதம் ஓத, உமையுடன் விடைமீது சிவபெருமான் வெளிப்பட்டார்.

அப்பெரும் காட்சியை கண்ட விசாரசருமர் சுவாமி திருவடியில் விழுந்து வணங்கி நிற்க, சிவபெருமான் நம் பொருட்டாக உன் தந்தையை கீழே விழும்படி எறிந்தாய். இனி நானே உனக்கு தந்தையாக இருப்போம் என அருளி கருணையினால் விசாரசருமரை தடவியும், உச்சியில் மோந்தும் தொண்டர்களுக்கு எல்லாம் அதிபனாக்கி நாம் உண்பதையும், உடுக்கும் உடையையும், சூடும் மாலையையும் உமக்கே உரிமையாகும்படி சண்டேசன் என்றும் பதவியை தந்தோம் என்று பிறைச்சந்திரன் தவழும் சடையில் தான் சூடியிருந்த கொன்றை மலர் மாலையை எடுத்து சண்டேசுவரருக்கு சூட்டினார் சிவபெருமான். சிவபூசையின் உயர்வை வெளிப்படுத்திய விசாரசருமர் எனும் சண்டேசுவரரை எல்லா உலகங்களில் வாழும் ஞானிகள் களிப்போடு வணங்க, வானத்தில் பூ மழை பொழிய, சிவகண நாதர்கள் பாடியும், ஆடியும், மறைகள் ஓதியும், சிவத்தொண்டர்களுக்கு எல்லாம் தலைமையான தொண்டர் ஆனார். யக்ஞதத்தன் சிவஅபராத செயல் செய்தும் நான்மறையின் ஒழுக்கம் நிறைந்த சேய்ஞலூர் பிள்ளையாரின் திருக்கையினால் ஏந்திய மழுவினால் எறியப்பட்டதால் குற்றம் நீங்கி சுற்றத்தாருடன் சிவலோகம்

Koviloor Digital Library

சேரும் பேற்றினை பெற்றார். சண்டேசுவரர் சிவபெருமானுக்கு மகனாரானார்.

சேய்ஞலூர் : கும்பகோணம் – திருப்பனந்தாள் சாலையில் சேய்ஞலூர் கூட்டுரோடு திரும்பி 1 கி.மீ. ல் இப்பதி உள்ளது. கோச்செங்கட் நாயனார் திருப்பணி செய்த கோயில் (முருகன்) சேய் வழிபட்ட திருக்கோயில் சம்பந்த பெருமானால் பாடல் பெற்ற திருத்தலமாகும்.

கருத்து : உயர்குலத்தில் பிறந்தாலும், மறைகளை கற்று தெளிந்தாலும் உயிர்களிடத்து அன்பின் மேலீட்டால் எத்தொண்டையும் செய்யலாம் என்பதை இவ்வரலாறு உணர்த்தியுள்ளது. திருநீறு, பால், தயிர், வெண்ணெய், நெய் போன்ற திருமஞ்சன பொருட்களை வழங்கும் பசு இனங்களை காத்தல் நம் கடமையாகும். சில நாள் முன்பு, ஒரு பசு பேசுவது போல் கார்டூன் படத்தை கண்டேன். அதில் அப்பசு உன் தாய் உனக்கு பால் வழங்க இயலாத பொழுதிலிருந்தே உனக்கு நான் பால் தருகிறேன். அதன்படி பார்த்தால் நானும் உனக்கு தாய் அல்லவா? உன் தாயை கொல்வதை நீ தடுக்காமல் பார்த்துக் கொண்டு இருக்கலாமா? என்று கூறுவது போல் எழுதப்பட்டிருந்தது. நோயுற்ற, மூத்த, ஊனமுற்ற பசுக்களை காக்க பசு மடங்களை அமைத்தல் வேண்டும். உயர் குலத்தில் பிறந்தால் மட்டும் போதாது, அக்குலத்தில் இயல்பாக இருக்க வேண்டிய அன்பு நெறியிலும், ஒழுக்க நெறியிலும் வாழ்ந்து வருபவரே உயர்குலத்தினர் ஆவர். அவர்களே அனைவருக்கும் நன்னெறியை காட்டுவிக்கும் பேறு பெற்றவர்கள்.

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான் – திருக்குறள்

சண்டேசுவர நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

20. திருநாவுக்கரசு நாயனார் வரலாறு

சிவம் பெருகும் திருஊரான திருஆமூர் என்னும் கிராமத்தில் புகழனார், மாதினியார் என்ற தம்பதியருக்கு திலகவதியார் என்ற பெண் குழந்தை பிறந்து சில ஆண்டிற்கு பின் மருள்நீக்கியார் என்ற ஆண்குழந்தையும் பிறந்தது. மிகுந்த செல்வ வளத்துடன் இனிதே வளர்ந்த திலகவதியார்க்கு பன்னிரண்டு ஆண்டில் கலிப்பகையார் எனும் போர் வீரனுக்கு திருமணம் செய்ய இருவீட்டாரும் நிச்சயித்து உறுதி செய்தனர்.

அவ்வேளையில் வடநாட்டிலிருந்து படை எடுத்து வந்த பகை அரசன் மீது போர்புரிய செல்லுமாறு கூறிய மன்னவனின் ஆணையை ஏற்று கலிப்பகையார் போருக்குச் சென்று நெடுநாள் போர் புரிந்து வரும் அந்நாளில், புகழனார் கொடிய நோயால் பீடிக்கப்பட்டு விண்ணுலகு சென்றடைந்தார். கணவனார் உயிர் பிரிந்த நிலையில் மாதினியார் தனது மக்களையும், சுற்றத்தையும் துறந்து உயிர் நீத்தார். திலகவதியாரும், மருள் நீக்கியாரும் தனது நல்சுற்றத்தாருடன் பெருந்துயரத்தில் ஆழ்ந்திருந்தனர். தாய், தந்தையாருக்கு செய்ய வேண்டிய ஈமக்கடன்களையெல்லாம் செய்து முடித்தனர். இத்துன்பம் உள்ளபோதே, போருக்கு சென்ற கலிப்பகையார் வீர மரணம் அடைந்த செய்தியை மலர்மேல் அமர்ந்திருக்கும் திருமகளை போல் அழகுடைய திலகவதியார் கேட்டு என் தாய், தந்தையர் அவருக்கு மணம் முடித்து தர

Koviloor Digital Library

இசைந்தனர். எனவே அவருக்கே நான் உரிமை உடையவள். எனவே அவருடன் நானும் உயிர் துறப்பேன் என்று கூறியதை கேட்ட மருள்நீக்கியார் புலம்பி திலகவதியாரிடம் என்னை தனியேவிட்டு செல்வீர் ஆகில் உங்களுக்கு முன் நான் இறப்பேன் என்று கூற, திலகவதியார் பொன்னும் மணியும் அணிதலை ஒழித்து தம்பிக்காக இல்லத்தில் இருந்தபடியே தவ வாழ்க்கை வாழ்ந்தார்.

மருள்நீக்கியார் இனிதே வளர்ந்து உலக வாழ்க்கை நிலையிலாதது என்பதை உணர்ந்து தனது செல்வங்களை எல்லாம் நல்ல முறையில் கல்விச் சாலைகள், தண்ணீர் பந்தல் பூஞ்சோலைகள் அமைத்தும், குளம்பல செய்தும், சான்றோர்களுக்கு தேவையை கருதி கொடுத்தும், பாகுபாடின்றி ஈகை செய்து வந்தார். அந்நாளில் உலக வாழ்க்கை நிலையில்லாதது என்பதற்கு அடையாளமாக துறவையும், கொல்லாமையையும் புறப்போர்வை போல போர்த்தி காட்டும் சமண சமயத்தினரால் ஈர்க்கப்பட்டு அச்சமயத்தில் சேர்ந்தார். அச்சமணர்களும் நிலையாமையிலிருந்து முக்தி பேறு நல்குவது சமணர் மதமே எனக் கூறினர். (போர்வை எனக் கூறக் காரணமாக பின் நாளில் சிவாலயங்களை சமணபாழிகளாக மாற்றியும், மன்னர்களை தன் ஏவல்படி செய்வித்ததும், திருநாவுக்கரசப் பெருமானை பல வழிகளில் கொல்லத்திட்டமிட்டதையும் எண்ணுக). பாடலிபுத்திரம் சென்று அச்சமணர் கூட்டத்தில் உள்ளோர்களுக்கு தலைவராகி, தருமசேனன் என்ற பட்டமும் பெற்றார். திகலவதியாரும் திருஆமூர் இருந்து முப்புரம் எறித்த வீரட்டான திருத்தலம் உள்ள திருஅதிகை (பண்ருட்டி) என்ற

Koviloor Digital Library

ஊரில் சென்று சேர்ந்து அதிகாலையிலேயே திருநீறும், திருக்கண்டிகையும் தரித்து ஆலயத்தை தூய்மை செய்தல், பசு சாணம் கொண்டு மெழுகுதல், பூப்பறித்து மாலை தொடுத்தல் விளக்கு ஏற்றல் போன்ற திருத்தொண்டை செய்து வந்தார். திருவதிகை அருள்மிகு வீரட்டானேஸ்வரரை வலம் வந்தும், புகழ்ந்து பாடியும் நாட்கள் இனிதே கழிய, திலகவதியாரின் மனம் கவலை கொண்டு இறைவன் முன்பு சென்று என்னை ஆட்கொண்டது போல் எனது தம்பியையும் ஆட்கொள்ள வேண்டும் என்று பல நாள் விண்ணப்பம் செய்து வர, ஒருநாள் அவரது கனவில் சிவபெருமான் தோன்றி உன்னுடைய தம்பி முற்பிறவியில் என்னை அடைய முனிவனாக தவம் செய்தான். அத்தவத்தின் பயனாக, இப்பிறப்பில் சூலை நோய் கொடுத்து ஆட்கொள்வோம் என மொழிந்தார். மறு வினாடியே பாடலிபுத்திரத்தில் இருந்த மருள்நீக்கியாரின் வயிற்றில் கடும் நெருப்பு போல் வெப்பமுடைய கொடிய சூலை நோய் புகுந்தது.

மருள்நீக்கியார் நஞ்சுடைய பாம்பின் விஷம் தலைக்கு ஏறியது போல, வயிற்றுவலி தாங்காமல் கீழே விழுந்தார். அவருக்கு சமணர்கள் குண்டிகையில் உள்ள நீரினை மந்திரித்து கொடுத்தும், பீலி (மயில் தோகை) கொண்டு தடவியும், வயிற்றுவலி குறையாமல் அதிகமானது. மருள்நீக்கியார் சமண சமயத்தில் பழகி வந்த மந்திர, தந்திரங்களை எல்லாம் சொல்லியும் செய்தும் பயனில்லாமல் போயிற்று. சமணர்களும் செய்வது அறியாது, அச்சமணப் பாழியில் ஒரு அறையில் மருள்நீக்கியாரை விட்டு விட்டனர்.

அப்போது தன் உறவினரை நினைக்கும்போது அவர்

Koviloor Digital Library

சகோதரியான திலகவதியார் வந்தால் நம் நோய் நீங்கும் என கருதி, தமக்கு சமையல் செய்யும் (ஊட்டுவான்) நபரை அழைத்து எவரும் அறியாமல் இன்று இரவே தனது சகோதரியிடம் சென்று நோய் பற்றியும், தீராத நிலைபற்றியும் கூறி, நான் உய்வது எப்படி என்று கேட்டு, இரவு முன்பே திரும்பி வந்துவிடும்படி கூறினார். அவ் ஊட்டுவானும் திருவதிகை சென்று நந்தவனத்தில் மலர் பறித்து கொண்டிருந்த திலகவதியாரை வணங்கி நடந்ததை கூற, திலகவதியார் அச்சமணபாழிக்கு நான் வருவதற்கு இசையேன் என்று கூறி அனுப்பினார்.

மருள்நீக்கியார் சிவபெருமான் அருளால் தனது சகோதரியிடம் செல்ல வேண்டும் என்ற உணர்வு எழ, மெய்நெறி செல்லும் திலகவதியாரின் அடி சார்வேன் என்று மனத்தில் கொண்டு, எவரும் காணாதபடிக்கு வெண்மையான துணியை உடலில் சுற்றிக் கொண்டு இரவோடு இரவாக திருவதிகை சென்று விடியும் முன் திலகவதியார் இல்லம் சேர்ந்தார். (தூய வெள்ளை ஆடையே சிவனடியார்களுக்கு ஏற்ற நிறம்) திலகவதியாரின் திருவடியினை தொழுது, இச்சூலை நோயிலிருந்து நீங்கி இறைவன் திருவடியை அடைய வழி சொல்லுமாறு வேண்டினார். திலகவதியாரும் குறிக்கோள் இல்லாத சமயத்தில் சேர்ந்ததால் வந்த விளைவு இது, கவலை நீங்குக, சிவபெருமானை பணிந்து பணி செய்க. எனக்கூறி (சிவாயநம) திருஐந்தெழுத்து ஓதுக என்று ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி திருநீற்றை திலகவதியார் கொடுக்க பெருவாழ்வு வந்ததென மருள்நீக்கியார் பணிந்து ஏற்றார்.

திலகவதி அம்மையார், அதிகாலையில் கோயிலை

Koviloor Digital Library

தூய்மை செய்து சுத்தப்படுத்தி திருக்கோயிலை வலமாக சுற்றி வந்து இறைவன் திருமுன்பு விழுந்து வணங்கினார். திருநீறு பூசிய கோலத்துடன் நின்ற மருள் நீக்கியார், சிவபெருமானின் புகழை பாடும் விருப்பம் திருவருளால் உந்தப்பெற்று "கூற்றாயினவாறு விலக்குகலீர்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தை பாட அவருடைய சூலை நோய் தீர்ந்தது.

மருள்நீக்கியார் முதல்வனின் கருணை கடலில் மூழ்கி நின்றார். தனக்கு வந்த சூலை நோய்க்கு எப்படி நன்றி சொல்வது என எண்ணியவாறு மகிழ்ந்திருந்த வேளையில், சிவபெருமான் வானத்தில் அசரீரியாக, செந்தமிழின் சொல்வள பதிகத் தொடையாக பாடியமையால் நாவுக்கு அரசன் என்ற திருநாமத்தை சூட்டினார். இனி நாமும் திருநாவுக்கரசர் என்றே கூறுவோம். இவ்வாறு திருவருளால் நிகழ்த்திய அருள்வெளிப்பாட்டினை பாடலிபுத்திரத்திலுள்ள சமணர்கள் கேள்விப்பட்டு, அதனை பொறாதவராய் சமண நெறிக்கு இனி அழிவு வருமே என வருந்தி அனைவரும் ஒன்று கூடி நடந்த உண்மையை மன்னன் அறிந்தால் அவனும் சைவனாகி, நம் சமய வளர்ச்சியும் நீங்குமே என ஒரு சூழ்ச்சி செய்தனர்.

சமணகுருமார்கள் ஒன்று சேர்ந்து மன்னரிடம் சென்று "தருமசேனன் தனது சகோதரி சார்ந்த சமயத்தில் செல்ல வேண்டும் என தனக்கு வயிற்றுவலி வந்ததாக பொய் சொல்லி, நம்மால் தீர்க்க முடியாதது போல் அனைவரையும் நம்பும்படி செய்தார்.சைவ நெறியில் சென்று வயிற்றுவலி தீர்ந்ததாக கூறி, நம்முடைய தெய்வத்தை நிந்தனை செய்தான்

Koviloor Digital Library

என்று கூறினர். அதனை கேட்ட பல்லவ மன்னனும் பொய்யாக பிணி வந்ததாக கூறிச் சென்று நம் சமயத்தை ஒழிக்க முற்பட்ட தருமசேனனை என்ன செய்யலாம் எனக் கேட்க சமணகுருமார்கள் இரக்கமின்றி கொலை செய்யும்படி வலியுறுத்தினர். மன்னவனும் அதனை கேட்டு தருமசேனனை தன்னிடம் அழைத்து வரும்படி மந்திரியிடம் கூறினார். மந்திரியும் படைகொண்டு திருவதிகை சென்று திருநாவுக்கரசப் பெருமானிடம் சென்று தன்னுடன் வரும்படி கூறினர். அது போது திருநாவுக்கரசப் பெருமான் "நாமார்க்கும் குடியல்லோம்" என்ற பதிகத்தை பாடினார். மந்திரி நாவுக்கரசரை பணிந்து வேண்ட அதற்கு ஒப்புக் கொண்ட திருநாவுக்கரசரை அரசவைக்கு அழைத்துச் சென்று மன்னர் முன்பு நிறுத்தினார்கள். மன்னவனும் தன் அறிவினால் விசாரிக்காமல், சமணகுருமார் அறிவுறுத்தலின் படி திருநாவுக்கரசரை நீற்றறையில் இடும்படி கட்டளை யிட்டான்.

காவலர்களும் மன்னர் கட்டளைப்படி திருநாவுக்கரசரை **சுண்ணாம்பு நீற்றும் பெட்டியில் இட்டனர்**. அந்த கொதிக்கும் நீற்றறை திருநாவுக்கரசப் பெருமானுக்கு குளிர்ச்சியை கொடுத்தது. அதுபோது **"மாசில் வீணையும்"** எனத் தொடங்கும் பதிகத்தை பாடி கூத்தப் பெருமானின் திருவடியை நினைத்து உள் சென்றார். ஏழுநாள் கழித்து திருநாவுக்கரசர் இறந்திருப்பார் என நினைத்து நீற்றறையை திறந்தனர். அம்பலத்தாரின் கருணையில் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி தெளிந்த மனத்தினராய் திருநாவுக்கரசர் அமர்ந்திருப்பதை கண்டு அதிசயித்தனர். **பின் பால் சோற்றில்**

Koviloor Digital Library

நஞ்சை கலந்து கொடுத்தனர். ஆலகால விஷத்தையே அமுதமாக பருகிய சிவபெருமானுக்கு இப்பால் சோற்றில் உள்ள விஷத்தை அமுதமாக்குவது ஒரு பெரிய காரியமா? அப்பால் சோறு அமுதமாக மாறியது. அதற்கு அப்பொல்லாத சமணர்கள் மன்னரிடம் நம் சமயத்திலுள்ள விடம் நீங்குவிக்கும் மந்திரத்தை கொண்டு பிழைத்தான் என்று பொய் கூறியதை கேட்ட அம்மதி இழந்த அரசன் மேலும் அச் சமணர்கள் கூறியபடி, **யானையை விட்டு மிதிக்கும்படி** கூற கொலை செய்வதற்கு பழக்கி வைத்த அந்த யானையை திருநாவுக்கரசரின் மேல் ஏவ, அவ் யானை கோபத்துத்துடன் வந்து நிற்க, திருநாவுக்கரசர் சிவபெருமான் திருவடியை நினைத்து துதித்து "சுண்ணவெண் சந்தனச்சாந்து" எனத்தொடங்கும் திருப்பதிகத்தை பாடி முடித்தார்.

கொல்ல வந்த யானை திருநாவுக்கரசரை வலமாக வந்து நிலத்தில் விழுந்து வணங்கி எழுந்தது. மீண்டும் அவ்வாறே சமணர்கள் கூறக்கேட்டு மன்னன் **கல்லினோடு சேர்த்து திருநாவுக்கரசரை கயிறு கொண்டு கட்டி கடலில் பாய்ச்ச ஆணையிட்டான்.** அவ்வாறே நாவுக்கரசரை கல்லோடு கட்டி படகில் ஏற்றி நடுகடலுக்கு கொண்டு சென்றனர். அப்போது நாவுக்கரசப்பெருமான் எப்பரிசாயினும் எந்தை ஈசனின் திருவைந்தெழுத்தை ஏத்துவேன் என்று **"சொற்றுணை வேதியன்"** எனத் தொடங்கும் திருஐந்தெழுத்து பதிகத்தை இசைத்தார்.

அக்கொலை வெறி கொண்ட சமணர்கள் கல்லில் பூட்டிய நாவுக்கரசப்பெருமானை கடலில் தூக்கி போட்டவுடன் அக்கல் மிதந்து தெப்பமாய் நாவுக்கரசப்பெருமானை தாங்க அவர் மீது கட்டிய கயிறும் அறுந்தது. (நல்வினை, தீவினை

Koviloor Digital Library

கயிறு கொண்டு ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மல கல்லில் கட்டி உள்ள நம்மை, பிறவிக்கடலில் மூழ்காது நம்மை கரை சேர்ப்பது சிவபெருமானின் திருஐந்தெழுத்தேயாகும்) வருணன் செய்த முன் தவத்தால் அலையில் ஏந்தியபடியே திருநாவுக்கரசப் பெருமானை தோன்றாத்துணை நாதர் எழுந்தருளியிருக்கும் திருப்பாதிரிப்புலியூர் (கடலூர்) என்ற ஊரின் கரையில் சேர்த்தார். அங்குள்ள திருக்கோயில் சென்று பாடலீஸ்வரை வணங்கி "ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய்" எனத் தொடங்கும் புகழ்பெற்ற பதிகம் பாடினார்.

திருநீறு பொலிய பூசியும், சிவபெருமானை நினைந்துருகும் மனமும், அன்பு நிறைந்த ஆனந்தக் கண்ணீரும், திருப்பதிகங்களை பாடும் வாயினை உடைய நாவுக்கரசர் திருவதிகை வருகை தர, அவ்வூர் மக்கள் பெருந்திரளாக வந்து வரவேற்றனர். மன்னனும் திருவருளால் மனம் மாறி திருவதிகை அடைந்து திருநாவுக்கரசப் பெருமானின் திருவடிகளை வணங்கினார்.

சூலமும் நந்தியும் பொறிக்கப் பெறுதல் :

திருத்தல யாத்திரையாக திருப்பெண்ணாகடம் என்ற ஊரில் திருத்தூங்கானை மாடம் என்ற திருக்கோயிலில் அருளும் சுடர் கொழுந்தீஸ்வரரை நாவுக்கரசர் வணங்கி "பொன்னார் திருவடிக்கு" எனத்தொடங்கும் பதிகம் பாடினார். அப்பதிகத்தில் தனது உடல் பொல்லா சமணரிடம் இருந்ததால் ஏற்பட்ட தீது நீங்க எனது உடலில் திரிசூலத்தையும் நந்தி உருவத்தையும் பொறிக்கும்படி (இலச்சினை) பாட, அவ் விண்ணப்பத்தை ஏற்ற சிவபெருமான் சிவபூதம் ஒன்றை அனுப்பி நாவுக்கரசரின் தோள்களில் திரிசூலத்தையும், நந்தி தேவரின் உருவத்தையும் பொறித்தருளினார்.

Koviloor Digital Library

தில்லை அடைதல்

திருத்தில்லை சென்று கூத்தப்பெருமானை தரிசித்து ஆலயத் தூய்மை (உழவாரப்பணி) செய்து "அன்னம் பாலிக்கும்" எனத் தொடங்கும் புகழ் பெற்ற பதிகம் இசைத்தார்.

அப்பர் என்ற திருநாமம் பெறுதல்

தில்லையில் கூத்தப்பெருமானை வணங்கி திருஞான சம்பந்தப் பெருமானை காண சீர்காழி சென்றார். அங்கு எதிர்கொண்டு அழைத்த திருஞானசம்பந்தப் பெருமான் நாவுக்கரசரை "அப்பரே" என அழைத்தார். அன்று முதல் அடியவர்கள் அப்பர் என்றும் அழைத்தனர்.

திருநல்லூரில் திருவடி சூட்டப்பெறுதல் :

திருச்சக்திமுற்றம் என்ற சிவப்பதியில் நாவுக்கரசர் கோவாய் முடுகி எனத் தொடங்கும் பதிகம் பாடினார். அப்பதிகத்தில் "பூவார் அடிச்சுவடு என் மேல் பொறி" என்ற வேண்டுதலுக்கு அருளிய சிவபெருமான் நல்லூர் வா எனக் கூற அவ் ஆணைப்படி நல்லூர் செல்ல, சிவபெருமான் தனது நனைந்தனைய திருவடியை அப்பர் பெருமான் தலைமீது வைத்து திருவடி தீக்கை செய்தார்.

நாகம் தீண்டிய அப்பூதி அடிகளின் மகனை உயிர்பித்து எழச்செய்தல்

(இந்த அற்புத நிகழ்ச்சி திருவருளால் நிகழ்த்தியதை இந்நூலில் அப்பூதி அடிகள் நாயனாரின் வரலாற்றில் இடம்பெற்றுள்ளது).

Koviloor Digital Library

திருவாரூர் சென்றடைதல் :

திருவாரூர் சென்று புற்றிடம் கொண்ட நாதரை வணங்கி திருவாதிரை திருவிழாவை கண்டு மகிழ்ந்து பல பதிகம் பாடி, திருப்புகலூர் சென்று அக்னீஸ்வரரை வழிபட்டு இருக்க, ஞானசம்பந்தப்பெருமான் திருப்புகலூரில் முன்பே இறைவனை வழிபட்டு, அப்பர் வருகை தரும் செய்தியை கேட்டு திருப்புகலூர் எல்லை வர, இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கினர்.

அப்போது திருவாரூர் திருவாதிரை தேர் திருவீதி உலாவைப்பற்றி அப்பர் பெருமானிடம் சம்பந்தப்பெருமான் கேட்க, அப்பர் பெருமான் **"முத்துவிதானம் மணிப்பொற் கவரி"** எனத் தொடங்கும் பதிகத்தை கேட்டவுடன் ஞானசம்பந்தர் திருவாரூர் சென்று புற்றிடம் கொண்ட நாதரை வழிபட்டு மீண்டும் திருப்புகலூர் வருகை தந்து அப்பர் பெருமானுடன் முருக நாயனார் இல்லத்தில் தங்கிய போது திருநீலநக்க நாயனார், சிறுத்தொண்ட நாயனார், உடன் இருந்து சிவபெருமானின் திருப்புகழை பகிர்ந்து இன்புற்றனர்.

பின் இருவரும் திருத்தலயாத்திரையாக திருக்கடவூர் சென்று கால சம்கார மூர்த்தியை வழிபட்டு குங்குலிய கலிய நாயனார் திருமடத்தில் தங்கினார்கள். அங்கிருந்து பல பதிகளை வழிபட்டு திருவீழிமிழலை சென்று அடைந்தார்கள்.

திருவீழிமிழலை திருக்கோயிலில் பீடத்தில் சிவபெருமான் அருளால் தினமும் பொற்காசு பெறுதல்.

திருவீழிமிழலை என்ற அவ்வூரில் மிகுந்த பஞ்சம் ஏற்பட்டு மக்கள் மிகவும் பசியால் வாடி இருந்தனர். அந்நிலை கண்டு வருந்திய ஞானசம்பந்தருக்கும், அப்பருக்கும் அன்று இரவே சிவபெருமான் கனவில் தோன்றி திருக்கோயிலின்

Koviloor Digital Library

முன்பு கிழக்கே உள்ள பீடத்தில் ஞானசம்பந்தருக்கும், மேற்கே உள்ள பீடத்தில் நாவுக்கரசருக்கும் தினமும் பொற்காசினை வைப்பதாக கூறி அருளினார். அவ்வாறே தினந்தோறும் பொற்காசினை உலகறிய வைத்து படி அளந்தார் சிவபெருமான். அதனாலேயே படிக்காசு எனப்பெயர் பெற்றது.

அக்காசினை கொண்டு பறை அடித்து அறிவிப்பு செய்து, சிவபெருமானின் அடியவர்கள் அனைவருக்கும் தினமும் சோறு இட்டனர். துயர் கொடுத்த வறுமையை தொலைத்திட்டனர். திருஞானசம்பந்தப்பெருமானுக்கு இறைவன் அளித்த காசினை மாற்றி தூய்மை செய்து பின் பொருட்கள் வாங்கும் நிலையிலுள்ள மாசுடைய காசையும், திருநாவுக்கரசப் பெருமான் (உழவார) கைத்தொண்டு செய்து வந்த காரணத்தால் மிழலைநாதர் தூய பொற்காசினையும் வழங்கினார். (சம்பந்தபெருமான் எவ்வாறு மாசிலா பொற்காசினை பெற்றார் என்பதை இந்நூலில் சம்பந்தர் வரலாற்றின் மூலம் தெரிந்து கொள்ளலாம்).

இரு நாயன்மார்களும் திருவீழிமிழலை நாதரை தரிசித்து பல பதிகங்கள் பாடி நெடுநாள் தங்கி வறுமையை நீக்கினர். வான் மழை பொழிந்தது வளம் உண்டாகி பயிர் பெருகி விளைய இருவரும் திருவீழிமிழலையிலிருந்து திருவாஞ்சியம் சென்று வணங்கி திருமறைக்காடு சென்று அடைந்தனர்.

திருமறைக்காடு (வேதாரண்யம்) திருக்கோயில் முன் திருவாயிலை திறக்கும்படி பாடிய அற்புத நிகழ்ச்சி :

இத்திருக்கோவிலில் இறைவன் முன்பு அமைந்திருந்த திருக்கதவு முற்காலத்தில் வேதங்களால் ஒதி அடைக்கப் பட்டது. அதனை திறக்க இயலாமல் பல காலம் மக்கள் அத்திருக்கதவின் அருகில் மற்றொரு கதவு அமைத்து

Koviloor Digital Library

திருக்கோயில் உள்சென்று இறைவனை வணங்கி வந்தனர். இத்திருமறைக்காட்டு ஈசனை வழிபட சம்பந்தப்பெருமானும், நாவுக்கரசரும் செல்ல அங்குள்ள நிலையை அறிந்த ஞானசம்பந்தப்பெருமான், அப்பரே! இத்திருக்கோவில் திருக்கதவினை திறக்கப்பாடுங்கள் என்று கூற, அப்பர் பெருமானும் "பண்ணினோடு மொழியாள்" என்ற பதிகத்தை பாட இப்பாடலின் இறுதியில் 'இரக்கமொன்றில்லீர்" எனக் கூறிய மொழி கேட்டு இறைவன் வேதங்களால் மூடப்பட்ட திருக்கதவை திறப்பித்தார். தேவர்களின் ஆர்ப்பரித்த ஒலியும் வேத ஒலியும் கடலோசையை விட அதிகமாக விண்ணில் ஒலித்தது. அப்பர் பெருமானும், சம்பந்தரும் இறைவனின் இன்ப வெள்ளத்தில் மூழ்கி திருக்கோவில் திருவாயில் வழி உள் சென்று மறைக்காட்டு மணாளனை வணங்கி மகிழ்ந்தனர்.

அப்பர் பெருமான் திருமறைக்காட்டில் பதினோறாவது பாடல் பாடிய பின்னரே இறைவன் திருக்கதவினை திறப்பித்தார். ஆனால் ஞானசம்பந்தப்பெருமானின் முதல் பாடலிலேயே திருக்கதவு மூடிக் கொண்டதை நினைந்து அன்றிரவு உறங்காது, தன் தவறு ஏதேனும் இதில் உண்டோ என வருந்தி தூக்கமின்றி இருந்த அப்பர் பெருமானிடம் சுவாமி தொடர்ந்து வா என்று கூறி முன் செல்ல, சுவாமியை தொடர்ந்து அப்பர் செல்ல, அப்பர் சென்றதை உணர்ந்த சம்பந்தரும் பின் செல்ல வாய்மூரில் உள்ள திருக்கோயிலின் உள்சென்று இறைவன் மறைந்து பின் இவ்விரு பெரு மக்களுக்கும் உமையுடன் வெள்விடை மீது திருக்காட்சியை அருளினார்.

திருப்பழையாறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருத்தல்

திருநாவுக்கரசர் பழையாறை என்ற ஊரில் உள்ள வடதளி என்ற சிவபெருமானின திருக்கோயிலை சமணபாழிகளாக

Koviloor Digital Library

மாற்றியதை திருவருளால் உணர்ந்து அவ்வூர் மக்கள் மூலம் கேட்டு மிகவும் மனம் வருந்தி சிவபெருமானிடம் இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருந்த சிவலிங்கத் திருமேனியை காணாது இங்கிருந்து செல்ல மாட்டேன் என்று அமுது செய்யாது பட்டினி கிடந்தார். இந்நிலையை கண்டு சிவபெருமான் திருவுள்ளம் கொண்டு அந்நாட்டு அரசனின் கனவில் எழுந்தருளி, அப்பர் தன்னை காண உறுதியாக உள்ளதையும் சமணர்கள் சிவலிங்கத் திருமேனியை மறைத்து வைத்துள்ள இடத்தையும் காண்பித்து, அச்சமணர்களை அக்கோயிலிருந்து நீக்குவாயாக என அருளிச் செய்தார். அரசன் விழிப்பு எய்தி தான் கண்ட கனவினை மந்திரிகளுக்கு கூறி, படைகொண்டு சென்று ஆயிரம் சமண குருமார்களை அங்கிருந்து நீக்கி சிவஆகம முறைப்படி, முன்பு இருந்த நிலைப்படியே திருப்பணி செய்து, கனவின் வழி இறைவன் கூறிய இடத்திலிருந்து சிவலிங்கத் திருமேனியை எடுத்து ஸ்தாபிதம் செய்தார். அப்பர் பெருமான் மிக மகிழ்ந்து இறைவனை வணங்கிய பின் திருஅமுது செய்தார்.

திருப்பைஞ்ஞீலியில் இறைவன் பொதிசோறு அளித்தல் :

திருப்பைஞ்ஞீலி எனும் ஊரில் இறைவன் அந்தண வடிவு கொண்டு அப்பர் பெருமானுக்கு பொதி சோறு கொடுத்து திருக்கோயில் வரை அழைத்துச் சென்று காட்சி கொடுத்து மறைந்தார். திருநாவுக்கரசர் திருப்பைஞ்ஞீலி நாதரை தொழுது "உடையர் கோவணம்" என்ற திருப்பதிகம் பாடினார்.

திருக்கயிலை நோக்கி செல்லுதல் :

திருஅண்ணாமலை, காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், திருவான்மியூர், திருவொற்றியூர், திருவாலங்காடு,

Koviloor Digital Library

திருக்காரிகரை, (இராமகிரி) திருக்காளத்தியிலிருந்து திருக்கயிலாயம் செல்ல விரும்பி காசி சென்று விசுவநாதரை வணங்கி கால்கள் தேய்ந்து கை மணிகட்டு சிதைய, மார்பின் தசையும் நைந்து, எலும்புகள் முறிந்தும், மண்ணில் புரண்டு புரண்டு போக ஆரம்பித்தார். அவர் உடல் உறுப்புகள் செயல் இழந்தும் கயிலாய நாதனை காணும் ஆவலில் மனம் சோராமல் கிடந்தார்.

அவ்விடத்தில் சிவபெருமான் ஞானமுனிவனாக எழுந்தருளி, அருகில் ஒரு குளம் அமைத்து திருநாவுக்கரசரின் எதிர்வந்து இப்படி உடல் சிதைந்து வருந்தி இக்காட்டில் வந்த காரணம் என்ன? என்று கேட்டவுடன் அப்பர் பெருமான் திருக்கயிலாயத்தில் சிவபெருமானின் திருக்காட்சியை காணவே வந்தேன் என கூறியதை கேட்ட ஞானமுனிவன் தேவர்களுக்கும் அரிதானது கயிலையின் காட்சியெனவே மானுடர்கள் செல்வது அரிது. ஆகையால் நீ திரும்பி செல் என்று கூற, அதுகேட்ட அப்பர் பெருமான் திருக்கயிலையில் இறைவன் காட்சியை காணாது என்றாவது ஒரு நாள் மாளப்போகும் இவ்வுடலோடு திரும்பி செல்ல மாட்டேன் எனக் கூறியதை கேட்ட ஞானமுனிவர் மறைந்து, விண்ணிடையில் அசரீரியாக “நாவினுக்கு அரசனே எழுந்திரு” எனக் கூறக்கேட்ட திருநாவுக்கரசர் உடலில் தீங்குகள் நீங்கி எழுந்து இறைவா, திருக்கயிலையில் இருக்கும் திருக்கோலக் காட்சியை காட்டி அருள வேண்டும் என கேட்டு பணிந்தார். சிவபெருமான் திருவாக்கினால் இக்குளத்தில் மூழ்கி யாம் கயிலையில் இருக்கும் கோலத்தை நீ திருவையாற்றில் காண்பாய் என மொழிந்தார்.

Koviloor Digital Library

திருக்கயிலை காட்சி

அப்பர் பெருமான் "வேற்றாகி விண்ணாகி" எனத் தொடங்கும் பதிகம் பாடி திருஐந்தெழுத்து ஓதி அக்குளத்தில் மூழ்கினார். மூழ்கி எழும்போது திருஜயாறு திருக்குளத்தில் வெளியே வரும்படி இறைவர் கருணை புரிந்தார். திருக்கயிலையில் தனது திருக்கோல காட்சியை திருவையாற்றில் குளத்தில் அப்பர் எழும்போது தான் கூறியபடி அவ்வாறே காட்சி தந்து அருளினார் சிவபெருமான்.

திருநாவுக்கரச பெருமான் இரண்டு கண்களிலும் கண்ணீர் பெருக, உமையோடு இறைவனின் காட்சியை கண்டபின் அனைத்து உயிரிலும் சிவபெருமான் சக்தியும் சிவமும் ஆக இணைந்து இருக்கும் நிலையை கண்டார். திருக்குளக்கரை ஏறி திருஜயாறு திருக்கோவிலின் உள் நுழைந்தார். ஆடினார், பாடினார், அழுதார் இறைவன் தனக்கு அருளிச் செய்த திறத்தை எண்ணி மனமுருகி "பொறையுடைய" "பாட்டான" எனத் தொடங்கும் இரு போற்றித் திருத்தாண்டகத்தை இசைத்தார். பின் தான் கண்ட சக்தியும் சிவமுமாம் நிறைந்து நிற்பது ஏக நாயனகனே என்ற ஒருமை காட்சியை உணர்ந்த அப்பர் பெருமான் "மாதர்ப் பிறைக் கண்ணியானை" எனத் தொடங்கும் பதிகத்தை பாடினார்.

திருப்பூந்துருத்தியில் திருஞானசம்பந்தப்பெருமான் அமர்ந்திருந்த முத்து சிவிகையை தோளில் தாங்கியது

திருப்பூந்துருத்தியில் திருக்கோயில் எதிரே திருமடம் அமைத்து பல காலம் அத்திருக்கோயிலில் உழவாரம் செய்து

Koviloor Digital Library

பலப் பதிகங்களை பாடி இருந்த வேளையில், திருஞான சம்பந்தர் திருப்பூந்துருத்தி வருகையை அறிந்து அவ்வூர் எல்லையில் சென்று (சம்பந்தர் மேடு) சம்பந்தர் அமர்ந்திருக்கும் முத்து பல்லக்கை சுமந்து வரும் அடியாரோடு கூடி, யாவரும் அறியாத வகையில் சம்பந்தப் பெருமானை தொழுது அச்சிவிகையை அவர்களோடு சேர்ந்து மகிழ்ச்சி பொங்க தூக்கினார்.

அப்போது சம்பந்தப்பெருமான் எங்குற்றார் அப்பர்? என கேட்டார். அப்பர் பெருமான் பல்லக்கை சுமந்தபடியே, உங்களின் அடியவன் உங்களின் திருவடியை தாங்கி வரும் பெருவாழ்வு பெற்று இங்கு உற்றேன் என்றார். இம்மொழியினை கேட்ட சம்பந்தர் பல்லக்கிலிருந்து விரைந்து இறங்கி அப்பர் பெருமானை வணங்க அதற்கு முன் அப்பர் பெருமான் சம்பந்தரை வணங்க இதைக் கண்ட அத்தனை அடியார்களும் தொழுது, திருப்பூந்துருத்தி நாதரை வணங்கி சம்பந்தர் தொண்டை நாட்டிற்கும், அப்பர் பெருமான் பாண்டி நாட்டிற்கும் சென்றனர். திருப்புத்தூர், திருஆலவாய் (மதுரை) சென்று சொக்கநாதப் பெருமானை வணங்கி "முளைத்தானை" எனத் தொடங்கும் பதிகம் பாடி பாண்டிமாதேவியார், நின்ற சீர் நெடுமாறன், குலச்சிறையார் ஆகிய அடியவர்கள் வணங்க, அங்கு சில நாள் தங்கி இருந்தார். பின் திருப்பூவணம், திருஇராமேஸ்வரம், திருநெல்வேலி, காளையார் கோயில், வணங்கி திருப்புகலூர் வந்தடைந்தார். "இருநிலனாய்" "அம்மை நீ", "பற்றற்றார்" எனத் தொடங்கும் பாவ நாசம் செய்யும் பதிகத்தை இசைத்தார். அங்கு பல நாள் தங்கி பல பதிகம் பாடி உழவாரப் பணியினை செய்து வந்தார்.

Koviloor Digital Library

இறைவன் அப்பர் பெருமானுக்கு திருவடிபேறு நல்கியது

அப்பர் பெருமானின் செம்மை நிலையை வெளிப்படுத்த சிவபெருமான் திருப்புகலூரில் உள்ள திருக்கோயில் உள்ளே பொன்னும், மணியும் சிந்தி கிடப்பது போல செய்தார். உழவாரம் செய்ய வந்த அப்பர் பெருமான் அம்மணிகளை ஏனைய கற்களோடு சேர்த்து எடுத்து வீசி எறிந்தார். பின் தேவலோக பெண்கள் அப்பர் உழவாரம் செய்யும் இடம் நோக்கி வந்தனர்.

இசையோடு பாடியும், ஆடியும், பூக்களை அப்பர் மீது பொழிந்தும், அணைப்பது போல் அருகில் வந்து ஆடைகளை அசைத்தும் இருப்பதை கண்ட அப்பர் பெருமான் சிறிதும் மாறுபடாத உள்ளத்துடன் இங்கு உங்களால் ஆவது ஒன்றும் இல்லை என்னுடைய மனம் திருவாரூர் பெருமானுக்கே ஆட்பட்டது. நீங்கள் வீணே அலையாதீர்கள் என மொழிந்து "பொய்மாய" எனத் தொடங்கும் பதிகத்தை பாடினார். அப்பர் பெருமானின் இவ்வுறுதியை கண்ட தேவலோக பெண்கள் அகன்று சென்றனர். அப்பர் சிவபெருமானை எண்ணியபடியே சில நாள் அத்திருக்கோயிலில் தங்கியிருந்தார். ஒருநாள் அனைத்து உயிர்களும் நலம்பெறும் பொருட்டு "எண்ணுகேன்" எனத் தொடங்கும் பதிகம் பாடி சிவானந்த ஞான வடிவேயாகி சிவபெருமான் திருவடி கீழ் திருநாவுக்கரசப்பெருமான் அமர்ந்திருந்தார்.

திருஆமூர்: பண்ருட்டியிலிருந்து 3 கி.மீ. உள்ள ஊராகும். அப்பர் திருமடம் இங்கு உள்ளது.

Koviloor Digital Library

கருத்து : 1. திருநாவுக்கரசு பெருமானை சிவபெருமான் காத்து அருளிய நான்கு செயல் நம் அனைவரின் வாழ்க்கையிலும் நடைபெறக்கூடிய ஒன்று.

(அ) சுண்ணாம்பு நீற்றறையில் பாதுகாத்த செயல் இறைவன் நம்மை கருவறையில் காப்பது போலவும்

(ஆ) நஞ்சு கலந்த பால்சோற்றிலிருந்து காப்பாற்றியது பால்சோறு உண்ணும் குழந்தை பருவத்திலிருந்து நம்மை காப்பது போலவும்

(இ) மதயானையிடமிருந்து காத்தருளியது ஆசை என்னும் மதயானை நம்மை துரத்திக் கொண்டே இருக்கிறது அந்த ஆபத்திலிருந்து காத்து அருள்வதையும்,

(ஈ) கல்லில் கட்டி பூட்டி கடலில் பாய்ச்சியும் கடலில் இருந்து காத்தருளியது. நம்மை கட்டி பாடையில் பூட்டி சுடுகாட்டில் வீசியும், நம் உயிர் மேன்மை கொள்ள மீண்டும் உடல் கொடுத்து பிறவி கடலில் இருந்து கரை சேர்க்கும் எல்லையில்லா கருணையையே அப்பர் பெருமானை ஆட் கொண்ட அருட்செயல்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

உ. உடன் பிறந்த தம்பி உயிர் போகும் நிலையிலிருந்தும் அவர் இருக்கும் சமண பாழிக்கு செல்ல மறுத்த திலகவதியாரை எண்ணிப் பார்த்து சிவனடியார்கள் பிற சமய மடத்திற்கு சென்று அங்குள்ள மூர்த்தியை இறைவனாக வணங்கும் அன்பர்கள், முத்தி பேற்றின் உச்ச நிலையை அடைவது கடினம்.

ஊ. அப்பர் பெருமான் விரும்பி விண்ணப்பம் செய்தவாறு திருநல்லூரில் சுவாமி தனது திருவடியை அப்பர் தலை மீது

Koviloor Digital Library

சூட்டினார். அதே அப்பர் பெருமான் இப்பூலோக வாழ்வின் இறுதியில் திருப்புகலூர் பதிகத்தில் சுவாமியின் பாதம் என் தலை மேல் வைத்தால் சுவாமிக்கு வலிக்குமே என்று ஒதுங்கினேன் என்று பாடுகிறார் இது தான் தூய அன்பு. இறைவனிடம் எதையும் எதிர்பாராத அன்பே தூய பக்தி ஆகும்.

எ. திருவீழிமிழலையில் சோறுயிட்டதையும், மழை பொழிந்து வளம் பெருகியதும் அவ்வூர் விட்டு அகன்றதையும் எண்ணிப் பார்க்கவும். இன்றைய நம் சமுகத்தினரின் வாழ்க்கை தரம் உயர்ந்துள்ளது இவ்வேளையில் அன்னதானம் என்பது தேவையா? உணவு கிடைக்காத இடங்களில் மட்டுமே அன்னதானம் செய்வது சிறப்பு. நிலைத்து நின்று அனைவருக்கும் பயன்தரக்கூடிய நலத்திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

ஏ. காமம், காஞ்சனம் இவ்விரண்டில் முதலில் காமத்தை ஒழித்தால், மண்,பொன், நகை மீது ஆசை நீங்கும். அப்பர் பெருமானுக்கு எவ்வித ஆசையும் இல்லாத தூய உள்ளம் இருந்ததால் பொன்னையும், மணிகளையும் குப்பையென வீசினார்.

பெருகலாம் தவம் பேதைமை தீரலாம்
திருகலாகிய சிந்தை திருத்தலாம்
பருகலாம் பரம்ஆயது ஓர் ஆனந்தம்
மருகலான் அடி வாழ்த்தி வணங்கவே.

– 5–88–1

திருநாவுக்கரசு நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

21. குலச்சிறை நாயனார் வரலாறு

பாண்டி நாட்டில் மணமேற்குடி என்னும் ஊரில் திருத்தொண்டர் தொகையில் பெருநம்பி என குறிப்பிட்டுள்ள பெருமையினை உடைய குலச்சிறையார் என்ற பெரியவர் வாழ்ந்து வந்தார். அவர் திருஞானசம்பந்த பெருமானை தனது குருவாகக் கொண்டும், சிவனடியார்களை கண்டவுடன் அவர்களின் திருவடியை வணங்கி அவர்களுக்கு வேண்டியவைகளை செய்தும் வந்தார். நின்றசீர் நெடுமாறன் அரசவையில் முதலமைச்சராக விளங்கினார். மதுரையில் சமணர்களாக மாறிய மன்னனையும் மக்களையும் மாற்றி மீண்டும் நம் தாய் சமயமான சிவநெறியைச் சேர, திருஞானசம்பந்தப் பெருமானை மதுரைக்கு அழைத்து வந்து அவர் வழி செய்த செயல்களையும், வாதில் தோல்வியுற்ற சமணர்களின் தீது நீங்கும்படியும், அவர்களின் வாக்கின்படியே வன்கழு மரத்தில் ஏற்றினார். சைவ மரபின் மாவீரனாக வாழ்ந்து சொக்கநாத பெருமானின் திருவடியில் சேர்ந்தார்.

மணமேற்குடி: அறந்தாங்கி தாலுகா – மீன்மிசல் ஊரிலிருந்து சிறிது தொலைவு.

கருத்து: நம் சைவ குலத்தை காப்பவர் எனவே குலச்சிறையார் என அழைக்கப்பட்டார். திருஞானசம்பந்தரின் திருமடத்திற்கு தீயிட்ட – அப் பொல்லா சமணர்களை, உழவர்கள் பயிரை காக்க களை எடுப்பது போலவும், மன்னன் மக்களை காக்க பகைவர்கள் கொல்வது போலவே, வாதத்தில் தோல்வியுற்றால் கழு ஏறுவோம் என்று சமணர்களே ஒப்பு கொண்டதாலேயே அனைவரையும் கழுவேற்றினார்.

குறிப்பு : மதுரையில் நிகழ்ந்த இந்நிகழ்ச்சியை விரிவாக படிக்க இப்புத்தகத்தில் உள்ள திருஞானசம்பந்தர் பெருமான் வரலாற்றினை படிக்கவும்.

குலச்சிறை நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

22. பெருமிழலைக்குறும்ப நாயனார் வரலாறு

மிழலைநாட்டில் பெருமிழலை என்னும் ஊரில் குறும்பர்கள் இனத் தலைவராக வாழ்ந்து வந்தார். பிறந்த மரபினை சேர்த்து பெருமிழலை குறும்பர் என அழைக்கப்பட்டார். சிவபெருமானின் திருவடிகளை தன்னுடைய நெஞ்சத் தாமரையில் வைத்துப் போற்றும் இயல்புடையவர். சிவனடியார்களுக்கு உண்ண உண்ணத் தொடர்ந்து அமுதூட்டியும், அவ்அடியார்கள் விரும்பியதை அளித்தும் வந்தார்.

திருத்தொண்டத்தொகையை பாடிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பாதத்தை நினைத்துக் கொண்டே இருப்பார். அதன் பயனாக அட்டமாசித்திகளை பெற்றார். தனது குருநாதரான நம்பி ஆரூரன் (சுந்தரர்) கொடுங்களூரிலிருந்து திருஅஞ்சைக்களம் அடைந்து அஞ்சையப்பரை வணங்கி திருக்கயிலாயம் அடைய போவதை முதல் நாளே யோக சித்தியின் மூலம் அறிந்து, தனது குருநாதன் இல்லாத இப்புவியில் தான் இருப்பதை விரும்பாது இன்றே திருக்கயிலை அடைவேன் என்று மனம், புத்தி, சித்தம், அகங்காரம் அனைத்தையும் ஒருநிலைப்படுத்தி நல்அறிவினை மேற்கொண்டு, பிரம்ம நாடி வழியே கருத்தினை செலுத்தி, கபால நடுவில் உள்ள பிரம்ம துவாரம் வழியே முன்பு பயின்ற யோக நெறியினைக் கொண்டு மூல முதல்வரான சிவபெருமானின் திருக்கயிலையை, சுந்தரமூர்த்தி நாயன்மார்க்கு முன்பே சென்று அடைந்து சிவபெருமான் திருவடியில் நீங்காத நிலை பெற்றார்.

Koviloor Digital Library

மிழலை நாட்டு பெருமிழலை.

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது தேவ மலை என்று வழங்கப்படுகிறது. பேறையூர் சிவாலயத்தை தரிசனம் செய்து அத்திருக்கோயில் சிவாச்சாரியாரை அழைத்துக் கொண்டு செல்லவும்.

கருத்து : அ. அட்டமாசித்திகளை பெற்றும் தன்புகழ் ஓங்க அச்சித்துக்களை பயன்படுத்தாது சிவபெருமானின் திருவடி அடையவே இந்த நாயனார் பயன்படுத்தியிருப்பதை எண்ணிப்பார்த்து நாம் பெற்ற அறிவை யெல்லாம் சிவபெருமானை அறியும் அறிவாகவே மாற்ற வேண்டும். குருவின் வார்த்தையில் உள்ள பக்தி இறைவனை எளிதில் அடைய செய்யும் பட்டினத்தாரின் சீடரான பத்திரகிரியார் குருவிற்கு முன்பே இறைவனை அடைந்த வரலாற்றை நாம் படித்து இன்புறலாம்.

ஆ. திருவருளே அந்தந்த உயிரின் பக்குவத்திற்கு ஏற்ப குருவருளாக வந்து அவ்வுயிரை முன்னேற்றுகிறது. குருவருள் என்பது வழிகாட்டி போன்று அதன் வழி ஒவ்வொரு உயிரும் முயன்று இறையருள் பெற வேண்டும். பாடம் சொல்லி கொடுக்கும் ஆசிரியர் எல்லா மாணவர்களுக்கும் ஒன்றாகத்தான் சொல்லி கொடுப்பார். அப்போது கவனமாக கேட்டவன் தான் முதல் மாணவனாக முடியும். அதுபோல ஞான ஆசிரியன் அனைவருக்கும் சிவானந்தத்தை போதிக்கிறார் அவரின் வார்த்தையில் நம்பிக்கை வைத்தவன் மட்டுமே முயன்று சிவானந்தத்தை அடைகிறார். குரு ஞானத்தை போதிக்க முடியுமே அன்றி வழங்க இயலாது அது அந்த உயிரின் முக்தியின் மீதுள்ள விருப்பம். நம்பிக்கை முயற்சியின் எல்லையை பொறுத்தது.

பெருமிழலை குறும்ப நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

பேயார் என்கிற

23.காரைக்கால் அம்மையார் வரலாறு

சோழநாட்டில் பெரு வணிகர்கள் வாழும் காரைக்கால் என்ற ஊரில் வணிகர் குல தலைவராக விளங்கிய தனதத்தன் என்பவருக்கு அவர் செய்த தவப்பயனாக புனிதவதி என்ற அம்மையார் அவதரித்தார். வணிகர் குலம் பெருமிதம் கொள்ளும்படி சிறுவயதிலே சிவபெருமானின் மீது கொண்ட அன்பின் திறத்தில் ஆழ்ந்திருந்தார். சிறுமிகளுடன் விளையாடும் போதும் சிவபெருமானின் திருநாமத்தை சொல்லிக் கொண்டே இருப்பார். சிவனடியார்களை கண்டால் வணங்குவார். இவ்வாறே இளமை பருவம் அடைந்தார். தனதத்தனார் தன் ஒரே மகளான புனிதவதியை வெளியூருக்கு அனுப்ப விரும்பாமல் நாகப்பட்டினத்தில் நிதிபதி என்பவரின் மகனான பரமதத்தனுக்கு தனது மகளை திருமணம் செய்வித்து தனது ஊரிலேயே தனியாக வீடு அமைத்து குடிபுகச் செய்தார்.

புனிதவதியார் மனை அறத்தின் பண்பு வழுவாது சிவனடியார்கள் வருகை தந்தால் அவர்களுக்கு திருஅமுது அளித்தும் செம்பொன்னும் நவமணியும் கொடுத்து வாழ்ந்து வரும் நாளில், பரமதத்தன் வணிகம் செய்யும் கடையில் அவரை காண வந்தவர்கள், இரண்டு மாங்கனிகள் கொடுத்தனர். அப்பழத்தை வாங்கிய பரமதத்தன் தன்னுடைய வேலை ஆட்களிடம் கொடுத்து தனது இல்லத்தில் சேர்க்கும்படி பணித்தார். இவ்விரண்டு மாங்கனிகளையும்

Koviloor Digital Library

புனிதவதியார் பெற்று உள்ளே வைத்தார். அதன்பின் சிவபெருமான், வயதான தளர்வும், அதிக பசியில் அயர்ந்தது போல் மிக வாடிய நிலையில் புனிதவதியார் இல்லம் புகுந்தார். புனிதவதியார் பாதம் கழுவ நீர் கொடுத்த பின் காய்கறி கொண்டு செய்யும் பதார்த்தம் தாமதப்படும் சிறிது நேரம் பொறுத்திருக்கவும் என கூறியதைக் கேட்ட சிவனடியார் தனக்கு சாதம் மட்டும் போதும். மிகவும் பசியாக உள்ளது என்று கூற, திலகவதியார் வாழை இலையிட்டுச் சோறும், தன் கணவனார் கொடுத்தனுப்பிய மாங்கனிகளில் ஒன்றை அரிந்து வாழை இலையில் இட்டவுடன் இவ்விரண்டையும் உண்டு முதியவராக வந்த சிவனடியார் புனிதவதியாரின் செயலை மகிழ்ந்து வாழ்த்தி சென்றார்.

பரமதத்தன் மதிய வேளையில் இல்லம் வந்து குளித்து உணவு உட்கொள்ள, அமர்ந்தார். புனிதவதியாரும் காய்கறி கூட்டுகளுடன் அன்னமிட்டு தன் கணவனார் கொடுத்து அனுப்பிய மதுர மாங்கனியில் ஒன்று இருந்ததை அரிந்து வைத்தார்.

அம்மாங்கனியை உண்ட பரமதத்தன் அச்சுவையை மேலும் சுவைக்க எண்ணி இரண்டு மாம்பழத்தில் மீதம் உள்ள மற்றொரு மாங்கனியை கொண்டு வரும்படி கூற, புனிதவதியாரும் அம்மாங்கனியை கொண்டு வருவார் போல சென்று அம்மாங்கனிக்கு என் செய்வேன் என்று சிவபெருமானை நினைத்தவுடனே சுவாமிஅருளால் மாங்கனி ஒன்று புனிதவதியார் கையில் வந்தது. அம்மாங்கனியின் ருசியை சுவைத்த பரமதத்தன் மூவுலகிலும் பெறுவதற்கு அரிய சுவையுள்ள இம்மாங்கனியை எங்கே பெற்றாய் எனக் கேட்டார்.

Koviloor Digital Library

புனிதவதியாரும் நடந்ததை கூறி சிவபெருமான் அருளிச் செய்த மாங்கனியே என்று கூறினார். புனிதவதியாரின் சொல்லில் நம்பிக்கையின்றி மீண்டும் ஒரு மாங்கனியை சுவாமி அருளால் அழைத்துக் கொடு எனக் கூறினான். புனிதவதியார் சற்று விலகி சிவபெருமானிடம் மீண்டும் ஒரு கனியை தரவில்லையெனில் எனது உரை பொய்யாகும் எனக் கூற உடனே மாங்கனி ஒன்று வர அதனை பரமதத்தன் கையில் வாங்கி அதிசயித்தான்.

பின் அம்மாங்கனி மறைந்தது, இதனால் மிகுந்த அச்சத்துடன் தனது மனைவியான புனிதவதியாரை நெருங்காது தொடர்பின்றி வாழும் நாளில், புனிதவதியாரை பிரித்துச் செல்ல திட்டமிட்டு அனைவரிடமும் கடல் கடந்து கப்பல் ஏறி பிற நாட்டில் வாணிபம் செய்து திரும்பி வருவதாக பொய்கூறி கலன் (கப்பல்) ஏறி தமிழ்நாட்டிலேயே பாண்டி நாட்டில் உள்ள ஒரு பட்டினத்தில் (குலசேகரபட்டினம்) இறங்கி அங்குள்ள வேறொரு வணிகனின் மகளை திருமணம் செய்து பெண் குழந்தை ஒன்று பிறக்க அக்குழந்தைக்கு புனிதவதி என்று பெயரிட்டு அழைத்து வந்தான். புனிதவதியாரின் தந்தையான தனதத்தனார்க்கு சுற்றத்தாரில் ஒருவர் வந்து தனதத்தரிடம் பரமதத்தன் பாண்டி நாட்டு மாநகரில் பெருஞ்செல்வந்தனாக வாழ்ந்து வருவதை கூறினார். அச்செய்தியை கேட்ட தனதத்தரும் தனது மகளான புனிதவதியை சிவிகை (பல்லக்கு)யில் ஏற்றி, சுற்றத்தாருடன் பாண்டி நாடு சென்றார். பரமதத்தன் இருக்கும் ஊருக்கு எல்லையில் சென்று, தனதத்தன் தனது ஆட்களை அனுப்பி புனிதவதியாரின் வருகையை அறிவிக்கும்படி கூறினார்.

Koviloor Digital Library

அச்செய்தியை கேட்ட பரமதத்தன் அச்சம் கொண்டு தன் மனைவியுடன் மகளையும் அழைத்துக் கொண்டு புனிதவதியாரின் முன் "யான் உமது அருளால் வாழ்வேன்" என்று கூறி காலில் விழுந்தான். புனிதவதியார் அச்சத்துடன் உறவினர்களோடு ஒதுங்கி நிற்க, சுற்றத்தார்களும் பரமதத்தனை பார்த்து உன் மனைவியை வணங்குவது ஏன் என்று கேட்டனர். அதற்கு பரமதத்தன் இவர் மானுட பிறவி அல்ல பெருந்தெய்வம் ஆதலால் நான் வணங்கினேன், நீங்களும் வணங்குங்கள் என்று அனைவரிடமும் கூறினான்.

புனிதவதியாரும் கொன்றைவார் சடையுடைய சிவபெருமானின் திருவடியினை நினைந்தவாறு மனம் ஒன்றிய நிலையில் மிக்க உணர்வு கொண்டு இவன் எடுத்த முடிவு இது, இவனுக்காக நான் சுமந்த வனப்புடைய தசை பொதி நீங்கி பேய் உருவம் அடியேனுக்கு வேண்டும் என சிவபெருமானின் திருவடியினை வணங்கினார்.

தில்லை மன்றில் ஆடும் கூத்தப்பெருமானின் அருளினாலே ஊண் உடைய வனப்பை எல்லாம் உதறி எலும்பு உடலாக வான் உலகமும் மண்ணுலகமும் வணங்கும்படியான பேய்உரு எய்தினார். எங்கும் மலர் மழை பொழிந்தது. வானத்தில் துந்துபி நாதம் முழங்க தேவர்களும், முனிவர்களும் மிக மகிழ்ந்தனர். சுற்றத்தார்கள் பலர் வணங்கியும் சிலர் அஞ்சியும் ஓடி மறைந்தனர். அப்பேய் உருவோடு அம்மையார் "அற்புதத் திருவந்தாதி" பாடினார். சிவகணங்களோடு ஒன்றி நின்ற மகிழ்வுடன் "இரட்டை மாலை அந்தாதி" எடுத்துப் பாடி வெள்ளி திருக்கயிலாய மலை செல்ல திருவருள் கூட்ட, அஞ்சி ஓடிய உறவினர்கள் பேய், பேயென பெயரிட்டு அழைத்ததை கேட்ட அம்மையார் உண்மை நெறியினை

Koviloor Digital Library

அறியாத இம்மக்கள் என்னை அறியாது போகட்டும் என் தந்தை அண்ட நாயகரான சிவபெருமான் என்னை அறிவார் எனக்கூறி மனதை விட வேகமாக வடதேசங்களையெல்லாம் கடந்து சூலபாணியார் இருக்கும் திருக்கயிலையை கால்களால் நடந்து செல்லாது தலையால் நடந்து சென்றார். அவ்வாறு வருவதை கண்டு அம்பிகை அதிசயித்து நிற்க சிவபெருமான் "வரும் இவள் நம்மை பேணும் அம்மை, வேண்டி இவ்வுரு பெற்றாள்" என மொழிந்தார். காரைக்கால் அம்மையாரும் சுவாமி முன்பு வர உலகம் வியக்க சிவபெருமான் **"அம்மையே"** என்று உலகம் உய்ய அருளிச் செய்தார். காரைக்கால் அம்மையாரும் சுவாமி முன்பு **'அப்பா'** என்று அழைத்து திருவடியில் பணிந்து வீழ்ந்தார்.

சிவபெருமான் "என்னிடம் நீ வேண்டுவது என்னவென்று கேட்க" அம்மையார், இறவாத இன்ப அன்பும், பிறவாமையையும், பிறப்பினும் உம்மை மறவாமையும் வேண்டும். இறைவா, நான் மகிழ்ந்து பாடிக்கொண்டே இருக்க நீவிர் ஆடும்போது உமது திருவடிக் கீழே இருக்கும்படியான வரத்தை அருளும்படி கேட்டார். சிவபெருமான் திருஆலங்காடு வரும்படி பணித்தார். திருஆலங்காட்டில் அண்டமெல்லாம் நிறைந்த நிலையில் நிமிர்ந்து ஆடுகின்ற திருக்கோலத்தை காரைக்கால் அம்மையாருக்கு காட்டி அருளினார். அதுபொழுது காரைக்கால் அம்மையார் 'கொங்கை திரங்கி' எட்டி இலவம் மீசை எனத்தொடங்கும் திருப்பதிகங்களை பாடி அருளினார். ஆறுசேர் சடையினை உடைய சிவபெருமான் அம்மையே என மொழிந்து அருள அவரது தூக்கிய திருவடி நிழலில் அமர்ந்து என்றும் பாடிக்கொண்டே இருக்கும் பேற்றினை காரைக்கால் அம்மையாருக்கு அருளினார் சிவபெருமான்.

Koviloor Digital Library

காரைக்கால் : சிதம்பரம் – சீர்காழி வழியாக இவ்வூரை அடையலாம். அருள்மிகு கயிலாசநாதர் கோயிலில் சுவாமி மிகப்பெரிய பாணலிங்கமாக காட்சி தருகிறார். காரைக்கால் அம்மையாருக்கு கயிலாசநாதர் கோயில் எதிரே திருமடம் எழுப்பியுள்ளனர்.

கருத்து : புனிதவதியாரின் தெய்வீகத் தன்மையை அறிந்ததும், அம்மையாரை விட்டு நீங்கி காமத்தின் வயப்பட்டு மறுமணம் செய்து கொண்ட பரமதத்தனின் செயலே, புனிதவதியார்க்கு பேய் உருவாக மாற வேண்டும் என்ற எண்ணத்தை வித்திட்டது. எனவே புனிதவதியாரின் வரலாறை படிப்பவர் அனைவருக்கும் பரமதத்தன் மீது கோபம் வரத்தான் செய்யும். இப்போது பரமதத்தனை ஒரு உயிராக எடுத்துக் கொள்வோம். இறைவன் உயிர்க்கு உயிராய் இருப்பது போல பரமதத்தனை முத்திக்கு கொண்டு செல்ல புனிதவதியார் வடிவில் இறைவன் வந்தார்.

ஆனால் பரமதத்தன் உலக ஆசையினால் புனிதவதியாரை விட்டு பிரிந்தார். நம் அனைவரையும் இறைவன் துக்கமில்லாத, நிலையான பேரின்ப வாழ்வான முக்தியை நல்கவே பல அருளாளர்கள் வழி உயிர்க்கு உயிராய் இருந்து நம்மை செம்மைபடுத்துகிறார். ஆனால் நாமோ நிலையில்லாத வாழ்க்கையை நிலையாக கருதி பணம் சம்பாதிப்பதே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு என்றும் நிலையான இறைவனின் திருவடியை சேர முயற்சி செய்யாமல் வாழ்ந்து வருகிறோம். இப்போது சொல்லுங்கள் யார் பரமதத்தன்? நாம் தான் அந்த பரமதத்தன்.

காரைக்கால் அம்மையார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

24. அப்பூதி அடிகள் வரலாறு

திங்களூரில் வேதியர் மரபில் அவதரித்து நற்குணங்கள் கொண்டு வாழ்ந்தவர் அப்பூதியடிகள். அவர் திருநாவுக்கரசு நாயனாரை நேரில் பார்க்கும் முன்பே அவரின் திருத்தொண்டை அறிந்து அவர் திருவடியில் மிகுந்த அன்பு கொண்டு வாழ்ந்து வந்தார். அதனால் தனது ஊரில் அவர் செய்யும் அறங்களான மடங்கள், சாலைகள், குளங்கள், தண்ணீர் பந்தல்கள் உள்ளிட்ட அனைத்தும் திருநாவுக்கரசர் பெயரிலேயே செய்து வந்தார். மற்றும் தனது இல்லத்திலுள்ளஅளவை பாத்திரங்கள்,பசுக்கூட்டங்கள், தனது குழந்தைகளுக்கும் திருநாவுக்கரசர் என்றே பெயரிட்டு அழைத்து வந்தார்.

திருநாவுக்கரசர் திருத்தொண்டு செய்து திருத்தல யாத்திரையாக வரும்போது திருப்பழனம் வழியாக திங்களூர் வரும்போது அப்பூதியடிகள் செய்த அறச்செயல்கள் அனைத்திலும் திருநாவுக்கரசர் என்று எழுதியிருப்பதை கண்டார். அவ்வூரில் உள்ள அன்பர்களிடம் இத்திருத்தொண்டு செய்யும் அடியவர் யார்? என கேட்க அவர்கள் அப்பூதியடிகள் இல்லத்தின் முன் சேர்த்தனர். அப்பூதியடிகள் இல்லத்திலிருந்து வெளியே வந்து திருநாவுக்கரசரை வணங்கி தங்களின் வருகை பெறும் பேறு என்று கூறி வரவேற்று இல்லத்திற்கு அழைத்தார். திருநாவுக்கரசப்பெருமான் அப்பூதி அடிகளிடம் உன்னுடைய தொண்டை அறிந்து உன்னைக்

Koviloor Digital Library

காண வந்தேன் என்று கூறிய பின் ஆறுசேர் செஞ்சடை நாதனின் அன்பினால் நீ செய்த தண்ணீர் பந்தலில் உன்னுடைய பெயர் எழுதாமல் வேறொருவர் பெயர் எழுதி வைத்திருப்பதன் காரணம் என்ன எனக் கேட்டார். உடனே அப்பூதி அடிகள் கோபம் கொண்டு கல்லில் பூட்டி கடலில் பாய்ச்சிய சமணர்களை வென்று கரையேறியவரை அறியாத உமக்கு இந்த மங்கள வேடம் எதற்கு? நீர் எங்குள்ளீர்? நீர் யார் சொல்லும் என்று கேட்டார். அதனை கேட்ட திருநாவுக்கரசர் சைவ குலத்தில் பிறந்தும் சிவபெருமானின் பெருமையை அறியாது பிற சமயத்தை சார்ந்து இருந்த என்னை, சூலைநோய் கொடுத்து பின் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட சிறியேனாகிய அடியேன் தான் அந்த திருநாவுக்கரசு என மொழிந்தார்.

அதனை கேட்ட அப்பூதிஅடிகள் கைகள் கூப்பியவாரே கண்ணீர் சொரிந்து, திருநாவுக்கரச பெருமானின் திருவடியில் விழுந்து வணங்கினார். திருப்பாதத்தை நீராட்டி இருக்கையில் அமரச் செய்து திருநீறு பெற்று திருஅமுது செய்ய அழைத்தார். தனது மனைவியாரோடு அனைத்து காய்கறியுடன் அருஞ்சுவை உணவு தயாரித்த பின் தனது மகனான மூத்த திருநாவுக்கரசை அழைத்து அமுது செய்விக்க குருத்து வாழை இலை கொண்டுவரும்படி கூறினார்.

அம்மகனும் மிக மகிழ்ந்து பெரிய வாழை மரத்தில் ஏறி குருத்து இலை அரியும் போது பாம்பு ஒன்று கடித்து கையிலே சுற்றி கடித்தது. உடனே சற்றும் தாமதியாது இலை எடுத்துக் கொண்ட பின் கையில் உள்ள பாம்பினை உதறி தள்ளிவிட்டு விஷம் ஏறும் முன், அடியார் அமுது செய்ய கொடுப்பேன் என்ற

Koviloor Digital Library

உறுதியுடன் யாரிடம் சொல்லாமல் ஓடி வரும் போதே விஷம் உடல் முழுவதும் பரவிய நிலையில் இல்லத்தின் வாசலில் நின்று கொண்டிருந்த தனது தாயாரிடம் அந்த வாழை இலையை கொடுத்து விட்டு இறந்து விழுந்தான். மகனை பாம்பு தீண்டியதை உடலின் மாற்றத்தால் அறிந்ததும், திருநாவுக்கரசப்பெருமான் திருஅமுது செய்ய தடையாகுமே எனக்கருதி, எவரிடமும் சொல்லாமல் ஒரு பாயில் வைத்து சுருட்டி வீட்டின் பின்புறம் மறைத்து வைத்தனர். இருவருமாக திருநாவுக்கரசப்பெருமானை திருஅமுது செய்ய அழைத்தனர். திருநாவுக்கரசப்பெருமானும் முதலில் அனைவருக்கும் திருநீறு அளிக்கும்போது மூத்த திருநாவுக்கரசரை எங்கே என கேட்டார்.

அதற்கு, "இப்போது அவன் இங்கு உதவான்" என்று பதில் கூறியதை கேட்ட திருநாவுக்கரசர் நடந்தவற்றை திருவருளால் உணர்ந்து உண்மையை கூறுங்கள் என கேட்டவுடன், இருவரும் பணிவுடன் வணங்கி தன் மகனுக்கு நடந்தவைகளை கூறினார்கள். நாவுக்கரசர் 'இப்படி யார் செய்வார்' என்று கூறி இறந்த மகனின் உடலை நோக்கி சிவபெருமான் அருளும் வண்ணம் '**ஒன்றுகொலாம்**' என்ற '**விடம் நீக்கும்**' திருப்பதிகம் பாடினார்.

அம்மகனும் உறக்கத்திலிருந்து எழுந்தார் போல எழுந்து திருநாவுக்கரசப்பெருமானை வணங்க கண்டு, திருநீறு அணிவித்தார். அப்பூதிஅடிகள் தன் மகனை நோக்கி திருஅமுது செய்ய இடையூறு செய்தான் என கடிந்தார். பின் (பசு) கோமிய நீரினால் இல்லத்தில் தெளித்து, தீபம் ஏற்றி மகன் கொண்டு வந்த நீண்ட வாழை இலையை கழுவி அப்பர் பெருமான் முன்பு வாழை இலையின் வெட்டிய பகுதியை

Koviloor Digital Library

வலப்புறமாக இட்டு, தூய்மையான நீரினை பருகும்படி கொடுத்து உபசரிக்க திருநாவுக்கரசப் பெருமான் தன்னுடன் சேர்ந்து அமுது செய்யும்படி பிள்ளைகளையும், அப்பூதி அடிகளையும் கூற, அடிகளார் மனைவியார் பரிமாற அனைவரும் திருஅமுது செய்தனர். பின் அனைவரும் அருகிலுள்ள திருப்பழனம் சிவாலயம் சென்று பெருமானை வழிபட்டு திருநாவுக்கரசர் திருப்பதிகம் பாடினார். அப்பதிகத்தில் அப்பூதி அடிகளை சிறப்பித்து குறிப்பிடுகின்றார். இவ்வாறாக திருநாவுக்கரசப்பெருமானின் திருவடிகளை தலைமேற்கொண்டு, அன்போடு என்றும் வணங்கிக் கொண்டே திருத்தில்லை **அம்பலத்து** ஆடும் கூத்தப்பெருமானின் திருவடியில் சேர்ந்தார் அப்பூதி அடிகளார்.

திங்களூர் : திருவையாறு அருகில் திருப்பழனம் சென்று இவ்வூரை அடையலாம். அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் உள்ளது. அப்பூதி அடிகள் அமைத்திருந்த திருநாவுக்கரசர் தண்ணீர் பந்தல் இவ்வூரில் இன்றும் உள்ளது.

கருத்து : ஒவ்வொரு உயிரின் தகுதியை மேம்படுத்தவே அவ்வுயிர்க்கு இறைவன் குருவருளாக வருகிறார். நிலத்தை சிறப்பாக பக்குவப்படுத்தினால் விதைக்கும் விதை நன்கு முளைக்கும். அதுபோல நம்முடைய உள்ளத்தின் தூய்மையே சிறந்த விளை நிலமாகும். அதில் இறைவன் இடும் விதையே குருவருள். உள்ளத்தை இறைவன்பால் செலுத்தி வந்தால் குருவருளே திருவருளாக மாறி நம்மை சுவாமி திருவடியில் சேர்க்கும். அப்பூதி அடிகளின், நற்குணமும், குருவருளை போற்றும் அத்தன்மையே முக்திக்கு வழி காட்டியது.

அப்பூதி அடிகள் நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

25. திருநீலநக்க நாயனார் வரலாறு

காவிரி சூழ்ந்த திருநாட்டில் சாத்தமங்கை என்ற ஊரில் அந்தணர் குலத்தில் "நீலநக்கனார்" என்பவர் சிவபெருமான் மீது மிகுந்த அன்பு கொண்டவராக வாழ்ந்து வந்தார். தினமும் இல்லத்தில் முறைப்படி சிவபூசை செய்தும், சிவனடியாரை கண்டால் அவர்களின் பாதம் வணங்கி வந்தார். தினமும் அவ்வூரில் உள்ள 'அயவந்தி' என்னும் திருக்கோவில் சென்று இறைவர்க்கு அபிஷேகமும், அர்ச்சனையும் செய்து வந்தார். இவ்வாறு தொடர்ந்து சிவபூசை செய்து வரும்போது, ஒருநாள் திருவாதிரை நட்சத்திரத்தன்று தனது மனைவியாரை அழைத்துக் கொண்டு திருக்கோவிலுக்கு சென்றார்.

பிரம்மன் (அயன்) வழிபட்ட அத்திருத்தலத்து இறைவனை இருவரும் வலம் வந்து சிவபூசையினை திருநீலநக்கர் செய்யும்போது அவரது மனைவியார் பூசைக்கான பொருட்களை ஒவ்வொன்றாக எடுத்துக் கொடுத்தார். சிவபூசை செய்த பின் திருநீலநக்கர் வலம் வந்து இறைவன் முன்பு திருஐந்தெழுத்து (சிவாயநம) ஓதி துதிக்கும் வேளையில், சிலந்தி ஒன்று சுவாமியின் திருமேனியின் மீது விழுந்தது. அதனை கண்ட அவரது மனைவியார் விரைந்து சென்று தனது வாயால் வேகமாக ஊதி அச்சிலந்தியை விரட்டினார். இச் செயலை கண்டு வருந்திய நீலநக்கர் தனது கண்களை கைகளால் மூடிக்கொண்டு, என்ன செய்தாய் நீ.

Koviloor Digital Library

சிவபெருமான் மீது கொண்ட அன்பினால், வேறு வழியில் சிலந்தியை விரட்டாது வாயில் ஊதியதால் இப்போதே உன்னை துறப்பேன் என்று கூறினார். பின்பு அநுசிதம் நீங்கும்படியான சடங்குகளை செய்தபின் தனது இல்லம் சென்றார். சூரியனும் மறைந்தது. அவரது துணைவியார் தனது கணவனின் சொல்படி இல்லம் செல்லாது கோயிலிலே இருந்தார்.

திருநீலநக்கர் தனது இல்லம் சென்று தனது மனைவியை துறந்து விட்டதை நினைக்காமல் துயில் கொண்டார். அப்போது அவரது கனவில், கங்கை நீர் பெருகும் சடையோடு சிவபெருமான் தனது திருமேனியை காட்டி உனது மனைவி வாயால் ஊதிய பக்கம் நன்றாகவுள்ளது என்பதையும் திருமேனியின் மற்ற பாகங்களில் சிலந்தியால் கொப்பளம் ஏற்பட்டிருப்பதைக் காண்பாயாக எனக் காட்டினார். கனவு நேரில் நடந்தது போலவே கண்டு விழித்த திருநீலநக்கர் அச்சத்துடன் தலைமேல் கை கூப்பி வணங்கி ஆடிப்பாடி துதித்தார். சிவபெருமானின் பெருங்கருணையை போற்றி மகிழ்ந்தார்.

கோவில் நடைசாற்றிய பிறகு விடிவதற்கு முன்பு கோவிலை திறப்பது சாத்திரப்படி தவறு என்பதால் விடியும் வரை காத்திருந்து விடிந்தவுடன் திருக் கோயிலுக்கு சென்று தனது மனைவியாரை அழைத்துக் கொண்டு இல்லம் சென்றார் பெருமகிழ்ச்சியுடன் சிவபூசைகளையும், சிவனடியார்களுக்கு வேண்டுவன கொடுத்தும் வரும் நாளில், சீர்காழி திருஞானசம்பந்த பெருமானின் பெருமையை இவ்வுலகம் போற்றுவதை கேள்வியுற்ற திருநீலநக்கர் அவரை காண மிகவும் ஆவலாக இருந்தார்.

Koviloor Digital Library

அந்நாளில் திருஞானசம்பந்தப்பெருமான் தொண்டர் கூட்டத்துடன் சாத்தமங்கையை நெருங்கி வருவதை கேட்ட திருநீலநக்கர் மிக மகிழ்ந்து தோரணங்களும், பந்தல்களும் அமைத்து வருகை தரும் திருக்கூட்டத்தை கண்டு ஆடியும், பாடியும் வரவேற்று தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்று திருஅமுது செய்வித்தார். பின் அனைவருக்கும் வேண்டுவன செய்து, திருஞானசம்பந்தரின் சொல்படி, திருநீலகண்ட பாணார்க்கும் அவரது மனைவியார்க்கும் தனி அறை கொடுக்க அவர்களும் பள்ளிகொண்டனர். அந்தண குலத்தில் தோன்றிய அருளாளர்களுக்கு தீண்டாமை என்ற உணர்வு இல்லை என்பதை இந்நிகழ்வு வெளிப்படுத்துகிறது.

மறுநாள் அனைவரும் திருச்சாத்தமங்கை அயவந்தீஸ்வரரை வணங்கினார்கள். அதுபோது திருஞான சம்பந்தப் பெருமான் பாடிய பதிகத்தில் திருநீலநக்கரை சிறப்பித்து பாடினார். பின் அனைவரும் நீலநக்கரிடம் விடைபெற்றுச் செல்ல, திருஞானசம்பந்தர் செல்லும் திருக்கோயிலுக்கு அவருடன் சென்று வணங்கி, மீண்டும் தனது ஊருக்கு திரும்பி வந்து, தனது தொண்டை தொடர்ந்தார். பின்னாளில் திருஞானசம்பந்தப்பெருமானின் திருக்கல்யாணத்திற்கு சென்று பேரொளியில் கலந்து சிவபெருமான் திருவடியை அடைந்தார்.

திருச்சாத்தமங்கை: தற்போது சீயாத்தமங்கை என அழைக்கப்படுகிறது. மயிலாடுதுறை – சன்னாநல்லூர் – திருப்புகலூர் – திருமருகல் அடுத்துள்ள ஊர். திருஞானசம்பந்தப்பெருமான் பாடியத்திருத்தலம்.

Koviloor Digital Library

கருத்து : சிவபூசை செய்யும் உரிமை அனைத்து உயிர்களுக்கும் உண்டு. ஆண்,பெண் குழந்தைகள் பெரியவர்கள், அலி ஆகிய அனைவரும் சிவபூசை செய்யலாம். பூசையில்லாமல் இருக்கும் சிவலிங்கத் திருமேனிக்கு சிவ பூசை செய்யலாம். இல்லத்தில் சிவலிங்கத் திருமேனி வைத்து வழிபடுவது சிவனடியார்களின் முதற் கடமையாகும். பெண்கள் பூசை செய்யலாம் என்பதை சிவபெருமான் இவ்வரலாற்றின் மூலம் அறிவுறுத்துகிறார். திருநீலநக்க நாயனாரின் மனைவி அன்பினால் செய்த அநுசிதத்தை (தூய்மையற்ற செயல்) ஏற்றுக்கொண்ட சிவபெருமான் அப்பெண்குலம் அன்பினால் செய்யும் சிவபூசையை கட்டாயம் ஏற்பார்.

தயவுசெய்து பெண்களை சிவபூசை செய்ய அனுமதியுங்கள். சீதை சிவலிங்க பிரதிஷ்டை செய்ததையும், ஸ்ரீ சைலம், அக்கம்மா வரலாற்றையும், ஔவையார், இசைஞானியார், காரைக்கால் அம்மையார், மங்கையர்கரசியார், கார்க்கி, மைத்ரேகி பெரியபுராணத்தில் பெண்ணின் பெருமை நிறைந்துள்ளதை எண்ணுக. மேலும் நீலநக்கர் (அந்தணர்) இல்லத்தில் அக்குலம் அல்லாத நீலகண்ட பாணருக்கும் அவரது மனைவிக்கும் தனி அறை கொடுத்தது மிகச் சிறந்த சமுதாய சீர்திருத்தமாகும்.

குறிப்பு : இரவு திருக்கோயிலை நடைசாற்றியபிறகு விடியும் வரை திறக்காமல் இருப்பதன் காரணம் தேவர்களும், முனிவர்களும், சித்தர்களும் சூட்சும உடலுடன் சுவாமியை பூசை செய்ய வருவார்கள். அவர்களின் அமைதியை காக்கவும், சிறு உயிர்கள் தங்களின் இரையை தேடும் நேரம் அது சமயம் அவைகளை இடையூறு செய்யாது இருக்கவும் இரவு நடைசாற்றப்படுகிறது.

திருநீலநக்க நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

26. நமிநந்தியடிகள் நாயனார் வரலாறு

சோழவளத் திருநாட்டில் ஏமப்பேறூர் என்ற ஊரில் அந்தண மரபில் தோன்றி சைவ நெறியை தனது வாழ்வின் நெறியாக கொண்டிருந்த நமிநந்தி அடிகள் என்ற சிவனடியார் வாழ்ந்து வந்தார். அவர் இரவும் பகலும் சிவபெருமானை நினைந்து இன்புறுவார். தினமும் திருவாரூர் சென்று புற்றிடங்கொண்ட நாதரை வணங்கி வரும் போது ஒருநாள் இறைவன் திருகுறிப்பால் தன் மனத்திடையே திருக்கோயிலில் அதிக எண்ணிக்கையில் விளக்கேற்ற வேண்டும் என்ற உணர்வு மேம்பட்டது. அவ்வேளை மாலை நேரம் என்பதால் தனது ஊருக்கு சென்று தீபநெய்யை எடுத்துக் கொண்டு திரும்பி திருக்கோயிலுக்கு வருவதற்கு நேரம் இல்லாத காரணத்தால் அக்கோயிலின் அருகில் இருந்த ஒரு வீட்டிற்குள் சென்று தீபத்திற்கு நெய் தருமாறு வேண்டினார். அப்போது அவ்வீட்டில் வாழ்ந்த சமணர்கள், கையில் நெருப்பு வைத்துக் கொண்டிருக்கும் சிவபெருமானுக்கு எதற்கு தீபம் ஏற்ற வேண்டும் எனக் கேட்டு மேலும் தீபநெய் தராமல், இத்திருக்குளத்தின் நீரை விளக்கில் ஊற்றி எரிக்கும்படி சொல்லி கேலி செய்தனர்.

அதனை கேட்டு மிகவும் வருந்திய நமிநந்தியடிகள் திருக்கோயில் முன்பு வந்து சுவாமியை நினைந்து பணிந்து விழுந்தார். அப்போது விண்ணில் அசரீரியாக 'இத்

Koviloor Digital Library

திருக்குளத்தின் நீரை ஊற்றி விளக்கேற்று" என சிவபெருமான் உரைத்தார். அவ்வுரை கேட்டு மகிழ்ந்து சிவாயநம என்று கூறியபடியே திருக்குளத்து (சங்கு தீர்த்தம்) நீரை முகந்து திருவாரூர் அரநெறி அப்பர் திருக்கோயிலின் உள்சென்று விளக்கில் இருந்த திரி மீது படும்படி அந்த நீரை ஊற்றி விளக்கேற்றினார்.

அச்சமணர்கள் வியக்கவும், அனைவரும் காண மிக ஆனந்தத்துடன் விளக்குகளில் நீர் குறைய நீரை மேலும் ஊற்றி அத்தீப சுடரினை கண்டு மகிழ்ந்தார். பின் இல்லம் சென்று பூசை முடித்து துயில் கொண்டார். அன்றிலிருந்து தினமும் மாலையில் ஆரூர் அரநெறி அப்பர் திருக்கோயில் தீபம் போடும் திருப்பணியை தொடர்ந்து செய்து வந்தார்.

அந்நாளில் தண்டி அடிகள் வழி அறிந்து, (இந்நூலில் தண்டிஅடிகள் வரலாற்றை படிக்கவும்) சமணர்களின் திருக்கோயில் குளத்தின் ஆக்கிரமிப்புகளை அகற்றிய சோழ மன்னவன், நமிநந்தி அடிகளை அழைத்து, திருவாரூர் திருக்கோயிலின் முழு நிர்வாகத்தையும் ஒப்படைத்தார். நமிநந்தி அடிகள் திருவாரூரில், சுவாமி நடத்திய திருவிளையாட்டை நினைவு கூறும் திருவிழாக்களையும், பங்குனி உத்திரத் திருவிழாவையும் சிறப்பாக நடத்தி மகிழ்ந்து வரும் நாளில்,

திருவாரூர் பெருமான் திருவிழா நாளில் அவ்வூர் அருகிலுள்ள திருமணலி என்ற ஊருக்கு எழுந்தருளியபோது அனைத்து குலமக்களும் ஒரு சேர திரண்டு வந்து வழிபட்டதை கண்டு மிக மகிழ்ந்தார். பின் சுவாமியை

Koviloor Digital Library

திருக்கோயிலுக்கு சென்று சேர்த்து விட்டு தனது ஊரை அடைந்து வீட்டிற்குள் செல்லாது தன் மனைவியை அழைத்து திருவிழாவில் அனைத்து மக்களும் வந்ததால் நான் குளித்து விட்டு, சிவபூசை செய்ய வீட்டின் உள்ளே வருகிறேன். எனவே எனக்கு குளிர்ந்த நீரை கொண்டு வா, எனப் பணித்தார்.

அதுபோது திருவருளின் அருளாலோ அல்லது உடலின் அயர்வாலோ, நமிநந்தி அடிகளுக்கு உறக்கம் வர சுவாமியின் திருவடியினை நினைந்தவாறே துயிலும் போது சிவபெருமான் கனவில் தோன்றி ஆரூரில் பிறந்தார் எல்லாம் நம் சிவகணங்கள் எனவே இரவு (யாம) பூசனையை விரைந்து செய்யும்படி உணர்த்தினார். இரவு 12 மணிக்கு மேல் செய்யும் பூசை அன்றைய நாளுக்கான பூசை ஆகாது. எனவே விழித்து நீராடாது விரைந்து இல்லத்துள் சென்று இரவு பூசையை முடித்த பின் தனது மனைவியார்க்கு சுவாமி உணர்த்தியதை நடந்தபடி கூறி மகிழ்ந்தார்.

மறுநாள் திருவாரூர் செல்லும்போது இங்கு பிறந்து வாழ்வார்கள் அனைவருமே சிவகணங்களாக தோற்றம் தருவதை கண்டு வீழ்ந்து வணங்கி மகிழ்ந்தார். சிறிது நேரத்தில் தான் கண்ட சிவ வடிவம் கொண்ட அனைவரும் பழைய வடிவத்திற்கு வர கண்டு, திருவாரூர் தியாகேசப் பெருமானை வணங்கி அடியவன் செய்த பெரும் பிழையை பொறுத்து அருள வேண்டும் எனப் பணிந்தார். பின் திருவாரூரிலேயே தனது இல்லத்தை குடிப்பெயர்ந்து அமைத்துக் கொண்டு நெடுநாள் திருத்தொண்டும் சிவனடியார்களுக்கு வேண்டுவன செய்தும், திருவாரூர்

Koviloor Digital Library

மன்னரான புற்றிடங்கொண்ட நாதன் பாத நிழலில் மிகு வளர் பொற்சோதியில் சேர்ந்தார்.

ஏமப்பேறூர்: தற்போதைய பெயர் ‘நெய்பேறு’ திருவாரூரிலிருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் வழியில் இவ்வூர் உள்ளது.

கருத்து : சிவபெருமான், எல்லா உயிர்களுக்கும் பல வழிகளில் தோன்றாத் துணையாக இருந்து பல உண்மைகளை உணர்த்தி வருகிறார். அவ்வழியில் நடக்கும் உயிர்கள் மேம்படுகின்றன. நமிநந்தி அடிகள் நீரை ஊற்றி விளக்கிட்டது அவர் இறைவன் மீது கொண்ட மாறாத நம்பிக்கையையே வெளிப்படுத்துகிறது. திருவாரூர் பிறந்த அனைத்து குல மக்களையும் சிவசொரூபமாக கண்டதும் அவர் சுவாமி வாக்கின்மீது கொண்ட நம்பிக்கையே ஆகும்.

“நம்பும் அவர்க்கு சிவசாமி பெருஞ்சாமி”

குறிப்பு : திருநாவுக்கரசர் தனது திருப்பதிகத்தில் தொண்டர்க்கு ஆணி என்று நமிநந்தி அடிகளை புகழ்ந்து பாடியுள்ளார். ஆணி – தங்கத்தின் தரத்தை உரசிப் பார்க்கும் கோல்.

நமிநந்தியடிகள் நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

நாம் ஒவ்வொருவரும் தம்மையே சிறந்த அடியவராக எண்ணாமல், மற்ற அடியவர்களின் சிறப்பினை அறியும் போது தான் நம்முடைய குறைகள் நமக்கு தெரியும்.

Koviloor Digital Library

27. திருஞானசம்பந்தப்பெருமான் வரலாறு

பிறவிப் பெருங்கடலில் மூழ்காது (படகு) தோணி கொண்டு அதில் ஏற்றி நம்மை காக்கும் திருத்தோணியப்பராக அமர்ந்தருளும் சீர்காழி என்ற பதியில் அந்தணர்குடியில் கவுணியர் மரபில் சிவபாத இருதயர், பகவதியார் என்ற இத்தம்பதியர்க்கு சிவநெறி தழைத்து ஓங்க பிள்ளையார் என்ற திருநாமத்துடன் திருஅவதாரம் செய்தார். குழந்தை பருவத்திலே முன் பிறவியின் பயனாக இறைவனை நினைத்து பிரிந்த உணர்வோடு அழுவார். மூன்று வயது நடக்கும் போது ஒருநாள் அவரது தந்தையார் அதிகாலை நீராடச் செல்லும்போது தானும் உடன் வருவேன் என்று அழுது அவருடன் செல்ல தந்தையாரும் சீர்காழி திருக்கோயிலில் உள்ள பிரம்ம தீர்த்தத்தை அடைந்து கரையில் பிள்ளையாரை விடுத்து திருக்குளத்தினில் மூழ்கி திருஐந்தெழுத்து மந்திரத்தை உரு செய்யும் போது

திருஞானசம்பந்தர் என்ற திருநாமம் பெறுதல் :

பிள்ளையார் தனது தந்தையாரை காணாது திகைத்திருக்கும் போது அண்டத்திற்கு எல்லாம் தந்தையான சிவபெருமானை பிரிந்திருக்கும் இறைவுணர்வு மேலிட சுவாமியை காண வேண்டி அம்மே! அப்பா என்று அழைத்து அழுதார்.

அந்நிலையில் திருத்தோணியப்பர் அருள்நோக்கால் உமையுடன் விடை (காளை) மீது அக்குளத்தின் அருகே எழுந்தருளினார். சிவபெருமானின் திருநோக்குக்கு இணங்க உமை பொற்கிண்ணத்தில் திருமுலைப்பால் கறந்து அதில் சிவஞானத்தை குழைத்து அமைத்த பால் அமுதை பிள்ளையாருக்கு அளித்தார். அப் பால்அடிசிலை உண்ட ஆளுடைய பிள்ளையார் சிவனடியே சிந்திக்கும் திரு பெருகு சிவஞானம் பெற்று திருஞானசம்பந்தர் ஆயினார். சிவ என்பதும் திரு என்பதும் ஒரு பொருளேயாகும். எனவே இனி திருஞானசம்பந்தர் என்று நாமும் அழைப்போம்.

சிவபாதஇருதயர் நியமங்களை முடித்து கரைமீது ஏறிவரும்போது, பால் வழியும் வாயுடன் திருஞானசம்பந்தர் நிற்பதனைக் கண்டு கோபத்துடன் யார் கொடுத்த எச்சிலை உண்டாய் என்று சிறுகோலை எடுத்து அடிப்பதுபோல் காட்டி இதனை கொடுத்தது யார் எனக்கு அவர்களை காட்டு என கடிந்தார்.

எவ்வுயிர்க்கும் தாய் தந்தையாக விளங்கும் சிவபெருமானே எனக்கு வழங்கினார் என ஒரு காலைத் தூக்கியவாறு ஆனந்த மேலீட்டினால் கண்ணீர் துளிகள் சிந்த, உச்சிமீது ஒரு விரலை காட்டியவாறு நிலைத்த நெடு தமிழால் எல்லா உயிரும் இன்பம் அடைய “தோடுடைய செவியன்” எனத் தொடங்கும் திருப்பதிகத்தை பாடினார். சிவமே பரம் என்ற ஒருநிலைய மனம் வைத்ததாலேயே நான் ஞானசம்பந்தனாக ஆனேன் எனப்பொருள்பட திருக்கடைகாப்பு பாடி நிறைவு செய்ய விண்ணில் துந்துபி ஒலி முழங்க வானவர்கள் பூமழை பொழிந்தனர். இத்திருப்

Koviloor Digital Library

பதிகத்தை சிவபாத இருதயர் கேட்டவுடனே பெரு மகிழ்ச்சி பொங்க பிள்ளையாருக்கு கிடைத்த காட்சி தனக்கு கிடைக்கப் பெறாது போயிடினும், திருப்பதிகத்தில் இறைவனின் அடையாளங்களை கேட்டு இன்புற்றார். பின் திருஞானசம்பந்தர் முன் செல்ல தந்தையார் பின் செல்ல திருத்தோணியப்பரை திருக்கோயிலுக்குள் சென்று வழிபட்டனர். தொண்டர்க் கூட்டமும், வேதியர் கூட்டமும் திருஞானசம்பந்தரை போற்றி வணங்கினர்.

பொற்றாளம் பெறுதல்

திருக்கோலக்கா என்ற சிவாலயத்தில் திருஞானசம்பந்தர் கைகளைத்தட்டி மடையில் வாளை என்ற திருப்பதிகத்தை பாடும்போது இறைவன் இச்சிறிய ஞானக்குழந்தையின் கைவலிக்குமே என இறங்கி திருஐந்தெழுத்து (சிவாயநம) பொறிக்கப்பட்ட பொற்றாளத்தை சம்பந்தபெருமான் கையில் கிடைக்கும்படி செய்தார். அன்றிலிருந்து அப் பொற்றாளத்தை இசைத்தபடியே திருப்பதிகம் பாடி வந்தார். இத் திருக் கோயிலில் இருந்து மீண்டும் சீர்காழியை அடைந்தார்.

மறுநாள் தன் தந்தையார் தோள் மீது அமர்ந்தவாறு சம்பந்தப்பெருமான் தனது தாயார் பிறந்த திருநனிப்பள்ளி சென்று இறைவனை வணங்கி திருப்பதிகம் அருளிச் செய்தார். பின் பல சிவாலயங்கள் வழிபட்டு சீர்காழி அடைந்தார்.

திருநீலகண்டப் பெரும்பாணரை சந்தித்தல்

திருநீலகண்டப் பெரும்பாணரும் அவரது மனைவி யாரான மதங்கசூளாமணியாரும் யாழினை எடுத்துக் கொண்டு சீர்காழிக்கு வருகை தந்து சம்பந்தப் பெருமானை

Koviloor Digital Library

கண்டு மகிழ்ந்து வணங்கினர். அனைவரும் திருத்தோணி புரத்துநாதரின் திருக்கோயிலுக்கு சென்றனர். சம்பந்தப் பெருமான் திருநீலகண்டப் பாணரை நோக்கி உமது யாழில் வாசிக்குமாறு பணித்தார்.திருஞானசம்பந்தரின் பதிகத்தினை பண்முறைப்படுத்தி வாசித்த இசையைக் கேட்டு அவ்வூர் வேதியர்கள் அனைவரும் பெரிதும் மகிழ்ந்தனர். அப்போது வானத்தில் கந்தர்வரும் விஞ்சையரும் இருசிறைப் பறவையில் (பறக்கும் தட்டு) இருந்தபடியே இவ்விசையை கேட்டு மகிழ்ந்தனர். பின் இருவரும் சம்பந்தப்பெருமானிடம் தங்களுடனே திருத்தல யாத்திரை செய்து தங்களின் திருப்பதிகத்துடன் இசை அமைத்து என்றும் தங்களை பிரியாத நிலையை வழங்குமாறு வேண்டி நின்றனர். சம்பந்தப்பெருமான் தம்பிரான் அருளால் ஏற்போம் என்று கூற இருவரும் சம்பந்தர் உடனே இருக்கும் பேறு பெற்றனர்.

தில்லை காட்சி

சீர்காழியிலிருந்து புறப்பட்டு தில்லை ஆனந்த கூத்தப் பெருமானை வழிபட தென்திசை திருவாயில் வழியாக அத்திருக்கோவிலுக்கு சென்று இறைவன் திருமுன்பு **"கற்றாங்கு எரி ஓம்பி"** என்ற பதிகத்தை இசைத்தார். பின் பல சிவப்பதிகளை வணங்கி பெண்ணாகடம் சென்று தூங்கானைமாட சுடர் கொழுந்தீஸ்வரரை வணங்கியபின் திருநெல்வாயில் திருஅரத்துறை நோக்கி செல்லும்போது தனது தந்தையார் தோள் மீது அமராமல் வெயிலில் நடந்து சென்ற ஞானசம்பந்தரின் பாதங்கள் நொந்து போக, உடன் சென்ற அடியவர்களும் வெப்பத்தால் மிக வாட,

Koviloor Digital Library

திருநெல்வாயில் திருஅரத்துறை செல்லும் வழியிலுள்ள மாறன்பாடி என்ற ஊரில் உள்ள சிவாலயத்தில் அனைவரும் இரவு தங்கினார்.

முத்து சிவிகை பெறுதல்

அன்றிரவு சிவபெருமான் திருஅரத்துறை அந்தணர்கள் அனைவர்களது கனவிலும் தோன்றி திருஞானசம்பந்தப் பெருமானுக்கு முத்துசிவிகை, (பல்லக்கு) முத்துக்குடை, முத்துச் சின்னங்கள் (ஊதுகோல்கள்) ஆகியவை திருஅரத்துறை திருக்கோயிலிருந்து மாறன்பாடிக்கு எடுத்துச்சென்று சம்பந்தப்பெருமானுக்கு வழங்குமாறு பணித்தார். அன்றிரவே திருஞானசம்பந்தரின் கனவில் இறைவன் தோன்றி உமக்கு வழங்கியுள்ள முத்துசிவிகை, முத்துக்குடை, முத்துச் சின்னங்கள் ஆகியவைகளை ஏற்பாயாக என அருளினார். திருஅரத்துறை அந்தணர்கள் அனைவரும் ஒன்று கூடி இறைவன் கனவில் உணர்த்தியதை அதிசயித்து விடியலில் ஒன்று கூடி திருக்கோயிலை திறக்க முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச் சின்னங்கள் இருப்பது கண்டு மெய்சிலிர்த்து அவை மூன்றையும் மாறன்பாடிக்கு எடுத்துச் சென்று திருஞானசம்பந்தப் பெருமானை முத்துச் சிவிகையில் எழுந்தருளுமாறு விண்ணப்பிக்க சம்பந்தப்பெருமான் அம்முத்துச் சிவிகையை வலம் வந்து, திருநீறு அணிந்து, திருஐந்தெழுத்து ஓதியவாறே உலகெலாம் உய்யும்படி அச்சிவிகையின் மீது ஏறினார். மலர் மழை பொழிந்தது வானம். தொண்டர்கள் மகிழ்ந்து திருஞானசம்பந்தப் பெருமான் எழுந்தருளிய அம்முத்துச் சிவிகையை தூக்கி சென்றனர். திருஅரத்துறை திருக்கோயில் திருவாயிலுக்கு சற்று

Koviloor Digital Library

தொலைவிலேயே முத்து சிவிகையிலிருந்து சம்பந்தர் இறங்கி மகிழ்ச்சி பொங்க திருக்கோயிலை அடைந்து வலம் வந்து வீழ்ந்து வணங்கி உட்சென்று அரத்துறைநாதரை வணங்கினார். பின் பல சிவாலயங்களை வணங்கி குற்றம் அறியாத நாதர் வீற்றிருக்கும் திருக்கருப்பறியலூர் திருப்பதியினை வணங்கி சீர்காழி அடைந்தார்.

நமசிவாய திருப்பதிகத்தை அருளுதல் :

சீர்காழியில் தங்கி திருத்தோணியப்பரை வணங்கி வரும் நிலையில் திருஞானசம்பந்தப்பெருமானுக்கு அவரது தந்தையார் உபநயன சடங்கு (பூணூல் இட்டு மந்திர தீட்சை செய்வது) செய்யும் பொருட்டு வேதியர்களை வரவழைத்து அச்சடங்கினை செய்து முடித்தார். அவ்வேதியர்களுக்கு முன்பு பல வேதங்களை தன் திருவாயால் பொழிந்தார் திருஞானசம்பந்தர், அதனை கேட்டு வியந்த வேதியர்கள் தங்களுக்கு வேதங்களில் உள்ள சந்தேகங்களையெல்லாம் கேட்டுத் தெளிந்தனர். பின்பு திருஞானசம்பந்தப்பெருமான் வேதங்களுக்கு எல்லாம் மூலமாக விளங்குவது திருஐந்தெழுத்தேயாகும் என்று பொருள் விளங்க **"துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்"** எனத் தொடங்கும் திருஐந்தெழுத்து திருப்பதிகத்தை அருளினார்.

முதல் முறையாக திருநாவுக்கரசரை சந்தித்தல் :

சீர்காழியில் சம்பந்தர் இருப்பதை கேள்வியுற்ற திருநாவுக்கரசர் அவரைக்காண சீர்காழிக்கு வருகை தந்தார். திருநாவுக்கரசரின் உழவாரக்கருவியும், திருநீறும் அன்புநீர் பொலிய கண்ணீர் மல்கிய கண்களை கண்ட சம்பந்தர் அவரை வரவேற்று திருத்தோணியப்பரை வணங்கி தனது மாளிகைக்கு அழைத்து சென்று திருஅமுது செய்வித்து

Koviloor Digital Library

மகிழ்ந்தார். பின் திருநாவுக்கரசர் பிற பகுதிகளை வணங்கும் பொருட்டு சம்பந்தரிடம் விடைபெற்று சென்றார்.

சில நாட்கள் கழித்து சீர்காழியிலிருந்து பல சிவப்பதிகளை காணும் ஆவலுடன் முத்து சிவிகையில் புறப்பட்டு திருக்கண்ணார் கோயில் சென்று திருக்கண்ணாயிர நாதரை வணங்கி திருப்புள்ளிருக்குவேளூர் (வைத்தீஸ்வரன் கோயில்) உட்பட பல சிவாலயங்களை வணங்கி திருஐயாறு அடைந்து ஐயாரப்பரை வணங்கி **"புலன் ஐந்தும்"** எனத் தொடங்கும் திருப்பதிகத்தை அருளிச் செய்தார் பின் திருமழபாடி, திருமாந்துறை ஆகிய பதிகளை சென்று வணங்கிய பின் திருப்பாச்சிலாச்சிரமம் என்ற (திருவாசி) சிவாலயத்திற்கு செல்ல விழைந்தார்.

முயலகன் நோயை குணப்படுத்திய நிகழ்ச்சி :

கொல்லி மழவன் என்ற சிற்றரசன் திருபாச்சிலாச்சிரமம் என்ற ஊரில் வாழ்ந்து வந்தான். சிவநெறியில் வாழ்ந்து வந்த அவருக்கு அழகு வாய்ந்த மகள் ஒருத்தி இருந்தாள். அம்மகளுக்கு முயலகன் என்ற கொடியநோய் தாக்கி அசைவற்ற நிலையில் இருப்பதை கண்ட அம்மழவன் தன் மகளை திருப்பாச்சிலாச்சிரமம் சிவாலயத்தின் உள்ளே படுக்கும்படி செய்து இறைவன் கருணையை எதிர் கொண்டிருந்தார். அத்திருக்கோயிலுக்கு திருஞானசம்பந்தர் வருகை தருவதை அறிந்து மிக மகிழ்ந்து தனது திருநகரை அலங்கரித்து முத்து பல்லக்கின் அருகே வந்து திருஞானசம்பந்தரை வீழ்ந்து வணங்கி வரவேற்றார். பின்பு அனைவரும் திருக்கோயிலை அடைந்தனர். அரசரின் மகள்

Koviloor Digital Library

முயலகன் நோயால் துன்பப்படும் நிலையை கண்ட சம்பந்தர் அதுபற்றி மழவன் வழி நடந்தவைகளைஅறிந்து அம்மகளின் முன் சென்று "துணிவளர் திங்கள்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தை அருளிச் செய்தார். இத்திருப்பதிகத்தின் வேண்டுதலை ஏற்று வேண்டுவார்க்கு வேண்டுவதே ஈவானாகிய சிவபெருமான் அப்பெண்ணின் முயலகன் நோயை நீங்கும்படி செய்தார். கொல்லி மழவனும், அவரது மகளும் திருஞானசம்பந்தரின் திருவடியை வணங்கி மகிழ்ந்தனர். சிவபெருமானின் மீது பேரன்பு கொண்ட சம்பந்தர் அவ்வூரிலிருந்து விடைபெற்று திருப்பைஞ்சீலி திருஈங்கோய் மலை, திருச்செங்கோடு, திருநணா, (பவானி) ஆகிய திருத் தலங்களுக்கு சென்று திருச்செங்கோடு எழுந்தருளினார்.

குளிர் சுரத்தை நீக்கி அருளல்:

திருக்கொடி மாடச்செங்குன்றூரில் (திருச்செங்கோடு) மிகுந்த குளிர்காலமாக இருந்ததால் சம்பந்தப் பெருமானின் தொண்டர்களுக்கு குளிர்சுரநோய் ஏற்பட்டது. அதனை நீக்கும் பொருட்டு சந்திரனை சடையில் சூடிய சிவபெருமானை நோக்கி **"அவ்வினைக்கு இவ்வினை"** எனத் தொடங்கும் திருநீலகண்டத் திருப்பதிகத்தை பாடி அருளினார். அவ்வேண்டுதலை ஏற்று இறைவன், தொண்டர்கள் மட்டுமன்றி அவ்வூரில் வாழும் அனைவருக்குமே குளிர்சுரநோய் நீங்கும்படி செய்தருளினார். பின் பல பதிகளை வணங்கி திருச்சிராப்பள்ளி குன்றுடைய தாயுமானவரை வணங்கி, திருநெடுங்களம் சென்று புகழ்பெற்ற இடர்களையும் பதிகமான "மறை உடையாய்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தை இசைத்து பலப் பதிகளை வணங்கி

Koviloor Digital Library

திருவலஞ்சுழியில் "என்ன புண்ணியம்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தை பாடினார்.

சிவபூதங்கள் முத்து பந்தல் பிடித்தல் :

அங்கிருந்து திருப்பழையாரை மேற்றளி நாதரை வணங்கி, திருச்சத்தி முற்றம் பதி வணங்கி பட்டீச்சரம் செல்லும்போது மிகுந்த வெப்ப காலமாக இருந்தமையால் வானில் சிவபூதங்கள் யாரும் அறியாத வகையில் சம்பந்தரின் தலை உச்சி மீது பந்தல் பிடித்து வர சம்பந்தரும் இது ஈசன் திருவருளாகில் இசைகிறேன் என்று சிவபெருமானின் கருணையை நினைந்து மண்மீது வீழ்ந்து வணங்கினார். அச்சமயம் விண்ணவர்கள் பூ மழை பொழிய அம்முத்து பந்தல் மலர் பந்தல் போலவும் சம்பந்தப்பெருமான் இறைவனின் திருவடியில் கீழ் அமர்ந்திருந்தார் போலவும் தொண்டர்களுக்கு காட்சி அளித்தது. பின் பட்டீச்சர பெருமானை போற்றி மகிழ்ந்த சம்பந்தப்பெருமான் பல சிவாலயங்களை வழிபட்டு திருமூலதேவநாயனாரின் திருத்தலமாகிய திருவாவடு துறையை சேர்ந்தார். அவ்வூரில் வாழும் திருத்தொண்டர்கள் எதிர்கொண்டு வணங்க சம்பந்தப்பெருமான் பல்லக்கிலிருந்து இறங்கி எதிர் வணங்கி திருவாவடுதுறை நாதரை வணங்கி மகிழ்ந்தார்.

தந்தையாருக்கு வேள்வி செய்ய பொன் பெறுதல்:

சிவபாத ஹிருதயர் வேள்வி செய்ய பொருள் வேண்டி சம்பந்தப் பெருமானிடம் கேட்டார். சம்பந்தப் பெருமான் திருவாவடுதுறை திருக்கோயில் கோபுரம் முன் சென்று "இடரினும் தளரினும்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தை பாட, சிவனருளால் சிவபூதம் ஒன்று ஆயிரம் பொன் கொண்ட

Koviloor Digital Library

துணிப்பையை (பொற்கிழி) பலி பீடத்தில் வைத்த அச்சிவபூதம் சம்பந்தரிடம் சென்று நித்தனார் (சிவபெருமான்) அருளியது எனக் கூறி சென்றது. சம்பந்தர் அப்பொற்கிழியை எடுத்து தனது தந்தையாரிடம் ஆறு சூழ்வேணிநாதரான சிவபெருமானை முன்வைத்து செய்யும் வேள்வியை செய்து இவ்வையகத்தின் தீது நீங்கும்படி வேள்வி செய்வீர் எனக்கூறி பொற்கிழியை கொடுத்து அனுப்பினார். திருஞானசம்பந்தர் திருக்கோழம்பம், வைகல்மாடக்கோயில், திருநல்லம், திருச்சிறுகுடி, திருஅழுந்தூர், திருதுருத்தி வழியே திருமயிலாடுதுறையில் அருளும் மயூரநாதேசுவரரை வணங்கி தருமபுரம் அடைந்தார்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் தனது யாழில் இசையமைக்க முடியாத வகையில் சம்பந்தப்பெருமான் பாடுதல் :

எப்போதும் சம்பந்தப்பெருமானுடனே சென்று அவர் திருப்பதிகத்தை பாடும்போது தனது யாழில் இசை அமைத்து வரும் திருநீலகண்டபாணர் தனது தாய் ஊரான தருமபுரத்திற்கு செல்ல, அவ்வூர் மக்கள் வரவேற்று, திருநீலகண்டத்து பாணரின் இசையாலேயே சம்பந்தரின் பாடல் அகிலமெல்லாம் பரவியது எனக் கூறக் கேட்ட பாணனார் திகைத்து வருந்தி சம்பந்தப் பெருமானை வணங்கி எனது யாழில் இசை அமைக்க இயலாதபடி திருப்பதிகத்தை பாடும்படி வேண்டினார். **“மாதர் மடப்பிடி”** என்ற பதிகத்தை பாட அப்பதிகத்தை தனது யாழில் இசை அமைக்க முடியாமல் நிற்க சம்பந்தரும் திருக்கடைக்காப்பு செய்து திருப்பதிகத்தை நிறைவு செய்தார். அம்மக்கள் அனைவரும் சம்பந்தரின் பாடலை கேட்டு வியந்தனர். திருநீலகண்டபாணர் சம்பந்தரின்

Koviloor Digital Library

பாடலை என் யாழ்கொண்டு வாசிப்பேன் என்று நினைத்ததே பெருங்குற்றம். அதற்கு காரணமான இந்த யாழினை உடைப்பேன் என உடைக்க முற்பட, சம்பந்தர் அந்த யாழினை வாங்கி நாதன் பெருமையை இந்த கருவியில் அடக்க இயலுமோ எனக்கூறி இயன்ற வரை இந்த யாழில் இசைப்பீராக என யாழினை மீண்டும் கொடுக்க பெரும்பாணரும் அந்த யாழினை பெற்று தன் தலை மேல் வைத்து மகிழ்ந்தார். பின் அவ்வூர் மக்கள் அனைவரும் சம்பந்தப் பெருமானின் திருவடியில் வீழ்ந்து வணங்கினார்கள். அதன்பின் திருநள்ளாறு சென்று தர்ப்பஆரண்ய ஈசுவரரை வணங்கி “போகமார்த்த பூண்முலையாள்” என்ற பச்சைப் பதிகத்தை அருளினார். அப்பதிகத்தினை பாணர் தனது யாழில் தேனிசை அமைவுபட வாசித்தார். தொண்டர்கள் அனைவரும் மிக மகிழ்ச்சி அடைந்தனர். (பச்சைப்பதிகம் விளக்கம் 131–ல் காண்க)

திருநீலநக்க நாயனாருடன் சந்திப்பு :

திருநள்ளாற்றிலிருந்து சம்பந்தப்பெருமான் திருச்சாத்த மங்கை என்ற திருப்பதிக்கு வருகை தருவதை அவ்வூரில் வாழ்ந்த திருநீலநக்கர் (நாயனார்) கேள்வியுற்று மாஇலை, கமுகு, தோரணம் ஆகியவற்றை பாதையில் அமைத்து வரவேற்று திருக்கோயிலுக்கு உடன் சென்று வழிபட்டு தன் வீட்டில் சம்பந்தப்பெருமான் மற்றும் அவருடன் வருகை தந்த அனைவருக்கும் விருந்து அளித்து மகிழ்ந்தார். அனைவரும் அன்றிரவு நீலநக்கர் இல்லத்தில் தங்கினர். மறுநாள் மீண்டும் திருச்சாத்தமங்கை அயவந்தீஸ்வரரை வழிபட்டு இறைவன் முன்பு சம்பந்தப் பெருமான் திருப்பதிகம் பாடி அப்பதிகத்தின் இறுதிப்பாடலில் “நீலநக்கன் நெடுமா நகர் என்று தொண்டர் அறையும் ஊர்” என்று நீலநக்கரின் திருப்பெயர் வைத்து பாடி திருநீலநக்கரை சிறப்பித்தார்.

Koviloor Digital Library

சிறுத்தொண்ட (நாயனார்)ரை சந்தித்தல்

சம்பந்தப் பெருமான் சிறுத்தொண்டர் (நாயனார்) ஊரான திருச்செங்காட்டங்குடி செல்ல விழைந்தார். பாலறாவாயன் (சம்பந்தர்) வருவதை கேட்ட சிறுத்தொண்டர் அவரை வரவேற்று விழுந்து வணங்கி அனைவரும் அவ்வூரில் உள்ள திருகணபதீச்சர பெருமானை வழிபட்டனர். அப்போது இறைவர் திருமுன்பு சம்பந்தர் பாடி அருளிய திருப்பதிகத்தில் பத்தாவது பாடலில் "சிறுத்தொண்டருக்கு அருள்செய்யும்" என்று பாடி சிறுத்தொண்டரை சிறப்பித்தார்.

திருமருகலில் பாம்பு தீண்டி இறந்துபோன வணிகன் மீண்டும் உயிர்பெறச் (தூரியம்) செய்தல்

வைப்பூர் என்ற ஊரில் வணிக மரபில் வாழ்ந்த தாமன் என்பவனுக்கு ஏழுப்பெண்கள் பிறந்தனர். அவர்களுக்கு ஒரு தாய்மாமன் இருந்தான். அவன் வீட்டிலே தங்கி அனைத்து வேலைகளையும் செய்து வந்தான். தாமன் தனது முதல் மகளை உனக்கு தருகிறேன் என்று கூறி ஏமாற்றிவிட்டு வேறொருவருக்கு திருமணம் முடித்து கொடுத்து விட்டார். இதுபோலவே தனது ஆறு பெண்களையும் ஒவ்வொரு முறையும் மாமனுக்கு தருகிறேன் என்று கூறி வேறொருவருக்கு திருமணம் முடித்து கொடுத்து விட்டார். தன் தந்தையாரின் இச்செயலை விரும்பாத ஏழாவது மகள் தன் தாய்மாமனிடம் சென்று என் தந்தை என்னையும் வேறொருவருக்கு திருமணம் செய்து கொடுத்து விடுவார். எனவே நாம் இருவரும் இன்று யாரும் அறியாதவகையில் இவ்வூரிலிருந்து புறப்பட்டு திருமருகல் சென்று திருமடத்தில் தங்கி காலை திருமணம் செய்து கொள்ளலாம் என்று கூறி அன்று இரவே இருவரும் திருமருகலில் உள்ள பொது மடத்தில் தங்கினர்.

Koviloor Digital Library

அப்போது ஒரு பாம்பு அம் மாமனை தீண்ட அவன் உயிர் பிரிந்தது. அப்பெண் என்ன செய்வதென்று அறியாது அம்மாமனின் உடலை தீண்டாமல் அழுது கொண்டே இருந்தார். அதிகாலை திருமருகலில் உள்ள சிவாலயத்தில் அருளும் மாணிக்க வண்ணரின் கழல் வணங்க சென்ற சம்பந்தப் பெருமானுக்கு இப்பெண்ணின் அழும் குரல் கேட்க, அம்மடத்திற்கு எழுந்தருளி அப்பெண்வழி நடந்தையெல்லாம் அறிந்து அம்மாமன் உயிர்பித்து எழ, **"சடையாய் எனுமால்"** எனத் தொடங்கும் பதிகத்தை பாடினார். அப்போது அம்மாமன் விடம் நீங்கப்பெற்று எழுந்தான். தொண்டர்கள் அர அர என கோஷம் எழுப்பினர். சம்பந்தப்பெருமான் அவ் இருவரையும் அழைத்துச் சென்று திருமருகல் பெருமான் முன்னிலையில் திருமணம் செய்து வைத்தார்.

திருப்புகலூரில் முருகநாயனாரை சந்தித்தல் :

திருப்புகலூர் சென்ற சம்பந்தப் பெருமானை அவ்வூரில் வசிக்கும் முருகனார் என்ற அடியவர் வணங்கி வரவேற்று மகிழ்ந்து திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்று புகலூர் புண்ணியரை கண்ணீர்மல்க வணங்கி பின் முருகனாரின் இல்லத்தில் அனைவரும் தங்கினார்கள். அந்நாளில் திருஞானசம்பந்தர் திருப்புகலூர் திருக்கோயிலின் உள்ளே அமையப்பெற்ற மற்றொரு திருக்கோயிலில் எழுந்தருளும் வர்த்தமானீஸ்வரர் கழல் வணங்கி முருக நாயனாரின் திருத் தொண்டினைச் சிறப்பித்து அத்திருக்கோயிலில் திருப் பதிகத்தில் மூன்றாவது பாடலில் "முருகன் செய்கோலம் கண்டு கண்டு கண்குளிர" என முருகநாயனாரை அமைத்து பாடினார்.

Koviloor Digital Library

திருப்புகலூரின் எல்லையில் அப்பர் பெருமானை எதிர்கொண்டு அழைத்தல் :

திருப்புகலூரில் வீற்றிருந்த சம்பந்தப்பெருமானை காண திருநாவுக்கரச பெருமான் திருவாரூரிலிருந்து திருப்புகலூர் வருவதை அறிந்த சம்பந்தர் அவரை எதிர்கொண்டு அழைக்க விரும்பி, திருப்புகலூர் எல்லையில் வந்து அப்பரை வணங்கிய நிலையில் திருவாரூர் திருவாதிரை விழாவினைப்பற்றி கேட்க அப்பர் பெருமான் "முத்து விதான" எனத் தொடங்கும் திருப்பதிகத்தினை பாடி அருளினார். அப்பதிகத்தினை கேட்ட சம்பந்தப்பெருமான் "திருப்புகலூர் எல்லையில் இருந்தவாறே, திருவாரூர் சென்று வணங்கி மீண்டும் திருப்புகலூர் வந்து உம்முடன் மேவுவேன்"யெனக் கூறி பற்பல ஆயிரம் தொண்டர்களோடு "பாடலன் நால்மறையன்" எனத் தொடங்கும் பதிகத்தை பாடி ஆரூர் பெருமானை வணங்கினார். (அப்பதிகத்தில் மூன்றாவது பாடலில் **"உள்ளம் ஓர் இச்சையினால் உகந்து ஏத்தித் தொழுமின் தொண்டீர் மெய்யே கள்ளம் ஒழிந்திடுமின்"** என்ற வரியை மிகவும் கவனிக்க வேண்டும்). அப்பதியிலிருந்து திருவலிவலம் சென்று மனத்துணைநாதரை வணங்கி, திருக்கோளிலி திருப்பதியில் கோள் ஆய நீக்கும் சிவபெருமானை வணங்கி புகழ்பெற்ற திருப்பதிகமான **"நாள் ஆய போகாமே"** எனத் தொடங்கும் திருப்பதிகத்தில் அரன் நாமத்தை கேட்டாலே நமக்கு மட்டுமல்ல நம் பரம்பரைக்கும் கேடுபடாத திறத்தை அருள்பவன் திருக்கோளிலி சிவபெருமானே என்று பாடி மீண்டும் திருவாரூர் சென்று அங்கிருந்து பிரிய மனமில்லாத நிலையில் உலகியலின் நிலையற்றத் தன்மையை விளக்கும்

Koviloor Digital Library

வகையிலும், இவ் உலகியல் அச்சம் தேவையில்லை,ஆரூர் பெருமான் நமக்கு இருக்க பயப்படாதே என்ற பொருள்பட **"பவனமாய் சோடையாய்"** எனத் தொடங்கும் திருப் பதிகத்தை அருளிச் செய்து திருப்புகலூர் வர அப்பர் பெருமானும் முருகனாரும் எதிர்கொண்டு வரவேற்றனர். பின் திருமுருகனார் இல்லத்தில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சிறுத்தொண்டர், திருநீலநக்கர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஆகிய ஆறு நாயன்மார்கள் தங்கிய பெருமை பெற்ற திருப்புகலூரிலிருந்து திருநாவுக்கரசரும், சம்பந்தபெருமானும் திருத்தல யாத்திரை செல்ல புறப்பட, சம்பந்த பெருமான் அப்பர் நடக்கும்போது தான் மட்டும் முத்து பல்லக்கில் வருவது முறை இல்லையென அப்பருடன் நடந்து வந்தார். அதனை கண்ட அப்பர் பெருமான் அகில நாயகன் சிவபெருமான் உமக்கு வழங்கிய முத்துப் பல்லக்கில் ஏறி வருவீராக என வேண்ட, சம்பந்தர் அதனை ஏற்று தொண்டருடன் அப்பர் பெருமானை முன் செல்லுமாறு பணிக்க அப்பர் பெருமானும் அந்நாள் முதல் எப்போதும் முன் செல்ல சம்பந்தப்பெருமான் பின் செல்லும் வகையில் இருபெருமக்களும் இவ்வழக்கத்தை அமைத்துக் கொண்டனர். அவ்வாறு அப்பர் திருஅம்பர் என்னும் பதியை அடைந்தார். அவரை பின் தொடர்ந்து சம்பந்தரும் அப்பதியை அடைந்து திருப்பதிகம்பாடி அருகிலுள்ள திருஅம்பர் பெருந்திருக்கோயில் அடைந்து **"எரிதர அணல்"** எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். அப்பதியிலிருந்து இவ்விரு பெருமக்களும் திருக்கடவூர் வீரட்டம் சென்றனர்.

குங்குலியகலயரை (நாயனார்) சந்தித்தல் :

திருக்கடவூரில் எமனை காலால் காய்ந்த அமிர்தகடேசுவரர் திருக்கோயிலுக்கு திருநாவுக்கரசரும்

Koviloor Digital Library

சம்பந்தப் பெருமானும் சென்று வணங்கி அப்பதியில் **"சடையுடையான்"** எனும் பதிகத்தை பாடினார். அவ்வூரில் வாழ்ந்த குங்குலிய கலயநாயனார் இவ்விரு பெருமக்களையும் வணங்கி வரவேற்று தனது திருமடத்திற்கு (இல்லத்திற்கு) அழைத்துச் சென்று விருந்து அளித்தார். பின் இருவரும் திருஆக்கூர், மீயச்சூர், திருபாம்புரம் பணிந்து திருவீழி மிழலையை அடைந்தனர். அப்பதியில் உள்ள அந்தணர்கள் நிறைகுட தூபதீபம் காட்டி, மலர்களையும் வாசனைமிகு பொடிகளை தூவி வேத ஒலியுடன், முரசு அதிர எதிர் வந்து வரவேற்றார்கள்.

சம்பந்தபெருமான் வீழியழகரை வழிபட்டு "சடையார் புனல்"என்ற திருப்பதிகத்தினை பாடி பேரன்புருகி, சிவபெருமான் திருவடிகளை நினைந்தவாறே திருக்கோயிலில் இருந்து வெளியே வந்து கோபுரத்தின் வடக்கே உள்ள திருமடத்தில் சம்பந்தரும், தெற்கே உள்ள திருமடத்தில் திருநாவுக்கரசரும் (செந்தமிழ்ச் சொல் வேந்தரும்) அமர்ந்தனர்.

திருவீழிமிழலையில் பஞ்சம் நீங்க படிக்காசு பெறுதல்

திருஞானசம்பந்தருக்கும், திருநாவுக்கரசருக்கும் இறைவர் தினமும் ஒரு படிக்காசினை கிழக்கு, மேற்கிலுள்ள படி (பலி) பீடத்தில் கிடைக்கும்படி செய்தார். அப்பொற்காசு மாற்று குறையாமல் திருநாவுக்கரசர்க்கு கிடைத்ததால் மிகச் சரியான நேரங்களில் உணவு வழங்கப்பட்டது. சம்பந்தருக்கு வழங்கிய பொற்காசு மாற்று குறைவாக இருந்தமையால் சற்று நேரம் தாழ்ந்து உணவு வழங்கப்பட்டது. இதன் உண்மையை உணர்ந்த சம்பந்தர் தொண்டின் திறத்தாலே திருநாவுக்கரசர்க்கு தூய்மையுடைய காசு கிடைக்கப்பெற்றதை

Koviloor Digital Library

அறிந்து இறைவனிடம் தன் பொருட்டு வழங்கும் காசின் வாசி (மாற்று) தீர **"வாசி தீரவே காசு நல்குவீர்"** எனத் தொடங்கும் பதிகம் பாட இறைவன் வாசி நீங்கப்பெற்ற பொற்காசினை வழங்கினார்.

திருவீழிமிழலை கோபுரத்தில் இறைவர் காட்சி தருதல்:

இவ்விரு பெருமக்களும் பேணு பெருந்துறை, திலதைபதி ஆகிய சிவாலயங்களுக்கு சென்று வழிபட்டு மீண்டும் திருவீழிமிழலை அடைந்தனர். அந்நாளில் சீர்காழி திருமறையோர்கள் அனைவரும் திருவிழிமிழலை வந்து சம்பந்த பெருமான் திருமடத்திற்கு சென்று அவரின் திருவடிகளை வணங்கி, எங்களுடன் சீர்காழிக்கு எழுந்தருள வேண்டும் என அழைத்தனர். அவர்களை நோக்கி சம்பந்தபெருமான் இன்று இரவு கழித்து நாளை மிழலை இறைவரிடம் அருள் பெற்று உங்களுடன் வருகிறேன் என்று கூறினார். அன்றிரவு இறைவர் சம்பந்தபெருமானுக்கு சீர்காழியில் யாம் இருக்கும் வண்ணம் அப்படியே உமக்கு வீழிமிழலை விமானத்தில் காட்டுகின்றோம் என உணர்த்தினார். சம்பந்த பெருமான் மிக மகிழ்ச்சி அடைந்து திருக்கோயில் சென்று அதிசயித்து உச்சிமேல் கை கூப்பி வணங்க மிழலை திருக்கோபுர விமானத்தில் சீர்காழியில் அமர்ந்துள்ள பெரியபிரான் பெருமாட்டியோடு காட்சி தந்தார். சிவபெருமானின் திருவுள்ளத்தை உணர்ந்த சம்பந்தரும் மறுநாள் சீர்காழி அன்பர்களை தங்கள் ஊருக்கு செல்லுங்கள் என்று கூறினார். அவர்களும் சம்பந்தரை வீழிமிழலையில் விடுத்து சீர்காழி சென்று அடைந்தனர்.

(குறிப்பு : தன் முனைப்பு அற்ற உயிர்களை இறைவன்

Koviloor Digital Library

தானே முன்னின்று வழிநடத்துகின்றான் திருவீழிமிழலையில் இறைவர் படிக்காசு அளித்த விளக்கம் இந்நூலில் திருநாவுக்கரசர் பெருமான் வரலாற்றில் அமைந்துள்ளது).

இப்பெருமக்களும் திருவீழிமிழலையிலிருந்து திருவாஞ்சியம், திருத்தலையாலங்காடு, பெருவேளூர், சாத்தங்குடி, திருக்கர வீரம், திருவிளமர், திருவாரூர், திருக்காறாயில் திருத்தேவூர், திருநெல்லிக்கா, திருக்கைசினம், திருதெங்கூர், திருக் கொள்ளிக்காடு, திருக்கோட்டூர், திருவெண்டுறை, தண்டலைநீர்நெறி, திருக்களர் ஆகிய பதிகளை வணங்கி திருமறைக்காடு அடைந்தனர்.

திருமறைக்காடு திருக்கதவம் திருக்காப்பு செய்தல்

திருமறைக்காடு திருக்கோவிலில் வேதங்களால் அடைக்கப்பட்ட திருக்கதவு திறக்கப்பாடினார் திருநாவுக்கரச பெருமான் பின் இப்பெருமக்க்ளும் திருக்கோயில் உள் சென்று பதிகம் பாடி மகிழ்ந்து கோபுரத்தின் புறத்தே வந்து அத்திருக்கதவை திருக்காப்பு செய்ய (அடைக்க) திருஞான சம்பந்தர் பாடி அருளினார்.

கருத்து : கதவு திறத்தல் என்பது உள்ளத்தை திறத்தலை குறிக்கிறது. நாம் ஒவ்வொருவரும் நம் உள்ளத்தை திறந்து இறைவனை அங்கு எழுந்தருளச் செய்ய வேண்டும். (உயிர்க்கு உயிராய் இறைவன் இருப்பான் என உணர்தல்) புறத்தே இயங்கும் உலக போகங்கள் அவ்வுள்ளத்தை தீண்டாத வகையில் அடைத்து விடுவதையே சம்பந்த பெருமானின் திருக்கதவு அடைத்த நிகழ்வு குறிக்கிறது. மேலும் எண்ணுக).

வாய்மூரில் இறைவன் இவ்விருபெருமக்களுக்கும் காட்சி தந்த நிகழ்ச்சி இந்நூலில் அப்பர் பெருமான் வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

திருமறைக்காட்டில் (வேதாரண்யம்) நவகோள்களின் தீதினை நீக்கும் (கோளறு பதிகம்) திருப்பதிகம் பாடிய அருளிய நிகழ்ச்சி :

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருமறைக் காட்டில் இருந்த இச்செய்தி பாண்டி நாட்டு அரசியான பாண்டிமாதேவியாரின் திருச்செவிக்கு எட்டியவுடன் தன் கணவரும் பாண்டிநாட்டு மன்னவரான நெடுமாறன் சமண மதத்தை தழுவியதால் மக்களும் சைவநெறியில் இல்லாத நிலையில் இருப்பதை கண்டு மனம் வருந்தி, மந்திரியான குலச்சிறையாரை அழைத்து சிறந்த அறிவுடைய ஒருவரை அனுப்பி திருஞானசம்பந்தரின் பாதம் பணிந்து அவரை இத்திருஆலவாய்க்கு (மதுரை) அழைத்து வருமாறு பணித்தார். அதன் வழி சம்பந்தப்பெருமானை அழைக்க தூதுவரும் நாடும், காடும், நதிகளையும் கடந்து திருமறைக்காடு சேர்ந்தார். திருஞானசம்பந்தரின் பாதம் பணிந்து மதுரைக்கு வருகை தரும்படி வேண்டினார். சம்பந்தரும் அதனை ஏற்றார்.

அப்பொழுது அருகில் இருந்த திருநாவுக்கரசர் தனக்கு சமணர்கள் செய்த தீங்கினை கூறியும், தற்போது கோள்கள் நல்ல நிலையில் இல்லை என்று கூறி சம்பந்த பெருமான் மதுரைக்கு செல்வதை தடுத்து மதுரைக்கு நான் போகிறேன் என்று கூற அதற்கு திருஞானசம்பந்தர், நவகோள்களால் வரும் தீங்கு சிவனடியார்களுக்கு வரவே வராது என்று பொருள் பட **"வேயுறு தோளி பங்கன்"** என்ற கோள் ஆசறு பதிகத்தை பாடி திருஆலவாய் (மதுரை) புறப்பட்டார்.

திருநாவுக்கரசப் பெருமான், நீர் நாடான சோழ நாட்டிலேயே தங்கினார். சம்பந்த பெருமான் திருஅகத்தியான்பள்ளி,

Koviloor Digital Library

திருக்கடிகுளம், திருஇடும்பாவனம், திருவுசாத்தானம், திருக்கொடுங்குன்றம் ஆகிய திருப்பதிகளை வணங்கிய பின் திருஆலவாய் எல்லையில் இருந்தபடியே **"மங்கையர்க்கு அரசி"** எனத் தொடங்கும் திருப்பதிகத்தை பாடியருளினார். பின் ஆலவாய் அண்ணலான சொக்கநாத பெருமானை கண்டு வணங்கி "நீலமாமிடற்று" எனத்தொடங்கும் திருப்பதிகத்தை பாடினார். குலச்சிறையாரும், மங்கையர்க்கு அரசியாரும் வரவேற்க, திருஞானசம்பந்தர் பிறசமயங்கள் மேலோங்கி இருக்கும் இவ் ஆலவாயில் சிவநெறியை போற்றி வாழும் உங்களை காணவே வந்தோம் எனக் கூறியதை கேட்ட, மங்கையர்க்கு அரசியார், சம்பந்தரை வணங்கி கண்ணீர் மல்க, பவள வாய் குழறி, நானும் என் கணவரும் செய்த தவம் எதுவோ? எனக் கூறி வரவேற்றார். பின் குலச்சிறையார் காட்டிய திருமடத்தில் திருஞானசம்பந்தப் பெருமானும், தொண்டர்களும் தங்கி குலச்சிறையார் அளித்த விருந்தினை ஏற்றனர்.

இந்நிலையில் சமணர்கள் ஒன்றுகூடி மன்னவனிடம் சென்று தம்மை வாது செய்து வெற்றி கொள்ள திருஞானசம்பந்தன் வந்துள்ளான். அவர்களை மந்திரத்தால் தீ எழுப்பி மாய்க்கலாம் என்று கூறியதை பாண்டிய மன்னவனும் ஏற்று மனக்கவலையுடன் படுக்கைக்கு சென்றான். பாண்டிமாதேவியும் மன்னவனின் கலக்கத்தை கண்டு வாதில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களின் நெறியை பின்பற்றுங்கள் எனக் கூறியதை கேட்ட மன்னவன் மகிழ்ந்தான். அச்சமணர்கள் மந்திரத்தால் எழுப்பிய தீ மூண்டு திருமடத்தை நோக்கி செல்ல அம்மடத்திலுள்ள

Koviloor Digital Library

அடியார்கள் திருப்பதிகத்தை ஓதியபடியே இருந்ததால் அம் மந்திர தீ பயனின்றி திரும்பி சென்றது. அது கண்ட சமணர்கள் அஞ்சி இங்கு நடந்த செயல் நம் மன்னவனுக்கு தெரிந்தால், நாம் தொலைந்தோம் என்று நடுங்கி யாரும் அறியாதபடி திருமடத்திற்கு கையால் தீ வைத்தனர். அதுபோது இறைவன் உணர்த்த சம்பந்த பெருமானிடம் அன்பு கொண்ட ஒருவர் இச்செயலை சம்பந்தரிடம் விரைந்து சென்று கூறினார். உடனே சம்பந்தரும், அடியார் கூட்டமும் திருமடத்திலிருந்து விரைந்து வெளியேறினர். தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்த திருமடத்தை கண்டு சம்பந்தர் தனக்கு தீங்கு செய்தாலும் ஏற்போம் ஆனால் சிவனடியார்களுக்கு செய்த தீங்கை ஏற்பதற்கு இல்லையென மக்களின் தவறு மன்னவனையே சாரும் என்ற அறநெறிப்படி பையவே (மெதுவாக) சென்று இத்தீ பாண்டிய மன்னவனுக்கு ஆகுக. என்று திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பாட அத்தீ பாண்டிய மன்னவனின் உடலில் (சுரம்) வெப்பு நோயாக மாறியது.

மன்னவன் படுத்த படுக்கையில் வெப்பு நோயால் துடிக்க, மருத்துவர்கள் பலர் கூடி மருத்துவம் பார்த்தும் பலன் அளிக்காது சென்றனர். சமணர்கள் தங்களின் பிரம்போடு கூடிய மயில் பீலிகளை கொண்டு மன்னவனின் உடலில் தடவ அவ்வுடலில் இருந்து வந்த வெப்பத்தால் அப்பிரம்பும், மயில் பீலியும் எரிந்து, தீப்பொறி சிதறி விழுந்தது, அனைவரும் அவ்வெப்புநோயின் அதிசயம் கண்டு நடுங்கி நின்றனர். பின் சமணர்கள் தங்களது குண்டிகையை உயர்த்தி கையில் நீர் எடுத்து "காவாய் அருகனே, அருகனே!" என்று ஓதி மன்னரின் மீது தெளிக்க அந்நீர், நெருப்பு மீது தெளித்த நெய் போலாகி வெப்பு நோயை அதிகப்படுத்தியது மன்னன்

Koviloor Digital Library

கோபத்துடன் யாரும் இங்கு நில்லாது செல்லுங்கள் என்று கூறி சோர்ந்தான். அந்நிலையில் குலச்சிறையாரும், மங்கையர்கரசியாரும் மன்னவரை பணிந்து திருஞானசம்பந்தர் மதுரைக்கு வரும்போது சமணர்கள் செய்த தீய செயலே தற்போது தங்களுக்கு வெப்பு நோயாக வந்துள்ளது. இந்நோய் சீர்காழி பிள்ளையார் (திருஞான சம்பந்தர்) அருளாலேயே தீரும் என மொழிந்தனர். அதனை கேட்ட மன்னவனும் யானுற்ற இப்பிணியை தீர்த்து வென்றவர்கள் பக்கம் சேர்வேன் என்று திருஞானசம்பந்தரை அழைக்கும்படி கூறினார். உடனே பாண்டிமாதேவியாரும், குலச்சிறையாரும் திருஞான சம்பந்தரிடம் சென்று கண்ணீர் மல்கி, கைகளை குவித்து நிலமுற விழுந்து வணங்கினர். தீராத தீப்பிணியால் வருத்தமுறும் மன்னவனின் நிலையைக்கூறி சம்பந்த பெருமானை வருகை தந்து மன்னவனின் வெப்புநோய் நீக்கி அருளும்படி வேண்டினர். சம்பந்தரும் அம்மொழியினை கேட்டு "ஒன்றும் நீர் அஞ்ச வேண்டா" சமணர்களை யாவரும் காண, வென்று மீனவனை (பாண்டியனை) திருநீறு அணியும்படி செய்வேன் என்றார்.

சம்பந்தர் சிவிகையில் புறப்பட்டு திருஆலவாய் திருக்கோயிலுனுள் சென்று சொக்கநாதரின் திருஉள்ளத்தில் அனுமதி கேட்கும் வகையில் புகழ்பெற்ற இரு பதிகங்கள் பாடி (காட்டுமாவுரி, வேதவேள்வி) சொக்கநாத பெருமானின் ஆசிபெற்று குலச்சிறையார் முன் செல்ல, சம்பந்தர் பல்லக்கிலும் அதன் பின் மங்கையர்க்கரசியும் பல்லக்கில் வர அரண்மனை சென்று அடைந்தனர்.

குலச்சிறையார் மன்னவனிடம் சம்பந்தர் வருகையை கூற மன்னவரும் தன் தலைக்கு அருகே பொற்பீடம் இடும்படி

Koviloor Digital Library

கூறினார். அவ்வேளையில் சமணர்கள் மன்னவனிடம் சென்று தங்கள் வெப்புநோய் சம்பந்தரால் தீர்ந்தாலும் நம் சமணத்தாரால் தீர்ந்ததாகவே கூறவேண்டும் என்று கூறினர். அது கேட்ட மன்னவன் பொய் பேச மாட்டேன் எவரால் தீர்ந்ததோ அவ்வழி சேர்வேன் என மொழிந்தார்.

சம்பந்த பெருமான் வருவதை கண்டவுடனே வெப்புநோய் சிறிது குறைவுபட உணர்ந்த மன்னவன் அப்பொற் பீடத்தில் அமரும்படி கூறினார். சம்பந்தரிடம் தங்கள் ஊர் யாது? எனக் கேட்க மன்னவனிடம் பன்னிரண்டு பெயர் பெற்ற "பிரமன்ஊர்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தை பாடி அருளினார். அப்பொற் பீடத்தில் அமர்ந்திருந்த சம்பந்தரை கண்டு பொறுக்க முடியாத சமணர்கள் காலையில் உதித்த கதிரவனுக்கு மேகம் சூழ்ந்தார்ப் போல் சூழ்ந்து, இழி சொற்களை பொருளின்றி உரக்க குரைத்தார்கள். அதுகண்ட மங்கையர்க்கரசியார் உள்ளம் நடுங்கி நெடுமாறனிடம் சென்று இப்பிள்ளையார் எளியரான சிறுவர் ஆவர், இவர்கள் அதிகமானவர்கள், எனவே மன்னா! முதலில் உங்கள் நோய் குணமடைந்த பின், அவரவர் தெய்வத் தன்மையை பேசும்படி கூறுங்கள் என வேண்ட, மன்னவனும் என் மேல் உள்ள வெப்பு நோய் நீக்கிய பின் இருவரின் தெய்வத் தன்மையை என்னிடம் சொல்வீர் என்றான்.

மங்கையர்க்கரசியார் அஞ்சியதை கண்ட சம்பந்தர் என்னை பாலகன் என்று நினைத்து அஞ்ச வேண்டாம். நிலையிலா இச்சமணர்களுக்கு எளியவன் அல்லேன் என்ற பொருள்பட **"மானின் நேர்"** என்ற திருப்பதிகத்தை பாடி அருளினார்.

Koviloor Digital Library

சுரவாதம் : மன்னவன் எனது சுரநோயை தீர்த்தவரே வாதில் வென்றவர் என கூறியதை கேட்ட சமணர்கள் நடுங்கி மன்னவனின் உடலில் வலது பாகத்தை சம்பந்தர் தீர்க்கயென கூறி பீலி கொண்டு இடப்பாகத்தை தனது சமண மந்திரத்தை கூறி தடவ வெப்புநோய் மேலும் அதிகரித்தது. மன்னவன் பொறாது சம்பந்தப் பெருமானை நோக்க அவரும் ஆலவாய் அண்ணல் திருநீறே, மந்திரமும் மருந்துமாகி தீர்க்கும்யென **“மந்திரமாவது நீறு”** என்ற திருநீற்று கவச திருப்பதிகம் பாடி திருநீறுகொண்டு திருக்கையால் வலபாகத்தை தடவ வெப்பு நோய் நீங்கி குளிர்ந்தது. இடப்பாகம் வெப்பும், வலப்பாகம் குளிர்ந்தும் இருந்த நிலையில் மன்னவன் நரகம் ஒரு பாகமும், வீடுபேறு ஒரு பாகமும் உள்ளதுபோல உணர்ந்தான். அருகரை (சமணர்) நோக்கி தோற்றீர் என்னை விட்டு நீங்குங்கள் என கூறி தனது இடப்பாகத்தையும் வெப்பு நீக்கி அருள வேண்டும் என வேண்ட சம்பந்தரும் முன்போல திருநீறு கொண்டு தீண்ட இடப்பாகமும் வெப்பு நோய் நீங்கியது. குலச்சிறை மன்னவனும் பாண்டிமாதேவியாரும் சம்பந்தப் பெருமானின் திருவடியில் விழுந்து வணங்கினர்.

சம்பந்த பெருமான் சமணர்களிடம் உங்கள் தெய்வத் தன்மையை விளக்கும்படி கூற சமணரும் அனல்வாதம், செய்யலாம் என்று கூறினர். அதுகேட்ட மன்னவன் சமணரை நோக்கி வெப்புநோயை குணப்படுத்த முடியாத உமக்கு வாது எதற்கென கோபம் கொண்டார். சம்பந்தர் மன்னவரை அமைதிபடுத்த, அச்சொல்லுக்கு எதிர் பேசாது அமைதியுற்றார்.

அனல்வாதம் : மன்னரின் கட்டளையின்படி ராஜ சபைக்கு முன்னே பெரும் தீ வளர்க்கப்பட்டது. முதலில்

Koviloor Digital Library

சம்பந்த பெருமான் தான் முன்பு பாடி எழுதப்பெற்ற திருமுறை ஏட்டினை தலைக்கு மேல் எடுத்து **“எங்கள் நாதனே பரம்பொருள்”** எனத்தொழுது அவ்வேட்டினை காப்பு நீக்கி ஒரு ஏட்டை எடுத்தார். அந்த ஏடு திருநள்ளாறு என்ற சிவாலயத்தில் பாடிய **“போகமார்த்த பூண் முலையாள்”** பதிகம் எழுதப்பட்ட ஏடாகும். அவ்வேட்டினை எடுத்து “தளிரின வளரொளி” எனத் தொடங்கும் பதிகம் பாடியவாரே அனைவரும் காண வெய்ய தீயினில் மகிழ்ந்து இட்டார். அவ்வேடு தீயினில் எரியாது பச்சையாகவே (முன்பு போன்றே) இருந்தது. எனவே இப்பதிகம் பச்சை பதிகம் என வழங்கலாயிற்று.

பின் சமணரும் தம் தெய்வத் தன்மையை எழுதிய ஏட்டினை எடுத்து உய்யுமோ இது? என மனதில் கவலை கொண்டு நடுங்கியவாறே அத்தீயினில் இட்டனர். அவ்வேடு தீயிலிட்ட பஞ்சு போன்று எரிந்து சாம்பலாகியது.

சம்பந்தர் தீயிலிட்ட தனது திருப்பதிக ஏட்டினை தீயிலிருந்து வெளியே எடுத்து அனைவரும் காணுமாறு காட்டி பழையபடி மீண்டும் திருமுறை காப்பில் சொருகினார். இச்செயல் கண்டு அனைவரும் அதிசயிக்க மன்னவன் சமணரைப் பார்த்து உங்கள் ஏட்டினை காட்டுமாறு கேட்க சமணர் தீயினுள் செல்ல இயலாது போகவே மன்னன் தீயினை நீர் கொண்டு அணைக்க உத்திரவிட்டான். சமணரும் தாம் இட்ட ஏடு சாம்பலானது கண்டு வருந்தினர். மன்னவன், சமணர்களிடம், பொய் நெறியினை மெய்யாக காட்டிய நீங்கள் இங்கிருந்து செல்லுங்கள் என்று உரைத்தார். அதனை கேட்ட சமணர்கள் முன்பு இரண்டு முறை தோற்றோம் இன்னும் ஒரு

Koviloor Digital Library

முறை சேர்த்து மூன்று முறை வாது செய்ய அனுமதிக்குமாறும் அதில் நாங்களே வெற்றிக் கொள்வோம் எனக்கூறக்கேட்ட மன்னவர் அதனை மறுத்தார். சம்பந்தப் பெருமான், சமணர்களை பார்த்து யாது செய்வது எனக் கேட்டார். சமணர்களும், அவரவர் தங்கள் தெய்வ நெறியினை ஏட்டில் எழுதி வைகை ஆற்றிலிட எந்த ஏடு ஆற்றில் எதிர்த்து வருகிறதோ அவ் ஏட்டுக்குரியவரே வென்றவர் என புனல்வாதத்திற்கு அழைத்தனர்.

சம்பந்தப்பெருமானும் அதற்கு இசைந்தார். அப்போது குலச்சிறையார் வந்து இவ்வாதில் தோற்றவர்கள் செய்ய வேண்டியதை முடிவுசெய்த பிறகே இவ்வாது நடைபெறும் எனக் கூறக்கேட்ட அமணர்கள் சைவர்களின் ஆக்கத்தை கண்டுபொறாத நிலையில், இவ்வாதில் தோற்றால் அனைவரும் கழுமரம் ஏறுவோம், (கழுமரம் – நீண்ட கூறிய மரத்தினை கொண்டு உயிரோடு உடலில் குத்தி அம்மரத்தினை உயர்த்தி நிறுத்தி கழுகுகள் அவ்வுடலை சிதைத்து சிறிது சிறிதாக உயிர் நீங்கப்பெறுதல்) என்று கூறினர்.

புனல்வாதம்:

வைகை ஆற்றின் கரையை அடைந்து அனைத்து மக்களின் முன்பும் சமணர்கள் அத்தி நாத்தி என்று ஏட்டில் எழுதி ஆற்றில் விட அவ்வேடு கடலினை நோக்கி ஓடி மறைந்தது. அந்த ஏட்டினை தொடர்ந்து ஓடியபின் செய்வது அறியாது மன்னவனுக்கு அஞ்சி அருகில் வந்து சம்பந்தரும் ஏட்டினை வைகையில் இட்டபின் வரும் முடிவை பாருங்கள் என்று உள்ளத்தில் அச்சத்தினை வெளிகாட்டாது உரைத்தனர்.

Koviloor Digital Library

மன்னவரும் அவர்களை விட்டு அகன்று சம்பந்தரின் திருக்குறிப்பினை நோக்கியவாறு நிற்க. **"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்"** என்ற திருப்பதிகத்தை இசைத்து உலகில் நிலவும் மெய் நெறி சிவநெறியே என்றவாறே அப்பதிகத்தை எழுதி ஏட்டினை வைகை ஆற்றில் விட அவ்வேடு வைகை ஆற்றை எதிர்த்து கிழித்து கொண்டு விரைந்து செல்ல, குலச்சிறையாரும் அவ்வேட்டினை தொடர்ந்து செல்ல, அவ்வேடு மேலும் விரைந்து ஒடியது. சம்பந்தப்பெருமான் அவ்ஏடு ஓடாது தங்கி நிற்க "வன்னியும் மத்தமும்" என்ற பதிகம் பாட அவ் ஏடு கரையை அடைந்தது. (அந்த இடமே திருஏடகம் என்ற சிவாலயமாக மலர்ந்தது) குலச்சிறையாரும் அவ் ஏட்டினை மன்னவர்பால் கொண்டு வந்து தர மன்னவனும் சமணர்கள் தானே முன் வந்து கூறிய உறுதிமொழிப்படி அனைவரையும் கழுவேற்றும்படி உத்தரவிட்டார். எண்ணாயிரம் சமணகுருமார்களும் கழுவில் ஏறினர். இங்கு சம்பந்தர் தனக்கு மட்டும் தீது புரிந்திருந்தால் மன்னித்து சமணர்களை விடுவித்திருப்பார். சைவர்கள் வாழ்ந்த திருமடத்திற்கே தீயிட்டதால் நெற்பயிரை காக்க களையெடுப்பது போலவும், நாட்டு மக்களை காக்க பகைவரை அழிப்பது போலவும், அத்தண்டனை பொருந்தும் என்று மன்னவனின் ஆணையை தடுக்காது விடுத்தார். பின் மன்னவனும், மங்கையர்கரசியும் சம்பந்தருடன் திருஆலவாய் சொக்கநாதரை வழிபட்டனர். அதுபோது சம்பந்த பெருமான் **"வீடு அலால்"** எனத் தொடங்கும் பதிகத்தினை பாடியருளினார். மன்னவன் திருநீறு பூசி சைவன் ஆனான்.

மக்களும் திருநீறு அணிந்து சிவநெறியின் வாழ்தல் உற்றனர். திருஞானசம்பந்தர் மதுரையில் இருந்து திருஆலவாய்

Koviloor Digital Library

சொக்கநாதரை காலம்தோறும் வணங்கி இருந்த நாளில், அவரைச் சீர்காழிக்கு அழைக்க அவரின் தந்தையார் சிவபாத இருதயர் சீர்காழியிலிருந்து மதுரைக்கு வந்தார். சம்பந்தப்பெருமான் தந்தையாரை கண்டவுடன் சீர்காழியில் வீற்றிருக்கும் திருத்தோணியப்பரை நினைந்து **மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்** என்ற திருப்பதிகத்தை பாடி தந்தையாரோடு சீர்காழிக்கு செல்லாது சிவபாத இருதயரை வழி அனுப்பி வைத்தார். நெடுமாறப் பாண்டியனும் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் உடன் செல்ல சம்பந்த பெருமான் இராமேஸ்வரம் உள்ளிட்ட பல பாண்டி நாட்டு சிவப்பதிகளை வணங்கி பதிகம் பாடி பின் குலச்சிறையாரின் பிறந்த ஊரான மணமேற்குடி சென்று வழிபட்டு மூவரையும் நோக்கி இனி உங்கள் ஊர் சென்று சிவனெறியினை போற்றி வாழுங்கள் எனக்கூறி விடைபெற்று பாதாளீச்சரம் பாம்பு அணி நாதரை வணங்கி திருக்கொள்ளம்புதூர் செல்ல முள்ளிவாய் ஆற்றின் கரையை அடைந்தார்.

திருப்பதிகம் பாடி ஓடம் செலுத்தி அதிசயம் செய்தருளியது :

ஆற்றில் இருகரையிலும் அலைபெருகி ஆட்கள் இறங்க முடியாத நிலை ஏற்பட்டதால் ஓடம் விடுபவர்கள் தங்கள் ஓடத்தை கரையில் கட்டிவிட்டு சென்று இருந்தார்கள். சம்பந்தபெருமான் கொள்ளம்புதூர் பெருமானை வணங்க ஆவல் கொண்டவராய் ஆற்றினை கடக்க ஓடத்தின் கயிறினை கழற்றி அடியவர்களை ஏற்றிக்கொண்டு **'கொட்டம்'** எனத் தொடங்கும் திருப்பதிகத்தை பாடியவுடன் அவ் ஓடம் மெல்ல நகர்ந்து ஆற்றின் மறு கரையை அடைந்தது. அக்கோயிலின் உள்ளோர்கள் வரவேற்றனர். சம்பந்தப்

Koviloor Digital Library

பெருமான் திருக்கோயிலின் முன்பு மகிழ்ச்சியுடன் சேர்ந்து பெருமானை தாணுவே! தலைவா எனப் போற்றி மகிழ்ந்தார். அப்பதியிலிருந்து திருநள்ளாறு சென்று வணங்கி திருத்தெளிச்சேரி சென்று பெருமானை வணங்கினர்.

புத்த நந்தி மீது இடி விழுதல்.

சம்பந்தப்பெருமானின் திருக்கூட்டம் '**போதிமங்கை**' என்ற ஊரை கடக்கும் போது வெற்றி சின்னங்களை ஊதியும், பரசமய கோளரி வந்தான் என்ற முழக்கத்தையும் கேட்டு பொறுக்க முடியாத பௌத்தர்களில் புத்த நந்தி என்றவர் வழிமறித்து, எங்களை வாதில் வென்ற பின்னரே இவ்வெற்றி சின்னங்களை ஊதவேண்டும் எனக்கூறக்கேட்ட சம்பந்த பெருமான் புத்த நந்தியின் பொய்யினையும் அவர் கடைபிடித்து வரும் கொள்கையின் நிலையினை உள்ளபடி காட்டுவோம் என்று கூறியதை கேட்டவுடன், சம்பந்தபெருமானின் உடன் இருந்து திருப்பதிகங்களை எழுதி வரும் அன்பர் (சம்பந்த சரணாலயர்) சம்பந்தரின் திருப்பதிகத்தில் ஒன்றை (துஞ்சலும்) புத்த நந்தியின் முன்பு பாட (புத்தர் சமண் கழுக்கையர்) அப்பதிக திருவாக்கால் அப்புத்த நந்தியின் தலை மீது இடிவிழுந்தது. தலையும் உடலும் வேறானது. இது கண்ட புத்தர் கூட்டம் கலைந்து ஒடியது. அனைவரும் ஒன்று கூடி 'சாருபுத்தன்' என்பவரை சம்பந்தருடன் வாதிட அழைத்து வந்தனர்.

சம்பந்தரின் அன்பர் (சம்பந்த சரணாலயர்) சாருபுத்தனுடன் வாதிடல் :

சம்பந்தரின் பாதம் பணிந்து எழுந்த சம்பந்த சாணாலயர், சாருபுத்தனிடம் உங்கள் தலைவனும் பொருளும் உரைக்க எனக் கேட்க, சாருபுத்தன், ஐந்து கந்தம் அழிந்த நிலையே

Koviloor Digital Library

முக்தி என உரைக்க அதனை கேட்ட அன்பர் ஐந்தும் அழிந்த நிலையில் எங்ஙனம் முக்தி நிலையில் உயிர்க்கு இன்பம் சேரும் என்று வினவினார். (இத்தத்துவ விவாதத்தை சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் 'கற்பகங்கள்' எனத் தொடங்கும் பாடலிருந்து பதினொரு பாடலில் பதித்துள்ளார்) சாருபுத்தன் சைவனாகி திருநீறு பூசினான். அவரோடு இருந்த பௌத்தர்களும் சம்பந்தரின் அடி பணிந்தனர். திருவருளால் வானிலிருந்து பூ மழை பொழிந்தது. உயிர்க்கு ஐந்தொழில் செய்வித்து வீடுபேறு நல்குபவன் சிவமே என்ற சிவப் பரத்துவமே சைவம் ஆகும் என்ற உண்மையை உணர்ந்தனர். சம்பந்த பெருமான் திருக்கடையூர் பெருமானை வணங்கி திருநாவுக்கரசப்பெருமான் திருப்பூந்துருத்தி எனும் பதியில் இருக்கும் நிலை அறிந்து அவரை காணும் விருப்புடன் செல்ல அவ்வூரின் எல்லையை சம்பந்தப் பெருமான் அடையும்போது

திருநாவுக்கரசப்பெருமானை மூன்றாம் முறை சந்தித்தல்:

(முதலில் சீர்காழி, இரண்டாவது திருப்புகலூர், மூன்றாவது திருப்பூந்துருத்தி) திருநாவுக்கரசர் யாரும் அறியாத வகையில் சம்பந்தப்பெருமானை வணங்கி சம்பந்தப்பெருமான் ஏறிவரும் பல்லக்கை சுமந்து வரும் நிலையில், 'அப்பர் தாம் எங்குற்றார் இப்பொழுது' என அடியவரிடம் சம்பந்தர் கேட்க அதுகேட்ட அப்பரும், ஒப்பறிய 'தவஞ்செய்தேன் ஆதலினால் உம் அடிகள் இப்பொழுது தாங்கிவரபேறு பெற்று உய்தேனே" என்றார். அது கேட்ட சம்பந்தர் பூமியில் குதித்து அப்பரை வணங்கினார். அப்பரும் எதிர் வணங்கி இருவரும் திருப்பூந்துருத்தி சடையார் கோயில் சென்று வணங்கினார்கள். சம்பந்தப்பெருமான் திருநீற்றின் பெருமையினை வெளிப்படுத்திய மதுரையின் வரலாற்றினைக்

Koviloor Digital Library

கூற அதனை கேட்ட திருநாவுக்கரசரும் தென்நாட்டு தவத்திரு பாண்டி பதிகளை காண ஆவலுற்று மதுரைக்கு புறப்பட, சம்பந்தப்பெருமான் சீர்காழித் திருத்தோணி யப்பரை காண ஆவலுற்று புறப்பட்டு திருஐயாறு, திருப்பழனம் வணங்கி தாம் தோன்றிய பதியான சீர்காழியை அடைந்தார்.

தொண்டை நாட்டு பதிகளை காண ஆறாவது முறையாக சீர்காழி விட்டு புறப்படுதல் :

சம்பந்தப்பெருமான் திருத்தோணியப்பரிடம் விடைபெற்று வரும்போது அவரின் தந்தையாராகிய சிவபாத இருதயர் சம்பந்தரிடம் தாமும் உடன் வருகிறேன் என்று கூறினார். அதற்கு சம்பந்தர் வேள்வி செய்து திருத்தோணியப்பரை வணங்கியவாறே இங்கேயே இருப்பீராக எனக்கூறி புறப்பட்டு, தில்லை, திருமாணிக்குழி, திருப்பாதிரிப்புலியூர், திருவக்கரை, திருஆமாத்தூர், திருக்கோவிலூர் திருஅறையணிநல்லூர், திருஅண்ணாமலை பல பதிகளை வணங்கி திருவோத்துரை அடைந்தார்.

காய்க்காத பனை மரங்கள் குலை தள்ளிய அதிசயம்

திருவோத்தூரில் (செய்யாறு) வேதங்கள் ஓதி வழிபட்ட திருக்கோயிலை வணங்கி பல நாள் தங்கி காலந்தோறும் வழிபட்டு வந்த நிலையில் ஒரு சிவத்தொண்டர் சம்பந்தர் முன்பு கண்ணீர் மல்க நின்று வணங்கி, நான் இறைவனுக்காக நட்டு வைத்த அனைத்து பனை மரங்களும் வானளாவி வளர்ந்தும் அம்மரங்கள் குலை தள்ளாது ஆண் பனை மரங்களாகவே இருப்பதை கண்டு இவ்வூரில் உள்ள சமணர்கள் என்னிடம் நீ பயிரிட்ட அனைத்து பனை மரங்களும் காய்ப்பதற்கு உபாயம்

Koviloor Digital Library

ஏதேனும் உண்டா? எனக் கேட்டு சிரித்தும், இழித்து கூறுகின்றனர் எனக்கூறி, அருளவேண்டும் என வேண்டி நின்றார்.

சம்பந்தப்பெருமான் விரைந்து திருக்கோயில் அடைந்து பாம்பும், மதியும் பகை தீர்த்து உடன் வைத்த பண்பன் அடி வணங்கி பதிகம் பாடினார். அப்பதிகத்தின் திருக்கடைக் காப்பில் “குரும்பை ஆண் பனை ஈன் குலை ஒத்தூர்” என்று பாடிய உடனே அத்தனை பனை மரங்களும் குலைத்தள்ளி பெண் பனையாகிவிட கண்டோரெல்லாம் அதிசயித்தனர். சமணர் சிலர் அந்நாட்டை விட்டே வெளியேறினர் சிலர் தங்களது குண்டிகைகளை (நீர்பாத்திரம்) போட்டு உடைத்து சைவர்களாயினர். சிவபெருமான் திருஅருளாலே குலை தள்ளிய அனைத்து பனை மரங்களும் அதன் கால முடிவில் பாசம் நீங்கப்பெற்று சிவபெருமான் திருவடியை அடைந்தன.

குறிப்பு : எது நடந்தாலும் சிவபெருமானிடம் அன்பு மாறாத மெய்அன்பர்களுக்கு சுவாமி தனது திருவடியை வழங்குவது சத்தியம். அதற்கு தேவை பொறுமையும் நம்பிக்கையுமே. ஒரு பனை மரமே இறைவன் திருவடியை அடைய முடியும் என்றால் நம்மால் முடியாதா? முடியும்.

அங்கிருந்து திருமாகறல் உடும்பீஸ்வரரை வணங்கி வினை நீங்கும் பதிகமான **“விங்கு விளை”** எனத் தொடங்கும் புகழ்பெற்ற திருப்பதிகத்தை இசைத்த பின்திருக்குரங்குஅணில்முட்டம், வணங்கி திருகாஞ்சிபுரம் ஏகாம்பரநாதரை கண்டவுடன் கண்ணீர் அருவிபோல் பாய்ந்து வர வணங்கி, திருக்கச்சி நெறிக்காரைக்காடு, திருமாற்பேறு, திருவல்லம், திருஇலம்பையங்கோட்டூர், திருவிற்கோலம், திருஊறல், திருக்கள்ளில் (திருக்கண்டலம்) திருவாலங்காடு சென்று அடைந்தார்.

Koviloor Digital Library

நள்ளிரவில் பாடிய திருப்பதிகம்

காரைக்கால் அம்மையார் திருவாலங்காடு சிவாலயத்தில் சிவபெருமான் திருவடியை சேர்ந்த இடம். எனவே சம்பந்தபெருமான் திருக்கோயிலின் உள் நுழைய அஞ்சி அருகிலிருந்த திருமடத்தில் இரவு தங்கினார்.

இரவு பள்ளிகொள்ளும் வேளையில் (தூங்கும்போது) இறைவன் கனவில் தோன்றி "நம்மை அயர்ந்தனையோ பாடுதற்கு" என்று அருளிச் செய்ய நடுஇரவில் விழித்தெழுந்து விரிசடை கடவுளின் கருணையை போற்றி **"துஞ்சவருவார்"** எனத் தொடங்கும் பதிகத்தை பாடினார். இரவு விடிந்து மறுநாள் திருக்கோயிலுக்கு உள்சென்று ஆடியபாதம் பணிந்து இரவு நடந்த அற்புதத்தை விரித்து இரவு பாடிய அதே பதிகத்தை இறைவன் முன் பாடிய பின் திருப்பாசூர் சென்று வணங்கி, வெண்பாக்கம், திருக்காரிகரை வணங்கி வேடர்களின் குலத்தை உலகமெல்லாம் போற்றும்படிசெய்த கண்ணப்ப நாயனார் திருப்பாத செருப்பு அடி சுமந்த திருஊரான திருக்காளத்தி மலையை சேர்ந்தார்.

திருக்காளத்தியப்பரை வணங்குதல்

திருக்காளத்தி மலையை கண்டதும் இங்குள்ள மலைகளில் எது கண்ணப்பர் தொழுது ஏற்றிய மலை என்று கேட்க, அவ்வூர் அன்பர்கள் கண்ணப்பர் வழிபட்ட காளத்தி மலையை காட்ட சம்பந்தப்பெருமான் பலமுறை நிலமுற விழுந்து வணங்கி "வானவர்கள் தானவர்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தை பாடி திருக்காளத்தியப்பரை போற்றி மகிழ்ந்து, அங்கிருந்தபடியே திருக்கயிலாயம், திருக்கேதாரம், திருக்கோகரணம், திருப்பருபதம், (ஸ்ரீ சைலம்) திருஇந்திர

Koviloor Digital Library

நீலப்பருப்பதம், திருஅனேகதங்காவதம் ஆகிய வடநாட்டு சிவப்பதிகளை நினைந்து வணங்கி திருப்பதிகங்களை பாடினார். திருக்காளத்தியப்பரின் முன் பாடிய பதிகத்தில் "காளத்தி அடிகளை அடி தொழ வீங்கு வெந்துயர் கெடும் வீடு எளிது ஆகுமே" என்ற வரிகள் நம்மை காளத்தியப்பரை வணங்கும் ஆவலைத் தூண்டும். பிறகு அப்பதியிலிருந்து திருவேற்காட்டுநாதனை வணங்கி திருவலிதாயம் (பாடி) பதியினை வணங்கி திருவொற்றியூர் சென்று அடைய அங்கிருந்த சிவஅன்பர்கள் வரவேற்க அப்போது "விடையவன்' எனத் தொடங்கும் பதிகம் பாடி வணங்கி திருவொற்றியூரில் இருந்து மயிலாப்பூர் செல்லும் நிலையில்,

பூம்பாவை உயிர்ப்பித்து எழும் அதிசயம் நிகழ்த்துதல்

மயிலாப்பூரில் சிவநேயர் எனும் வணிகர் செல்வந்தராகவும், அடியவர்கள் மீது அன்பும், சிவத்தொண்டும் செய்து கொண்டு வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு பூம்பாவையென பெயரிட்டார். அக்குழந்தை வளர்ந்து, பருவம் அடைந்தாள். சிவநேயர், சம்பந்த பெருமான் மதுரையில் நிகழ்த்திய அற்புதங்களை கேள்விப்பட்டு தனது மகளை சம்பந்தருக்கே திருமணம் செய்து தர வேண்டும் என்று முடிவு செய்திருந்தார். தன் தந்தையின் முடிவினை அறிந்த பூம்பாவை மிக மகிழ்ந்து இருக்கும்போது, தனது தோழிகளுடன் மல்லிகை, முல்லைப் படர்ந்திருக்கும் பந்தலை அடைந்து பூ பறிக்கும் போது அப்பந்தலில் மறைந்திருந்த (பாம்பு) நாகம் ஒன்று தீண்ட, மெல்லிய பூ மாலை போன்ற பூம்பாவை மயங்கி விழுந்தார். அச்செய்தி கேட்டு பெற்றோரும், சுற்றத்தாரும் விரைந்தனர். மருத்துவர்களின் முடிவு (இறப்பு) செய்தி கேட்டு அனைவரும் அழுது மிகவும் வருந்தினர்.

Koviloor Digital Library

சிவநேசர் மகளின் மரணத்தால் அதிர்ச்சியுற்று, பின் தீயிலிட்ட என் மகளின் என்பொடு சாம்பலையாவது திருஞானசம்பந்த பெருமானிடம் ஒப்படைப்பேன் எனக்கூறி ஒரு மண் குடத்தில் சேகரித்து கன்னி மாடத்தில் பாதுகாத்து தினமும் திருமஞ்சனமும், அமுதூட்டியும் வரும் நாளில், திருஞானசம்பந்த பெருமான் திருவொற்றியூர் வந்த செய்தி கேட்ட சிவநேசர் மிகமகிழ்ந்து திருவொற்றியூலிரிருந்து மயிலாப்பூர் வரை பந்தல் அமைத்து தோரணம் வண்குலைக் கமுகொடு, வாழைமரம் கட்டி எதிர்கொண்டிருக்க சம்பந்த பெருமான் தொண்டர் புடைசூழ வர சிவநேசர் மகிழ்ச்சியினால் சம்பந்தபெருமானின் திருவடியில் வீழ்ந்து வணங்கினார். சம்பந்த பெருமான் கபாலீஸ்வரரை வலம் வந்து வணங்கி போற்றி இசைத்து திருக்கோயிலிருந்து வெளியே வர அதுபோது சிவநேசர் தனது மகளின் முடிவை கூறியதை கேட்ட சம்பந்தபெருமான் அந்த சாம்பல் உள்ள குடத்தை கோயில் மதில் வெளியே வைக்குமாறு கூறினார்.

அவ்வாறே அக்குடத்தை வைக்க, அவ்வூர் வாழ் தொண்டர்களும் கூடி நிற்க, வானவர்களும் வானிலிருந்து கீழ் இறங்கி காண, சம்பந்தபெருமான் “மட்டிட்ட” எனத் தொடங்கும் திருப்பதிகத்தை பாட அப்பதிகத்தில் பத்தாவது பாடலில் அம் மண்குடம் உடைந்து பன்னிரண்டு வயதுடைய பெண்ணாக பூம்பாவை உயிர்பெற்று எழுந்தார். திருக்கடைகாப்பு செய்து அப்பதிகத்தை நிறைவும் செய்தார். தொண்டர்கள் அதிசயித்து எழுப்பிய ‘அரஅர’ என்ற கோஷம் வானநாட்டினை அடைந்தது. தேவரும் முனிவரும் திருவருளின் சிறப்பினை கண்டு பூ மழை பொலிந்தனர். வளர் ஒளிபோன்ற அழகுடைய பெண்ணாக பூம்பாவை இருப்பதை

Koviloor Digital Library

முதிர்ந்த பிரம்மன் தன் நான்கு முகங்களில் அப்பெண்ணின் வெளி அழகினை அதிசயித்து கண்டான். ஆனால் பதினாறு வயதுடைய சம்பந்த பெருமானோ நெற்றி கண்ணுடைய சிவபெருமானின் அருட் கருணை வெள்ளத்தை ஆயிரம் முகத்தால் கண்டார்.

சிவநேசர் சம்பந்தரின் அடிவணங்கி தனது மகளான பூம்பாவையை திருமணம் செய்து அருளுமாறு வேண்டினார். இப்பெண் சிவபெருமான் அருள் வெளிப்பாடு அடையவுற்றதால் சிவப்பேறுக்கு தகுதியுடையவள் என இயம்பி பள்ளத்தை பார்த்து ஓடும் நீர் போல மீண்டும் திருக்கோயிலின் புகுந்து சிவன் கழல் வணங்கினார். சிவநேசரும் தனது மகளை யாருக்கும் மணம்புரிவது இல்லையென கன்னிமாடத்தில் அமர்த்த, பூம்பாவையும் சிவபெருமான் திருவடியில் மாறாத அன்பு கொண்டு சிவப்பேறு பெற்றார்.

சம்பந்தபெருமான் கபாலீச்சரத்தாரிடம் விடைபெற்று திருவான்மியூர் மருந்தீசுவரை வணங்கி, திருஇடைச்சுரம் (திருவடி சூலம்) சென்று சிவபெருமானை வணங்கி அக்கோயிலுள்ள சிவலிங்கத் திருமேனியின் பச்சை நிறம் கண்டு அதிசயித்து திருப்பதிகம் பாடி திருக்கழுக்குன்றம் அடைந்தார்.

கிரிவலம் தொடங்கிய சம்பந்தர் : நான்கு வேதங்களும் வேதகிரிநாதரை வழிபட்டு மலைகளாக உள்ள அப்பதியின் (கிரிவலம்) மலையை வலம் வந்து வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனான சிவபெருமானை வணங்கினார். அங்கிருந்து புறப்பட்டு ஆட்சீஸ்வரர் அருளும் அச்சிறுபாக்கம் வணங்கி, திருஅரசிலி, திருப்புறவார்

Koviloor Digital Library
பனங்காட்டூர், திருச்சோபுரம் ஆகிய பதிகளை வணங்கி திருத்தில்லை திருக்கோயிலின் வடதிசை வாயிலின் வழியே பெருங் காதலுடன் உள்சென்று பேரம்பலத்தை வணங்கினார். தில்லை வந்த செய்தி கேட்டு சம்பந்த பெருமானின் தந்தையாராகிய சிவபாத இருதயரும் அங்கு வந்து அணைந்தார். தொண்டர்கள் சூழ சம்பந்தபெருமான் சீர்காழி பதியினை அடைந்தார்.

சீர்காழி திருக்கோயிலின் உள் விரைந்து சென்று திருத்தோணியப்பரை கண்ணீர் அருவிபோல் பெருக வணங்கி தனது திருமாளிகைக்கு (வீட்டிற்கு) சென்றார். மற்றொரு நாள் சம்பந்தபெருமானை காண வந்த திருநீலநக்கர், திருமுருக நாயனார் முதல் மற்றும் பல வேதியர் சூழ அவர்களொடு சென்று திருத்தோணியப்பரை வணங்கி பல பதிகம் பாடி மகிழ்ந்திருக்கும் நாளில், திருவளர் ஞானதலைவராகிய திருஞானசம்பந்தர் பெருமானுக்கு திருமணம் செய்ய பருவம் இதுவென எண்ணி அவரது தந்தை சம்பந்தரிடம் வைதீக நெறிப்படி வாழ, திருமணம் செய்தருள வேண்டும் என்று கேட்க சம்பந்த பெருமானும் ஒப்புக்கொள்ள, திருத்தொண்டர்களும், வேதியரும், நம்பியாண்டார் நம்பி என்னும் சிவஅன்பர்வாழும் திருநல்லூர்ப் பெருமணத்தை அடைந்து அவரது திருமகளை சம்பந்தருக்கு திருமணம் செய்ய பேசினர்.

நம்பியாண்டார் நம்பியும் மிக மகிழ்ந்து, யாம் உய்ய எங்களுடைய குலக் கொழுந்தை உமக்கு தருகின்றோம் எனக் கூற, கணித மங்கல நூலவர் (சோதிடர்) வகுத்த நன்னாளில் முளைப்பாலிகை விதைத்தனர். நீடுநிலைத் தோரணங்கள், வேதிகைகள், செங்கணல் ஆகுதிப்புகை மணம் கமழும்

Koviloor Digital Library

குங்குமம் கரைத்த புதுக்கலவை, நறுமண புகை எடுப்போர் நறுமண கற்பூர பொடி இடிக்க, எங்கும் மலர் மாலைகள் கட்டும் பணிகளும் வேதியர் கூட்டமும் வந்து சம்பந்த பெருமானுக்கு காப்பு நாண் அணிவித்து நகர் வலம் செய்வித்து, அன்பர்கள் திருக்கூட்டம் முன் செல்ல, மாமறை முழங்க, வீணை, யாழ் ஒலி ஒருபால் இசைக்க, வேள்வியில் வலமாக தீ மூள, திருமண கோலம் பூண்டு சம்பந்தர் வர பெண்கள் எல்லாம் நிறைந்த நீர்ப் பொற்குடங்கள் ஏந்தியும், விளக்கேற்றியும் எதிர்கொண்டு வரவேற்று நின்றனர். திருநீலநக்க நாயனார் திருமறை ஓதி திருமணச் சடங்குகளை செய்வித்தார்.

பின் சம்பந்த பெருமான் மணப்பெண்ணை (தோத்திராம்பிகை) கைபிடித்து வேள்வியை சுற்றி வரும்போது "இவள் தன்னோடும் அந்தமில்லா சிவன் தாள் சேர்வேன்" என உள்ளத்தில் நினைத்தபடி திருநல்லூர்பெருமணத்து கோயில் உள் சென்று சிவபெருமான் முன்பு "கல்லூர் பெருமணம்" எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி அருளினார். இப்பதிகத்தில் எட்டாவது பாடலில் "எமைப்போக்கு அருளீரே" என்று இறைவன் திருவடிக்கு விண்ணப்பம் செய்து வேண்டினார். சிவபெருமான் திருவருள் புரிந்து அசரீரியாக நீயும் உன் மனைவியும், இங்கு உன்னுடைய திருமணத்தை காண வந்த யாவரும் என்பாற்சோதி இதன்உள் வந்து எய்தவும் என மொழிந்து, மூன்று உலகங்களும் மின்னும்படி ஒரு பேரொளி தூண்போல நின்று அப்பெருஞ்சோதியில் வாயில் ஒன்றை அமைத்து காட்டினார் சிவபெருமான்.

அதுகண்ட சம்பந்த பெருமான் சிவஞான நெறியினை அடைய எளிய வழியாக இருப்பது 'நமசிவாய" சொல்லே ஆகும் என்று 'காதலாகி' எனத் தொடங்கும் நமசிவாயப்

Koviloor Digital Library
பதிகத்தை பாடியபின், இத்திருமணத்திற்கு வந்தோர் யாவரும் ஈனமான பிறவி தீர யாவரும் இப்பேரொளியில் புகுக எனக் கூறியதை கேட்ட திருநீலநக்கர், திருமுருகநாயனார், சிவபாத ஹிருதயர் திருநீலகண்டத்துபெரும்பாணர் அவர் மனைவியும் திருமணத்தை காண வந்த சுற்றத்தாரும், அப்பேரொளியில் புகுந்தனர்.

சம்பந்தப் பெருமானை சிவிகையில் அமர்த்தி தூக்கி வந்தவர்கள், திருமண பணிச்செய்த பெண்கள், அருந்தவ முனிவரும், அக்கோயிலில் கும்பிட வந்தவர்கள், திருவருளினால் வீடுபேறு அடையும் பேறு உடையவர்களும் அப்பெருஞ்சோதியினுள் எல்லோரும் புகுந்தபின் திருஞான சம்பந்தப்பெருமான் தனது காதல் மனைவியின் கைப்பற்றிக்கொண்டு அப்பேரொளியை வலம் செய்து அவ்வளர் சோதியை நெருங்கி உட்புகுந்தார். தூக்கிய திருவடியை கொண்டு ஆடிய பாதத்தை உடைய பெருங்கூத்தராகிய சிவபெருமான் அப்பேரொளியின் வாயிலை மறைத்தது. முன்பு இருந்தார்ப்போல நல்லூர் பெருமணக் கோயிலை காட்டி அருளினார்.

இப்பெருங்காட்சியை பக்குவம் வரப்பெறாமையால் தூரத்தே நின்று பார்த்தவர்கள், விண்ணவரும், முனிவர்களும், பெருந்தேவர்களும் எம்பெருமானை அடையமுடியவில்லையே யென தங்களின் துக்கத்தை மாற்ற நல்லூர்பெருமணத்தானை வணங்கினர்.

சீர்காழி – இவ்வூர் சிதம்பரம் அருகில் உள்ளது.

கருத்து : அ. திருஞானசம்பந்தர் தனது கையினை உயர்த்தி ஒரு விரல் காட்டியது. கண்களில் நீர்மல்கி, ஒரு

Koviloor Digital Library

காலினை தூக்கியவாறு சுவாமியை காட்டிய நிகழ்வு அடியவனின் கருத்து ஒரு விரல் காட்டியது ஒரு நிலைய மனம் வைத்து சிவபெருமான் ஒருவரே கடவுள் என்பதை உணர்த்தவும், கண்களில் நீர்மல்க நின்றது காதலாகி கண்ணீர் மல்கி உள்ளம் உருகுவோமானால் சிவபெருமானின் திருவடி கிடைக்கும் என்பதையும், ஒரு காலை தூக்கி நிற்பது, உயிர்களை தன் வயப்படுத்த ஏற்றவாறு சுவாமி கூத்தப் பெருமானாக தூக்கிய திருவடியுடன் நிற்பது போல், சுவாமியின் செயலினை ஆணைப்படி ஏற்றுச் செய்யும் ஆற்றலுடைய சாயுக்ய முக்தி கிடைக்கும் என்பதையும் உணர்த்துகிறது.

ஆ. அந்தணர் குலத்தில் குழந்தை பிறந்த ஏழாவது ஆண்டில் உபநயனம் செய்கிறார்கள். நாம் அனைவரும் தயவு செய்து தங்களது மகன், மகள் இருபாலருக்கும் ஏழு ஆண்டு நிரம்பியதும் 'சிவதீக்கை' செய்விக்குமாறு முயற்சி செய்ய வேண்டும்.

இ. திருஞானசம்பந்த பெருமானின் அடியினை போற்றும் தொண்டர்கள் சிவபெருமானை முன் வைத்து செய்யும் சிவவேள்வியினை மட்டுமே செய்ய வேண்டும்.

ஈ. திருஞானசம்பந்தர் வரலாற்றில் திருமருகலில் பாம்பு தீண்டிய தாய்மாமனைதொடாது அழுத நிகழ்வினை எண்ணிப்பார்த்தால், திருமணத்திற்கு முன் பெண்கள் எப்படி இருந்தனர் என்பது நமக்கு தெரிகிறது. இன்றைய நிலை நட்பு என்ற பெயரில் ஆணும் பெண்ணும் சேர்ந்து பழகுவது நம் சமுதாயத்திற்கு ஏற்றதல்ல.

உ. அறுபத்து மூன்று நாயன்மார்கள், ரிஷிகள், யோகிகள், முனிவர்கள், முருகவேள், கணபதி உமையம்மை, திருமால், பிரம்மன், உருத்திரகோடிகள், தேவர்கள்

Koviloor Digital Library

அனைவரும் சிவபெருமானை வழிபட்டு முக்தி அடைந்துள்ளனர். ஆனால் தான் முக்தி அடையும் போது தன்னுடன் தொண்டர் கூட்டத்தையே சிவனருளால் அழைத்துச் சென்றவர் எங்கும் இல்லை, மேலும் இப்புவியில் இனிவரும் அடியவர்கள் பந்தப் பாசத்தை நீக்கி சிவனடி சேர எளியமுறையினை விளக்கும் (இறைவனை சேரும் முன்) காதலாகி கசிந்து எனத் தொடங்கும் நமசிவாய பதிகத்தை அருளியது திருஞான சம்பந்தப் பெருமானின் ஒப்பற்ற நிலையை நமக்கு புலப்படுத்துகிறது.

ஊ. அருந்தமிழுக்கு உறைவிடமாக திகழ்ந்த திருஞான சம்பந்தரை பற்றி முற்றும் அறிய முடியாத நிலையில் அறிந்தவரை சொன்னேன் என்று பணிவாக சேக்கிழார் பெருமான் 1256 பாடல்களில் சம்பந்த பெருமானின் வரலாற்றினை நேராக காண்பதுபோல் நமக்கு அமைத்து கொடுத்துள்ளார். சம்பந்த பெருமானின் வரலாற்றை மிகவும் சுவைக்க அத்தனை பாடல்களை படிப்பது நம்து தலையாய கடமை. சம்பந்தர் பெருமான் தாய் தந்தையருக்கு நல்ல மகன், சிவன் அடியவர்களுக்கு அவர்களின் துன்பத்தை துடைக்கும் அடியார்க்கு அடியவராகவும், உலக போகங்களிலிருந்து விடுபடும் துறவிக்கெல்லாம் மேலாகவும், தன் மனைவியை கைபிடித்த நிலையில் தன்னுடன் அழைத்துச் சென்ற சிறந்த கணவனாகவும், இப்படி அத்தனை பேருக்கும் சிறந்த ஞானஞான முனிவனாக விளங்கிய திருஞானசம்பந்த பெருமானையே நம் சைவ உலகம் தளபதியாக கொண்டு மாயப்படை வாராமே அண்ட நாயகன் அகில நாயகனாகிய சிவபெருமான் திருவடியை அடைவோம்.

திருஞானசம்பந்த நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

28. ஏயர்கோன் கலிக்காம நாயனார் வரலாறு

சோழ வள நாட்டில் திருப்பெருமங்கலம் என்ற ஊரில் ஏயர்குலத்தில் சேனாதிபதி குடியில் கலிக்காமர் அவதரித்தார். திருப்புன்கூர் என்ற சிவாலயத்தில் திருப்பணி பல செய்து, தனக்கு வாழ் முதலே சிவபெருமான் திருவடியே ஆகும் என்று எண்ணினார். இந்நிலையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் (நம்பி ஆரூரன்) தனது முதல் மனைவியின் கோபத்தை நீக்கும் பொருட்டு சிவபெருமானையே தூது அனுப்பினார் என்ற செய்தியை கேட்டு மிக வருந்தியதுடன், சுந்தரர் மீது மிகுந்த கோபத்துடன் இருந்தார்.

மேலும் இச்செய்தி கேட்டும் இறக்காமல் இருக்கிறேனே என்று எண்ணி வருந்துவார். பிறகு சுந்தரரை நேரில் காணும் வாய்ப்பு மட்டும் எப்போதாவது கிடைத்தால் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது என்று கோபத்துடன் இருந்தார். தனது மனக்கொதிப்பையும் இதற்கான ஒரு தீர்வையும் வேண்டி ஆறுசேர் சடையராக சிவபெருமான் திருவடியில் விண்ணப்பம் செய்தார்.

நாள்தோறும் சுவாமியை பணிந்து, போற்றி வர உயிர்களுக்கெல்லாம் தலைவரான சிவபெருமான் சுந்தரரையும், கலிக்காமரையும் நண்பர்களாக ஒன்று சேர்க்க, கலிக்காமருக்கு சூலை நோய் (தீராத வயிற்றுவலி) வரும்படி செய்தார். கலிக்காமர் சூலை நோயால் மிகவும் வேதனை

Koviloor Digital Library

அடைந்த நிலையிலும் பூதநயாகர் பாதம் போற்றி வந்தார். அப்போது சிவபெருமான் உன்னை வருத்தும் இந்த சூலை நோய்சுந்தரமூர்த்தி வந்து தீர்த்தால் அன்றி இது நீங்காது என மொழிந்து அந்நாளே வன்தொண்டரான சுந்தரரிடம் சென்று, “நீ உடனே சென்று ஏயர்கோன் கலிக்காமரின் சூலைநோயை தீர்த்து வருவாயாக” என அருளினார் சிவபெருமான். அதனை கேட்ட சுந்தரர் மிக மகிழ்ந்து, கலிக்காமரின் சூலையை தீர்கக தான் நேரில் வருகிறேன் என்ற செய்தியை அவருக்கு கூறும்படி சொல்ல, சுந்தரரின் வருகையை கேட்ட கலிக்காமர் இறைவனை தூது அனுப்பிய அவன் வந்து என் சூலையை தீர்ப்பதன் முன் நானே இச்சூலையை வயிற்றோடு ஒழிப்பேன் என்று தனது வாள்கொண்டு வயிற்றில் குத்தி கொண்டு உயிர் நீத்தார்.

இது கண்ட கலிக்காமரின் மனைவி தன்னை மாய்த்துக்கொள்ள முற்படும் போது சுந்தரர் அங்கு அருகில் வந்து விட்டார் என்ற செய்தியை கேட்டவுடன் தனது பணியாளர்களை நோக்கி ஒருவரும் அழாது இருங்கள் என்று சொல்லியபின் சுந்தரமூர்த்தி சுவாமிகளை வணங்கி பூரணகும்பம் வைத்து சிரித்த முகத்துடன் வரவேற்றார். சுந்தரர் உள்ளே வந்தவுடன், சூலை கொண்டு வாடும் கலிக்காமர் எங்கே என கேட்க, பணியாளர்கள் கலிக்காமரின் மனைவியார் முன்பே சொன்னபடி உள்ளே உறங்கி கொண்டிருக்கிறார் என்று கூறியதை கேட்ட சுந்தரர், என் மனம் நீங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ளாத வகையில் உள்ளது எனவே அவரை காணவேண்டும் என்று கூற அங்குள்ள மற்றவர்கள் கலிக்காமர் இறந்து கிடந்தஅறைக்கு அழைத்து செல்ல அங்கு இரத்த வெள்ளத்தில் இறந்து

Koviloor Digital Library

கிடக்கும் கலிக்காமரை பார்த்து இவரின் வழியே நானும் என்னை மாய்த்துக் கொள்வேன் என்று வாளை எடுக்க, சிவபெருமான் அருளாலே கலிக்காமர் உயிர்பெற்று எழுந்தவுடன் கெட்டேனே என்று கூறிக்கொண்டே சுந்தரரின் கையை வாளோடு பிடித்துக் கொண்டார். உடனே சுந்தரர், கலிக்காமரின் திருவடியை வணங்க, கலிக்காமர் சுந்தரரை எதிர் வணங்க, தேவர்கள் வானில் பூ மழை பொழிந்தனர். இருவரும் சேர்ந்து திருப்புன்கூர் திருக்கோயில் சென்ற போது சுந்தரர் "அந்தணாளன்"எனத் தொடங்கும் பதிகம் பாடி பின் இருவரும் திருவாரூர் சென்று பூங்கோயில் வணங்கி மகிழ்ந்த பின் கலிக்காமர் தனது ஊரான திருப்பெருமங்கலம் திரும்பி வந்து திருத்தொண்டு செய்து செங்கண்மால் விடையார் பாதஞ் சேர்த்தார்.

திருப்பெருமங்கலம் – திருப்புன்கூர் அருகில் உள்ளது. (சென்னை – கும்பகோணம் சாலையில் கும்பகோணம் முன்பு உள்ள ஊர்)

கருத்து : தூது அனுப்பியது சுந்தரர், ஆனால் சிவபெருமான் சூலை கொடுத்தது கலிக்காமருக்கு ஆகும். நாம் தவறு என்று நினைப்பது நம்முடைய அறிவு அறிந்தவரையேயாகும். இறைவனின் செயல்களை நம் அறிவோடு இணைத்துப் பார்ப்பது அறியாமையே ஆகும். இது சரி, இது தவறு என்று நாம் கருதுவது நம் சிற்றறிவுக்கு உட்பட்டது, பேரறிவனாகிய கருத்தினை அறியும். ஆற்றல் மானிட அறிவுக்கு இல்லை.

ஏயர்கோன் கலிக்காம நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

29. திருமூலநாயனார் வரலாறு

சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கயிலையில் இந்திரன், திருமால், பிரமன், தேவர்களுக்கும் சிவநெறியை அருளும் நந்தியம்பெருமானை குருவாகக் கொண்ட யோகிகளில் ஒருவரான சுந்தரர் என்ற பெயர்கொண்ட யோகி, தன்னுடன் நந்திதேவரிடம் சிவயோகம் பயின்று பின் பொதிகை மலையில் (தமிழ்நாடு) தவம் செய்து வந்த அகத்தியரை கண்டு சில நாள் அவருடன் இருக்க ஆவல் கொண்டு திருக்கயிலையை விட்டு கேதாரம், நேபாளம் பசுபதிநாதரை வணங்கி காசி, திருக்காளத்தி, காஞ்சி ஏகாம்பரநாதரை வணங்கி திருவதிகை (பண்ருட்டி) அற்புதக் கூத்தாடும் தில்லை பொற்பதி (கனகசபை) வணங்கி காவிரி கரை அடைந்து திருவாவடுதுறை பசுபதியார் திருக்கோயில் வணங்கி வலம் வரும்போது அவர் மனதில் பலகாலம் இங்கு தங்கும் நிலை வரும் என்ற உணர்வு பொங்க அங்கிருந்து புறப்பட்டு சாத்தனூர் என்ற கிராமத்தின் வழியே நடந்து செல்லும்போது, பசு மாடுகளை மேய்க்கும் குடியில் பிறந்த மூலன் என்ற பெயருடையவன் பாம்பு கடித்து வீழ்ந்து கிடக்க, அவன் மேய்த்து வந்த பசுக்கள் அவன் உடலை சூழ்ந்து கொண்டு கதறுவதையும், மோந்து பார்ப்பதையும் கண்ட யோகி, சிவபெருமான் அருளாலே இப்பசுக்களின் துயரத்தை தீர்ப்பேன் என்று உணர்ந்து, அம்மூலனின் உடலில் தன் உயிரை செலுத்துவேன் என்று கூடுவிட்டு கூடு பாயும் அட்டமாசித்தி கொண்டு தனது உடலை ஒரு இடத்தில் பாதுகாத்து வைத்து விட்டு தனது உயிரை மூலன் உடலில் செலுத்தினார்.

Koviloor Digital Library

திருமூலராக எழுந்ததை கண்ட பசுக்கள் எல்லாம், திருமூலரை நாவினால் நக்கி மோந்து மகிழ்ச்சியால் வாலை தூக்கி துள்ளியபின் புல்களை மேய்ந்தன. திருமூலரும் அப்பசுக்களை காத்து வர கதிரவன் மறையும் நேரம் பசுக்கள் தங்கள் கன்றினை நினைந்து சாத்தனூர் கிராமத்திற்குள் செல்ல திருமூலர் பின் தொடர்ந்து சென்று அப்பசுக்கள் எல்லாம் அவை வசிக்கும் வீடுகளுக்கு செல்வதை கவனித்து நின்றார். திருமூலர் நிற்பதை கண்ட மூலன் மனைவி விரைந்து வந்து திருமூலரின் கையினை பற்ற முற்பட அதற்கு இசையாது பின் சென்று ஒரு திருமடத்தின் உள்புகுந்தார். இச்செயலினை கண்ட மூலன் மனைவி மனம் தளர்ந்து ஊர் சான்றோர்கள் முன் உரைத்தாள். அதுகேட்ட அப்பெரியோர்கள் மடத்தினுள் இருக்கும் திருமூலரை கண்டபின் மூலன் மனைவியிடம் வந்து உன் கணவன் சிவயோக நிலை கைகூடிய நிலையில் உள்ளார். எனவே உன்னுடன் சேர்ந்து வாழ்வதற்கு இல்லையென கூறி சென்றார்.

திருமூலரும் மறுநாள் காலை தான் வந்த வழியே சென்று தான் மறைத்து வைத்திருந்த இடத்தில் தன் உடல் காணாது போகவே, முழுதும் உணர்ந்த மெய்ஞ்ஞானச் சிந்தையினில் தான் வந்த காரணத்தை ஆய்ந்து தெளிந்தார். சிவபெருமான் தன்னை அடையும் வழிகளை திருமந்திரமாக எழுதவே அவ்வுடலை மறைப்பித்து இங்கேயே தங்கும்படி செய்தது "ஈசர் அருள்" என்று உணர்ந்தார். திருவாவடுதுறை திருக்கோயில் உள் சென்று பெருமானை வணங்கி அக்கோயில் மேற்கு பகுதியில் அமைந்திருந்த மிக உயர்ந்த அரச மரத்தின் கீழ் சிவயோகம் கூடிய நிலையில் அமர்ந்தார். தொல்லை இரும்பிறவி துயர்தீர்த்து உலகம் உய்ய நான்கு

Koviloor Digital Library

வரிகளில் திருமந்திரமாக ஆண்டுக்கு ஒருமுறை தவத்திலிருந்து விழித்து 'ஒன்றவன்தான்' எனத் தொடங்கும் முதல் மந்திரம் பாடினார். இவ்வாறு ஆண்டுக்கு ஒரு திருமந்திரமாக மூவாயிரம் ஆண்டு வாழ்ந்து தமிழ் மூவாயிரம் திருமந்திரம் பாடல்களை பாடி அருளினார். சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கிலும் சிறந்த திருமூலர் திருவருளால் திருக்கயிலை அடைந்து சிவபெருமானை எப்போதும் பிரியாது சிவன்தாள் சேர்ந்தார்.

திருவாவடுதுறை : மயிலாடுதுறையிலிருந்து கும்பகோணம் செல்லும் வழியில் இவ்வூர் உள்ளது. இதன் அருகில் 5 கி.மீல் உள்ள ஊர் சாத்தனூர் ஆகும்.

கருத்து : பக்குவப்பட்ட, தன்முனைப்பு அற்ற உயிரை இறைவன் வழி நடத்துகிறான் என்பதை திருமூலர் வரலாறு நமக்கு உணர்த்துகிறது. அகத்தியரை காணச்சென்ற யோகியை திருவாவடுதுறையிலேயே அமர்த்தி திருமந்திரத்தை நமக்கு தரச் செய்த திருவிளையாட்டை எண்ணிப்பாருங்கள்

திருமூலர் ஆண்டுக்கு ஒரு மந்திரம் பாடியதை மூவாயிரம் ஆண்டு சேகரித்து பாதுகாத்து வந்தனர் என்ற கருத்து ஏற்பதற்கு இல்லை. அடியவனின் கருத்து திருமூலர் ஆண்டிற்கு ஒன்றாக பாடிய திருமந்திரத்தை மூவாயிரம் ஆண்டிற்கு பின் இறைவன் திருவடிக்கு செல்லும் முன் ஒரே நேரத்தில் முழுவதையும் பாடியிருக்க வேண்டும். மேலும் திருமூலர் பற்றிய பல கேள்விகளையும் அதன் விளக்கங் களையும் எமது வினா விடை பகுதி இணைய தளத்தில் காணுங்கள்.

திருமூல நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

30. தண்டியடிகள் வரலாறு

திருவாரூரில் பிறக்கும் பெருமையுடையவரான தண்டியடிகள் பிறவிலேயே கண் இழந்து பிறந்தார். சிவபெருமானை எப்போதும் தன் மனதில் நினைக்கும் புண்ணியர். அவர் தினமும் திருவாரூர் திருக்கோயில் முன் வணங்கி, அப்பூங்கோயிலையும், திருக்குளத்தையும் சேர்ந்து வலம் வந்து வழிபடும் இயல்புடையவர். அவ்வாறு வலம் வரும்போது நமசிவாய என்ற திருஐந்தெழுத்தை தொடர்ந்து சொல்லிக்கொண்டே வலம் வருவார். அந்நாளில் சமணர்கள் திருக்குளத்தை சுற்றிலும் சமணப்பாழிகளையும் தங்களது வீடுகளை அமைத்துக் கொண்டனர். பின் சிறிது சிறிதாக குளத்தில் மண் கொட்டி வீடுகளை விரித்துக்கொண்டே வர குளம் சுருங்க ஆரம்பித்தது.

தினமும் வலம் வந்த பழக்கத்தால் தண்டி அடிகளார் இந்த ஆக்கிரமிப்பு ஏற்பட்டு வருவதை உணர்ந்து மிக வருந்தினார். இதற்கு முடிவுகட்ட மன உறுதியுடன் இரண்டு கொம்புகளையும், ஒரு நீண்ட கயிற்றினையும், மண்வெட்டி மற்றும் கூடைகளை எடுத்துக்கொண்டு திருவாரூர் கமலாலயக் குளத்தின் அருகே சென்று ஒரு கொம்பை குளத்தின் வெளியில் ஊன்றினார். மற்றொரு கொம்பை குளத்தின் உள்ளே ஊன்றி இவ்விரண்டு கொம்பையும் கயிற்றினால் கட்டி இணைத்தார். பின் மண் வெட்டியும் கூடையையும் கொண்டு குளத்தின் நடுவில் இறங்கி மண்

Koviloor Digital Library

எடுத்து கூடையில் நிரப்பி தான் கட்டிய கயிற்றினை பிடித்துக்கொண்டே குளத்தின் கரையின் மீது ஏறி அம்மண்ணை கொட்டுவார். இவ்வாறு தொடர்ந்து செய்வதை கண்ட சமணர்கள் தங்களது வீடு சரிந்து விழும் என்ற அச்சத்தில் தண்டி அடிகளிடம் வந்து (பின்னாளில் அப்பர் பெருமானை பலமுறை கொல்லத்துணிந்த சமணர்கள் சம்பந்த பெருமானை தொண்டர்களோடு தீ வைக்க துணிந்த சமணர்கள்) உயிர்களிடத்து அன்பு செய்வது போன்று நீ செய்யும் இக்காரியத்தால் மண்ணில் வாழும் பல உயிர்கள் இறக்குமே எனக்கூறி தடுத்தனர்.

ஆனால் தண்டியடிகள் தன் குளம் பெருக்கும் திருப்பணியை தொடர்ந்து செய்வதை கண்டு கோபத்துடன் உனக்கு கண் மட்டும் இல்லை. செவிடும் ஆனாயா? என பலவாறு தீயசொற்களை சொல்லுவதை கேட்ட தண்டியடிகள், சிவபெருமான் திருவருளால் நான் கண் பெற்று நீங்கள் கண் இழந்தால் என் செய்வீர்கள் என்று கேட்டார். அது கேட்ட அச்சமணர்கள் நீ வழிபடும் சிவபெருமான் அருளால் நீ கண் ஒளி கிடைக்கப் பெற்றால் அதற்குப்பின் இவ்வூரில் நாங்கள் அனைவரும் இருக்கமாட்டோம் என சத்தியம் செய்தனர். பின் அச் சமணர்கள் ஒன்று சேர்ந்து தண்டியடிகள் கட்டி இருந்த கயிறு கொம்பு எல்லாவற்றை பறித்து பிடுங்கி கூடைகளையும் வீசி எரிந்தனர். கொடிய செயலை தடுக்க இயலாத தண்டியடிகள் வெகுண்டு நேரே திருவாரூர் தியாகேசர் திருக்கோயில் முன் திருக்கோபுரத்தின் கீழ் நின்று ஐயனே! இன்று அச்சமணர்கள் என்னை அவமானம் செய்து

Koviloor Digital Library

விட்டார்கள். அதனால் மிகவும் மனம் தளர்ந்தேன். இது தீர அருள்புரிய வேண்டும் என்று சிவபெருமானிடம் வேண்டினார். பின் தன் இல்லம் சென்று இரவு தூங்கும்போது அகில முதல்வனார் கனவில் தோன்றி அச்சமணர்கள் கண் இழந்து இருப்பதை உன் கண்களால் காண்பாய் அஞ்ச வேண்டாம் என்றருளி,

அன்றிரவே "அந்நாட்டு அரசனின் கனவில் தோன்றி, தண்டியடிகள் திருக்குளம் வெட்டுவதை தடுத்த சமணர்களால் மிகவும் துயரம் கொண்டுள்ளான். நீ சென்று அவன் எண்ணுவதை முடிப்பாய்" என்று அருளினார்.

வேந்தன் அக்கனவினிலிருந்து மயிர் கூச்சரிப்ப விழித்து விடிந்தவுடன் விரைந்து தண்டியடிகளிடம் சென்று நடந்தவைகளை கேட்டு அறிந்த மன்னவன் சமணர்களை அழைத்து " தண்டி அடிகள் கண் பெற்றால், நாங்கள் அனைவரும் இத்திருவாரூர் விட்டு நீங்குவோம்" என்று கூறினீர்களா? என்று கேட்க சமணர்களும் சொன்னதை ஒப்புக் கொண்டனர். மன்னர் தண்டியடிகளிடம் பெருகும் தவத்தீர் தங்களின் கண் பெறுவதை காட்டுங்கள் எனக்கூற தண்டியடிகள் திருக்குளத்தில் இறங்கி 'நமசிவாய' என்ற திருஐந்தெழுத்தை ஒதியவாறே நீரில் மூழ்கினார். மூழ்கி எழுந்தவுடன் தூய மலர் கண் பெற்றார். தேவர்கள் பூ மழை பொழிந்தனர். சமணர்கள் அனைவரும் கண் இழந்தனர். சமணர்கள் தாங்கள் செய்த வாக்கின்படி அரசு ஆணை வழி அனைவரும் திருவாரூர் விட்டு நீங்கினர். மன்னவனும் குளத்தில் கட்டிய வீடுகளையும், சமண பாழிகளையும் அகற்றி

Koviloor Digital Library

குளத்தை முன்பிருந்த நிலையில் அமைத்து தண்டி அடிகளின் திருவடி பணிந்து சென்றபின் திருமாலும், பிரம்மனும் காணமுடியாத சிவபெருமானை பல காலம் துதித்து அஞ்செழுத்தை ஓதி மின்னுஞ் சடையராகிய சிவபெருமான் திருவடியை அடைந்தார்.

திருவாரூர் – மயிலாடுதுறை வழியே சென்று அடையலாம்.

கருத்து : அ. கண் இல்லாத தண்டியடிகள் இறைவனின் திருக்கோயில் ஆக்கிரமிப்புகளை அகற்றியுள்ளார். ஆனால் கண் இருந்தும் நாம் திருக்கோயில் குளத்தையும், நிலத்தையும் அபகரித்து கொண்டிருப்பதை கண்டும் காணாது இருக்கிறோம்.

ஆ. (2015) சென்னையில் கனமழை பெய்து, ஆற்றில் செல்ல வேண்டிய மழை நீர் நகரம் எங்கும் புகுந்து வெள்ளக் காடாக ஆனது. கீழ் தளத்தில் வசித்த அத்தனை பேரும் தங்களது உடமைகளை இழந்து வாழ்வு ஆதாரமின்றி தங்கள் ஊர்களுக்கும், மேல் தளத்தில் உள்ள உறவினர், நண்பர்கள் இல்லங்களுக்கு சென்றனர். பலர் அரசு பள்ளி, திருக்கோயில் களில் தஞ்மடைந்தனர். இதற்கு முக்கிய காரணம் ஆற்றின் அகலம் சுருக்கப்பட்டும், ஏரிகள் முழுவதும் மூடப்பட்டு ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டியது தான்.

தண்டியடிகள் நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

திருவாரூர் கமலாலயத் திருக்குளம்

இந்தியாவிலேயே மிகப்பெரிய திருக்கோயில் திருக்குளம்.
இக்குளத்தின் பரப்பளவு 5 வேலி ஆகும்.

Koviloor Digital Library

31. மூர்க்க நாயனார்

சென்னையின் ஒரு பகுதியான திருவேற்காடு என்ற பதியில் வேளாண்மை குடியில் மூர்க்க நாயனார் பிறந்தார். திருவேற்காடு நாதர் மீது பேரன்பு கொண்டும், தினமும் சிவனடியார்களுக்கு சிறப்பான விருந்தளித்தும் வந்தார். திருவருளால் சிவனடியார்களின் கூட்டம் அதிகரித்துக் கொண்டே சென்றது. இதனால் வறுமை அடைந்த நிலையில் தன்னிடம் இருந்த விளை நிலங்களையும், இல்லத்திலிருந்த பொருட்களையும், தனது திறமையினால் வென்ற பரிசுப்பொருள்களையும் விற்று தொடர்ந்து அடியவர்களுக்கு திருஅமுது செய்வித்து வந்தார். சில நாட்களில் திருஅமுது செய்யும் தொண்டு தொடர முடியாத அளவிற்கு பணம் இல்லாத நிலைமை ஏற்பட்டது.

திருத்தொண்டு செய்ய, தான் முன்பு கற்ற சூதாட்டத்தை கொண்டு பொருளீட்ட முடிவு செய்து சூதாட சென்றார். சூதாடும்போது முதலில் தோற்பது போல விளையாடி பின் எதிரில் விளையாடுபவர்கள் அதிக பணம் பிணையம் வைத்து ஆடும்போது வெற்றி கொள்வார். இதனால் நற்சூதன் என அழைக்கப்பட்டார். மேலும் சூதாடும்போது தோற்றவர்கள் பந்தயம் வைத்த பணத்தை தரமறுத்தால் தனது இடுப்பிலுள்ள உரையினில் இருந்து கத்தியை எடுத்து குத்தி விடுவார். எனவே இவரை மூர்க்கர் என்று அழைத்தனர். இவ்வாறு தொடர்ந்து ஒரே ஊரில் சூதாடியதால் அவ்வூரில் உள்ளோர் எவரும் இவரோடு சூதாட மறுத்தனர்.

Koviloor Digital Library

எனவே மூர்க்கர் வெளி ஊர்களில் உள்ள சிவாலயங்களை சென்று உள்ளம் உருகி வழிபட்டு பணிந்து அவ்வூரில் உள்ளோரிடம் சூதாடி வென்று பெறும் பணத்தை கொண்டு அவ்வூர் சிவனடியார்களுக்கு விருந்தளிப்பார். இவ்வாறாக பல ஊர் சென்று திருத்தொண்டு செய்து திருகுடந்தை (கும்பகோணம்) அடைந்தார். ஆதி கும்பேஸ்வரரை வணங்கி அவ்வூரில் மக்களிடம் சூதாடி அங்குள்ள அடியார்களுக்கு அமுது செய்வித்தார். எப்போதும் மூர்க்கர் அனைத்து சிவனடியாரும் சாப்பிட்ட பிறகே கடைசி பந்தியில் தான் அமர்ந்து திருஅமுது செய்வார். இவ்வாறாக பலகாலம் அடியவர்களுக்கு சோறும், நெய், காய்கறி கொண்டு சிறப்பாக தொடர்ந்து திருஅமுது அளித்து சிவபெருமானின் திருவடியில் சேர்ந்தார்.

திருவேற்காடு – சென்னையிலிருந்து பூந்தமல்லி செல்லும் வழியில் இவ்வூர் உள்ளது.

கருத்து: மூர்க்க நாயனார் தனது திருத்தொண்டு தொடர்ந்து நடைபெற அனைத்து செல்வங்களையும் இழந்து கடைசியில் வேறு வழியின்றி சூதாடும் முயற்சியில் ஈடுபட்டார். மேலும் ஒருவர் செய்யும் செயல் எந்த நோக்கத்திற்காக செய்யப்படுகிறது என்பதே முக்கியம். இறைவன் செயலின் நோக்கத்தினை மட்டுமே கொண்டு அவர்களுக்கு கருணை புரிகிறார். தனக்காகவும், தன் குடும்ப வாழ்வுக்காகவும் சூதினை ஆடக்கூடாது.

பொருள் கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள் கெடுத்து
அல்லல் உழப்பிக்கும் சூது. – திருக்குறள் 938

மூர்க்க நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

32. சோமாசி மாற நாயனார் வரலாறு

அம்பர் என்ற ஊரில் வேதம் ஓதும் அந்தண மரபில் பிறந்தார். அவர் சிவனடியார்களை கண்டால் அவர்களின் பாதம் பணிந்து தனது இல்லத்திற்கு அழைத்துச்சென்று அமுதூட்டும் இயல்புடையவராக இருந்தார் பிறவாயாக்கை பெரியோனாகிய சிவபெருமானை முன் வைத்து செய்யும் யாகத்தினை மட்டும் மகிழ்ந்து செய்து வந்தார். திருஐந்தெழுத்தை (சிவாயநம) தொடர்ந்து ஓதுவதே சிவபெருமானை அடையும் வழி என்ற உண்மையை உணர்ந்து தினமும் ஓதி வந்தார். வன்தொண்டரான (நம்பி ஆரூரன்) சுந்தரமூர்த்தி நாயன்மாரிடம் அன்பு கொண்டு அவர் ஊரான திருவாரூர் சென்று அவரின் பாதத்தை வணங்கி ஐம்புலன்களையும் வென்று ஆறு வகைக் குற்றமாகிய காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் ஆகியவைகளை கடந்து சிவருமான் திருவடியில் இன்புற்றார்.

அம்பர்: மயிலாடுதுறை – பூந்தோட்டம் சென்று 4 கி.மீ ல் இவ்வூர் உள்ளது. இப்பதியே அம்பர் பெருந்திருக்கோயில் ஆகும்.

குறிப்பு : வேதம் ஓதி, வெண் நூல் பூண்டு சிவவேள்வி செய்து, திருஐந்தெழுத்தை ஓதி வர இதன் பயனாக நல்ல குருவாக சுந்தரமூர்த்தி நாயனார் கிடைக்கப்பெற்று முக்தி பெற்றார். எனவே நாம் செய்ய வேண்டியது நம் உள்ளம் என்ற நிலத்தை ஒழுக்கம், பக்தி கொண்டு தூய்மை செய்தல் வேண்டும். தூய நிலத்தில் விதை தானாகவே வந்து அடையும். இறைவன் அத்தூய்மையான உள்ளத்தில் நன்கு பிரதிபலிப்பான்.

சோமாசிமாற நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

33. சாக்கிய நாயனார்

திருச்சங்க மங்கை என்ற ஊரில் வேளாளர் மரபில் பிறந்தார். பௌத்த மதத்தின் (புத்த மதம்) சார்புடைய குடும்பத்தில் பிறந்ததால், தூவாடை அணிந்து (சிகப்பு நிற ஆடை) வாழ்ந்து வந்தார். அவர் இம்மனித வாழ்வு நிலைத்த தன்மை உடையது அல்ல. எனவே எவ்வாறு இவ்வுயிர் நிலைத்த தன்மையை அடைவது என்ற வழியை ஆராயும் பொருட்டு காஞ்சிபுரம் சென்று மாயப்பிறப்பறுக்கும் தத்துவத்தின் வழியை அறியும் பொருட்டு பல சைவ சித்தாந்த விளக்க நூல்களை படித்தார். அதன் வழி ஈசர் அருள் கூட்ட சிவ நன்நெறியே உண்மை நெறி என்பதை உணர்ந்தார்.

“எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும் மன்னியசீர்ச் சங்கரன் திருவடி மறவாமையே பொருள்” என்றே தனது தூவாடை வேடத்தை மாற்றாமல் நீண்ட நாகம் அணிந்த சிவபெருமானை நினைவு படுத்தும் அடையாளமான சிவலிங்கத் திருமேனியை வழிபடும் ஆவலை மனதில் கொண்டவரானார். எனவே தினமும் சிவலிங்கத்தை கண்ட பிறகே உணவு உட்கொள்ளும் வழக்கத்தை கொண்டு வாழ்ந்தார். ஒருநாள் வெட்ட வெளியில் ஒரு சிவலிங்கத்தை கண்டார், கண்டவுடன் மிக மகிழ்ந்து தன்னிலை மறந்து பதைப்போடு அருகிலிருந்த கல் ஒன்றை எடுத்து அச்சிவலிங்கத்தின் மீது எறிந்தார். அடங்காத ஆர்வத்தால் சாக்கியர் செய்த இச்செயல், மற்றவர்கள் இகழ்வதாக இருந்தாலும் நீண்ட சடை உடைய சிவபெருமான் மகிழ்ந்தார்.

Koviloor Digital Library

சாக்கியரும் தாம் செய்த கல் எறியும் செயல் சிவபெருமான் அருளாலே என உணர்ந்து தினமும் இச்செயலை தொடர்ந்து செய்த பின் உணவு கொள்வார். ஒருநாள் சிவன் அருளால் மிகப் பசியினால் கல் எறிவதை மறந்து உணவு உட்கொள்ள தனது இல்லத்திற்குள் சென்று உணவின் முன் அமரும்போது கல் எறிவதை மறந்தது நினைவுக்கு வர உடனே உணவினை உண்ணாது எழுந்து வேட்கையோடு கல் எடுத்து கொண்டு ஓடி வர சிவபெருமான் உமையுடன் விண்ணில் திருக்காட்சி கொடுத்தார். அத்திருக்காட்சியை கண்ட சாக்கிய நாயனார் இரு கைகளை குவித்து இறைஞ்சி நிலமுற (பூமியில்) விழுந்து வணங்க, சிவபெருமான் என்றும் தம்முடன் இருக்குமாறு வீடுபேறு அளித்து சிவலோகத்தில் சேர்த்தார்.

திருச்சங்கமங்கை : காஞ்சிபுரம் அருகே புத்தகரம் என்ற பெயருடைய ஊராக இருக்கலாம்.

கருத்து : பிற சமயங்களில் வாழ்ந்தாலும் சிவபெருமான் மீது முழு பக்தியுடனும், நம்பிக்கையோடும் வணங்குபவர்களே உண்மையில் சிவனடியார்கள். சிவநெறியில் வாழ்வது போல திருநீறும் கண்டிகையும் அணிந்து கொண்டு சுவாமி மீது முழு நம்பிக்கை இல்லாமல் வாழும் அன்பர்களே உண்மை சாக்கியர்கள் ஆவார்கள்.

சாக்கிய நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

34. சிறப்புலி நாயனார் வரலாறு

திருஞானசம்பந்த பெருமான் பாடல் பெற்ற திருத்தலம் அமைந்துள்ள திருஆக்கூர் என்ற ஊரில் வேதியர் மரபில் பிறந்த அவர் தன்னிடம் வறுமையால் பொருள் வேண்டி வருபவர்களுக்கு இல்லையென்று கூறாது கொடுத்து உதவும் தன்மையுடையவராக வாழ்ந்து வந்தார். திருஐந்தெழுத்து ஓதியும் (சிவாய நம) நஞ்சணிகண்டர் பாதம் சேரும் விருப்பம் கொண்டு சிவவேள்வி செய்தும், சிவனடியார்கள் அவரை காண வந்தால் அவர்களை வணங்கி இனியவை கூறி நல்அமுது கொடுத்து நிதியை அவர்களுக்கு மழை போல வழங்கி, பல காலம் வாழ்ந்து சிவபெருமான் திருவடியில் சேர்ந்தார்.

திருஆக்கூர் : மயிலாடுதுறையிலிருந்து பொறையாறு செல்லும் வழியில் ஆக்கூர் உள்ளது. கோச்செங்கண்ணாயனார் திருப்பணி செய்த மாடக்கோயில். சுவாமி சுயம்பு, சம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற திருத்தலம். உற்சவமூர்த்தி சுவாமி பெயர். "ஆயிரத்தில் ஒருவர்"

கருத்து : அந்தணர் மரபின் உயர்ந்த குணங்களில் ஒன்று ஈகை ஆகும். அந்தணர்கள் தாம் ஓதிவரும் மந்திரத்தை மறந்தாலும் தவறில்லை ஆனால் பிறப்பு ஒழுக்கத்தை கடைபிடித்தல் முக்கியம் என்பது திருவள்ளுவரின் வாக்கு. எனவே இறைவனுக்கு அகம்படித் தொண்டு செய்யும் அந்தணர்களின் ஒழுக்கத்தை பார்த்தே மற்ற குலத்தவர் மேம்படுவர்.

சிறப்புலி நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

35. சிறுத்தொண்ட நாயனார் வரலாறு

திருச்செங்காட்டங்குடி என்ற ஊரில் மருத்துவ தொழில் புரியும் மரபான மாமாத்திரர் என்ற குலத்தில் பரஞ்சோதியார் பிறந்தார். குதிரை ஏற்றம், யானை ஏற்றம், போர்கலை, மருத்துவம், வடமொழி அறிவு போன்ற கலைத்துறையில் நிரம்ப பயின்றார். சிவபெருமான் திருவடியை பள்ளத்தை நோக்கி பாயும் நீரின் இயல்பு போல் எப்போதும் நினைத்து வந்தார். அதன் பயனாக ஈசன் அடியார்களுக்கு தேவையானவைகளை செய்து வந்தார். மேலும் மன்னவனின் நண்பராக இருந்ததால், அம் மன்னன் வடக்கு தேசத்தில் வாதாபி என்ற நகரத்திற்கு படையெடுத்து செல்லும்போது பரஞ்சோதியாரை அழைத்தார். பரஞ்சோதியாரும் உடன் சென்று யானை மீது ஏறி போர் புரிந்து பல வெற்றிகளை பெற்றார்.

மன்னரும் பெரிதும் மகிழ்ந்து பரஞ்சோதியாரை அமைச்சர்கள் முன் புகழ்ந்து பேசினார். அதுகேட்ட அமைச்சரில் ஒருவர் பரஞ்சோதியாரின் சிவபக்தியையும், அவர் சிவனடியார்களுக்கு செய்துவரும் தொண்டினையும் மன்னவருக்கு எடுத்துக் கூறினார். அதுகேட்ட மன்னவர் பரஞ்சோதியாரை வணங்கி, நீங்கள் செய்து வந்த சிவத்தொண்டை அறியாது உங்களை போர் முனையில் ஈடுபடுத்தி விட்டேன் இதனை பொறுத்தருள வேண்டும் என்று கூறி நிறைய பொன்னும் பொருட்களையும் கொடுத்து உங்கள் ஊருக்கு சென்று சிவத்தொண்டை தொடர்ந்து செய்யுங்கள் என விடை கொடுத்து அனுப்பினார். பரஞ்சோதியாரும்

Koviloor Digital Library

மன்னவனிடம் விடைபெற்று, விநாயகர் வழிபட்டு பேறு பெற்ற ஊரான திருச்செங்காட்டங்குடி வந்து அருள்மிகு கணபதீஸ்வரரை வழிபட்டு முன்பு செய்தபடியே திருத்தொண்டு செய்து வந்தார். அந்நாளில் குற்றமற்ற குடியில் பிறந்த வெண்காட்டு நங்கை என்ற பெண்ணை மணந்து தூய இல்லறம் துவங்கினார். தனது இல்லத்தில் தினமும் சிவனடியாரை அழைத்து வந்து முதலில் சாப்பிட வைத்த பின் தான் உண்ணும் வழக்கத்தை கொண்டு வாழ்ந்து வந்தார். அறுசுவையுடன் நெய், பால், தயிர், கனிவகைகளுடன் திருஅமுது கொடுத்து வந்ததால் சிவ அன்பர்கள் அதனை உண்டு மிக மகிழ்ந்து சென்றனர். அடியவர்களை கண்டால் மிக பணிந்து தன்னை மிகச் சிறியராய் தாழ்த்திக் கொண்டு அவர் முன் நிற்பார். அதனால் இவரை சிறுத்தொண்டர் என்று மக்கள் அழைத்து வந்தனர்.

இந்நாளில், ஆறுசேர் செஞ்சடை வேதியரான சிவபெருமான் அருளாலே சிறுத்தொண்டர்க்கு சீராளன் எனும் மகன் திருஅவதாரம் செய்தார். திருச்செங்காட்டங்குடியே விழாக்கோலம் பூண்டது மங்கள இசை முழங்கியது. சிறுத்தொண்டர் சிவனடியார்களுக்கு நிதி அளித்து பெருமகிழ்ச்சி பொங்க நெய் ஆடி விழாவை சிறப்பாக நடத்தினார். சீராளனுக்கு மூன்று ஆண்டுகள் நிறைவடைந்தவுடன் தலைமுடி நீக்கும் மங்களவிழா செய்து கல்வி பயில பள்ளிக்கூடத்தில் சேர்த்தனர். அந்நாளில் திருஞானசம்பந்தர் திருச்செங்காட்டங்குடி வருவதை அறிந்த சிறுத்தொண்டர் மிக மகிழ்ந்து அவரை வரவேற்று தனது இல்லத்திற்கு அழைத்து திருஅமுது செய்வித்தார். இவ்வாறாக அடியவர்களுக்கு செய்து வந்த திருத்தொண்டிற்கு மகிழ்ந்த

Koviloor Digital Library

சிவபெருமான், சிறுத்தொண்டர்க்கு திருவடிபேறு நல்க, கயிலையிலிருந்து இடது கையில் சூலமும், வலது கையில் உடுக்கையும் திருமுகத்தில் புன்சிரிப்பும் கொண்டு கயிலையை விட்டு பயிரவ சங்கம வேடம் கொண்டு திருச்செங்கட் குடியிலுள்ள சிறுத்தொண்டரின் வீட்டிற்கு சென்று அடியார்க்கு தினமும் சோறு அளிக்கும் திருத்தொண்டரின் வீடு இதுதானா? எனக்கேட்டார். அதுகேட்ட சந்தனத்தார் என்ற வீட்டு வேலையாலும் திருவெண்காட்டு அம்மையும் அடியவரை வணங்கி சிறுத்தொண்டர் சிவனடியாரை அழைத்து வர சென்றுள்ளார் தாங்கள் வீட்டின் உள்ளே வந்து அமருங்கள் என்று கூறியதை கேட்ட சிவனடியாராக வந்த சிவபெருமான் யாம் உத்தரா (வடக்கு) பதியிலிருந்து சிறுத்தொண்டரை காணவே வந்தோம். பெண்கள் தனித்து இருக்கும் வீட்டில் யாம் புகமாட்டோம். எனவே திருகணபதீச்சரம் கோயிலில் உள்ள ஆத்தி மரத்தின் கீழ் இருப்போம் என்பதை சிறுத்தொண்டர் வந்தால் சொல்லுங்கள் என்று கூறி திருக்கோயில் சென்று ஆத்தி மரத்தின் கீழ் அமர்ந்திருந்தார்.

சிறுத்தொண்டர் எல்லா பக்கமும் தேடியும் சிவனடியார்கள் எங்கும் காணாது வீடு திரும்பி தனது ஆரா அன்பின் மனைவியாரிடம் சென்று அடியவர்கள் தேடியும் கிடைக்கவில்லை என்று சொல்ல அதுகேட்ட வெண்காட்டு நங்கை மாவிரதி கோலத்துடன் சிவனடியார் ஒருவர் தமது இல்லம் வந்து, தான் திருக்கோயில் ஆத்திமரத்தின் கீழ் இருப்பேன் என்று கூறி சென்றார் என்று கூறியதை கேட்ட சிறுத்தொண்டர் மிக விரைந்து திருக்கோயில் சென்று உத்திராபசுபதியாரை வணங்கி நின்றார். சிறுத்தொண்டரை

Koviloor Digital Library

கண்ட திருவேடத்தார், "நீரோ பெரிய சிறுத்தொண்டரோ?" என இறைவன் திருவாய் மலர்ந்து உரைத்தார். சிறுத்தொண்டர் திருவேடத்தாரை தனது இல்லத்தில் திருஅமுது செய்ய அழைத்தார். அதற்கு பெரிய பயிரவக் கோலப்பெருமான் நான் ஆறு மாதத்திற்கு ஒருமுறையே பசுவை சாப்பிடுவேன் என கூற சிறுத்தொண்டரும் அது எத்தகைய பசுயென கேட்க, யாம் கூறும் பசு, நரப்பசுவாகும். அதுகேட்ட சிறுத்தொண்டர் நீங்கள் கூறுவது போல் திருஅமுது செய்கிறேன் அடியார் கிடைத்தால் முடியாத காரியம் இல்லை அது பற்றி விபரமாக கூறுங்கள் எனக் கேட்டார். திருவேடத்தார், தாய் தந்தையர்க்கு ஒரு மகனாகவும், உறுப்பில் எந்த ஊனமின்றியும் ஐந்து வயது நிரம்பாமலும் இருக்கும். அச்சிறுவனை மனமுவந்தே தாய் பிடிக்க தந்தை அரிய சமைத்த கறி தான் யான் உண்பது என மொழிந்தார். அதுகேட்ட சிறுத்தொண்டர் திருவேடத்தாரை வணங்கி இச்செயல் பெரிதன்று, விரைவில் நீங்கள் சொன்னபடி திருஅமுது தயார் செய்து வருகிறேன் என்று கூறி தன் இல்லம் சேர்ந்தார்.

தன் கற்பின் திறம் மிக்க மனைவியாரிடம் சென்று பயிரவத் தொண்டர் தமக்கு அருளிச் செய்த வகையினை கூறினார். மேலும் எத்தனை பணம் கொடுத்தாலும் தான் பெற்ற ஒரே மகனை யாரும் தரமாட்டார்கள் மற்றும் மகிழ்ந்து அரிய மாட்டார்கள் எனவே நாம் பெற்ற பிள்ளை இச்செயலுக்கு உட்படுத்துவோம் எனக் கூறினர். அது கேட்ட வெண்காட்டு நங்கை அதற்கு இசைந்து நம்மை காக்க வந்த அருமணியை பள்ளியினிற் சென்று அழைத்து வரும்படி கூறினார். பள்ளியிலிருந்து வந்த சீராளனை தழுவி,

Koviloor Digital Library

தலைமுடியை சீவி, முகம் துடைத்து, கழுத்திலுள்ள ருத்ராட்சமணியை நீக்கி அரை நாண் அறுத்து நீக்கி, திருமஞ்சனம் ஆட்டி (குளிக்க வைத்து) அழகு செய்து தனது கணவரின் கையில் கொடுத்தார் இருவரும் உலகத்தார் யாரும் காணாத இடத்திற்கு தூய்மை செய்த பாத்திரங்களையும் எடுத்துக் கொண்டு சென்றனர். இனிய மழலையின் கால் இரண்டையும் வெண்காட்டு மங்கை தனது மடியில் இடுக்கிக் கொண்டும் கைகளை தன் கையால் பிடிக்க சிறுத்தொண்டரும் சிரித்தவாறு அரிய வருவதை கண்டு சீராளனும் சிரித்தார். எவராலும் செய்யமுடியாத செயலை சிறுத்தொண்டர் கருவி கொண்டு தன் மகனின் தலையை அரிந்தார். அறுத்த தலை திருஅமுதுக்கு ஆகாதுயென அதனை தவிர்த்து மற்றைய உறுப்புகளை சமைக்க ஏற்றவாறு வெட்டித் தருமாறு தனது பணியாளரான சந்தனத்தாரிடம் கொடுத்தார்.

அப்பணிப்பெண்ணும் சீர் செய்து கொடுத்த கறியினை வெண்காட்டு நங்கை சமைத்து முடித்து தனது கணவரிடம் சமைத்து முடித்ததை கூறினார். சிறுத்தொண்டரும் விரைந்து ஆத்தியின் கீழ் அமர்ந்திருந்த புனிதர் முன் சென்று தாங்கள் சொன்னபடி சமைத்தோம் எழுந்தருள வேண்டும் என அழைத்தார்.

பயிரவ வேட அடியார் சிறுத்தொண்டர் இல்லத்திற்கு எழுந்தருள, வெண்காட்டு நங்கையார் அவரை ஆசனத்தில் அமர்த்தி, தூய நீர் எடுத்து பாதத்தின் மேல் ஊற்ற, அந்நீரால் சிறுத்தொண்டர் தனது கையினால் பாதத்தை தொட்டு கழுவிய பின் அந்நீரை தன் தலையில் தெளித்துக் கொண்ட

Koviloor Digital Library

பின் அந்நீரை இல்லம் எங்கும் தெளித்தார். திருப்பாதத்திற்கு மலரிட்டு, சாந்திட்டு, தூப தீபங்கள் செய்து அடியார் பூசனையை செய்தார்.

புதிய துணி விரித்து அதன் மேல் வாழை இலையிட்டு சமைத்த சோறு, கறிவகைகள், பானங்கள் (குடிப்பது) அத்தனையும் பரிமாறி தலைக்கறி மட்டும் தவிர்த்தோம் எனக் கூறக்கேட்ட பைரவ வேடத்தார் தலைக்கறி யாம் உண்பேன் என கூறக்கேட்ட சிறுத்தொண்டர் மிக கலங்கி தன் மனைவியை நோக்கி திகைக்க சந்தனத்தார் வந்து அடியார் ஒருவேளை தலைக்கறி கேட்பார் என்று அதனை சமைத்து வைத்துள்ளேன் என்று அதனை கொடுக்க சிறுத்தொண்டர் முகம் மலர்ந்தார். அதனையும் வாங்கி படைத்தனர். மாவேடத்தார் சிறுத்தொண்டரை நோக்கி அடியவரொடு சேர்ந்து தான் சாப்பிடுவேன். எனவே சிவனடியாரை அழைத்து வா என கூறியதைக் கேட்ட சிறுத்தொண்டர் கெட்டேன் அடியார் அமுது செய்ய இடையூறு வருகிறதே எனத் திகைத்தார். இல்லத்திலிருந்து வெளியே ஒடி அங்கும் இங்கும் திரிந்து சிவனடியார் யாரும் காணாது திரும்பி வந்து திருநீறு இடும் சிவ அன்பர்களை கண்டு நானும் இடுவேன் எனவே என்னையும் ஒரு சிவ அன்பராக ஏற்று அருள்வீர் என இறைஞ்ச, திருவேடத்தார் ‘‘உம்மை போல நீரிட்டார் உளரோ? உண்பீர் நீர்’’ யென கூற திருவெண்காட்டு நங்கை வாழை இலையிட்டு சோறிட்டு அதில் மகன் இறைச்சியில் செய்த கறியையும் பரிமாற அந்த இறைச்சி கலந்த சோற்றை உண்ண முற்பட திருவேடத்தார் உண்ண விடாது தடுத்து

Koviloor Digital Library

கையை பிடித்து, ஆறு மாதத்திற்கு ஒருமுறை சாப்பிடும் நானே சாப்பிடாது இருக்க, தினமும் சாப்பிடும் நீ எனக்கு முன் சாப்பிடுவது சரியா? என்னுடன் சாப்பிட உங்களுக்கு மகன் இருந்தால் அழையுங்கள் என்று கூற, “இப்போது உதவான் அவன்” என்றார்கள். திருவேடத்தார் நான் உண்ண வேண்டுமானால் உங்கள் மகனை இல்லத்தின் வெளியே சென்று அழையுங்கள் என்று கூற இருவரும் சிவனடியார், (தலைவர்) சாப்பிட நாம் எது சொன்னாலும் செய்ய வேண்டும் என்று இல்லத்திலிருந்து வெளியே வந்த சிறுத்தொண்டர் “மைந்தா வருவாய்” என அழைத்தார்.

உடனே அவருடன் இருந்த வெண்காட்டு நங்கை “செய்ய மணியே சீராளா! நாம் உய்யும் பொருட்டு அவருடன் சேர்ந்து உண்ண சிவனடியார் அழைக்கிறார் வருவாய் என ஓலமிட, பரமர் அருளால் பள்ளியில் இருந்து ஓடி வருவான் போல வந்த சீராளனை தழுவி, அணைத்து தன் கணவனார் கையிற் கொடுத்து மகிழ்ந்தார். இருவரும் விரைந்து திருவேடத்தார் உடன் சீராளனை அமர்த்தி அமுது செய்விக்க வேண்டும் என்று இல்லத்துள் வர அங்கு பயிரவ வேடம் கொண்டு வந்த சிவபெருமான் மறைந்து அருளினார்.

இறைச்சி, கறி, சோறும் வாழை இலையில் காணாது அதிசயம் அடைந்தனர். வந்த பயிரவர் சென்றது எங்கே? எனத் தேடி மையல் கொண்டு இல்லத்திலிருந்து வெளிவர விண்ணில் உமையுடனும், முருக வேளோடும் சுவாமி காட்சி அளித்தார். கணநாதர்கள், முனிவர், அமரர், விண்ணோர் அனைவரும் போற்றி இசைக்க, சிறுத்தொண்டர் தன் குடும்பத்துடன்

Koviloor Digital Library

பரவசமாய் மனமுருக விழுந்து வணங்கினார். சிறுத்தொண்டர், மனைவியார், மகனார், பணிப்பெண் ஆகிய நால்வருக்கும் சிவபெருமான் தன்னை என்றும் பிரியாது இருக்கும்படியான திருவடிப் பேற்றினை நல்கினார்.

திருச்செங்காட்டங்குடி : மயிலாடுதுறை – சன்னா நல்லூர் வழி திருப்புகலூர் அடைந்து எதிர் வழி ஐந்து கி.மீ. ஊர் உள்ளது.

கருத்து : இவ்வுலகத்திலே உள்ள துன்பத்திலியே மிகப்பெரிய துன்பம் எதுவென்றால் அது பெற்ற மகனை இழப்பது தான். அப்படிப்பட்ட துன்பத்தை அடைந்தாலும், சிவனடியார்க்கு வேண்டியதை செய்யும் சிறுத்தொண்டரின் உறுதியை நினைந்து பார்த்தால், நாம் ஒவ்வொருவரின் இறை பக்தியும் கேள்விக்குறிதான்.

சிவனடியார் மீது அன்பில்லையேல் சிவன் மீது அன்பில்லை என்றேயாகும். திருவெண்காட்டு நங்கை போன்ற குணமுடைய மங்கை ஒருவனுக்கு கிடைக்கப் பெற்றால் அப்பிறவியில் அவன் சத்தியமாக சிவன்கழல் அடைவான்.

கூர் ஆரல் இரை தேர்ந்து குளம் உலவி வயல் வாழும்
தாராவே மடநாராய் தமியேற்கு ஒன்று உரையீரே
சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங்குடி மேய
பேராளன் பெருமான்தன் அருள் ஒருநாள் பெறலாமே

– திருஞானசம்பந்தர்

சிறுத்தொண்ட நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

36. கழறிற்றறிவார் நாயனார் வரலாறு

சேரர் குலம் ஆட்சி செய்யும் மலை நாட்டில் திருஅஞ்சையப்பர் அருள்பாலித்து வரும் திருஅஞ்சைக்களம் என்ற சிவாலயத்தின் அருகில் எல்லா சிறப்புக்களிலும் சிறந்து விளங்கி, சைவ திருமடங்கள் நிறைந்து, செல்வம் ஓங்கிய கொடுங்கோளூர் என்ற ஊரில் அரன் அருளால் சேரர் குலத்தில் பிறந்தார். அவரின் பெயர் பெருமாக்கோதையார் ஆகும். உலக இயல்பும் அரசியல் வாழ்வும் நிலை அல்ல என்று தெளிந்து தனக்கு உரிமையுடைய அரச தொழில் புரியாது சிவன் கழலே உண்மையென்று உணர்ந்து பெரும்புலர் காலையில் நீராடி திருநீறு அணிந்து திரு அஞ்சையப்பர் திருக்கோயிலை தினமும் பெருக்கியும் (அலகிடுதல்) நீரினால் மெழுகியும், நந்தவனத்து பணிகள் செய்தும் மலர் எடுத்து பூமாலை இறைவர்க்கு தொடுத்தும் பிற திருப்பணிகள் செய்து பின் விருப்பத்துடன் திருப்பாட்டு பாடுவார். இவ்வாறு மகிழ்ந்து வரும் நாளில், அவ்வூரின் சேரகுல மன்னவனாகிய பொறையன் உலக வாழ்க்கையை பொய்யென உணர்ந்து சிவன் கழலே மெய்யென்று தவம் செய்ய காட்டிற்கு சென்றான்.

இந்நிலையில் மதி நிறைந்த அமைச்சர்கள் ஒன்றுகூடி சில நாட்கள் ஆய்ந்து சேர குலத்தில் பெண் வழி அரசுரிமை

Koviloor Digital Library

உடைய பெருமாக்கோதையாரை மன்னவராக்க முடிவு செய்து, அமைச்சர்கள் திருக்கோயிலுக்கு சென்று பெருமாக் கோதையாரை வணங்கி, சேர மன்னவராக முடிசூட்டி அருள வேண்டினர். இன்பம் பெருகும் திருத்தொண்டிற்கு இடையூறு வருமே என நினைத்த பின் சிவபெருமானின் திருவருள் ஆணையின் வழி நடப்பேன் என்று திருக்கோயிலுக்கு உள் சென்று முதல்வர் பாதம் வணங்கி விண்ணப்பம் செய்தார். இறைவன் திருவாக்கால், அரசு உரிமையையும் ஏற்று, திருத்தொண்டையும் புரிந்து, எல்லா உயிரும் (கழறினவும்) பேசும் ஒலியை வைத்து அதன் பொருளை அறியும் அறிவினையும் வழங்கினார் சிவபெருமான். அன்றிலிருந்து இவருக்கு சிறப்புப் பெயராக கழறிற்றறிவார் என அழைக்கலாயினர்.

திருக்கோவிலிருந்து வெளிவந்த பெருமாக்கோதையார் அமைச்சர்களிடம் சேரகுல மன்னனாக பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறியதை கேட்ட அமைச்சர்கள் மிக மகிழ்ந்து பணித்தனர். நல்ல நாள் பார்த்து சுப ஓரையில் முடிசூட்டினர். மன்னரானவுடன் முதலில் திருஅஞ்சையப்பரை வணங்கிய பிறகு யானை மீதேறி ஊர்வலம் வந்தார்.

சேரமான் பெருமான் துணி வெளுப்பவரை வணங்குதல்

துணி மூட்டைகளை தூக்கிக் கொண்டு (துணி துவைப்பவர்) ஒருவர், தனது உடலில் உவரி மண் ஒட்டிக் கொண்டு இருக்க மழை பொழிந்து அவ் உவரி மண் கரைந்ததால் அவர் உடல் வெளுத்த வண்ணம் இருந்தது. எங்கும் சிவமாக பார்க்கும் இயல்புடைய சேரமான் அவ்வண்ணான் உடம்பெல்லாம் திருநீறு பூசிய சிவனடியார்

Koviloor Digital Library

போல இருப்பதை கண்டு யானையின் மீதிருந்து இறங்கி விரைந்து சென்று அவ்வண்ணானை வணங்கினார்.

சேரர் பெருமான் வணங்கியதை கண்ட வண்ணான் சிந்தை கலங்கி முன் வணங்கி அடியவன் தங்களின் ஆணைப்படி பணி செய்யும் அடி வண்ணான் எனக் கூறினார். அம்மொழி கேட்ட சேரமான், உங்கள் உடல் முழுவதும் திருநீறு பூசியது போன்றத் தோற்றம், கங்கையை ஒரு சடையில் தாங்கிய சிவபெருமானின் அடியவரை நினைவு செய்தீர்கள். ஆகவே உங்களை வணங்கினேன் என்று மொழிந்தார்.

ஆடல் வல்லானின் திருப்பாத சிலம்பு ஒலி சிவபூஜையில் ஒலித்தல்

அரண்மனை சென்று தேடும் பொருள்களும், பெரிய துணையும் தில்லை கூத்தப் பெருமானே என்ற உறுதியில் நடராஜபெருமானின் திருஉருவத்தை வைத்து தினமும் வழிபட்டு வந்தார். பெருமானுக்கு தினமும் அபிஷேகம் செய்து மலரிட்டு, தூபம், தீபம், திருஅமுதும் செய்து வர அது கண்டு மிக மகிழ்ந்த ஆனந்த கூத்தர் தனது பாதச்சிலம்பின் ஓசையை சேரமான் கேட்கும்படி ஒலித்தார். சிவபூசையை தினமும் செய்து வந்ததால் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பார். மக்களுக்கு பல நன்மைகளை செய்து தேவர்கள் போற்றும்படியாக வேள்விகளையும் செய்து வந்தார்.

பாணபத்திரனார்க்கு இறைவன் பெருஞ்செல்வம் தரும்படி சேரமானுக்கு பணித்தல்

மதுரையில் எழுந்தருளியுள்ள சொக்கநாத பெருமான் மீது பக்தி பாடல்களை பாடி வரும் பாணபத்திரர் என்பவர்க்கு

Koviloor Digital Library

பெருஞ் செல்வம் வழங்க இறைவன் திருஉள்ளம் கொண்டு இரவு பாணபத்திரரின் கனவில் எழுந்தருளி பாண பத்திரரே! என்மீது மிகுந்த அன்புடையவராக விளங்கும் சேரமானிடம் நீர் விரைந்து செல்வீராக! அவர் உமக்கு பொன்னும், பட்டாடையும், நவமணிகளும் குறைவின்றி கொடுத்து அனுப்புமாறு கடிதம் எழுதி (திருமுகம்) உமக்கு தருகிறேன் என்று சிவபெருமான் 'மதிமலி புரிசை' எனத் தொடங்கும் பாடலை எழுதி (இக்கடிதம் பதினொன்றாம் திருமுறையில் முதல் பாடலாக உள்ளது) திருமுகம் தர, அக்கடிதத்தை பாணபத்திரர் தலைமீது வைத்துக்கொண்டு சேரமானைக் காண, மலைநாடுக்கு சென்று கொடுங்களூரில் உள்ள சேரமானின் மாளிகை முன் நின்று தன் வருகையினை மன்னவருக்கு தெரிவித்தார். அச்செய்தியை கேட்ட மன்னவனும் கையினை தலைமேற் கொண்டு பேரன்பால் கண்ணில் நீர் வழிய, அரண்மனையை விட்டு வெளியே வந்து பாணபத்திரரின் பாதத்தை பலமுறை பணிந்து இறைவன் கொடுத்தருளிய திருமுகத்தை பெற்று தலை மேற்கொண்டு, ஆனந்தக் கூத்தாடி, வாய்மொழி குழறி கண்ணீர் வழிய பூமியின் மேல் பல முறை விழுந்து வணங்கி எழுந்தார்.

பின் தனது சுற்றத்தார்களை அழைத்து பாணபத்திரரை அறிமுகம் செய்து, தனது பண்டாரத்திலிருந்து (கஜானா) பொன்னும், மணியும், பொற்காசுகளும் பெருஞ்செல்வத்தையும் யானைகளையும், குதிரைகளையும் கொடுத்து தனது அரசாட்சியினையும் ஏற்கும்படி வேண்டினார்.

பாணபத்திரர் அதிசயத்து சிவபெருமான் எனக்கு கொடுத்த கடிதத்தில் உள்ளது தவிர வேறு எதுவும் ஏற்க

Koviloor Digital Library

இயலாதுயென கூறியதை கேட்ட சேரமானும் சிவபெருமானின் அருள் ஆணையை ஏற்று, பெருஞ்செல்வத்தை யானை, குதிரை மேல் ஏற்றி பாணபத்திரரை தனி யானை மீது ஏற்றி மதுரைக்கு வழி அனுப்பி வைத்தார். அத்தனை உயிர்களும் பேசும் ஒலியை புரிந்து கொள்ளும் ஆற்றலுடைய கழறிற்றறிவாராகிய சேரமான் பெருமான் மிகச்சிறந்த ஆட்சி செய்து வரும் நாளில்,

சிவபூசையில் இறைவனின் பாதச்சிலம்பொலி கேளாது போகவே தன்னை மாய்த்துக் கொள்ள துணிதல் :

சேரமான் காலையில் நீராடி, சடையனார்க்கு தினமும் செய்து வரும் சிவபூசையில் இறைவன் பாத சிலம்பு ஓசை ஒலிப்பார் என்பதை முன்னரே கண்டோம். ஒருநாள் சிவபூசையின் பாத சிலம்பு ஒலி கேட்காமல் போகவே, பூசையை விரைந்து முடித்து சிவபூசையில் என்ன பிழை செய்தேனோ என அஞ்சி தன்னை மாய்த்துக் கொள்ள முடிவு செய்து தன் வாளால் மார்பின் மேல் குத்த முற்பட இறைவன் பாதசிலம்பு ஓசையை மிகவும் வேகமாக ஒலிக்க கேட்டார். சேரமான் அவ்வோசை கேட்டு உடைவாளை விடுத்து, இறைவன் திருப்பாதத்தில் விழுந்து வணங்கி, சுவாமியிடம் சிவபூசையின் போது பாத சிலம்பொலி ஒலிக்காதது ஏன்? எனக் கேட்க சிவபெருமான், அசிரீரியாக தில்லை (சிதம்பரம்) சிற்றம்பலத்தில் எமது ஆனந்த கூத்தினை வணங்கி வன்தொண்டராகிய சுந்தரர் ஒன்றிய உணர்வுடன் எம்மை போற்றி, பாடிய திருப்பதிகத்தை நின்று கேட்டு வர தாழ்ந்தோம் என்று உரைக்க, சேரமான் பெருமானுக்கு சுந்தரமூர்த்தி

Koviloor Digital Library

சுவாமிகளை (நம்பி ஆரூரன்) பார்க்க வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. ஒரு நல்ல நாள் பார்த்து சுப ஓரையில் தனது மாளிகையிலிருந்து புறப்பட்டு திருஅஞ்சையப்பரை வணங்கி, அமைச்சர்களுக்கு எல்லாம் விடைகொடுத்து கொங்கு நாடு கடந்து சோழநாடு புகுந்து பொன்னி ஆற்றில் புனித நீராடி தில்லை (சிதம்பரம்) மூதூரின் எல்லையில் இருந்தவாறே வணங்கியபின் ஏழு நிலை கோபுரத்தை அடைந்து நிலத்தில் விழுந்து வணங்கி, கண்ணீர் மல்க திருப்பேரம்பலத்தை வணங்கி உள் சென்று சோதியுள் சோதியாக அண்டமெல்லாம் நிறைந்து நின்று ஆடும் திருச்சிற்றம்பலம் முன் நின்று பெருங்கூத்தப் பெருமானை ஆராத ஆசையில் ஆனந்த கடலினுள் திளைத்தவாறே பொன்வண்ணத் திருஅந்தாதி திருப்பதிகம் பாடினார்.

இப்பதிகத்தை கேட்ட கூத்தப்பெருமான் அதிக ஓசையுடன் பாதச் சிலம்பின் ஒலியை சேரமான் கேட்கும் படி செய்தார். சேரமான் அவ்வொலியை கேட்ட அளவில் இன்ப வெள்ளத்தில் திளைத்து, ஆறுகால பூசைகளையும் நின்று தொழுது, பின் தம்பிரான் தோழராகிய சுந்தரரை காண திருவாரூர் செல்ல முற்பட்டு செல்லும் வழியில் சிவஞானத்தை குழைத்த பால் அடிசில் உண்ட திருஞானசம்பந்தர் அவதரித்த ஊரான சீர்காழி பதியினை வணங்கி பல சிவாலயங்களை வழிபட்டு திருவாரூர் அடைந்தார்.

சுந்தரரை (நம்பி ஆரூரன்) கண்டு சேரமான் மகிழ்தல்

திருவாரூரில் சேரமான் வருகைதந்த செய்தியை அறிந்தவுடன் அவரை வரவேற்க சுந்தரர் வர, இருவரும்

Koviloor Digital Library

ஒருவரையொருவர் ஆரத் தழுவி, மகிழ்ச்சியான மொழிகளை பேசிக்கொண்டு திருவாரூர் பூங்கோயிலுக்கு சென்றனர்.

சிவனடியார்கள் தங்கியிருக்கும் தேவாசிரியன் மண்டபத்தை வணங்கி திருக்கோயில் வலம் வந்து உள்சென்று புற்றிடம் கொண்ட நாதரை கண்டு வணங்கினார். அப்போது இருவரின் கண்களிலிருந்தும் பெருகிய ஆனந்தக் கண்ணீர் அருவி போல நிலத்தில் விழ, சேரமான் பெருமான் திருவாரூர் திருமும்மணிக்கோவை பாடி மகிழ சிவபெருமான் ஏற்று அருள்புரிந்தார்.

சுந்தரர் இல்லத்தில் சேரமானுக்கு விருந்தளித்தல்

சுந்தரர் மனைவியாராகிய பரவையார் சிவனடி யார்களுக்கு ஏற்ற திருஅமுதினையும், அரசனுக்கு ஏற்ற திருஅமுதினையும் சமைத்து உணவு பரிமாற வாழை இலையினை சுந்தரருக்கும் சேரமானுக்கும் எதிர் எதிரே இட்டார். அதுகண்ட சுந்தரர் தன் உடன் அமர்ந்து திருஅமுது செய்யும்படி கூற அதனை மறுத்த சேரமானின் கைகளை பிடித்து இழுத்து தன்னுடன் அமர்த்தி திருஅமுது செய்வித்தார். (நாடாளும் மன்னவனும் ஆதிசைவ மரபில் தோன்றி சிவபெருமானுக்கு பூசை செய்யும் அந்தண மரபான சுந்தரர், சிவனடியார் என்று வரும்போது சமமாக பாவிக்கும் உயர்ந்த குணத்தை எண்ணிப்பாருங்கள்).

இருவரும் பலநாள் வீதிவிடங்க பெருமானை (திருவாரூர்) வணங்கி மகிழ்ந்த நிலையில் சேரமான் மதுரை செல்லும் ஆவல் கூட, சுந்தரரும் மதுரை சொக்கநாதரை வழிபடும் அன்பால் இருவரும் மதுரை செல்ல புறப்பட்டனர்.

Koviloor Digital Library

திருவாரூரிலிருந்து கீழ்வேளூர், நாகைக்காரோணம் (நாகைப்பட்டினம்)சென்றபின் திருமறைக்காடு (வேதாரண்யம்) அடைந்தனர். திருஞானசம்பந்த பெருமானும், திருநாவுக்கரச பெருமானும் கதவு திறக்க அடைக்க செய்த அதிசயம் நினைந்து அந்த நாயன்மார்களை வணங்கி மறைக்காட்டு மணாளனை வணங்கினார். பின் அகத்தியான்பள்ளி, திருக்கோடிக்கரை, திருப்புத்தூர் இறைஞ்சி மதுரை மூதூர் அடைந்தனர். இப்பெரு மக்களின் வருகை செய்தியை கேட்ட சோழ மன்னனும் முன்பே மதுரையில் எதிர்கொண்டு இருக்க, மதுரையை ஆண்ட பாண்டிய மன்னனும் வரவேற்க, மூவேந்தர்களும் திருஆலவாய் அண்ணலை (சொக்கநாதப் பெருமான்) வழிபட்டனர்.

பின் திருப்பூவணம், திருஆப்பனூர், திருஏடகம், திருப்பரங்குன்றம் (அருள்மிகு பரங்கிரிநாதர் முன்பு இருந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தி வேறு தெய்வத்தை அதே இடத்தில் வைத்துள்ளனர்.) சான்று – நந்திதேவர் நடுவில் உள்ளதைப் பாருங்கள். அடைந்து திருக்குற்றாலம், திருநெல்வேலி, இராமேஸ்வரம், திருச்சுழியல், திருக்காளையார் கோயில், திருப்புனவாயிலை அடைந்து பொன்னி நாட்டில் “பாம்பணிநாதர்” அருளும் (பாமணி – மன்னார்குடி) அடைந்து மற்றும் பல பதிகளை வணங்கி திருவாரூர் அடைந்தனர். திருவாரூரில் பரவையார் மாளிகையில் திருஅமுது செய்து ஆரூரனின் ஆறுகால பூசையையும் கண்டுகளித்து சுந்தரரோடு சேரமான் தனது நாட்டிற்கு செல்ல விரும்பி, இருவரும் புறப்பட்டு திருக்கண்டியூர் வணங்கி ஐயாரப்பரை வழிபட திருவையாறு செல்ல காவிரியை கடந்து செல்ல முற்பட்டனர்.

Koviloor Digital Library

அப்போது காவிரி ஆறு கடல்போல் பரந்து இருகரையும் புரண்டு ஓட, படகுகள் எவையும் செலுத்த ஓட முடியாத நிலையில் சுந்தரர் பதிகம் பாடிய அளவில் காவிரி ஆறு நடந்து செல்லும் அளவு வழிகாட்டி நீங்கி மணற்பரப்பை காட்டியது. சேரமான் பெருமானும், சுந்தரரும் மிக மகிழ்ந்து ஒருவரை ஒருவர் வணங்கி திருவையாறு திருக்கோயிலுக்கு சென்று இறைவனை வழிபட்டு, காவிரியின் மணற்பரப்பின் வழியே திரும்பிச் சென்று கரையை அடைந்தனர். காவிரியும் முன்போல் மணற்பரப்பை மறைத்து பெருகி ஓடியதை கண்டு அனைவரும் அதிசயித்தனர்.

பல சிவாலயங்களை வழிபட்டு கொங்கு நாட்டினை கடந்து மலைநாட்டின் எல்லையை சேர்ந்தனர். சேரகுல மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் தம்பிரான் தோழரான சுந்தரரை வரவேற்றனர். பின் திருஅஞ்சைக்களம் சென்று அஞ்சையப்பரை தொழுது, இன்புற்றனர். சுந்தரரை, சேரமான் தனது அரண்மனைக்கு அழைத்துச் சென்று (இந்த அரண்மனை இப்போது சேரமான் மாஸ்க்(mosque) என்னும் பெயரில் மசூதியாக உள்ளது) விருந்து அளித்து பல வேடிக்கை நிகழ்ச்சிகளை கண்டு மகிழ்ந்தனர். திருஅஞ்சைக்களத்திருந்து சுந்தரர் புறப்பட அவருக்கு மிகுந்த செல்வங்களை வழங்கி வழியனுப்பினார்.

சேரகுல மன்னன் தின வழிபாட்டினையும் மக்களின் அமைதியையும் நிலைபெறச்செய்து மகிழ்ந்து வாழ்ந்தார். திருவாரூர் சென்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிலகாலம் கழிந்து மீண்டும் அஞ்சையப்பரையும் சேரமான் பெருமானையும் காண

Koviloor Digital Library

திருஅஞ்சைக்களம் வருகை தந்தார். இருவரும் மனம் மகிழ்ந்து கூடி அஞ்சையப்பரை வணங்கி வர ஒருநாள், சுந்தரருக்கு சிவபெருமான் வெள்ளை யானை தந்து திருக்கயிலாயம் (சிவலோகம்) வரும்படி செய்தார். சுந்தரர் யானை மீது செல்லும்போது சேரமான் பெருமானை நினைத்தவாறே செல்ல சேரமானும் தனது நண்பராகிய சுந்தரர் யானை மீது செல்வதை கண்டு அருகிலிருந்த குதிரையின் மீது ஏறி அதன் காதில் திருஐந்தெழுத்து (சிவாயநம) ஒத அக்குதிரை விண்ணில் பறந்து யானை மீது செல்லும் சுந்தரரை வலம் வந்து வணங்கியவாறே செல்ல, இருவரும் திருக்கயிலாயத்தில் சிவபெருமான் வீற்றிருக்கும் திருவாயிலை அடைந்தனர்.

சுந்தரர் யானை மீதிலிருந்து இறங்கிய உடன், பல வாயில்களை கடந்து நடந்து சென்று திருமூலட்டான வாயிலை அடைந்தனர். அவ்வாயிலில் சுந்தரரை மட்டும் உள்செல்ல அனுமதித்தனர். சுந்தரர் அவ்வாயிலின் உள் சென்று சிவபெருமானை நேரில் கண்டு கண்ணீர் பெருக வணங்கி மகிழ்ந்தனர். பின் சேரமான் வெளிவாயிலில் நிறுத்தப் பட்டிருப்பதை சிவபெருமானிடம் விண்ணப்பம் செய்ய, சுவாமி நந்தியம்பெருமானை அழைத்து சேரமானை அழைத்து வரும்படி கூற, நந்திதேவரும் சேரமானை சிவபெருமான் முன்பு அழைத்து வந்தார்.

சேரமானை கண்ட சிவபெருமான் “யாம் அழையாது நீ வந்தது ஏன்? எனக்கேட்க சுந்தரரை வலம் வந்தவாறே இங்கு வந்தேன் எனக் கூறிய சேரமான் தனது விருப்பத்தை ஏற்கும்படி கூற, இறைவரும் அவ்விருப்பம் யாது? என வினவ

Koviloor Digital Library

தங்கள் முன்னிலையில் அடியவன் திருஉலா பாட, தாங்கள் கேட்டு அருள்புரிய வேண்டும் என்று விண்ணப்பம் செய்ய சிவபெருமான் திருஉலா பாடும்படி பணிக்க, சேரமான் திருக்கயிலை உலா பாடினார். அப்பாடலை "சேந்தனார்" திருப்பீடவூர் திருக்கோயிலுக்கு கொண்டு வந்து சேர்த்தார்.

சேரமான் பெருமானை சிவபெருமான் சிவகணநாதராக சிவலோகத்தில் திருத்தொண்டு புரியும் திருத்தொழில் செய்யும்படி அமர்த்தி அருளினார்.

கொடுங்கோளூர் : தற்போது கேரளா மாநிலத்தில் இருஞ்சாலகுடா ஊரிலிருந்து 8 கி.மீ . திருச்சூரிலிருந்து 40 கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது. இவ்வூரில் சிவாலயம் உள்ளது. இங்கிருந்து தான் ஆடி சுவாதிக்கு முன் தினம் இரவு சுந்தரரும், சேரமானும் வீதி உலாவாக திருஅஞ்சைக்களம் அடைவார்கள்.

திருஅஞ்சைக்களம்: கொடுங்கோளூரிலிருந்து ஒரு கி.மீட்டரில் உள்ள ஊர் இதுவாகும். ஆண்டுக்கு ஒருமுறை ஆடி சுவாதி அன்று தமிழ்முறைப்படி அபிஷேக ஆராதனைநடைபெறும். இங்குள்ள கூத்தப்பெருமான் சேரமான் வழிபட்ட திருமேனி ஆகும்.

திருப்பீடவூர் : திருப்பட்டூர் என்று அழைக்கும் இவ்வூர் சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளி செல்லும் முன் 20 கி.மீ. சிறுகனூரிலிருந்து வலமாக 4 கி.மீ. இவ்வூர் உள்ளது. இத்திருக்கோயிலில் ஐந்து சிவாலயம் உள்ளது. மாசாத்தனார் கோயில் (ஐயனார்) வெளியே உள்ளது. பெரியபுராணத்தில் கடைசியாக குறிக்கப்பட்டுள்ள பெருமை உடைய ஊர் இதுவே யாகும். மிக அமைதியும் அழகும் நிறைந்த கோயிலாகும்.

Koviloor Digital Library

கருத்து : நம் இடுப்பில் கட்டியிருந்த துண்டு நழுவும் போது நம் கைகள் தானாக எப்படி அத்துண்டை பிடிப்பது போல நண்பனின் துன்பத்தை விரைந்து சென்று போக்குதல் வேண்டும். சிவபெருமான் வெள்ளையானையினை தந்து திருக்கயிலாயம் செல்லும்போது தன் நண்பராக சேரமானை நினைத்ததையும் சிவபெருமான் முன்னிலையில் தான் பெற்ற இன்பம் தன் நண்பனும் பெற வேண்டும் என்று சுவாமியிடம் சுந்தரர் விண்ணப்பம் செய்த செயலும், ஒரு நண்பன் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு சுந்தரரே சான்று.

சேரமானை கண்டதும் சிவபெருமான் உன்னை அழையாது வந்ததென்ன? எனக்கேட்டதற்கான காரணம், நாம் அறிந்த அடியார்களில் தினமும் சிவபூசையில் சுவாமியே எழுந்தருளி பாதசிலம்பு ஒலி காட்டி அருளியது சேரமான் ஒருவருக்கே, எனவேதான் சிவபெருமான் நானே உன்னை தேடி வருகிறேன், நீ எதற்கு இங்கு வந்தது என வினவினார். சிவபூசை எப்படி செய்ய வேண்டும் என்று கேட்டால், அக்கேள்வியை ஏலவார் குழலியிடமும், சண்டேஸ்வரரிடமும், சேரமான் பெருமானிடமும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

கழறிற்றவார் நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

வானம் பார்த்த சிவலிங்கத் திருமேனி, சிதலமடைந்த திருக்கோயில், கூரையிலுள்ள சிவாலயம், திருமுறை விளக்க கேள்வி பதில் சிவபூசை விளக்கம், சென்னை சிவாலய வழிகாட்டி நூல் – அறுபத்திமூவர் வரலாறு ஆகியவைகளை **www. chennai sivapathigal. blogspot.com** என்ற இணையதளத்தில் காணலாம்.

Koviloor Digital Library

37. கணநாத நாயனார் வரலாறு

திருஞானசம்பந்த பெருமான் திருஅவதாரம் செய்த திருத்தலமும், ஊழி காலத்தில் கடல் வெள்ளத்தில் அழியாத மாநகரான சீர்காழி என்ற ஊரில் வேதியர் குலத்தின் தலைவராக கணநாதர் என்ற பெயருடைய அன்பர் வாழ்ந்து வந்தார். அவர் சீர்காழியில் எழுந்தருளியுள்ள பிரம்ம புரீசுவரர்க்கு நாள்தோறும் சிறப்பாக மகிழ்ந்து பூசை செய்து வந்தார். திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களிடம் அன்பாக பேசி அவர்களை சிவத்தொண்டு செய்யும் ஆவலை ஏற்படுத்தி அதற்க்கான பயிற்சிகளையும் அளிப்பார்.

ஆலயத்திற்கு வரும் அன்பர்களின் தகுதிக்கு ஏற்ப, நந்தவனத் திருப்பணி (தோட்டக்கலை), இறைவனுக்கு மலர்களை கொய்யும் முறை (பேசாது பறிக்க வேண்டும்) பல வகை மலர்களில் மாலையாகவும், இண்டையாகவும் (சுவாமி தலை மீது அணிவிக்கும் சரம்) தொடுக்கும் கலையையும், இறைவனுக்கு தினமும் நீராட்டுதலுக்கு தேவையான நீரினை (திருமஞ்சன நீர்) கொண்டு வரும் முறையையும், திருக்கோயிலை பெருக்குதலும், நீரிட்டு மெழுகுதலையும், திருவிளக்கு இடும் முறைகளையும் (கண்ட இடத்தில் ஆலயத்தில் விளக்கேற்ற கூடாது) திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசப்பெருமான் வழங்கிய திருமுறைப் பதிகங்களை அனைவரும் படிக்கும் முறையையும் எழுதும் முறையினையும் சொல்லிக் கொடுத்தும் அத்திருமுறையினை பிழையின்றி பொருள் விளங்கும்படி எப்படி பாடுவது என்பதையும் எளிமையாகவும், பொறுமையாகவும் சொல்லிக் கொடுத்து

Koviloor Digital Library

பக்தர்களின் மனத்தில் மகிழ்ச்சி பொங்கும்படி செய்து வந்தார். பின் அப்பக்தர்கள் யாவரும் சிவபெருமான் மீது பேரன்பு கொண்ட சிவனடியார்களாகவே ஆனார்கள்.

கணநாதர் மூன்று பொழுதும் தவறாமல் சிவபெருமானுக்கு பூசைகள் செய்து, திருஞானசம்பந்தப் பெருமானை தனது குருநாதனாகவே நினைந்து அவர் திருவடியை எப்போதும் தியானிப்பார். இதன் பயனாக கொன்றை மலரினை அணிந்திருக்கும் சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கயிலாயம் அடைந்து சிவகணங்களுக்கு எல்லாம் தலைவர் ஆனார்.

சீர்காழி : சிதம்பரத்திலிருந்து 12 கி.மீட்டரில் இவ்வூர் உள்ளது.

கருத்து : திருக்கோயிலுக்கு வரும் அன்பர்கள் கொண்டு வரும் பூசை பொருட்களை சிவாச்சாரியர்கள் இறைவனுக்கு மகிழ்ந்து அர்ப்பணிப்பதுடன் அத்திருக்கோயிலின் பெருமையையும் சுவாமியை வழிபடும் முறைகளையும் கூறி, திருமுறைப் பாடல்களை இறைவன் திருமுன்பு பாடும்படிச் செய்து பக்திநெறி வளர முயற்சி செய்ய வேண்டும். நாயன்மார்களின் வரலாற்றை சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் கூறவேண்டும்.

கணநாதர் மிகச்சிறந்த அந்தணராக வாழ்ந்தார். அவர் யாம் பெற்ற இன்பம், பெருக இவ்வையகம் என்ற திருமூலரின் வாக்கினை தலைமேற்கொண்டு அதனை நடைமுறையில் செயல்படுத்தியவர். சுவாமி விரும்புவது தேங்காய், பழம் வெற்றிலைபாக்கு அல்ல. தூய்மையான பக்தியையும், நல்ஒழுக்க வாழ்க்கையையும் தொடர்ந்து கடைப்பிடித்து வருவதேயாகும்.

கணநாத நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

38. கூற்றுவ நாயனார் வரலாறு

களந்தை என்ற ஊரில் சிற்றரசராக வாழ்ந்த கூற்றுவர் சூலப்பாணியான சிவபெருமான் மீதும், அவர் அடியார்கள் மீதும் மிகுந்த அன்பு கொண்டு இருந்தவர். அதன் பயனாக சிவன் அருள் அவர்க்கு மிகுந்த வல்லமையை தந்தது. எனவே மாமன்னர்களும் இவரின் வீரத்திற்கு முன் அஞ்சி கீழ்படிந்தனர். நான்கு வகை (யானை, குதிரை, தேர், படைவீரர்) படை கொண்டு தும்பை மலர்களை சூடிக்கொண்டு போரிட்டு வல்லரசர்களையும் வென்று, வாகை மலர்களை சூடினார்.

கூற்றுவர் தனக்கு முடிசூட்டிக்கொள்ள தில்லை வாழ் அந்தணர்களை அணுகி கேட்க, அவர்கள் சோழ மன்னர்களுக்கு மட்டுமே முடிசூட்டுவோம் எனக் கூறினர். பின் கூற்றுவர்க்கு அஞ்சி சில அந்தணர்களை மட்டும் தில்லை கூத்தப்பெருமானுக்கு தின பூசை செய்ய விடுத்து, ஏனைய அனைவரும் சேரநாடு சென்று சேர்ந்தனர். இதனால் மனம் தளர்ந்த கூற்றுவர் தில்லை கூத்தப்பெருமானின் (நடராஜர்) திருவடியை பணிந்து இறைவா உமது பாத மலர் அடியவனின் தலை மீது முடியாக சூட்ட பெற வேண்டும் என்று வேண்டினார்.

அன்று இரவு கூற்றுவர் உறங்கும்போது சிவபெருமான் கனவில் தோன்றி தனது திருவடியை கூற்றுவரின் தலை மீது வைத்து முடிசூட்டினார்.

Koviloor Digital Library

கூற்றுவர் கனவிலிருந்து விழித்து இறைவன் செய்த அருட்செயலை வியந்து தேவர்கள் போற்றும்படியாக ஆட்சி செய்து, சிவாலயங்கள் அனைத்திலும் தினமும் சிறப்பான பூசைகள் தவறாது நடைபெறச் செய்து சிவபெருமானின் திருவடியை அடைந்தார்.

களந்தை : களப்பால் என்பது தற்போதைய பெயர். திருத்துறைப்பூண்டியிலிருந்து சிறிது தொலைவு.

கருத்து : தினமும் விருப்பமுடன் சிவபூசை செய்து வருபவர்களுக்கு உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மேலும் எந்த நிலையிலும் கலங்காத மனஉறுதியுடன் இருப்பார்கள் என்பதை கூற்றுவ நாயனார் வரலாறு. நமக்கு உணர்த்தும் பாடம்.

குறிப்பு : சோழர்கள் ஐந்து ஊர்களில் முடிசூட்டிக் கொள்வார்கள். 1. சேய்ஞயலூர், 2. காவிரிபூம்பட்டினம் 3. திருவாரூர் 4. உறையூர் 5. கரூர் ஆகியவை ஆகும். தில்லை கூத்தப்பெருமான் திருக்கோயிலில் மன்னரின் முடி இருக்கும் தில்லைவாழ் அந்தணர்கள் சோழ மன்னர் வாரிசுக்கு மட்டும் அம்முடியினை கோயிலிருந்து எடுத்து வந்து முடிசூட்டியபின் அம்முடியினை மீண்டும் தில்லை கோயிலுக்கு திரும்ப கொண்டு சென்று சேர்த்து விடுவார்கள். சுவாமியின் திருவடியை விட உயர்ந்த மௌலி (முடி) ஒன்று உண்டோ?

சுவாமியின் திருவடியை தன் தலைமேல் பதிக்கும் படியான புண்ணியமுடைய அடியவர்கள்

அ. திருநாவுக்கரசர் (ஆ) சுந்தரமூர்த்தி நாயனார்
(இ) மாணிக்கவாசகர்

கூற்றுவ நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

பொய்யடிமையில்லாத புலவர்

(தொகை அடியார்கள்)

பொய்யான இவ்வுலகத்தில் உள்ளோரைப் பாடாது மெய்யான சிவத்தை மட்டுமே பாடும் இயல்புடைய புலவர்களின் கூட்டமே பொய்யடிமையில்லாத புலவர்கள். மிகச்சிறந்த கேள்வி ஞானத்தையும் சிறந்த நூல் அறிவினையும் பெற்று மெய்உணர்வோடு பாடும் இயல்புடையவர்கள் ஆவார்கள்.

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும் சார்கினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே.

– சுந்தரர்

கருத்து : வாழ்நாள் என்பது ஒருவன் பிறந்து, வளர்ந்து இறப்பது என்று தான் அனைவரும் நினைக்கின்றோம். இது உண்மையன்று. உயிர், ஓர்அறிவுள்ள உடல் எடுத்த காலம் முதல் அவ்வுயிர் பக்குவத்திற்கு ஏற்ப பல உடல்களை எடுத்து இறுதியில் அனுபவ முதிர்ச்சி பெற்று இறைவன் திருவடியை அடையும் வரையுள்ள இடைப்பட்ட காலமே அவ்வுயிரின் வாழ்நாள் ஆகும். எனவே முந்திய பிறவிகளும் நமக்கு தெரியாது. இனிவரும் பிறவியும் நமக்கு தெரியாது. ஆனால் இப்பிறவியில் செய்யும் நல்ல முயற்சிகளே இனிவரும் பிறவிக்கு ஆதாரமாக அமைந்து முத்திபேற்றை நல்கும்.

Koviloor Digital Library

39. புகழ்ச்சோழ நாயனார் வரலாறு

சோழ வளநாட்டின் மூதூரும் அனைத்து கலைகளிலும் சிறந்து விளங்கிய உறையூரில் சோழர் குலத்தில் தோன்றியவர் புகழ்சோழர் ஆவர். மலை போன்ற தனது தோள் வலிமையினால் பகைவர்களை வென்று தனது செங்கோல் வழி பேருலகமும் அடிபணியும்படியும், சிவநெறியினை சார்ந்த சைவர்களை போற்றிப் பாதுகாத்தும் பிறைசூடிய சிவபெருமானின் திருக்கோயில்களில் எல்லாம் சிறந்த முறையில் பூசைகள் நடைபெறச் செய்தார்.

திருநீற்று அன்பர்களுக்கு அவர்களின் மனக்குறிப்பு அறிந்து வேண்டுவன வழங்கி நல்லாட்சி செய்தார். அந்நாளில் கெங்கணர்களிடமும், மேற்கு திசையிலுள்ள சிற்றரசர் களிடமும் கப்பம் (வரி) வசூலிக்கும் பொருட்டு, ஒரு நல்ல மங்கள நாள் பார்த்து அமைச்சர்களுடன், தனது சுற்றத்தார் களையும் அழைத்துக் கொண்டு சோழ நாட்டின் மற்றொரு நகரமான கரூவூருக்கு புகழ் சோழர் வந்தடைந்தார். அந்நகருக்குள் நுழைந்த உடனே முதலில் 'திருஆனிலைக் கோயில்' என அழைக்கப்படும் பசுபதீஸ்வரர் திருக்கோயிலுக்கு சென்று வணங்கி தன் மாளிகைக்கு சென்றார்.

மாளிகை முன் அத்தாணி மண்டபத்தில் அமர்ந்து, மேற்கு திசை குறுநில மன்னர்கள் கொண்டு வந்த செல்வங்களை பார்வையிட்டார். அப்போது தனது அமைச்சரை

Koviloor Digital Library

நோக்கி (திறை)வரி வழங்காது நம்மீது பகை கொள்ளும் அரசர் எவரேனும் உள்ளார்களா? என்று கேட்டார். அவ்வுரைக்கு பதிலளித்த அமைச்சர்கள் வரி செலுத்த மறுக்கும் அரசர் ஒருவர் உள்ளார். அவரின் பெயர் அதிகன். எழில்மிகு மலையையே கோட்டையாக கொண்டு ஆட்சி புரிந்து வருகிறார் என்று கூற, அம்மொழியினை கேட்டு புகழ்சோழ மன்னர், எனக்கு எதிராக நிற்கும் மன்னவனும் உள்ளானோ? உடனே படையெடுத்து வென்று வருவீர் என சூளுறைத்தார்.

(புகழ்சோழர் கருவூரில் இருந்த காலத்தில் சிவகாமியாண்டார் பூக்கூடையை பட்டத்து யானை பறித்து எறிந்ததையும் அவ்வழி வந்த எறிபத்த நாயனார் புகழ்சோழரின் பட்டத்து யானையை தனது பரசு கொண்டு வெட்டி சாய்த்ததையும், புகழ்சோழர், யானை மாண்ட செய்தி கேட்டு வந்து, யானை வெட்டுண்டு கிடந்த இடத்தில் எறிபத்த நாயனாரின் குற்றமற்ற செயலினை அறிந்து தன்னை மாய்க்கும்படி தன்னுடைய வாளை எடுத்து எறிபத்தரிடம் கொடுக்க, சிவபெருமான் தோன்றி மடிந்து போன யானையும், போர் வீரர்களையும் உயிர் கொடுத்து எழுப்பிய அருமைப்பாட்டினை இந்நூலில் எறிபத்த நாயனார் வரலாற்றில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது அருள் கூர்ந்து படிக்கவும்)

புகழ்சோழரின் ஆணையை ஏற்ற அமைச்சர்கள் வெளியே வந்து கடல் போன்று நெடும் படையுடன் அதிகனின் நாட்டிற்கு படையெடுத்து காஞ்சி மாலை சூடிக்கொண்டு பலமுடன் தாக்கினர். இப்போர் பார்ப்பதற்கு மலையோடு மலை மோதினாற்போல தோன்றியது. போரில் புகழ்சோழரின்

Koviloor Digital Library

படைகள் வென்றன. அதிகன் தனது நாட்டினை விட்டு காட்டிற்கு சென்று மறைந்தான். சோழ போர் வீரர்கள் வெற்றி பெற்ற அடையாளமாக அந்நாட்டு செல்வங்களையும், குதிரைகளையும், யானைகளையும், அதிகனின் போர் வீரர்களின் வெட்டுப்பட்ட தலைகளையும் கருவூருக்கு கொண்டு வந்து புகழ்சோழர் அரண்மனையின் முன் தனித்தனியே மலை போல குவித்தனர். வெட்டுண்டு கிடந்த தலைகளில் ஒருதலை, சடைமுடியுடன் இருப்பதை கண்ட புகழ்சோழர் சிவனடியாரின் குறிப்பினை உணர்ந்து, இச்சிவபாதகச் செயலுக்கு நானே பொறுப்பு ஏற்பேன் என்று உறுதி பூண்டார். அமைச்சர்களை அழைத்து சிவநெறியில் அரசாட்சி செய்யும்படி பணிந்து, தன் மகனை மன்னராக்குவீர் என்றும் கூறி பெரிய தீக்குண்டம் வளர்ப்பிக்குமாறு கூறினார்.

மனம் தளர்ந்த அமைச்சர்கள் பல வழிகளில் மன்னரின் மனத்தை மாற்ற முயன்று முடியாமல் செந்தீயினை வளர்ப்பித்தார்கள். மெய்ஞான நெறியில் நின்ற புகழ்சோழர் திருநீறு பொலிந்த கோலத்தோடு அத்தீ குழியின் முன் வந்து நின்றார். தங்கத்தட்டு ஒன்றில் வெட்டுண்ட சிவனடியார் தலையை வைத்து ஏந்தியபடியே அத்தீயினை வலமாக வந்து சிவபெருமானின் திருஐந்தெழுத்து மந்திரத்தை (சிவாயநம) ஒதியவாறே மகிழ்ந்த நிலையில் அத்தீ பிழம்பின் உள்புகுந்தார். அப்போது வானிலிருந்து மலர் மழை பொலிந்தது. விண்ணில் மங்கல ஒசை முழங்க, சடைமுடியாராகிய சிவபெருமான் திருவடியின் கீழ் என்றும் நீங்காது இனிது அமர்ந்தார்.

உறையூர் : திருச்சிராப்பள்ளி பெருநகரின் ஒரு பகுதியே உறையூர் ஆகும். இங்கு திருமூக்கீச்சரம் என்று அழைக்கப்படும்

Koviloor Digital Library

பாடல் பெற்ற திருத்தலமாக அருள்மிகு பஞ்சவர்ணேஸ்வரர் அருள்புரிகின்றார். இக்கோயிலில் நந்தியம்பெருமான் அப்படியே இயல்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது மேலும் சிறப்பு.

கருத்து : ஒரு நாட்டின் உண்மை சுதந்திரம் என்னவென்றால், அந்நாட்டின் மக்கள் மன்னவனாலும், மன்னவனின் உறவினர்களினாலும், வீரர்களினாலும், நண்பர்களினாலும் எந்தவித பயமும் இன்றி வாழ்வதேயாகும். தன் பொருட்டு போரிடச் சென்ற வீரர்களின் சிவபாதக செயலை செய்த வீரர்களுக்கு பஞ்சமா பாவம் சேர விரும்பாத புகழ்சோழர் சிவஅபராத செயலுக்கு தானே பொறுப்பேற்றும், தன்னால் ஒரு சிவனடியார் வெட்டுண்டதை கண்டு மனம் தளர்ந்து தன்னையே மாய்த்துக் கொள்ள முடிவு செய்தார். இப்படிப்பட்ட மன்னவர்கள் வாழ்ந்த நாடு இது.

ஆ. புகழ்சோழ நாயனாரின் வாழ்க்கையில் முன் நடந்த செயலான சிவகாமியாண்டார்க்கு தன் பட்டத்து யானையும், பாகர்களும், வீரர்களும் செய்த சிவஅபராத செயலுக்கு தான் பொறுப்பேற்று தன்னை மாய்க்கும்படி எறிபத்தரிடம் தன் வாளை கொடுத்த அந்த செயலையும் அவர் பின்நாளில் தன் வீரர்கள் செய்த சிவ அபராத செயலை பொறுப்பேற்று தீக்குழியில் இறங்கியதையும் சிந்தித்தால், புகழ்சோழ நாயனாரின் இயல்பான குணமே அவருக்கு சிவமுக்தியை அடைய வழி தந்தது.

புகழ்ச்சோழ நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

40. நரசிங்கமுனையரைய நாயனார் வரலாறு

திருமுனைப்பாடி நாட்டில் நீதி பிறழாத நல்லாட்சி செய்து வரும் குறுநில மன்னவரான நரசிங்கமுனையர் என்ற அன்பர் திரிசூல பாணியின் அடியவர்களின் பாதம் பணிவதே பெரும் தவமாகும் என நினைந்து வாழ்ந்து வந்தார். சிவபெருமானின் திருக்கோயில்கள் தோறும் வழிபாட்டிற்கு இடையூறு வராத வகையில் செல்வங்களை அக்கோவில்களுக்கு வழங்கி வந்தார். கனவிலும் இறைவனின் தொண்டை மறவாது செய்து வரும் இயல்புடையவர்.

ஒவ்வொரு மாதமும் திருவாதிரை நட்சத்திரத்து அன்று சிவனடியார்களை வரவழைத்து அவர்களுக்கு சிறப்பான விருந்து கொடுத்து ஒவ்வொருவருக்கும் நூறு (பொன்) பொற்காசுகளை வழங்கி வந்தார். இவ்வாறு அடியார் பூசை செய்து வரும் நாளில் ஒரு திருவாதிரை நாள் அன்று சிவனடியார்களுக்கு பொற்காசுகளை வழங்கிக் கொண்டு இருக்கும்போது ஒழுக்கத்தை காத்து வாழாத ஒருவன், காமகுறிகள் கொண்ட உடலும், காமநோய் பீடிக்கப்பட்டதால் ஊனமுடைய தோற்றத்தோடும் பொற்காசுக்காக திருநீறு பூசி சிவனடியார் போல அங்கு வந்தார்.

அங்கு வந்திருந்த மற்ற அடியவர்கள் அவரை கண்டதும் ஒதுங்கி போவதை கண்ட நரசிங்க முனையரையர் விரைந்து வந்து காமநோயால் தாக்குண்ட வரை எதிரில் சென்று

Koviloor Digital Library

கைகுவித்து வணங்கி போற்றியபின், சீலம் கெட்டவராக இருந்தாலும் திருநீறு பூசிய காமுகனை இகழ்ந்து விலகும் சிவனடி யார்களுக்கு கடுநரகம் வருமே என்று நினைந்து, அப்பாவம் அந்த அடியார்களுக்கு வாராமல் தடுக்க, காமக்குறியுடைய அடியவர்க்கு இரட்டிப்பாக இருநூறு பொன் கொடுத்து இனிமையாக பேசி அனுப்பி வைத்தார். இவ்வகையிலே திருத்தொண்டு செய்து சிவ சிந்தையராகிய நரசிங்கமுனையரையர் சிவபெருமான் பாத நிழல் சேர்ந்து என்றும் நீங்காத நிலையினை பெற்றார்.

திருமுனைப்பாடி : விழுப்புரம் அடுத்து கெடிலம் கூட்டு ரோட்டிலிருந்து இடது புற பிரிவில் சிறிது தொலைவிலுள்ள சேந்தமங்கலம் உள்ளிட்ட சிறிய பகுதி. அப்பர் பெருமான் தோன்றிய ஆமூர், சுந்தரமூர்த்தி நாயனார் தோன்றிய திருநாவலூர் இந்நாட்டில் அடங்கும் பேறு பெற்றது. நரசிங்கமுனையரின் கோட்டையும், சிவாலயமும் சேந்தமங்கலத்தில் உள்ளது.

கருத்து : பகைவரிடம் போர் புரிந்து மக்களை காப்பது மட்டும் மன்னவனின் கடமையன்று. தன் மக்களுக்கு பழி பாவம் வாராது காப்பதே மாமன்னனுக்கு அழகு. ஒரு நாட்டில் வாழும் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள் என்பது மட்டும் கருத்தில் எடுக்காமல் பழிக்கு அஞ்சி வாழும் ஒழுக்கத்தை போதிக்கும் அரசே சிறந்த அரசு. மேலும் திருநீறு பூசி நடித்ததற்கே மற்ற உண்மை அடியாரை விட இருமடங்கு பொன் கொடுத்த நரசிங்கமுனையரரின் அன்பு அக் காமுகனை திருத்தவல்ல அருமருந்து.

நரசிங்கமுனையரையர் நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

41.அதிபத்த நாயனார் வரலாறு

பொன்னி வளநாட்டில் சோழ மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்ட நாகப்பட்டினம் என்ற ஊரில் மீனவர்கள் வாழும் நுளைப்பாடியில் அக்குல மக்களுக்கு தலைவராகவும், மற்று பற்றின்றி சிவபெருமான் திருவடியை எப்போதும் நினைந்து வாழும் இயல்புடைவராக அதிபத்தர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் நாள்தோறும் கடலுக்கு சென்று மீன் பிடிக்கும் போது முதலில் வீசப்பட்ட வலையில் விழுந்த மீன்களில் நல்ல பெரிய சிறந்த மீனாக பார்த்து எடுத்து விருப்பத்துடன், நட்டம் பயின்றாடும் நாதனாகிய சிவபெருமானுக்கு எனச் சொல்லி மீண்டும் அம்மீனை கடலில் விடுவார்.

இவ்வாறாக வரும் நாளில், அவர் வீசும் வலையில் ஒரு மீன் மட்டுமே விழுந்தது. அந்த ஒரு மீனையும் எப்போதும் போல் சிவபெருமானுக்கு எனச்சொல்லி கடலில் விட்டு மகிழ்ந்தார். இவ்வாறு பல நாட்கள் ஒரு மீன் மட்டுமே வலையில் விழுந்த வந்த நிலையில், அவ்வொரு மீனையும் தொடர்ந்து கடலில் விட்டு வந்ததால் அதிபத்தரின் குடும்பம் உணவின்றி வாடியது. உணவின்றி அவரது உடல் சோர்ந்தாலும், அவர் இடையராது தினமும் கொடுத்து வந்த அந்த ஒரு மீனை சிவபெருமான் ஏற்று வந்தார்.

ஒரு நாள் வழக்கம்போல கடலுக்கு சென்ற அதிபத்தருக்கு ஒரு மீன் கூட விழாத நிலையில், சூரியனின் ஒளியினை போலவும் விலை மதிக்க முடியாத பொன்மீன் ஒன்று அதன் செதில்களில் நவமணிகளும் பொறிக்கப்பட்ட நிலையில் வலையில் கிடைத்தது. அந்த பொன் மீனை கையில்

Koviloor Digital Library

எடுத்து அண்டமெல்லாம் ஆண்டருளும் அப்பன் சிவபெருமானுக்கு ஆகுக எனச் சொல்லி கடலில் விட்டார். பொன்னை விரும்பும் பூமியிலே வறுமை வந்தபோதும் அப்பொருள் பற்றினை தூக்கி எறிந்த அதிபத்தர் முன் விண்ணில் நந்தியம் பெருமான் மீது சிவபெருமான் காட்சி தந்து அருளினார். அதிபத்தர் சுவாமியை கண்டு தனது இரு கைகளையும் தன் தலைக்கு மேல் குவித்தபடி வணங்கி நின்றார். விண்ணில் பஞ்சநாத ஒலி முழங்க மலர் மழை பொழிந்தனர் வானோர். அதிபத்த நாயனாரை சிவபெருமான் சிறப்புடைய தம் அடியாருடன் சிவலோகம் சேர்த்தார்.

நாகப்பட்டினம் : மயிலாடுதுறை அருகிலுள்ள ஊர். பழைய பெயர் திருநாகைக்காரோணம். மூவர் பாடல் பெற்றத் திருத்தலம். சப்தவிடங்கத்தலங்களுள் ஒன்று. (விடங்கர் – உளி கொண்டு வடிக்காத சிவலிங்கத் திருமேனி) ஆதிசேஷன் பூசிக்கப் பெற்றதால் நாகை என்றும், புண்டரீக முனிவரை தனது திருமேனியின் வழி ஈர்த்து அருளியதால், காய ரோகணேஸ்வரர் என்ற திருப்பெயரோடு சுவாமி அருள்பாலிக்கிறார். இவ்வூர் அருகில் அதிபத்த நாயனார் வாழ்ந்த நுளைப்பாடி இப்போது நம்பியாங்குப்பம் என வழங்கப்படுகிறது.

கருத்து : உடல் மீதும், உடல் சார்ந்த உறவின் மீதும், உலகின் மீதும் பற்று உடையவர்கள் தாம் அநுபவித்து வரும் இன்பத்தின் நிலைப்பாட்டிற்காகவே இறைவனை வணங்குவார். இறைவனுக்காகவே இறைவனை வணங்கும் அன்புள்ளம் கொண்டவர்களே எப்பற்றையும் துறக்க வல்லவர்கள்.

அதிபத்த நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

42. கலிக்கம்ப நாயனார் வரலாறு

ஒழுக்க நெறியில் வாழ்ந்து வரும் சான்றோர்கள் நிறைந்த பெண்ணாகடம் என்ற ஊரில் வணிகர் குலத்தில் உதித்தவர் கலிக்கம்பர் ஆவார். புன்சடை, புரிசடை, விரிசடை, தாழ்சடை, அவிழ்சடை, வீழ்சடை, ஆறுசேர் செஞ்சடை, கொன்றைவார் சடை, துண்டமதிசேர் செஞ்சடை மற்றும் நாகம் அணிந்த சடையுடைய சிவபெருமான் மீது மிகுந்த பற்றுடையவராக வாழ்ந்தார். அவ்வூரிலுள்ள தூங்கானைமாடம் சிவாலயத்திற்கு தினமும் சென்று தூய்மை செய்யும் திருத்தொண்டு செய்து வந்தார்.

திருஅமுதுடனே காய் கறிவகைகளை நெய்யும், தயிரும், பாலும் கனிகளுடனும் விருந்தளித்து அவர்கள் வேண்டுவன எல்லாம் கொடுத்து வரும் நாளில், ஒருநாள் வழக்கம்போல சிவனடியார்களை இல்லத்திற்கு அழைத்து வந்து விருந்தளிக்கும் முன்னர் பண்டைய முறைப்படி அடியார்களின் பாதங்களை விளக்கி (கழுவி) விடுவதற்காக தனது மனைவியை நீர்வார்க்கும்படி கலிக்கம்பர் சொல்ல, கலிக்கம்பர் அடியார்களின் பாதங்களை கழுவிக்கொண்டு வந்தார்.

அப்போது வந்த சிவனடியார்களில் ஒருவர் கலிக்கம்பர் வீட்டில் முன்பு வேலை செய்து அவ்வேலையை வேண்டாம் என்று கூறிச்சென்று பாம்பணி நாதனின் அடியவராக ஆன அவர் சிவனடியாரோடு வந்திருப்பதை கலிக்கம்பரின் மனைவியார் கண்டார். கலிக்கம்பர் அவ்வாறு வந்த சிவனடியாரை பாதத்தை கழுவ முற்பட அப்போது கலிக்கம்பரின் மனைவியார் தன் வேலைக்காரனின் பாதத்துக்கு நீர் வார்ப்பதா என நினைத்து நீர் வார்க்காமல் நின்றார். அதைப் பார்த்த கலிக்கம்பர் தன் உடை வாளை உருவி தன் மனைவியின் இரு கைகளையும் வெட்டி எறிந்தார். பின் அவரே நீர் வார்த்துக் கொண்டு அச்சிவனடியார்

Koviloor Digital Library

பாதத்தை கழுவினார். பின் இல்லத்திற்கு அழைத்து அனைத்து அடியவர்களுக்கும் கலிக்கம்பரே உணவு சமைத்து பரிமாறினார். நடந்த செயலை பற்றி கலங்காத சிந்தையுடன் விருந்தளித்தார். கலிக்கம்பர் தொடர்ந்து சிவனடியார்க்கு திருஅமுது விருந்தளித்து நஞ்சணி கண்டன் எந்தை சிவபெருமான் மலர் சேவடியின் நிழல் கீழ் கலந்தார்.

பெண்ணாகடம் : விருத்தாசலத்திலிருந்து திட்டக்குடி செல்லும் வழியில் உள்ள ஊர் ஆகும். தூங்கானைமாடக் கோவில். (தூங்கும்போது யானையின் பின் பக்கம் போன்ற அமைப்புடைய கோயில். வடமொழியில் கஜப்பிரஷ்டம்) சுவாமி திருப்பெயர் சுடர்க்கொழுந்தீசர். பெண்– தேவலோக கன்னியர் ஆ – பசு (காமதேனு), கடம் – யானை (வெள்ளை யானை) இம்மூவரும் வழிபட்ட திருத்தலம் எனவே பெண்ணாகடம் என வழங்கலாயிற்று.

கருத்து : ஒருவனுக்கு, தான் எடுத்துக் கொண்ட உயர்நிலை இலட்சியத்தின் வழி நடக்கும் மனைவி அமைந்து விட்டால் போதும், அவன் எதையும் சாதிக்கலாம். அதற்கு உதாரணமே திருநீலகண்டத்து குயவனார், இயற்பகையார், இளையான்குடி மாற நாயனார், சிறுத்தொண்ட நாயனார், கலியநாயனார் மேலும் பல அடியவர்கள். ஆனால் தன் மனைவியே தன் கருத்துப்படி அமையவில்லை என்றாலும் கலிகம்ப நாயனார் தான் எடுத்துக் கொண்ட உயர் இலட்சியத்திற்காக மனைவியையே விலக்கி, அதற்காக சிறிதும் கலங்காமல் தொடர்ந்து திருத்தொண்டர்களுக்கு தொண்டு செய்து வந்த உறுதிப்பாடுடைய கலிக்கம்ப நாயனாரின் தொண்டு இமயத்திலும் உயர்ந்தது.

கலிக்கம்ப நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

43. கலியநாயனார் வரலாறு

இப்பேருலகில் ஓங்கிய புகழ்பெற்ற தொண்டை நாட்டில் பூலோக சிவலோகமாகிய திருவொற்றியூரில் சக்கரம்பாடித் தெருவில் விதைகளிலிருந்து எண்ணெய் எடுத்து விற்கும் செக்கு ஆட்டும் தொழில் செய்யும் குலத்தில் வாழ்ந்தவர்கள் செய்த தவத்தால் கலியனார் என்ற பெயர் கொண்டவர் அக்குலத்தில் அவதரித்தார். பெருஞ் செல்வந்தராக வாழ்ந்த அவர் தான் பெற்றுள்ள செல்வத்தின் பயனை அறிந்து அச்செல்வத்தைக் கொண்டு திருவொற்றியூர் அருள்மிகு படம்பக்கநாதர் திருக்கோயிலில் உள்ளும் வெளியும், இரவும் பகலுமாக எண்ணில் அடங்காத திருவிளக்குகளை தொடர்ந்து ஏற்றி வந்தார். இப்புண்ணிய மெய்த்தொண்டரின் இருவினைகளும் அழிவது போல, அவரது செல்வமும் அழிவுற்றது எனினும் மனம் தளராமல் தனது மரபில் உள்ள மற்ற எண்ணெய் வியாபாரிகளிடம் சென்று எண்ணெயை வாங்கி தெரு தெருவாக விற்று வந்த கூலியை வைத்து விளக்கேற்றி வந்தார்.

அச்செல்வந்தர்கள் விற்பனை செய்ய எண்ணெய் தர மறுத்ததால் எண்ணெய் எடுக்கும் ஆலைகளில் போய் கூலி வேலைக்கு சேர்ந்து செக்கு ஆட்டி பணி செய்து கூலி பெற்று திருக்கோயிலினுள் விளக்கிட்டார். அக்கூலி வேலை செய்பவர்களின் எண்ணிக்கை அதிகமானதால் அந்த கூலி வேலையும் கிடைக்காமல் போகவே மிகுந்த வருத்தமடைந்தார்.

பின் தன் இல்லத்திலிருந்த பொருட்களையெல்லாம் விற்று விளக்கிட்டார். இனி விளக்கிட பணமில்லையே என

Koviloor Digital Library

வருந்திய கலியனார் தன் மனைவியையே விற்க முற்பட யாரும் வாங்க முன் வராது போகவே, கலியனார் கனவினில் கூட நான் நினைத்து பார்க்கவில்லையே விளக்கிடு செய்வது நிற்கும் என்று சொல்லி மிகவும் வருத்தமடைந்து இனி மேல் நான் வாழ்ந்து பயனில்லை என்று திருக்கோயிலுக்கு உள்சென்று அகல்களை பரப்பி வைத்து, திரியிட்டு எண்ணெய்க்கு பதிலாக தனது இரத்தத்தால் விளக்கினை நிரம்ப வேண்டும் என்று உறுதி கொண்டு தன் கழுத்தினை கருவிக் கொண்டு அரிந்தார். உடனே சிவபெருமான் பெருகும் திருக்கருணையினால் கலியரின் கையினை மேலும் அறுக்க விடாது பிடித்தருளி, அனைவரும் காணும்படி நந்தியம்பெருமான் மீது அமர்ந்த கோலமாக சுவாமி காட்சி கொடுக்க கலியனாரின் அரிந்த கழுத்து பழைய நிலையினை அடைந்தது.

கலியனார், ஒளி விளங்க உச்சிமீது தன் இரு கரங்களை கூப்பிய படி வணங்கி நின்றார். சிவபெருமான் தனது சிவலோகத்தில் கலியனாரை சேர்த்தருளினார்.

திருவொற்றியூர் : சென்னையில் உள்ள கடலோரப் பகுதியாகும். இறைவர் ஆதிபுரீசுவரர், படம்பக்கநாதர், தியாகராஜசுவாமி, எழுத்தறியும் நாதர், காரணிய விடங்கர், மாணிக்கவரதர், இளமை தந்த நாயனார், தஞ்சை விடங்கர், புற்றிடங் கொண்ட நாதர் எனப் பல திருநாமத்தால் போற்றப்படும் சுயம்புநாதர் மீது எப்போதும் குவளை சார்த்தி வைத்திருப்பார்கள். கார்த்திகை மாதம் பௌர்ணமி நாளன்று அக்குவளையை நீக்குவார்கள். அப்போது நாம் சுயம்பு நாதரை தரிசிக்கலாம். மூவர் பாடல் பெற்றத் திருத்தலம். பட்டினத்தார் முக்தி பெற்ற திருத்தலம் அருகில் உள்ளது.

Koviloor Digital Library

கருத்து : பண்டைய நாளில் மன்னர்கள் தனது குதிரையை தேர்ந்தெடுக்கும் முன், பத்து குதிரைகளுக்கு பயிற்சி கொடுத்து அக்குதிரைக்கு தேவையான உணவிற்கு அதிகமாகவே தீனியை வழங்குவார்கள். அவ்வாறு பயிற்சியின் போது சிழ்க்கை (விசில்) அடித்தால் அவ் விசிலின் ஓசை வந்த வழியை பார்த்து அத்தனை குதிரையும் ஓடி வரும்படி பயிற்சி தருவார்கள்.

அதே குதிரைகளை பல நாட்கள் சரியாக தீனி கொடுக்காமல் பட்டினி போட்டு, ஒரு நாள் அத்தனை குதிரைகளுக்கும் ஒரே நேரத்தில் தூரத்தில் தீனியை வைப்பார்கள். அக்குதிரைகள் அனைத்தும் பசியோடு அத்தீனியை நோக்கி பாய்ந்து ஓடி தீனியை நெருங்கும் வேளையில் விசில் அடிப்பார்கள். அக்கொடிய பசியையும் பொருட்படுத்தாமல் எந்த குதிரை அத்தீனியை புறக்கணித்து விசில் அடித்த திசையை நோக்கி ஓடி வருகிறதோ அந்த குதிரையையே மன்னருக்கு ஏற்ற குதிரை என தேர்ந்தெடுப்பார்கள். இன்று இருந்து நாளை மறையும் மன்னருக்கு ஏற்ற குதிரையை தேர்ந்தெடுக்க இத்தனை முறையென்றால் என்றும் நிலைத்த பேரின்ப வடிவான சிவபெருமானின் திருவடியை அடைய நாம் எது நடந்தாலும் கலங்காமல் சுவாமி மீது மாறாத அன்புடனும், நம்பிக்கையுடன் எப்படி? எவ்வாறு தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும்? என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பணம், வீடு, வீட்டுப்பொருட்கள் அதற்கும் மேலாக தன் மனைவியை இழக்கும் நிலையிலும் தான் செய்து வந்த விளக்கிடும் தொண்டை, தன்னை இழந்தாவது செய்ய வேண்டும் என்ற நாயனாரின் செயலே அவர் வீடுபேறு அடைய தகுதி ஆயிற்று.

கலிய நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

44. சத்தி நாயனார் வரலாறு

காவிரி சூழ்ந்த சோழவள நாட்டில் வரிஞ்சையூர் என்ற ஊரில் வேளாண்மை செய்யும் குலத்தில் பிறந்தார். திருமால் பிரமன், ருத்ரகோடிகள், வானவர்கள், அண்டத்திலுள்ள அனைவரும் வணங்கும் சிவபெருமானின் திருவடி மீது மாறாத அன்பு கொண்டிருந்தார். சுவாமி மீது செலுத்தி வந்த அதே அன்பு போல் சிவனடியார்கள் மீதும் அன்புடையவராக வாழ்ந்து வந்தார்.

சிவனடியார்களை யாரேனும் இகழ்ந்துரைத்தால் அவர்களின் நாக்கை தனது வலிமையை கொண்டு இழுத்து வளைந்த வடிவில் உள்ள கத்தியை கொண்டு அறுத்து விடுவார். இவ்வாறு சக்தி கொண்டு அரிவதனால் இவரை சத்தியார் என்று அழைக்கப்பட்டார். இச்செயலையே திருத்தொண்டாக தொடர்ந்து செய்து வந்தார். இந்த அரியத் திருப்பணியை தனது வீரத்தால் செய்து வந்த சத்தியார் சிவபெருமான் பாதத்திருநிழலில் சேர்ந்தார்.

வரிஞ்சையூர் : பாடல் பெற்ற திருத்தலமான கீழ்வேளூர் (நாகை மாவட்டம்) அருகில் உள்ள ஊராகும்.

கருத்து : அ. சிவனடியார் மீது அன்பிலாதார், சிவனுக்கு அன்பிலாதார் எனவே சிவனடியார்களை இழித்து கூறும் பேச்சுகளை கேட்டு பொறுமையாக இருப்பது சிவபெருமானை இகழ்ந்து பேசுவதை கேட்பது போன்றதாகும். எனவே நாம் சத்தியார் போல் அவர்களை தட்டி கேட்க வலிமையில்லை

Koviloor Digital Library

என்றால், கேட்ட அந்த இடத்தை விட்டு நீங்கி விடவேண்டும். இவ்வாறு செய்த இச்செயலுக்கு உதாரணமாக நமிநந்தி அடிகள், மூர்த்தி நாயனார் வரலாற்றை எண்ணிப் பார்க்கலாம். சத்தி நாயனாரின் வரலாறு போல் துணிந்து எதிர்க்கும் செயல்புரிந்த எறிபத்தநாயனாரையும், அப்பூதி அடிகளையும் எண்ணுக. மேலும் பல நுட்பங்களை நாம் அறியலாம்.

ஆ. கற்பூர உறையில் சுவாமி படத்தை பதிப்பித்து விற்பதால், சுவாமி படத்தை கோவிலுக்குள் எல்லாயிடத்திலும் பக்தர்கள் கற்பூரத்தை எடுத்து விட்டு உறையை கீழே போடுவதால் கோவிலுக்கு வருபவர்களால் அப்படம் மிதிபடுவதையும், பல கோயில்களில் செருப்பு பாதுகாக்கும் சீட்டில் சுவாமி படமும் அத்திருக் கோயிலில் உள்ள சுவாமி திருநாமமும் பதிப்பிக்கப்பட்டு செருப்பு மீதே வைத்து விடுகிறார்கள். சிலர் தனது வீட்டிற்கு முன்போ, கடைக்கு முன்போ சிறுநீர் கழிக்காமல் தடுக்க மாவாட்டும் குழவியை தலைகீழாக சிவலிங்கத் திருமேனி போன்று வைத்து கறுப்பு வர்ணம் பூசி திருநீறு வைத்தாற்போல வெள்ளை வர்ணமும் பூசி பாதசாலையில் (பிளாட்பாரம்) வைத்து பதித்து விடுகிறார்கள். சிலர் சிவலிங்கத்திருமேனியை சுவரில் வரைந்து விடுகிறார்கள். இவ்வாறு உள்ள இடங்களில் சிலர் சிறுநீர் கழித்தும் எச்சில் துப்பிக் கொண்டும் தான் இருக்கிறார்கள். இதுபோன்ற செயலை பலமுறை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றும் நமக்கு ஏமாற்றம் தான். இறைவனுக்காக தன்னையே தியாகம் செய்த அடியவர்கள் எங்கே? நம்முடைய சுயநலத்திற்காக இறைவனையே தியாகம் செய்யும் நாம் எங்கே? சிந்திப்போமாக.

சத்தி நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

45. ஐயடிகள் காடவர் கோன் நாயனார் வரலாறு

ஐயடிகள் பல்லவர் குலத்தில் செங்கோல் வழுவாது, பகைவர்களை வென்று, சைவநெறியையும், வேதநெறியையும் பாதுகாத்து, வடமொழியிலுள்ள நூல் அறிவையும், தமிழ் மொழியிலுள்ள நூல்களையும் கற்று தெளிந்து கலை ஞானத்துடன் சிறப்பாக காஞ்சிபுரத்தை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்து வந்தார்.

இந்நாளில், அரசாட்சி செய்து வருதலால், புகழ் இச்சையும் மண் மீது ஆசையும் தம்மை தொடர்ந்து பிறப்பெடுக்கும் தொடர்ச்சியை உண்டு செய்யும் என நினைந்து, இத்தொல்லை இரும்பிறவி தம்மை தொடராது நீக்க, பிறவா யாக்கை பெரியோன் ஆகிய சிவபெருமான் திருவடியையே தொடர்ந்து பற்ற வேண்டும் என்று முடிவு செய்து, தன் மகனை அழைத்து அரசராக முடிசூட்டியபின் தனது நாட்டினை விட்டு வெளியேறி அண்ட நாயகரான சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் சிவாலயங்களுக் கெல்லாம் சென்று இறைவனை வழிபட்டு அங்குள்ள அடியார்களை வணங்க திருத்தல யாத்திரை சென்றார். அவ்வாறு ஒவ்வொரு திருக்கோயிலாக சென்று வழிபடும் போது ஒரு வெண்பா பாடி வரும் திருத்தொண்டை புரிந்து கொண்டு தில்லை (சிதம்பரம்) வந்தடைந்தார். ஆனந்த திருகூத்து ஆடும் திருவடியை வணங்கி காதலால் கசிந்துருகி வெண்பா ஒன்றை பாடினார். பின் பல சிவாலயங்களுக்குச் சென்று மகிழ்ந்து பாடினார். பின் பல காலம் தொடர்ந்து

Koviloor Digital Library

திருத்தலயாத்திரை செய்து, என்றும் நிலைத்த தன்மையுடைய சிவலோகம் சேர்ந்து சிவபெருமான் திருவடி நிழலில் சேர்ந்தார்.

காஞ்சிபுரம் : சென்னையிலிருந்து 70 கி.மீ. உள்ள நகரமாகும். திருக்கச்சி ஏகம்பம் என்பது பழைய பெயர். மூவர் பாடல் பெற்ற திருத்தலம். இந்நகரின் உள்ளே இரு நூறுக்கும் மேற்பட்ட சிவாலயங்கள் உள்ளன.

கருத்து : அ. முடிசார்ந்த மன்னனும் முடிவில் பிடிசாம்பல், பிடி சாம்பலாக ஆவதற்கு முன் மாயப் பிறப்பறுக்கும் சிவபெருமான் திருவடியை நாம் சரண்புக வேண்டும். எப்போது பிடி சாம்பல் ஆவோம் என்பது யாருக்கும் தெரியாது. எனவே இப்போதே சிவன் கழல் புகுவோம்.

மாட்டுப்பள்ளி மகிழ்ந்து உறைவீர்க்கு எலாம்
கேட்டுப்பள்ளி கண்டீர் கெடுவீர் இது
ஓட்டுப்பள்ளி விட்டு ஓடல் உறாமுனம்
காட்டுப்பள்ளி உளான் கழல் சேர்மினே

திருநாவுக்கரசர் 5.84.1

மாட்டுப்பள்ளி – செல்வம்

ஆ. பல விறகுகளை ஒன்று சேர்ந்து இருக கட்டிய கயிறு விறகிலிருந்து விலக வேண்டுமானால் அவ்விறகு கற்றையை மிகுந்த பலத்துடன் மற்றொரு கயிறினால்கட்டினால் முன் கட்டிய கயிறு விலகும். அதுபோல இவ்வுலகப்பற்று நீங்க வேண்டுமானால், இறைப்பற்றினை இறுகப் பற்ற வேண்டும்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு – **திருக்குறள்**

Koviloor Digital Library

ஐயடிகள் பாடிய வெண்பா பாடல்கள். பன்னிரு திருமுறையில் பதினோறாவது திருமுறையில் ஷேத்திரத் திருவெண்பாவாக இப்பாடல்கள் இடம்பெற்றுள்ளது. படித்து அறிக. அவ்வெண்பாக்களில் ஒன்று

குந்தி நடந்து குனிற்தொரு கைகோலூன்றி
நொந்தி இருமி ஏங்கி நுரைத்தேறி – வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயா முன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை – 3வது பாடல்

மூன்றாம் வரி முதலில் வரும் ஐயாறு – வாயிலிருந்து தானாக வடியும் கோள்வாய் நீர்

ஐ – அய்யன் (சிவபெருமான்) அடிகள் – சிவபெருமானுக்கு அடியார்

காடவர் – பல்லவர், கோன் – மன்னன், ஐயடிகள் காடவர் கோன் என்பது காரணப் பெயராகும்.

அஞ்சனஞ்சேர் கண்ணார் அருவருக்கும் அப்பதமாய்க்
குஞ்சி வெளுத்துடலங் கோடாமுன் – நெஞ்சமே
போய்க்காடு கூடப் புலம்பாது பூம்புகார்ச்
சாய்க்காடு கைதொழு நீ சார்ந்து.

குஞ்சி – குடுமி –15வது பாடல்

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

தெரிந்து கொள்வோம்

சேரமான் பெருமான் நாயனார் வாழ்ந்த அரண்மனை இன்று சேரமான் மாஸ்க் என்ற பெயரில் மசூதியாக உள்ளது.

Koviloor Digital Library

46. கணம்புல்ல நாயனார் வரலாறு

வெள்ளாற்றுத் தென்கரையில் அமைந்துள்ள இருக்குவேளூர் என்ற ஊரில் வாழ்ந்த பெருங்குடி மக்களுக்கு தலைவராகவும், பெருஞ் செல்வந்தராக வாழ்ந்த கணம்புல்லர் என்ற அடியவர் ஒப்பில்லாத பெருங்குணம் உடையவராக இருந்தார். சிவபெருமானின் திருவடியே மெய்ப்பொருள் என்று உறுதிகொண்டு தான் பெற்ற செல்வத்தின் பயனே திருக்கோயில்களில் ஒளிவிளக்கு இடுதலே என நினைந்து ஆர்வத்தோடு சிவன் கோயில்களில் இடையறாது விளக்கு இட்டு வந்தார்.

தனது பெருஞ்செல்வத்தை பல சிவாலயங்களில் விளக்கேற்றியும், திருப்பணிக்காகவும் செலவு செய்து, செல்லும் அத்திருக்கோயிலில் பக்தி பாடல்களை நாவாரப் பாடிக்கொண்டு வருவார். இவ்வாறு தில்லை (சிதம்பரம்) திருக்கோயிலுக்கு வந்தடைந்தார். கூத்தப்பெருமானை அன்புடன் வழிபட்டு அக்கோயிலின் அருகிலுள்ள திருப்புலீச்சரம் என்ற சிவாலயத்திற்கு சென்று விளக்கிட, தன் இல்லத்திலுள்ள பொருட்களையெல்லாம் விற்று அப்பணத்தை கொண்டு விளக்கேற்றி வந்தார். வீட்டுப்பொருட்கள் அனைத்தும் தீர்ந்துவிட, கணம்புல்லை தானே அறுத்து தெருத்தெருவாக சுமந்து சென்று விற்று அதில் கிடைக்கும் பணத்தை வைத்து நெய் வாங்கி தீபம் ஏற்றி வர ஒரு நாள்

Koviloor Digital Library

கணம்புல் வாங்குவார் யாரும் இல்லாமல் போக விற்காமல் போன அந்த கணம்புல்லையே தீபம் ஏற்றும் வகையில் கட்டி விளக்கெரித்தார். அக்கணம்புல் விரைவாக தீர்ந்து விட இறைவனுக்கு தொடர்ந்து விளக்கிடும் காலம் (யாமம்) வரை கணம்புல் இல்லாததால், ஏற்றிய கணம்புல்லினால் ஆன விளக்கு அணையும் முன் மாற்று விளக்காக தனது தலை முடியை திரியாக பொருத்தி, ஏற்றி எலும்பும் கரைந்து எரியும்படி தன்னையே விளக்காக ஆக்கி தன் இரு வினையையும் சேர்த்து எரித்தார். பொங்கிய அன்புடன் விளக்கெரித்த கணம்புல்லரை சிவபெருமான் தன் திருவடியின் கீழ் இனிது அமர்த்தினார்.

இருக்குவேளூர் : சென்னையிலிருந்து விருத்தாசலம் அடுத்து சேலம் செல்லும் வழியில் பேளூர் என்ற பெயரில் தற்போது இவ்வூர் அழைக்கப்படுகிறது.

கருத்து : அ. எது நடந்தாலும் குறிக்கோளிலிருந்து சிறிதும் வழுவாது வாழ்பவரே இலட்சியத்தை அடைவார்கள். நாம் செய்து வரும் இறைப்பணி எதுவாக இருந்தாலும் அச்செயலுக்கு எத்தனை தடை வந்தாலும் மனம் தளராமல் விருப்பமுடன் தொடர்ந்து செய்து வருதல் வேண்டும் என்ற உறுதிப்பாட்டையே நாயனாரின் வாழ்க்கை நமக்கு காட்டும் பாதை யாகும்.

ஆ.நல்வினையும் பிறப்பதற்கு ஏதுவாகும் எனவே நல்வினையும், சேர்த்து எரித்தார். தீயசெயல் செய்தால் தீவினை வரும், நல்லது செய்தால் நல்வினை வரும் அப்படியென்றால் நல்வினையும் பிறப்புக்கு வழிவகுக்கும் என்பதால் நல்லது

Koviloor Digital Library

செய்யக்கூடாதா? எனக் கேட்டால் நல்ல செயல்கள் நான் செய்தேன் என்று நினைக்காமல் செய்து, தான் செய்த எல்லா நற்செயல்களும் சிவபெருமானால் ஆனது என்று வெறும் வாய் சொல்லக்கூடாது. மனம் சொல்ல வேண்டும். இந்த உண்மையை ஆழ்மனதிலிருந்து சொன்னால் நல்வினையும் தொடராது பிறப்பும் நீங்கும்.

இ. உயிர், முக்தி அடைவதற்கான வழியே பிறப்பு, அனுபவத்தின் உச்சியான முக்தியை அடைய உயிர் செல்லும் பாதையில் முன்னேறிச் செல்ல பயன்படும் சாதனம் (வண்டி) மட்டுமே இந்த உடல். எனவே உடலுக்காக வாழாது இவ்வுடலை முக்தி அடைய செல்லும் பாதையின் படிக்கட்டுகளாக மாற்ற வேண்டும்.

குறிப்பு : நாம் சிவபூசை செய்யும் முன் இரண்டு விளக்காவது ஏற்ற வேண்டும். ஒரு விளக்கு அணைந்தாலும், துணை விளக்கு எரிவதால் முழுவதும் விளக்கு அணைந்த நிலை உருவாகாது. மேலும் அணைந்த விளக்கை ஏற்றுவதும் எளிது. இல்லங்களில் எப்போதும் ஒரு விளக்காவது எரிந்து கொண்டே இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

தேனை வென்ற சொல்லாளொடு செல்வமும்
ஊனை விட்டு உயிர் போவதன் முன்னமே
கான வேடர் கருதும் காட்டுப்பள்ளி
ஞான நாயகனைச் சென்று சேர்மினே. 5–84–3

கணம்புல்ல நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

47. காரி நாயனார் வரலாறு

திருக்கடவூரில் வேதியர் குலத்தில் தோன்றிய காரியார் தமிழ் மொழியின் மீது மிகுந்த பற்றும், புலமையும் கொண்டு பல கருத்துக்களை சுருங்கச் சொல்லும் வகையில் செய்யுள் அமைத்து, அச்செய்யுளை படித்தவுடன் புரியாமலும், தெளிந்த அறிவு கொண்டு படித்தால் மட்டுமே அதன் பொருள் விளங்கும் வகையில் அமைப்பார். இவ்வாறு எழுதிய தமிழ் கோவை பாட்டினை மூவேந்தரிடம் கொண்டு சென்று பாடுவார். அம்மன்னர்கள் மகிழும் வண்ணம் செய்யுளின் நயத்தை விளக்குவார். இதனால் மகிழ்ந்த வேந்தர்கள் காரியார்க்கு மிகுந்த செல்வங்களை பரிசாக வழங்கினார்கள். இச் செல்வங்களை கொண்டு சங்கரனார் இனிது அமர்ந்த பல சிவாலயங்கள் எடுப்பித்து (கட்டி) திருப்பணி செய்தார்.

எல்லோரிடமும் அன்பாக பேசுவார். அடியார்களுக்கு வேண்டுவன யாவும் கொடுத்து வந்தார். எப்போதும் திருக்கயிலாய நாதனை மறவாத கருத்துடையவராய் வாழ்ந்து திருவருளின் துணையாலே உடலோடு திருக்கயிலை சேர்ந்து ஞானநிலை அடைந்தார்.

திருக்கடவூர் : மயிலாடுதுறையிலிருந்து இவ்வூரை அடையலாம்.

கருத்து : இறைவன் விரும்பி ஏற்கும் நிவேதனமும் அர்ச்சனையும் திருப்பாட்டே ஆகும்.

Koviloor Digital Library

“அர்ச்சனை பாட்டே யாகும்” – சிவபெருமான் மொழிந்த சுந்தரர் வரலாறு

“பயில் பாடல் சிந்தனையால் உரை செய்வார் சிவலோகம் இருப்பாரே” – திருஞானசம்பந்தர்

“அளப்பில கீதம் சொன்னாற்கு அடிகள் தாம் அருளுமாறே” – திருநாவுக்கரசர்

“பாடுவார் பசி தீர்ப்பார் பரவுவார் வினை களைவார்”– சுந்தரர்

“பாட்டு அவி காட்டுதும் பால் அவியாமே” – திருமூலர்

இறைவனுக்கு செய்யும் அனைத்து திருத்தொண்டிலும் பதிக செஞ்சொல் மேய செவ்வாயினை உடையவர்கள் மேலானவர்கள். இவர்களே பல கோடி அடியவர்களை உருவாக்கும் ஆற்றலுடையவர்கள். சான்று திருஞான சம்பந்தப்பெருமான், திருநாவுக்கரசப்பெருமான், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர், திருமூலர், காரைக்கால் அம்மையார் மேலும் பலர். சுவாமியை நினைந்து நம்மால் நான்கு வரி எழுதி பாட முடியாது ஆனால் எழுதிய அருளாளர்களை மறந்து தற்போது அவர்கள் பாடிய பதிகத்தை பாடி வருபவர்களை நம் சைவ உலகம் தலைக்கு மேல் தூக்கி ஆடி வருவது மிகவும் வருந்தத்தக்கது.

குறிப்பு : காரியார் பாடிய காரிக்கோவை நூல் கிடைக்கப் பெறவில்லை. ஜடமுத்தி: இந்நாயனார் உடலோடு முக்தி பெற்றவர். இதுபோன்று கண்ணப்பர், சுந்தரர், சேரமான், அமர்நீதியார் ஆனாயர் மேலும் எண்ணுக.

காரி நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

48.நின்றசீர் நெடுமாற நாயனார் வரலாறு

மதுரையை ஆட்சி செய்து வந்த பூழியர் (பாண்டியர்) குலத்தில் தோன்றியவர் மாறனார். தமது தோள் வலிமையால் நெல்வேலி போர் களத்தில் வடபுல மன்னர் படையை முன்னோக்கி வராமல் எதிர்த்து அவர்களை தோற்கடித்து வெற்றி வாகை சூடி சோழ மன்னவனின் மகளான மங்கையர்க்கரசியாரை திருமணம் செய்து ஆட்சி செய்து வந்தார்.

தடுமாற்றமுடைய நெறியை தவமான நெறியென்று எண்ணி சமண சமயத்தை சார்ந்தார். அவரது மனைவியார் மங்கையர்க்கரசியாரின் சிவவழிபாடும், பொறுமையும், மெய்யறிவும் திருஞானசம்பந்தப்பெருமானை மதுரைக்கு (திருஆலவாய்) அழைத்து வரச் செய்தது.

திருஞானசம்பந்தப்பெருமானின் கைகளால் தொட்டு திருநீறு பூசப்பெறும் புண்ணியம் உடையவரான மாறனார், சமண சமயத்தில் சேர்ந்ததால் வளைந்த அவர் அறிவில் ஏற்பட்ட கூன் சம்பந்தப்பெருமானால் நேராகி நின்றசீர் நெடுமாறன் எனும் பெயர் பெற்றார்.

தென் தமிழ்நாட்டில் சிவநெறி பெருகச்செய்து செங்கோல் வழுவாது திருநீற்றின் நெறி விளங்க நெடுங்காலம் ஆட்சி செய்து சிவபெருமான் அருளாலே சிவலோகம் சேர்ந்து இன்புற்றார்.

Koviloor Digital Library

மதுரை : திருஆலவாய் மூவர் பாடல் பெற்ற திருத்தலம். கடம்பவனம், பூலோக கயிலாயம் எனப்புகழ் பெறுவதும் அருள்மிகு சொக்கநாதப் பெருமான் சுயம்புமூர்த்தியாக அருள்பாலித்து வரும் தென்தமிழ்நாட்டில் உள்ள பெரு நகரமாகும். அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் நடைபெற்ற திருத்தலமாகும்.

கருத்து : அ. நெறியில்லாத நெறி தன்னை நெறியாக நினைந்து நம் சைவ நெறியை விடுத்து பிற சமயங்களுக்கு சென்றால் அச்செயல் நம்மை மட்டுமன்றி நம்மை சார்ந்தவர்களையும் துன்புறுத்தும். உயிர்களிடத்து அன்பு நெறியை உலகத்திற்கு போதித்து திருஞானசம்பந்தரையும் அவர் தொண்டர்களையும் எரிக்க முற்பட்டவர்களா? அன்பு நெறியை பேசுவது.

ஆ. மத மாற்றம் என்பது நாம் இறைவனை விரைந்து சேர வேறு வழியை தேடுவது, ஆனால் இன்று இருந்து நாளை அழியும் உடல், உறவு, உலகு இதனை மெய் என்று நம்பி அதனை நிலைப்படுத்துவதற்கும், போலியான மரியாதைக் – காகவும் மதம் மாறுவது அவ் உயிரின் ஆன்மீக வளர்ச்சிக்கு பெரும் தடையாக மாறும்.

குறிப்பு : இந்த நாயனாரின் வரலாற்று நிகழ்ச்சிகள் இந்நூலில் திருஞானசம்பந்தப்பெருமான் வரலாற்றில் விரிவாக எழுதப்பட்டுள்ளது.

நின்றசீர் நெடுமாற நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

49. வாயிலார் நாயனார் வரலாறு

சான்றோர்கள் வாழ்ந்த தொண்டை நாட்டில் செல்வம் நிறைந்த மக்கள் வாழும் திருமயிலாப்பூரில் வேளாளர் குலத்தில் பிறந்து இறைவனை அடையும் வாயிலை காட்டும் அன்பரானதால் வாயிலார் என அழைக்கப்பட்டார். அவர் எப்போதும் சிவபெருமானை நினைக்கும் தவமே கூடிய மனக்கோயிலை தன் உள்ளத்தில் அமைத்து அதில் தெளிந்த ஞானம் என்ற சுடர் விளக்கினை ஏற்றி எது நடந்தாலும் நான் ஆனந்தமாக இருப்பேன் என்ற பேரானந்தத்தையே திருமஞ்சனமாக நீராட்டி சிவபெருமான் மீது கொண்ட அன்பையே அமுதமாக (நிவேத்தியம்) திருஅமுது செய்வித்து ஆகம அர்ச்சனைக்கு தேவையான எட்டு பூக்களைகொண்டு அகபூசனை செய்தார்.

இவ்வாறு நெடுநாள் தொடர்ந்து அன்போடு தினமும் அகபூசனை செய்து சிவபெருமான் திருவடி நிழற்கீழ் சேர்ந்தார் புண்ணிய மெய்த்தொண்டர்.

மயிலாப்பூர் : அருள்மிகு கபாலீசுவரர் அருளும் திருமயிலாபுரி என்பது பழைய பெயர். சம்பந்தர் பாடல் பெற்றத் திருத்தலம் சென்னையில் உள்ளது. பூம்பாவையின் சாம்பலை மீண்டும் பெண்ணாக மாற்றிய அதிசயம் நடந்த பதி. பழைய கோயில் கடலோரம் இருந்தது. அவ்விடமே தற்போது சாந்தோம் சர்ச்சாக உள்ளது. இச்செய்திக்கு சான்று திருமுறைத் திருத்தலங்கள் பூ.மா.செந்தில்நாதன் ஐயா எழுதிய புத்தகத்தில் 119ம் பக்கத்தில் விரிவாக இச்சான்றை விளக்கியுள்ளார்.

Koviloor Digital Library

கருத்து : பூசனை என்பது பூ கொண்டு அர்ச்சிப்பதே. எனவே புறபூசனை செய்யாது அகபூசனைகளுக்கு நேராக செல்வது கடினம். புற பூசனையை விடாமல் அகபூசனையும் செய்து வர வேண்டும். ஞான நிலையில் தான் அக பூசனை மட்டும் போதும். (ஞான நிலை என்பது எப்போதும் இறைவனை நினைப்பதேயாகும்)

புறபூசனைக்கு எட்டு மலர்கள் : புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்திவர்த்தனம், பாதிரி, குவளை, அலரி, செந்தாமரை.

அக பூசனைக்கு எட்டு மலர்கள் : கொல்லாமை, ஐம்பொறி அடக்கம், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு ஆகும்.

அருஉருவான சிவலிங்கத் திருமேனிக்கு செய்யும் பூசனையே புறபூசையாகும். அருவ நிலையில் எங்கும் நிறைந்து ஆனந்த மூர்த்தியாக சிவப்பிரகாசமாய் இருக்கும் இறைவனை மனத்தால் பூசிப்பதே அகபூசையாகும்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே

– திருமூலர் 1799

வாயிலார் நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

50. முனையடுவார் நாயனார் வரலாறு

பொன்னி நதி பெருகி வளம் கொழிக்கும் சோழவள நாட்டில் நீடூர் என்ற ஊரில் வேளாண்மை குலத்தின் தலைமை முதல்வரான முனையடுவார் என்ற பெயருடைய அடியவர் நீலநிற கண்டத்தை உடைய சிவபெருமான் மீது மிகுந்த அன்பு கொண்டு வாழ்ந்து வந்தார்.

மிகச் சிறந்த தோள் வலிமையுடைய போர் வீரராகவும் திகழ்ந்தார். போரில் பகைவர்களால் தோல்வி அடைந்தவர்கள் யாரேனும் முனையடுவாரிடம் வந்து செல்வங்களை கூலியாக கொடுத்து தங்களுக்காக போர் புரிய வருமாறு அழைத்தால், அவர்கள் சொல்வது முழுவதையும் கேட்டு நடுநிலையிலிருந்து அற நெறியினை ஆராய்ந்து தெளிந்து, தன்னிடம் உதவி கேட்டு வந்தவர்களிடம் உண்மை இருந்தால் அவர்களுக்காக எமனே பயந்து ஒதுங்கும்படியாக முனைந்து போர் புரிந்து வெற்றி கொண்டு கூலியாக பொன்னும் பொருளும் பெற்று சிவனடியார்கள் சொன்னதை சொன்னபடியே அவர்களுக்கு தான் பெற்ற செல்வத்தை நிரம்ப கொடுத்தும், சோறும், கரும்பின் சுவை கொண்ட இனிப்பும், பசு நெய்யுடன் காய்கறி, தயிர், பால் சுவையான கனி வகைகளுடன் நிறைத்து மாறாத அன்புடன் நாள்தோறும் விருந்தளித்து வந்தார். இவ்வாறு பலகாலம் திருத்தொண்டு புரிந்து சிவபெருமான் திருவடியை என்றும் பிரியாத உரிமையுடையவராக சேர்ந்தார்.

Koviloor Digital Library

நீடூர் : மயிலாடுதுறை அருகிலுள்ள ஊராகும். திருநாவுக்கரசர், சுந்தரர் பாடல் பெற்றத் திருத்தலம். "கலை ஞானம் கல்லாமே கற்பித்தானை" என்ற திருநாவுக்கரசர் பதிகம் பாடப் பெற்ற பதியாகும்.

கருத்து : போர் புரியும் முன் நிதியை பார்க்காது, நீதியை பார்த்து போர் புரிந்த முனையடுவாரின் செயல் ஆராயத்தக்கது. பணம் சம்பாதிப்பது பெரிதல்ல, அச்செல்வத்தை நல்வழியில் பெற வேண்டும் இதனை சொல்வது எளிது கடைபிடித்து வாழ்வது மிகக்கடினம்.

வயல் வெளியில் எலி ஒன்று நெற்கதிரை தனது வாயால் பற்றி அவ்வயல்வெளியுள்ள வளைக்குள் எடுத்துச் செல்வதை ஒரு விவசாயி கண்டார். அவ்விவசாயி நாளை நாம் இவ்வயலை உழப்போகிறோம் இது தெரியாமல் இந்த முட்டாள் எலி இந்நெற்கதிரை பதுக்கி வைக்கிறதே என நினைத்து சிரித்தான். அதுபோலத்தான் நமக்கு எந்நேரமும் மரணம் வரும் என்ற உண்மையை ஏற்காமல் அந்த எலிபோல பணத்தை சேர்த்து கொண்டே இருக்கிறோம்.

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் – கூடுவிட்டு இங்கு
ஆவிதான் போனபின்பு யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்" – ஔவையார்

முனையடுவார் நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

51. கழற்சிங்க நாயனார் வரலாறு

கங்கையை சடையில் தாங்கிய சிவபெருமானின் திருவடியை தவிர வேறொன்றும் நிலையானதல்ல என்ற மெய் உணர்வுடன் கழற்சிங்கர் என்ற மன்னன் பல்லவ குலத்தில் தோன்றி, வடபுலத்து மன்னரை எல்லாம் வென்று நீதி தவறாமல் ஆட்சி செய்து வந்த நாளில், சிவனார் அமரும் பல கோயில்களுக்கு செல்ல வேண்டும் என்ற விருப்பத்தால் சிவாலயங்களுக்கு திருத்தலயாத்திரை சென்று வழிபட்டு, திருவாரூர் அருள்மிகு புற்றிடங்கொண்ட நாதரை வழிபட அத்திருக்கோயிலின் உள் புகுந்தார். அரசருடன் மந்திரிகள், சேனாதிபதி, தூதர்கள், இறைப்பணி முதல்வர், மெய்க் காப்பாளர்கள் உடன் செல்ல அரசரின் மனைவி தனியாக அத்திருக்கோயிலையை வலங்கொண்டு அக்கோவிலில் கட்டப்பட்டுள்ள கலை நயத்தை மட்டும் கண்டு ரசித்தபடியே வரும்போது, பூ மண்டபத்தில் உள் சென்று இறைவனுக்காக மாலை தொடுக்க வைத்திருந்த பள்ளித் தாமத்தில் (பூ, இலை, அரும்பு, வேர்) இருந்து புதிய பூ ஒன்றை எடுத்து முகர்ந்து (மூக்கால் நுகர்தல்) பார்த்தார். இறைவனுக்கு அணிவிக்க வேண்டிய மலரை முகர்ந்ததை கண்ட செருத்துணை என்ற பெயர் கொண்ட புனிதத் திருத்தொண்டர் கத்தியை கொண்டு அரசியின் மூக்கினை அரிந்தார். மூக்கில் ரத்தம் கொட்ட மண்ணில் விழுந்து புலம்பிட அப்போது புற்றிடங்கொண்ட நாதரை வழிபட்டு வந்த மன்னவர், அரசி, புலம்பியவாறு

Koviloor Digital Library

கிடந்ததை கண்டு இவ்வுலகில் உள்ளோரில் அஞ்சாது இவ்வினை செய்தது யார்? எனக் கேட்டார். அரசரின் அருகே வந்த செருத்துணையார் நடந்தவைகளை உள்ளபடி உரைத்தார். அம்மொழியினை கேட்ட மன்னரும் அன்பரை நோக்கி செய்த குற்றத்தின் செயல் வழியே தண்டனை தருதல் வேண்டும் என்று தனது வாளினை எடுத்து தன் பட்டத்து அரசியான பெருந்தேவி சிவபெருமானுக்கு வைத்திருந்த பூவினை முதலில் எடுத்தது கை தான் எனவே கையை நீக்குவதே சரியான தண்டனை வழி முறையென அரசியின் கையினை வளையலோடு வெட்டி எறிந்தார். அங்கிருந்த தொண்டர்களின் அர ஒலி நிலமெங்கும் நிறைந்தது. விண்ணிலிருந்த இமையோர்கள் வாச மலர் மழை பொலிந்தனர்.

அரிய பெரும் திருத்தொண்டருடன் நெடுங்காலம் அரசாட்சி செய்து திருவருட் கருணையினால் சிவன் சேவடி நிழலில் சேர்ந்தார்.

காஞ்சிபுரம் : பல்லவர்களின் தலைநகரம் ஆகும். சென்னையிலிருந்து 70 கி.மீ. உள்ள ஊராகும்.

கருத்து : அ. மனுநீதி சோழ மன்னனின் மகன் தேரில் செல்லும்போது கன்று ஒன்று துள்ளி ஓடி வந்து தேர் சக்கரத்தில் விழுந்து இறந்தது. அக்கன்றின் தாய் பசு, குறைகளை சொல்லும் ஆராய்ச்சி மணியை அடிக்க, விவரம் அறிந்த மனுநீதி சோழ மன்னன் தன் மகனை தேரில் ஏற்றி கொன்று, நீதியை நிலை நிறுத்தினான். அந்நீதி வழுவாத நெறியில் அரன் மீது கொண்ட அன்பில் அறம் வழுவாது தன் பட்டத்துக்கு ஒரு அரசியும், காதல் மனைவியானாலும் நீதி

Koviloor Digital Library

என்பது அனைவருக்கும் ஒன்றாகவே பாவித்து தண்டனை வழங்கிய கழற்சிங்க நாயனாரின் செயல் நம் சமுதாயம் மேம்பட கடுமையான தண்டனைகளை குற்றத்திற்கு ஏற்றபடி பாராபட்சம் பாராது செயல்படுத்த வேண்டும் என்பதையே தெளிவுபடுத்துகிறது.

ஆ. திருக்கோயிலின் வெளியே இறைவனுக்காக விற்கப்படும் பூக்கடைகளில் செருப்பினை விடுதல், செருப்பு பாதுகாப்போர் அப்பணியையும் செய்து கொண்டே மலர்களை விற்கிறார்கள். செருப்பு பாதுகாப்பு கடையில் செருப்பை கழற்றி கைகளால் கொடுத்து தண்ணீரில் கைகளை கழுவாமல் மலர்களை வாங்கிக்கொண்டு இறைவனுக்கு தருவது சிவ அபராத செயலாகும்.

இ. இறைவன் திருமேனியில் அலங்கரித்த மாலைகளை சிவாச்சாரியர்களிடமிருந்து பெற்று வாகனத்தில் தொங்க விடுதலால் அம்மலர்கள் கீழே விழுந்து அனைவரின் பாதத்தில் மிதிபடுகிறது. எனவே சுவாமிக்கு அணிவித்த பூக்கள் அனைத்தும் யார் காலிலும் படாமல் செடியின் கீழோ அல்லது நந்தவனத்தில் ஒரு பள்ளம் அமைத்தோ இடுதல் வேண்டும்.

ஈ. பல கிராமங்களில் பிரதோஷம் அன்று சுவாமிக்கு அணிவித்த மலர் அடுத்த பிரதோஷம் அன்று எடுக்கப் படுகிறது. பழைய பூவை எடுக்காமல் நம் தலையில் அதேபோல் வைத்தால் அப்பூ எப்படி துர்நாற்றத்தை ஏற்படுத்தும் என்பது அப்போது தெரியும். தயவுசெய்து தினமும் இறைவனுக்கு நீராட்டி, புதுமலர் சூட்ட வேண்டும்.

கழற்சிங்க நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

52. இடங்கழி நாயனார் வரலாறு

கோனாட்டு தலைநகரமான கொடும்பாளூரில் ஆதித்தியசோழன் குடி வழி மரபில் வேளிர்குல மன்னவராக இடங்கழியார் நல்லாட்சி செய்து வந்தார். சைவநெறி தழைத்து ஓங்க சிவாலயங்களில் ஆகம விதிப்படி அர்ச்சனைகளுக்கு தடைவராது நடைபெறச் செய்து வரும் நாளில், சங்கரனுக்கு அன்புடைய ஒரு திருத்தொண்டர் சிவனடியார்களுக்கு திருஅமுது தொடர்ந்து தினமும் வழங்கி வந்தார்.

பணம் இல்லாத நிலை ஏற்பட, தான் செய்து வரும் அமுதூட்டும் பணி நிற்க கூடாது என்ற பொங்கி எழுந்த விருப்பத்தால் என்ன செய்கிறோம் என்பதை அறியாத நிலையில் நடுஇரவில் அரசுக்கு உரிமையான நெல் பண்டாரத்தில் (பொக்கிஷம்) உள்ளே சென்று நெல்லை எடுக்க முற்பட்டார். அப்போது இரவு காவல் செய்யும் முரசு அடிக்கும் காவலர்கள் அவரை பிடித்து இடங்கழி மன்னர் முன்னே கொண்டு வந்து நிறுத்தினார்கள். மெய் தவமுடைய கோலத்தில் நிற்கும் தொண்டரை பார்த்து மன்னவர் கேட்க, சிவனடியார்களுக்கு அமுது செய்விக்கும் பணி நிற்காமல் இருக்கவே இவ்வாறு செய்தேன் என்று கூறக்கேட்டு "இவரன்றோ பண்டாரம் எனக்கு" என மகிழ்ந்து நிறைந்த உள்ளத்துடன் நெல் பண்டாரம் மட்டுமின்றி அரசின் குறைவில்லாத நிதி பண்டாரத்தையும் (கேட்காமலே) சிவ அடியவர்கள் கொள்ளை அடித்து எடுத்து செல்க என்று கூறி இச்செய்தியை பறையடித்து ஊர் முழுவதும் உள்ள அடியார்கள் கேட்கும்படியாக செய்தார்.

Koviloor Digital Library

ஈசன் அடியார்கள் மீது கொண்ட அன்பால் இடங்கழி மன்னரின் செயலால் அடியவர்களுக்கு தடையிலாத திருஅமுது (உணவு) கிடைத்தது. திருநீறு பூசிய அன்பர்கள் மீது கொண்ட அன்பே இவரை சிவபெருமான் திருவடியில் சேர்த்தது.

கொடும்பாளூர் : திருச்சிராப்பள்ளி வழியே விராலி மலை அடுத்து வலது புற பிரிவில் கொடும்பாளூர் உள்ளது. இவ்வூரில் அருள்மிகு முசுகுந்தேஸ்வரர் அருள்பாலிக்கின்றார்.

கருத்து : அ) சிவ அன்பர்கள் பசியை வெளியே கூறாது வாழ்வார்கள். அவர்களின் உள்ளக்குறிப்பு அறிந்து பசியாற்றுவதே சான்றோர் கடமை. எனவே தான் இடங்கழி நாயனார் சிவனடியார்கள் பொக்கிஷத்திலிருந்து யாரையும் கேட்காமல் எடுத்து செல்க என உரைத்தார்.

ஆ) அடியாரின் பசியை போக்க சுவாமி திருவீழி மிழலையில் படிக்காசு அளித்ததும், புகழ்த்துணை நாயனார்க்கு படிக்காசு வழங்கியதும், சுந்தரமூர்த்தி சுவாமிக்கு பிச்சமுது செய்வித்ததும், நெல்மலை வழங்கியதும், செங்கல் அனைத்தும் தங்க கட்டிகளாக மாற்றியதும், குங்குலிய கலயருக்கு திரவியங்களையும் பொன்னையும் நிரப்பியதையும், திருநாவுக்கரசு நாயனார்க்கு பொதிசோறு வழங்கியதையும் சிந்தித்தால் தாயைப்போல பிள்ளை, தாயுமானவர் போல அவரது பிள்ளையான இடங்கழியாரின் செயல் உள்ளது.

இடங்கழி நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

53. செருத்துணை நாயனார் வரலாறு

மருகல் நாட்டுத் தஞ்சாவூர் என்ற ஊரில் புற ஒழுக்கத்தையும், அக ஒழுக்கத்தையும் வழுவாமல் கடைப் பிடித்து வரும் வேளாண்மைக் குடியின் தலைவராக செருத்துணை என்ற சிவனடியார் வாழ்ந்து வந்தார். அவர் திருவாரூர் சென்று அத்திருக் கோயிலின் உள்ளே திருப்பணிகள் செய்து ஒவ்வொரு காலத்தோறும் புற்றிடங்கொண்ட நாதரை வணங்கி வரும் நாளில், இறைவனுக்கு பூமாலை தொடுக்க வைத்திருந்த பூக்களில் சற்று விலகி கிடந்த வாசமிகு பூ ஒன்றை பல்லவ மன்னரான கழற்சிங்கர் மனைவியார் இறைவனின் சிரசை அலங்கரிக்கும் மலரை நுகர்ந்ததை கண்ணுற்ற செருத்துணையார் தனது கத்தியால் அரசியாரின் மூக்கை அரிந்தார். நாட்டை ஆளும் மன்னனின் மனைவியே ஆகினும் சிவஅபராதத்திற்கு வீரத்துடன் தக்க தண்டனையை வழங்கினார். (அதற்குப்பிறகு நடந்த செயல்கள் கழற்சிங்க நாயனார் வரலாற்றில் விளக்கப்பட்டுள்ளது).

திருக்கோயிலுக்கு தொடர்ந்து வழிபாடுகளை முறைப்படி செய்து பிறரையும் செய்வித்து கூத்தபெருமானின் தூக்கிய திருவடியின் திருநடனத்தின் கீழ் இறவாத இன்பம் அடைந்தார்.

மருகல் நாட்டுத் தஞ்சாவூர் : தற்போது கீழ்தஞ்சாவூர் என வழங்கப்படுகிறது. இவ்வூரில் கயிலாச நாதர் கோயில் உள்ளது. திருவாரூர் அடுத்து சன்னாநல்லூர் – திருப்புகலூர்

Koviloor Digital Library

எதிர்ரோட்டில் திருக்கண்ணபுரம் அடுத்து திருச்செங்காட்டங் குடியிலிருந்து 3 கி.மீ.ல் இவ்வூர் உள்ளது. அடியவன் உள்ளிட்ட சிறு அமைப்பாக கோச்செங்கண்ணாயனார் சிவத்தொண்டு சிவசபை என்ற அமைப்பின் வழி இவ்வூரில் ஐந்து பெரிய சிவலிங்கத் திருமேனி புதைந்தும் சாய்ந்தும் (இச்சிவலிங்க திருமேனிகளில் ஒன்று. 36 பட்டை கொண்ட வடிவு) இருக்க சிவபெருமானின் கருணையினாலும் சிவ சபையின்அமைப்பாளர் சிவத்திரு சிவக்குமார் ஐயாவின் வழிகாட்டுதலாலும் 6.6.2015 அன்று பத்து பேர் கொண்ட அன்பர்களோடு ஐந்து திருமேனிகளையும், உயர்த்தி அமைத்து சுவாமிக்கு மேல் ஐந்து மேற்கூரை தனித்தனியே அமைக்கப்பட்டு மறுநாள் வேள்வியும், குடநன்னீராட்டும் சிறப்பாக நடைபெற்றது. இறைவன் இவ்வூரில் எமக்கு அருளிய பணியை எண்ணி பெருமிதம் அடைகிறோம்.

கருத்து : அ. ஒரு தண்டனை என்பது ஒரு தனி மனிதனுக்கு மட்டும் கொடுக்கப்பட்டது என நினைக்காமல் அத் தண்டனையை பார்த்தும், படித்தும் மக்கள் கூட்டமே தவறு செய்யாமல் வாழ முயல வேண்டும். தண்டனையை ஏற்றவரும் நாம் திருந்தவே நமக்கு தண்டனை வழங்கப்பட்டது என்பதை உணர வேண்டும்.

ஆ. காவலர்கள் (போலீஸ்காரர்) தடை விளக்கின் கீழ் (சிக்னல்) நின்று கொண்டிருப்பதை பார்த்தால் மட்டுமே நாம் சிக்னலுக்கு மதிப்பு கொடுக்கின்றோம். தீவிர கண்காணிப்பும் சரியான தண்டனையும் கொடுப்பதால் மட்டுமே இனி நாம் திருந்துவோம்.

செருத்துணை நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

54. புகழ்த்துணை நாயனார் வரலாறு

செருவிலிபுத்தூர் என்ற ஊரில் சிவவேதியர் குலத்தில் புகழ்த்துணை எனும் அன்பர் வாழ்ந்து வந்தார். அவர் இவ்வுலகில் நிகரில்லா தொண்டான அவ்வூரில் உள்ள திருக்கோயிலின் மூலவரை வழிபடும் அகம்படி பணியை செய்து வந்தார். அவர் வறுமையுற்று பசியால் வாடியபோதும் சிவவழிபாட்டினை விட்டுவிட மாட்டேன் என்று மனதில் உறுதி கொண்டு, இரவும் பகலும் குளிர்ந்த நீரும், மலரும் எடுத்துச் சென்று இறைவர்க்கு பூசனைகளை செய்து வந்தார். ஒருநாள் இறைவர் உச்சிமீது நீர்விடும்போது மிகுந்த பசியினால் நிலை தளர்ந்து நீர்விடும் குடத்தை தாங்க முடியாமல் (சுவாமியின் சிரசின் மேலே) நஞ்சுண்ட கண்டத்தன் திருமுடி மேலே போட்டு விட்டு மயங்கி விழுந்தார்.

அவ்வேளை சிவபெருமான் கருணையினாலே உறக்கம் வர விழுந்தபடியே தூங்கிவிட்டார். அப்போது சிவபெருமான் கனவில் எழுந்தருளி அருள்புரிந்து உணவு கிடைக்காமல் வறுமையுறும் காலம் வரை உன் பசி நீங்க தினமும் ஒரு காசு இங்கு உனக்கு தருவோம் என மொழிந்தார். உறக்கத்திலிருந்து விழித்த புகழ் துணையார் பீடத்தில் ஒரு காசு இருப்பதை கண்டு மகிழ்ந்தார். அக்காசு கொண்டு பசி நீங்கியவராய் தளர்வின்றி பூசனை செய்து கொடிய வறுமையும் (வற்கடம்) பசிப்பிணியும் நீங்கி தொடர்ந்து இறைவர்க்கு அகம்படி பூசனை செய்து தேவர்கள் வணங்க பொன்னார் மேனியன் சிவபெருமானின் புனித திருவடி நிழலில் சேர்ந்தார்.

செருவிலிபுத்தூர் : தற்போது அழகாபுத்தூர் என அழைக்கப்படும் இவ்வூர் அரிசிற்கரைப்புத்தூர் என்ற திருமுறை

Koviloor Digital Library

திருத்தலமாகும். மூவர் பாடல் பெற்ற திருத்தலமாகும். சுவாமி திருப்பெயர் படிக்காசு வைத்த பரமர், கும்பகோணத்திலிருந்து நாச்சியார் கோயில் செல்லும் வழியில் இவ்வூர் உள்ளது.

கருத்து : தன் பசியை பொருட்படுத்தாமல் இறைவர்க்கு நிவேதனம் செய்து வரும் அந்தணர்களை அடியவன் பார்த்திருக்கிறேன். இவ்வரலாற்றில் இறைவன் புகழ்த் துணையாருக்கு உன் வறுமை ஒழியும் வரை படிக்காசு தருவோம் என உரைப்பதை ஆய்ந்து பார்த்தால் வறுமையை விரட்ட முயற்சி செய், அறிவை பயன்படுத்து கடின உழைப்பின் வழி பொருளை அடைவாய் உன் பசி நீங்கும், அதுவரை படிக்காசு தந்து உனக்கு வாய்ப்பினை தருகிறேன் என்பதே இறைவனின் திரு உள்ளமாகும்.

இறைவன் பாராபட்சமில்லாமல் இவ்வுலகத்திலுள்ள அனைத்து உயிர்களுக்கும் இயற்கையின் வழி உணவு தருகிறார். சில உயிர்களின் பேராசையால் இயற்கையின் செயல் தடுக்கப்படுகிறது. எனவே அதனால் பாதிப்பிற்கு உட்பட்ட உயிர்கள் போராடியே தீரவேண்டும். இப் போராட்டத்தின் துவக்கமே முயற்சி செய், அறிவைப் பயன்படுத்து, கடின உழைப்பால் அத்தடையை உடைத்து உன்னையும், உன்னை சார்ந்தவர்களின் வறுமையையும் ஒட்டு. இறைவனை நம்பி வாழும் நாம் சுவாமி வழங்கியுள்ள அறிவையும் நம்பவேண்டும். சிவன் சிவன் என்று சுவாமி பின்னாலேயே சுத்தினான், குடும்பமே வறுமை அடைந்தது என்று பிறர் சொல்லும் நிலை வரவிடாமல் தினமும் சிவபூசை சிறப்பாக செய்து கொண்டும் உழைத்து தன் குடும்பத்தின் வறுமையையும் நீக்கி வாழ்வதே நம் அனைவருக்கும் தந்தையான சிவபெருமானுக்கு நாம் தேடும் பெருமை. பிறகு நம்மை பார்த்து அனைவரும் சிவநெறிக்கு வருவார்கள்.

புகழ்த்துணை நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

55. கோட்புலி நாயனார் வரலாறு

நலம் பெருகும் சோழவளநாட்டில் நாட்டியத்தான்குடி எனும் ஊரில் வேளாண்மை செய்யும் குல மரபில் கோட்புலியார் என்ற பெயரை கொண்டவர் வாழ்ந்து வந்தார். அவர் சோழ மன்னரின் படைக்கு தளபதியாக திகழ்ந்தார். பகைவர்களை எதிர்த்து போரிடும் போது எதிரிகளை கூண்டோடு அழிக்கும் மிகச் சிறந்த தோள் வலிமை உடையவர். தன் தோள் வலிமையினால் சோழ நாட்டிற்காக போர் புரிந்து வெற்றி பெற்று கோட்புலியார் அவரது ஊருக்கு திரும்பும்போது மன்னர் நிறைந்த செல்வங்களை அவருக்கு கொடுத்து அனுப்புவார்.

கோட்புலியார் அச்செல்வங்களை கொண்டு சிவாலயங்கள் தோறும் சுவாமிக்கு (மூலவர்க்கு) நிவேதனம் செய்வது தடையில்லாமல் நடைபெறவேண்டும் என்ற உணர்வோடு மலையை போன்று செந்நெல்லை (தோல் மூடியுள்ள அரிசி) குவித்து பாதுகாத்து தேவைக்கேற்ப திருக்கோவில்களுக்கு வழங்கி திருத்தொண்டு செய்து வரும் நாளில், சோழ மன்னரிடமிருந்து போருக்கான அழைப்பு வர அப்போர் முடிந்து ஊர் திரும்ப மிக நீண்டகாலம் ஆகும் என கருதி, கோட்புலியார் பல நெல் கூடாரங்களை அமைத்து செந்நெல்லை வாங்கி மலைபோல குவித்து, அதில் சுற்றத்தார்க்கு என்று தனி நெல் கூடாரங்களை ஒதுக்கி அக்கூடாரத்திலுள்ள நெல்லை மட்டுமே எடுத்து உணவு செய்யும்படியும் சிவாலயங்களுக்கு என்று தனியாக

Koviloor Digital Library

ஒதுங்கியுள்ள நெற் கூடாரங்களை இறைவர்க்கான திருஅமுதுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும், இறைவர்க்கு அமுது படைக்க வைத்திருக்கும் நெல்லை எடுக்க எவரேனும் நினைப்பார் எனில் அந்த நினைப்பை தயவுசெய்து விட்டு விடுங்கள் மீறி எடுப்பவர்கள் கடுமையான தண்டனை ஏற்க வேண்டி வரும் அது சிவன் மேல் ஆணை (திருவிரையாக்கலி) என்று சுற்றத்தார்களை எச்சரிக்கை செய்து விட்டு போர் முனைக்கு சென்றார்.

சில காலம் சென்றது. நாட்டியத்தான்குடியில் மிகுந்த வறுமையான சூழல் வந்தது. சுற்றத்தார்க்கு வழங்கிய நெற்கூடுகளிலுள்ள நெல் முழுவதையும் சாப்பிட்டு முடித்தபின் அவர்கள் இறைவருக்கான நெல்லை எடுத்து சாப்பிட தொடங்கினார்கள்.

இந்நிலையில் கோட்புலியார் போர் முனையில் வெற்றி பெற்று மன்னன் வழங்கிய செல்வங்களை பெற்று நாட்டியத்தான்குடி திரும்பும்போது சிவபெருமானுக்காக வைத்திருந்த நெல்லை சுற்றத்தார்கள் எடுத்தார்கள் என்ற உண்மை தெரிய வந்தது. ஆனாலும் நடந்தது தனக்கு தெரியாதவாறு இருந்து கொண்டு சுற்றத்தார்கள் அனைவரையும் வெட்ட வேண்டும் என்று மனதில் உறுதி செய்து கொண்டார். எதிர்ப்பட்ட அனைவரிடமும் மகிழ்ச்சியான மொழிகளில் பேசிக்கொண்டே தன்னுடைய இல்லம் சென்றார்.

தன் மனையிலிருந்த சுற்றத்தாரிடம் கோட்புலியார், நம்முடைய சுற்றத்தார் அனைவரையும் அழையுங்கள் அனைவருக்கும் அழகிய உடைகளும், செல்வங்களையும்

Koviloor Digital Library

வழங்குகிறேன்'' என்று கூறினார். உறவினர்கள் அனைவரும் வந்த சேர்ந்ததை அறிந்து, தன் பெயருடைய (கோட்புலி) போர் வீரனை அழைத்து உறவினர்கள் யாரும் வெளியே ஒடி விடாமல் வாயிலில் காவல் காக்கும்படி பணித்தார்.

பின் செல்வங்களை அளிப்பார் போல நடித்த நல்லவரான கோட்புலியார், இறைவன் மீது செய்த ஆணையை மறந்து சிவபெருமானுக்காக வைத்திருந்த நெல்லை சாப்பிட்ட உங்களை விடமாட்டேன் என்று கனன்று (சினந்த நிலையில் உரைக்க பேசுதல்) தனது வாளால் தந்தையார், தாயார், உடன்பிறந்தார்கள், மனைவிகள், சுற்றத்தார்கள், கோயில் பொறுப்பில் இருந்தவர்கள் (பதி அடியார்) இவர்களோடு சேர்ந்து உண்ட நண்பர்களையும் ஒருவர் விடாமல் அத்தனை பேரையும் வெட்டி எறிந்தார்.

பின் அங்கு ஒரு பிள்ளை மட்டும் பிழைத்திருந்ததை பார்த்த, வாயில் காவலில் நின்று கொண்டிருந்த வீரன் ஒடிவந்து கோட்புலியாரிடம் இக்குழந்தை இதுவரை சோறு உண்ணாத சிறுக்குழந்தை, மேலும் இப்புதல்வன் குடிக்கு ஒரே மகன் எனவே இவனை விட்டுவிடும்படி வேண்டினான்.

இக்குழந்தை குடித்த முலைப்பாலை அளித்த தாய் இறைவர்க்கு வைத்த நெல்லை கொண்டு சாப்பிட்டு உள்ளாள் என்று கூறி அக்குழந்தையை மேலே வீசி எறிந்து தனது மின்னல் போன்ற வாளை அக்குழந்தை மேலிருந்து கீழே வரும்போதே வாளில்பட்டு இரு துண்டாக கீழே விழும்படி செய்தார். அந்நிலையில் சிவபெருமான் கோட்புலியார் முன் காட்சி கொடுத்து உன்னுடைய வாளால் வெட்டுண்டதால்

Koviloor Digital Library

அவர்கள் அனைவரும் புனிதம் அடைந்து பொன்னுலகம் செல்வார்கள் அழியாத புகழுடைய நீ (கோட்புலி) என்னுடன் வருவாயாக என கட்டளையிட்டு சுவாமி தன்னுடன் அழைத்துக் கொண்டு சிவலோகம் சேர்த்தார்.

நாட்டியத்தான்குடி : திருவாரூரிலிருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் பாதையில் மாவூர் கூட்டு ரோடிலிருந்து வடபாதி மங்கலம் செல்லும் வழியில் இவ்வூர் உள்ளது.

கருத்து : இவ் வரலாறு இறைவழிபாடு என்பது ஒரு சமுதாயம் மேம்பட எத்தனை முக்கியம் என்பதை நமக்கு அறிவுறுத்துகிறது. திருக்கோயில் திருப்பணி செய்பவர்கள், கோயிலில் பூசை செய்யும் அன்பர்கள், கோயிலுக்கு வந்து செல்பவர்கள் எவராகிலும் இறைவனுக்காக வழங்கிய எதுவாகிலும் தன் சுயநலத்திற்காக அவற்றை பயன் படுத்தலாகாது என்பதை கோட்புலியார் வலிமையாக நம்மை எச்சரித்துள்ளார்.

முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்கு தீங்குள வாரி வளம் குன்றும்
கன்னங்களவு மிகுந்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத்தானே

என்ற திருமூலரின் வாக்கினை வழிகொண்டு முன்னவராக சிவபெருமான் எழுந்தருளியுள்ள சிவாலயம் அனைத்திலும் தினபூசைகள் தவறாமல் நடைபெற செய்ய வேண்டும். இது நமது கடமை. தமிழகத்தில் பல ஊர்களில் பெயருக்காகவோ, புகழுக்காகவோ அல்லது வேண்டுதலுக்காகவோ எல்லோரிடம் பணத்தை பெற்று கோயில் கட்டி குடமுழுக்கும் செய்து

Koviloor Digital Library

விடுகிறார்கள். குடமுழுக்கு நடந்து ஒரு மண்டலம் பூசை நடக்கிறது. அதற்கு மேல் அக்கோயிலை கட்டும்போது அப்பொறுப்பில் இருந்தவர்கள் அக்கோயிலில் உள்ள ஊர்க்காரர்கள் அக்கோயிலை கவனிப்பது இல்லை. அக்கோயில் மூடியே கிடக்கிறது. அத் திருக்கோயிலை ஒரே முழுக்காக தலைமுழுகி விடுகிறார்கள். அடியவன் தமிழகத்தில் மூலை முடுக்கில் உள்ள கிராமங்களுக்கு சென்று வந்ததை வைத்து இச்செய்தியை கூறுகிறேன். சுவாமிக்கு நித்திய பூசை செய்யாமல் அல்லது செய்தார்களா என்று கேட்காமல் நாம் உட்கொள்ளும் உணவு உணவே அல்ல.

குறிப்பு : மாநாடு நடத்தும் சிவஅன்பர்களின் கவனத்திற்கு, தமிழகத்தில் தினவழிபாடில்லாத கோயில்களை பட்டியலிட்டு அந்தந்த பகுதியிலுள்ள சிவனடியார்களை தினம் ஒரு அடியவரோ அல்லது வாரம் முழுவதும் ஒருவரோ என்று அமர்த்தி தினமும் பூசை நிற்காமல் நடைபெற பாடுபட வேண்டும். நீங்கள் நடத்தும் அனைத்து விழாக்களும் கல்யாண சத்திரத்தில் வைக்காமல், அனைவரும் பயன்படும் வகையில் கிராமம் கிராமமாக சென்று அங்குள்ள சிவாலயங்களில் அவ்விழாக்களை நடத்தி அம்மக்களுக்கு சிவபெருமானின் திருநீற்றையும், திருக்கண்டிகையின் சிறப்பையும், திருஐந்தெழுத்து ஓதும் முறையையும், அதன் பெருமையையும் அவர்கள் உணரும்படிச் செய்ய வேண்டும்.

கோட்புலி நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

கோச்செங்கண்ணாயனார் சிவத்தொண்டு சிவசபையின்

மற்றொரு வெளியீடு

சென்னை சிவாலய வழிகாட்டி நூல் 444

Koviloor Digital Library

பத்தராய்ப் பணிவார்

(தொகை அடியவர்கள்)

சிவபெருமானை தவிர மற்றொரு தெய்வத்தை மனத்தாலும் நினையாது ஈசன் அடியவர்களை கண்டவுடன் மிக மகிழ்ந்து தாய் பசுவை பார்த்தவுடன் அப்பசுவினை நோக்கி ஓடும் கன்றினைப்போல் அடியவர்களோடு சேர்ந்து பணிவுடனும் இனிமையாக பேசும் இயல்புடையவர்கள்,

சிவபூசையை கண்டால் அப்பூசனையை செய்யும் அன்பர்களை மனமார வாழ்த்தி வணங்கும் உயர்ந்த உள்ளமும், திருமாலும், பிரம்மனும் காண்பதற்கு அரிய சிவபெருமானின் திருவடியை சேரும் தவமுடையவர்களாகவும், சிவப்பணியை விரும்பி தன் உடலை பயன்படுத்தி தொண்டு செய்யும் திறம் உடையவர்கள், ஆதலால் மீண்டும் கருவில் புகாமல் பிறப்பு என்ற நோய் நீங்கியவராகவும், சிவபெருமானின் புகழை வெளிப்படுத்தும் படியான வரலாற்றை கேட்கும் ஆவல் உடையவர்களாகவும், திருக்கோயில் சென்று சுவாமியை கண்டவுடன், பணிந்து உருகி மிகுதியாக மகிழ்ந்து, வாய் குழற, கண்ணீர் பெருகி வழிய, மயிர் சிலிர்க்க கூசி உடல் நடுங்கும்படியாக மெய்குணம் உடையவர்களாகவும், நின்றாலும் அமர்ந்தாலும், நோயினால் பாயில் கிடந்தாலும், சாப்பிடும் போதும், உறங்கும்போதும் விழித்திருந்தபோதும் இயல்பாக கண் இமைக்கும் பொழுதும் சிவபெருமான் திருவடியை மறவாத தன்மையுடையவராகவும் இருப்பவர்களே பத்தராய் பணிவார்கள் ஆவர்.

கருத்து : சிவன் அடியார் போன்று வேடம் தரித்தால் மட்டும் போதாது. மேற்குறிப்பிட்ட இயல்பு நம்மிடம் பாதியாவது உள்ளதா என்று நம்மையே நோக்கி எண்ணிப்பார்த்தால் சிவ பக்தராகலாம்.

Koviloor Digital Library

பரமனையே பாடுவார்

(தொகை அடியவர்கள்)

முப்புரங்களை (ஆணவம், கன்மம், மாயை) எரித்தவரும் பாம்பு அணிந்த பரமனை, ஒருவன் என்னும் ஒருவனை எல்லாம் சிவன் என நின்றானை, அண்ட நாயகனை, அகில நாயகனை, ஊனக்கண்ணால் உணரமுடியாதவனை, கண்ணின் மணியாக நின்றானை, கயிலை மலையானை, எந்தமொழி யாகிலும் சிவபெருமானையே பொருள் சேர் புகழாக நினைத்து ஒன்றிய மெய் உணர்வோடு உள்ளம் உருகி பாடும் அன்பர்களே பரமனையே பாடும் அன்பர்களாவர்.

கருத்து : மொழி என்பது நாம் ஒருவரை ஒருவர் அறியும்படி செய்யப் பயன்படுத்தப்படுவது. இறைவனிடம் நாம் பாடும் மொழி எதுவாகிலும் எல்லா மொழிகளும் சுவாமிக்கு தெரியும். எனவே எம் மொழியாகிலும் இறைவர்க்கு ஒன்றேயாகும். உள்ளத்தில் சிவபெருமானையே நினைந்துருகி பாடும் இயல்புடையவர்களே பரமனையே பாடும் அடியவர்கள் ஆவர். அப்படிப்பட்ட அடியவர்களுக்கு சிவபெருமான் அருளும் தன்மை அளவின்றி இருக்கும்.

விளக்கினால் பெற்ற இன்பம் மெழுக்கினால் பதிற்றி ஆகும்
துளக்கின் நல்மலர் தொடுத்தால் தூயவிண்ஏறல் ஆகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்நெறி ஞானம் ஆகும்
அளப்பு இல கீதம் சொன்னார்க்கு அடிகள் தாம் அருளுமாறே
– திருநாவுக்கரசர் 4–77–3

(விளக்கினால் – பெருக்குதல், கூட்டுதல், அலகிடுதல்)

பாடுவார் பசி தீர்ப்பார் பரவுவார் பிணி களைவாய் – சுந்தரர்
தெருண்ட பாடல் வல்லார் அவர் சிவகதி
பெறுவது திடம் ஆமே – திருஞானசம்பந்தர் 2–105–11

Koviloor Digital Library

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்

(தொகை அடியவர்கள்)

சித்தம் என்பது அட்டாங்க யோகத்தின் வழியான இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாஹாரம், தாரணை, தியானம், சமாதி நிலையில் பஞ்ச பூதங்களான நிலம், நீர், காற்று, மண், ஆகாயம் கடந்த பரஞ்சோதியான சிவபெருமானை சித்தத்தில் நிலைபெறச்செய்து ஒன்றிய உணர்வோடு வாழ்பவரே சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவர் ஆவார்கள்.

கருத்து : சித்தி தருவது நீறு திருஆலவாயான் திருநீறே என்ற திருஞானசம்பந்தப்பெருமானின் திருநீற்றுப் பதிகத்தை எண்ணுக.

எட்டுயோக நிலைகள் : 1. இயமம் : மனத்தாலோ, மொழியாலோ, செயலாலோ எந்த உயிரையும் துன்புறுத்தாமலும் பிறர் பொருள்மீது ஆசைப்படாமலும், பிரம்மச்சரியத்தை காப்பதும், எந்த நிலையிலும் உண்மையை கடைப்பிடித்தும் எவரிடமும் எதையும் எதிர்பார்த்து வாழாமல் இருப்பது இயமம் ஆகும்.

யோக வழியில் செல்ல விரும்பும் அன்பர்கள் மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது புலன் அடக்கம். புலன் அடக்கம் செய்ய இயலாதவர்கள் யோக நெறியை கடைபிடிப்பது மிகவும் கடினம். மூலாதார சக்தியை ஆறு ஆதார சக்கரம் வழியே பிரம்ம நாடிக்கு எடுத்துச் செல்வதே யோக நெறியாகும்.

2. நியமம் : யோகத்தின் அடிப்படையான உடலை பாதுகாப்பது (தினமும் குளித்தல், நல்ல உணவு, உடை, நோய் வராமல் வாழும் பயிற்சிகள் செய்தல் போன்றவையாகும்)

Koviloor Digital Library

3. ஆசனம் : மனத்தை ஒருநிலைப்படுத்த உட்காரும்போது இடுப்பும், தோள்களும், தலையும் ஒரு நேர் கோட்டில் இருக்கும்படி பாவனை செய்து அமர வேண்டும்.

4. பிராணாயாமம் : மூச்சுப்பயிற்சி செய்தல்

5. பிரத்யாஹாரம் : மனத்தின் எண்ணங்களை உள்முகமாக திருப்பி சிந்தனை செய்தல்

6. தாரணை : மனதில் ஒரே உருவத்தை மட்டும் நினைக்கும்படி செய்தல்

7. தியானம் : மனத்தை சிவலிங்கத் திருமேனியின் மீதோ, சிவசொரூபத்திலோ பன்னிரண்டு நொடிகள் அதே இடத்தில் நிறுத்தினால் அது தாரணை. பன்னிரண்டு தாரணை ஒரு தியானம்.

8. சமாதி : அண்டமெல்லாம் பரவி வியாபித்திருக்கும் ஒளிவளர் விளக்கை தன் உள்ளத்தில் அவ்வொளியை உணர்தல். பன்னிரண்டு தியானம் ஒரு சமாதி நிலை. ஏறத்தாழ 6 மணி நேரம் மனத்தை ஒரு நிலைப்படுத்தும் ஒப்பற்ற நிலையே சமாதி. இச்சமாதி நிலையில் குறிகளும், கரணங்களும், பொருள்களும் மறையும் யோக முறைகளை எல்லா நிலையிலும் தகுதி வாய்ந்த ஞான குருவின் வழி பயிற்சி பெறுதல் அவசியம்.

அடியார் பெருமக்களுக்கு

வானம் பார்த்து வெட்டவெளியில் அருள்பாலித்து வரும் சிவலிங்கத் திருமேனிக்கு ஒரு சிவனடியார் ஒரு மேற்கூரையாவது அமைத்து வழிபாடு செய்யும்படி தங்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

Koviloor Digital Library

திருவாரூர்ப் பிறந்தார்

(தொகை அடியவர்கள்)

அங்கு இங்கு எங்கும் நிறைந்த சிவபெருமான் மகிழ்ந்து அருளும் திருவாரூரில் பிறந்தவர்களுடைய சிவத்தொண்டின் பெருமையை பலர் பாடி துதித்தபின் அவர்களின் பெருமையை சிறியேனாகிய என்னால் பாட இயலுமோ?

திருக்கயிலையில் சிவபெருமானுக்கு திருத்தொண்டு செய்து வந்த சிவகணங்களே நாம் உய்ய திருவாரூரில் பிறந்தவர்கள். ஐம்பொறிகளையும் அடக்கி சிவபெருமானின் திருவடியை மனத்தில் கொண்டு வாழ்பவரே திருவாரூரில் பிறந்தார்கள்.

கருத்து : பிறப்பு என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டு ஆகும். ஒன்று தாயிடமிருந்து உலகுக்கு வரும் நிகழ்வு. மற்றொன்று மீண்டும் நாம் உடல் எடுக்காமல் (பிறவாமல்) இப்பிறவியிலேயே சிவபெருமான் திருவடியை அடைய மேற்கொள்ளும் உறுதிப்பாடே இரண்டாம் பிறப்பு. அவையாவன. திருக்கோயில் செல்லல், திருத்தலயாத்திரை, திருத்தொண்டு செய்தல், தீக்கை பெறுதல், சிவபூஜை செய்தல், எல்லா உயிரையும் தன் உயிர்போல நேசித்தல் ஆகிய சிவபுண்ணிய செயல்களில் யார் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வாழ்கிறார்களோ அவரே உண்மையில் பிறந்தவர்கள். அது அல்லாதவர்கள் ஏதோ தோன்றினார்களே!

பேரொளியை பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே – திருநாவுக்கரசர் 6–1–10

Koviloor Digital Library

முப்போதும் திருமேனி தீண்டுவார்

(தொகை அடியவர்கள்)

முப்போதும் என்பது காலை, நண்பகல், மாலை ஆகிய காலங்களில் சிவஆகம முறைப்படி காலம் தவறாமல் எப்போதும் ஆர்வம் மிகுந்த அன்பினால் சிவபூசை செய்யும் அன்பர்களே முப்போதும் சிவலிங்கத்திருமேனியை தொடும் (தீண்டும்) புண்ணியமுடையவர்கள் ஆவர். மேலும் தெளிந்து உணர்ந்தால் பிறப்பு, நிகழ்வு (சடங்கு) இறப்பு ஆகிய மூன்று நிலையிலும் மனம் தளராமல் பரம்பரை பரம்பரையாக திருத்தொண்டு செய்து வரும் சிவவேதியர்களின் குலப் பெருமையை என்னால் புகழ முடியுமோ? அம்மறையோர்களின் தாமரைப் போன்ற திருவடியை கசிந்து வணங்குவோம்.

கருத்து : அ) காலை, நண்பகல், மாலை ஆகிய வழிபாடுகள் பல சிவாலயங்களில் நடைபெறுவதே இல்லை. ஒரு காலம் பூசை நடந்தாலே அது பெரிய விஷயம். கோயில் இருக்கும் வீதியில் யாராவது மரணம் அடைந்தால் கோவிலை மூடாமலும், பூசை செய்யும் அன்பர்கள் வீட்டில் நடக்கும் துக்கங்களுக்காக மாற்று அர்ச்சகர்களை அமர்த்துவதும் நன்று.

ஆ) இல்லத்தில் சிவபூசை செய்யும் அன்பர்கள் மூன்று வேளை உணவு உட்கொள்ளும் முன் சுவாமிக்கு மலரிட்டு திருமுறை பாடவேண்டும்.

Koviloor Digital Library

முழுநீறு பூசிய முனிவர்

(தொகை அடியவர்கள்)

சிவஆகம விதிப்படி புனிறு நீங்கியதும், கன்று ஈன்ற பசுவின் சாணத்தை கோமியம் சேர்த்து உருண்டையாக செய்து காயவைத்து ஓமத் தீயில் இட்டு வெந்தபின் அச்சாம்பலை எடுத்து சிவமந்திரங்களால் (திருநீற்றுப்பதிகம்) தூய்மை செய்து அந்த திருநீற்றை உடலில் குறைந்தது பதினாறு இடங்களிலாவது பூசும் அன்பர்களே முழுநீறு பூசிய முனிவர் ஆவர். (புனிறு – பிறந்த கன்று சில நாட்களுக்குள் கூறப்படுவது).

கருத்து : சிவாயநம என்ற மகா மந்திரத்தை ஓதிக் கொண்டே திருநீறு பூசவும், நெற்றியில் திருநீறு மங்காமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும், முக்கியமாக பெரியவர்கள் குழந்தைகளுக்கு திருநீறு பூசிய பிறகே உணவு வழங்க வேண்டும். நடைபாதையிலோ, அசுத்தமான இடங்களிலோ திருநீறு எடுத்து அணிவதை தவிர்க்கவும்.

கருவாய்க் கிடந்து உன் கழலே நினையும் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்து உன்தன் நாமம் பயின்றேன் உனது அருளால்
திருவாய்ப் பொலியச் **சிவாயநம** என்று நீறு அணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப்புலியூர் அரனே

– திருநாவுக்கரசர் 4–94–6

Koviloor Digital Library

அப்பாலும் அடிச்சார்ந்தார்

(தொகை அடியவர்கள்)

மூவேந்தர்களால் ஆட்சிசெய்யப்பெற்ற தமிழ்நாட்டுக்கு அப்பால் வாழ்ந்து சிவபெருமான் திருவடியை அடையப் பெற்றவர்களும், திருத்தொண்டர் தொகை பாடப்பெற்ற நாயன்மார்களுக்கு முன்பும் பின்னும் சிவனடியை சேர்ந்தவர்களும், சேரப்போகிறவர்களும் அப்பாலும் அடி சார்ந்தார் ஆவர்.

கருத்து : எனது குருநாதர் சுந்தரமூர்த்தி ஐயா அவர்கள் இடத்திற்கு அப்பால், காலத்திற்கு அப்பால் என சுருக்கமாக விளக்குவார்கள். பேரண்டத்திலே உள்ள எத்தனையோ பூமியில் வாழ்ந்து இறைவனை அடைந்தவர்களையும், கோடானு கோடி ஆண்டு முன்னிருந்து வாழ்ந்து சிவனடியை சேர்ந்தவர்களையும், இனி பிறந்து சிவனடியை சேரப்போகிற அன்பர்களையும் ஒரே வரியில் அப்பாலும் அடி சார்ந்தார் அடியார்க்கு (நான்) அடியேன் என்று பாடிய சுந்தரமூர்த்தி நாயனார்க்கு இவ் அண்டத்தையே கொடுத்தாலும் அது குறைவு. பல அன்பர்கள் சுந்தரர் வாக்கில் இடம்பெற்ற நாயன்மார்கள் தவிர, மேலும் நாயன்மார்கள் வரமாட்டார்களா என்ற கேள்வியை எழுப்புகிறார்கள். அக்கேள்விக்கு சுந்தரரின் இவ்வரி நாயன்மார்களின் எண்ணிக்கை கால வரம்பிற்கு அப்பாற்பட்டது அது எண்ணிக்கையில் அடங்காதது. எனவே அப்பாலும் அடி சார்ந்தார்கள் அனைவருக்கும் நான் அடியவன் என்று பாடியுள்ளார்.

Koviloor Digital Library

56. பூசலார் நாயனார் வரலாறு

நல்ஒழுக்கத்தை என்றும் கடைபிடித்து வாழும் சான்றோர்கள் நிறைந்த தொண்டை நாட்டிலுள்ள திருநின்றவூர் என்ற ஊரில் அந்தணர் மரபில் பூசலார் என்னும் சிவஅன்பர் வாழ்ந்து வந்தார். அவர் எப்போதும் சிவபெருமானின் திருவடியின் மீது சிந்தனை உடையவராக இருந்தார். சிவபெருமானுக்கும், அவர் அடியவர்களுக்கும் தொண்டு செய்வதற்காகவே பல வழிகளில் பாடுபட்டு பொருள் ஈட்டி வந்தார்.

அவர் தம்மிடம் பெருஞ்செல்வம் இல்லை என்பதை அறிந்தும் சிவபெருமானுக்கு திருக்கோயில் கட்ட வேண்டும் என்று மனதில் நினைத்துக் கொண்டார். மனதில் தோன்றிய எண்ணத்தை செயல்படுத்த பெருஞ் செல்வந்தர்களை நாடிச்சென்று திருப்பணி செய்ய நிதி வழங்கும்படி கேட்க, யாரும் பணம் தராமல் போகவே, மிகவும் வருந்திய பூசலார் தன் மனத்தினில் கோயில் கட்ட முடிவு செய்து, சிந்தனையால் சிறிது சிறிதாக நிதியினை திரட்டிக் கொண்டார். பின் கட்டுமானப் பொருட்களையும், தச்சர் (ஸ்தபதி) களையும் மனத்தால் தேடி அழைத்து அமைத்துக் கொண்டார்.

ஒரு நல்ல நாள் பார்த்து ஆகம முறைப்படி கடைகால் (அஸ்திவாரம்) எடுத்து ஆனந்தத்துடன் இரவும் பகலுமாக கண் மூடாமல் (உறங்காமல்) நினைவாலே உள்ளத்திரையில் அழகுடன் ஆகம முறைப்படி திருக்கோயிலை எழுப்பினார். திருக்கோயிலின் மேல் தளம் அமைத்து அதன் மீது விமானம் அமைத்து இறுதியாக ஒரு முழம் அளவுடைய கோபுர கலசத்தை விமானத்தின் சிகரத்தில் அமைத்தார். இவ்வாறு

Koviloor Digital Library

நெடுநாட்கள் மனத்தினாலேயே கட்டிய மனக்கோயிலுக்கு முன்பு கொடிமரம் (தூபி) அமைத்தும் தீர்த்த கிணறு எடுத்தும், கோயிலை சுற்றியும் மதில் சுவர்களை கட்டியும், மூலவரை பிரதிஷ்டை (எழுந்தருள செய்ய) செய்யும் பொருட்டு சிவபெருமானுக்கு உரிய நன்னாளை தேர்ந்தெடுத்து அன்றே இறைவனை தம் மனக்கோயிலில் பிரதிஷ்டை செய்து குட நன்னீராட்டு விழா (கும்பாபிஷேகம்) செய்ய முடிவு செய்தார்.

அந்நாளில், பல்லவ மன்னன் காஞ்சிபுரத்தில் கற்கோயில் எடுப்பித்து, அதிக செலவில் திருப்பணிகளை முடித்து அப்பெருந்திருக்கோயிலில் இறைவனின் ஸ்தாபனமும், குடமுழுக்கும் செய்ய நன்நாள் குறித்தான். அந்நாள் பூசலார் மனக்கோயிலில் குடமுழுக்கு செய்ய குறித்த அதே நாளாகும். கும்பாபிஷேகம் நடக்கப் போகும் நாளின் முன் தினம் இரவு பல்லவ மன்னனின் கனவில் தோன்றி திருநின்ற ஊரில் பூசல் என்ற அடியவர் செய்த கோவில் கும்பாபிஷேகம் நாளை நடைபெறவுள்ளது. அங்கு யாம் எழுந்தருள வேண்டும் ஆதலால் நீ இங்கு மனம் ஒன்றி செய்த இத்திருக்கோயிலின் குடநன்னீராட்டு விழாவை வேறொரு நாள் அமைத்துக் கொள்ளவும் என்று மொழிந்தார்.

கனவிலிருந்து நீங்கிய மன்னன், தொண்டரின் பெருமையை உலகத்திற்கு அறியும்படி செய்ய இறைவன் அருளிச்செய்த செயலை எண்ணி மகிழ்ந்து, அத்தொண்டரான பூசலாரை காண மிகுந்த மகிழ்ச்சியோடு திருநின்றவூர் வந்து சேர்ந்தார். அவ்வூரில் எதிர்ப்பட்ட ஒருவரை அழைத்து பூசல் என்ற அன்பர் திருப்பணி செய்த திருக்கோயில் எங்கு உள்ளது? என்று கேட்ட மன்னவனிடம் பூசல் என்பவர் கோயில் எதுவும் கட்டவில்லை என்று கூறிச் சென்றார். மன்னவன் இது கேட்டு அவ்வூரில் உள்ள அந்தணர்கள்

Koviloor Digital Library

அனைவரும் தம்மிடம் வரவேண்டும் என்று ஆணையிட, அவ் ஆணைக்கு இணங்கிய அந்தணர் அனைவரும் மன்னவர் முன் நின்றனர்.

மன்னவன் அவர்களை நோக்கி மாசிலாப் பூசலார் என்ற அன்பர் யார் அவர்? எனக் கேட்க அவ் அந்தணர்கள் குற்றமற்ற அந்தணனாக வாழ்ந்து வரும் பூசலார் என்பவர் உள்ளார் என்று கூறினார். மன்னன் அவரை அழைக்க வேண்டாம் நானே அவரிடம் செல்வேன் என்று பூசலாரின் அருகே மன்னவன் சேர்ந்தான். பூசலாரை கண்டவுடன் வணங்கிய அரசன் நீங்கள் எட்டு திசையில் உள்ளோர்க்கும் புகழ்ந்து பாராட்டும்படி கட்டிய கோயில் எங்கே உள்ளது எனக் கேட்டு, மேலும் இன்று தான் நீங்கள் இறைவன் ஸ்தாபிதம் செய்யும் நாள் என்று நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் எனக்கு அருளிச் செய்தார் என்பதையும் கூறினார்.

மன்னர் கூறியதை கேட்ட பூசலார் மருண்டு நோக்கி, என்னையும் பொருளாகக் கொண்டு சிவபெருமான் அருளிச் செய்ததை நினைந்து நெகிழ்ந்து மன்னவரிடம், கோயில் கட்ட (திருப்பணி செய்ய) நிதியில்லாமல், மனத்தினால் செய்த கோயிலேயாகும் என்று பூசலார் கூறியதை கேட்ட மன்னவன் அதிசயம் அடைந்து என்னே! இந்த அடியாரின் பெருமை என்று பூசலாரை போற்றி செய்து, தான் அணிந்திருந்த பூமாலை நிலத்தில்படும்படி பூசலாரை நிலமிசை (பூமியில் விழுந்து) வீழ்ந்து தாழ்ந்து வணங்கியபின் தனது ஊரான காஞ்சிபுரத்தை அடைந்தார். பூசலாரும் மனக்கோயிலில் தான் முன்பே குறித்திருந்த நல்ல ஓரையில் சிவபெருமானை எழுந்தருளச்செய்து அதன் பின் செய்ய வேண்டிய பூசைகளையெல்லாம் நிகழ்த்தி அன்று முதல் தொடர்ந்து தினமும் தன் மனக்கோயில் இறைவனுக்கு பல நாட்கள்

Koviloor Digital Library

பூசனைகளை இடைவிடாது செய்து பொன் அம்பலத்தில் ஆடும் சிவபெருமானின் பொன்னார் திருவடியின் நிழலில் சேர்ந்தார்.

திருநின்றவூர் : சென்னையிலிருந்து திருவள்ளூர் செல்லும் பாதையில் ஆவடி அடுத்து இவ்வூர் உள்ளது. பூசலார் கோயில் கட்ட விரும்பிய அச்சிவலிங்கத் திருமேனி தற்போது அருள்மிகு ஹிருதயாலீஸ்வரர் திருக்கோயிலாக பொலிவுடன் திகழ்கின்றது. பூசலார் நாயனார் திருஉருவம் மூலவர் அருகே உள்ளது.

கருத்து : மாமன்னன் கட்டிய கோயிலை விட பூசலாரின் மனக்கோயில் உயர்ந்தது என்பதை இறைவன் உணர்த்திய செயல், அகத்தே செய்யும் செயல், புறத்தே செய்யும் செயலைவிட உயர்ந்தது என்பதை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. எல்லா சிவபுண்ணியங்களை விட எளிமை யானதும், கடினமானதும் இறைவனை தொடர்ந்து மனதில் நினைப்பது தான்.

ஆ. பல்லவ மன்னன் தான் கட்டிய கோவிலின் விழாவினை நிறுத்திய அன்பன் யார் என கோபம் கொள்ளாமல், அடியாரின் பெருமையை உணர்ந்த அம் மன்னவனின் பெருமையை எப்படி புகழ்வது?மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழி.

இ. கோயில் கட்டுவது பெரிதல்ல. கும்பாபிஷேகம் செய்வது பெரிதல்ல. அக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனுக்கு செய்யும் தினபூசையே உயர்ந்ததாகும். எனவேதான் பூசலார் தான் செய்த மனக்கோயில் இறைவர்க்கு தனது வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து ஆத்மார்த்த பூசைகளை செய்து வந்தார்.

பூசலார் நாயனார் திருவடிகள் போற்றி! போற்றி!!

Koviloor Digital Library

57. மங்கையர்க்கரசியார் வரலாறு

என்றும் பிறசமயத்தில் சாராமல் சைவநெறியே உயர் நெறியென வாழும் சிவநெறி செல்வர்களான சோழ மன்னரின் குலத்தில் பிறந்த மங்கையர்கரசியாரே நம் சைவ குலத் தெய்வம் ஆவார். பாண்டிய மன்னரான நெடுமாறப் பாண்டியனை திருமணம் செய்து பாண்டியர்களின் தலைநகரான மதுரையில் (திருஆலவாய்) பாண்டிமாதேவியாக வாழும் நாளில், மதுரை சொக்கநாதப் பெருமானை நாள்தோறும் வணங்கி வந்தார்.

அவர் தன் கணவரான நெடுமாறப்பாண்டியன் பிற சமயமான சமண சமயத்தை சார்ந்திருந்த அவரை சிவநெறியினை தழுவ செய்ய சிவஞானம் குழைக்கப்பெற்ற பால் அடிசிலை உண்ட திருஞானசம்பந்தப் பெருமானை மதுரைக்கு அழைத்து வரும்படி செய்து, அந்த ஞானக் குழந்தையின் வழி உண்மை நெறியான சிவநெறியினை தன் கணவரான நெடுமாறப் பாண்டியன் உணரும்படி செய்து, அம்மன்னவனுக்கு வர இருந்த பெரும் பழியை தடுத்து நிறுத்தியதோடு, மிகுந்த புகழோடு வாழச் செய்து சிவபெருமான் திருவடியை அடையும் பேறுபெற்ற புண்ணியனாக மாற்றிய பெருமையுடையவரே மங்கையர்கரசியார் ஆகும். திருஞானசம்பந்தப் பெருமானின் பவளவாய் மலர்ந்து பாடியத் திருப்பதிகத்தில் மிக புகழ்ந்து பாடிய பெருமையுடைய பெண்மணி இவரேயாகும். செல்லும் இடமெல்லாம் வளம் பெருக வைக்கும் காவிரி ஆறுபோல் தான் பிறந்த நாட்டின் பெருமையையும், புகுந்த வீடான பாண்டியநாட்டின் மன்னனையும், மக்களையும் சீர்

Koviloor Digital Library

விளங்கும்படி செய்த மங்கையர்கரசியார் தன் கணவரான நெடுமாற பாண்டியனுக்கு சைவ வழித்துணையாய் நெடுங்காலம் துணை நின்று சிவபெருமான் திருவடி நிழற் கீழ் சேர்ந்தார்.

மதுரை : மதுராபுரி, திருஆலவாய் என அழைக்கப் பெற்றதும், சுயம்பு மூர்த்தியான கடம்பவனநாதர், சொக்கநாதர், சுந்தரேசுவரர் என்ற திருநாமத்துடன் அருளும் ஈசனை காலை 7.30, 10.30 மணிக்கு (அபிடேகத்தில்) நீராட்டும் போது கண்டு மகிழுங்கள்.

கருத்து : அ. சோழ நாடு சோறு உடைத்து என்று கூறுவர். சோறு (அன்னம்) என்பதற்கு முக்திபேறு என்று பொருள். அவ்வாறு வளவ நாட்டிலே பிறந்து பாண்டியனை மணந்து அம்மன்னனையும், மக்களையும் திருநீறு விளங்கும்படி செய்ததாலே, சேக்கிழார் நம்முடைய சைவ குலத்தின் குலதெய்வம் என்று போற்றுகிறார். ஒரு தனி மனிதனை திருத்துவது வேறு, ஆனால் ஒரு மன்னனை மாற்றுவது என்பது மிகக் கடினம். தொண்டர்கள் அதிக அளவில் புடைசூழ வரும் திருஞானசம்பந்தர் வந்தால், மட்டுமே பாண்டிய மக்கள் அவ்அடியார் கூட்டத்தை கண்டு உள்ளத்தை சிவன்பால் திருப்புவர் என்று திருஞானசம்பந்தர் பெருமையை உணர்ந்து அவரை தேர்ந்தெடுத்து அழைத்தது மிகமிக அருமையான செயலாகும்.

குறிப்பு : அறுபத்தி மூன்று நாயன்மார்களில் சிவபெருமானின் திருவடிக்கு தன்னுடன் இருந்த பெருந் திரளான திருக்கூட்டத்தை பேரொளியில் சேர்த்து கடைசியில் தான் கரம் பிடித்த மனைவியுடன் திருவடி சேர்ந்த பெருமை திருஞானசம்பந்தப் பெருமான் ஒருவருக்கே.

Koviloor Digital Library

ஆ. திருஞானசம்பந்தர் புராணத்தில் (604)(அங்கவர் எனத் தொடங்கும் பாடலில் "செழியன் முன்பு புலப்படா வகை கொண்டுய்ந்தார்" என்ற வரியை வைத்துக்கொண்டு மங்கையர்கரசியார் திருநீற்றை நெற்றியில் அணியாமல் மார்பில் அணிந்திருந்தார் என்று தவறாக பேசி வருகிறார்கள். கொண்ட கணவனுக்கு பயந்து மறைக்க வேண்டும் என்ற அவசியமே அம்மையாருக்கு இல்லை. காலம் வரும் வரை கருத்து வேறுபாடு இன்றி கணவன் மீது செலுத்திய உண்மை அன்பின் காரணமாகவே சைவ வாய்மையை கணவன் காணும்படி வெளிப்படுத்தாமல் இருந்தார்.

அவ்வாறு கணவர்க்கு மறைத்த செய்தியை எந்த பெண்ணும் பிறர்க்கு கூறமாட்டார். அப்படி இருக்க மார்பில் பூசியது யார் கூறி இந்த சொற்பொழிவு செய்பவர்களுக்கு தெரிய வந்தது. சைவம் பேசும்போது கேட்டதெல்லாம் பேசக் கூடாது. கேட்டதை நம் மனதில் வைத்து ஆய்வு செய்த பிறகே பிறருக்குச் சொல்ல வேண்டும்.

இ) திருஞானசம்பந்தர் புராணத்தில் 'அம்புய' (647) எனத் தொடங்கும் பாடலில் "ஆலவாய் அமர்ந்தார் தம்மைக் கும்பிட வேண்டும் என்று கொற்றவன் தனக்குங் கூறி" என்ற வரிகளை பார்த்தால் மங்கையர்கரசியார் சுதந்திரமாக மன்னவனிடம் கூறி திருக்கோயிலுக்கு சென்றார் என்பதும், அதற்கு மன்னவன் மறுப்பு ஏதும் கூறவில்லை என்பதையும் எண்ணுக

ஈ) மங்கையர்கரசியார் தினமும் திருஆலவாய் திருக்கோயிலுக்கு சென்று வரும் வழக்கம் உடையவர் என்பதை "மங்கையர்க்கு அரசி" எனத் தொடங்கும் சம்பந்தர் திருப்பதிகத்தில் "நாள்தொறும் பணிந்து" என்ற குறிப்பினை காண்க.

Koviloor Digital Library

58. நேச நாயனார் வரலாறு

காம்பிலி என்ற ஊரில் நெசவுத் தொழில் செய்யும் மரபில் (சாலியர்) சிவபெருமானின் திருவடியை தன் தலை மேல் வைத்து போற்றும் சிந்தையுடையவராய் நேசர் என்ற சிவஅன்பர் வாழ்ந்து வந்தார். திருஐந்தெழுத்து (சிவாயநம) ஒன்றே தன் வாய் மொழியாகவும், தனது தொழிலின் பயனே, சிறந்த முறையில் தைக்க பெற்ற உடையும், கீளும், (கோவணம் நிற்பதற்காக இடுப்பில் கட்டப்படும் துணி கயிறு) கோவணத்தையும் சிவனடியார்களுக்கு முறைப்படி இடையறாமல் கொடுத்து அவர்களின் பாதத்தை வணங்கி வந்தார். சிந்தையை சிவத்துக்கு ஆக்கி வாக்கு எப்போதும் திருஐந்தெழுத்து சொல்லியும், சிவனடியார்களுக்கு ஆடை கொடுத்தும், என்றும் நிலைத்த பேரின்பத்தின் இடமான சிவபெருமானின் திருவடியில் சேர்ந்தார்.

காம்பிலி : தற்போது கர்நாடக மாநிலத்தில் உள்ள பெல்லாரி அருகில் உள்ள ஊராகும்.

கருத்து:நேச நாயனார் செய்த மூன்று (சிந்தை, சொல்,செயல்) சிவயோக செயல்கள் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலத்தை தீய்த்து சிவபெருமான் திருவடியில் சேர்ந்தது.

நேச நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

நாயன்மார்கள் தனது தொழிலை தொண்டுக்காக செய்தனர். தொண்டை பணம் சம்பாதிக்கும் தொழிலாக செய்யவில்லை.

Koviloor Digital Library

59. கோச்செங்கட்சோழ நாயனார் வரலாறு

பருந்து ஒன்று புறா ஒன்றை துரத்தி வர அப்புறா சிபி சக்கரவர்த்தியிடம் அடைக்கலம் புகுந்தது. அப்புறாவின் எடைக்கு எடையாக தன்னுடைய சதையை அறுத்து எடைத் தராசில் வைக்க தராசு நேராகாமல் போகவே தன்னையே அத்தராசில் ஏற்றி நேர் செய்த நீதி வழுவாத மன்னரான சிபி சோழ சக்கரவர்த்தியின் வழிவழியாக ஆட்சி செய்து வரும் சோழ நாட்டில் சந்திரன் வழிபட்டு சாபம் நீங்கப் பெற்ற திருத்தலமும், நீர் ஊற்று உள்ள இடத்தில் வெண்நாவல் மரத்தின் கீழ் சுயம்பு மூர்த்தியான சிவலிங்கத் திருமேனிக்கு, வெள்ளை யானை ஒன்று, தினமும் தனது துதிக்கையால் நீரையும், பூங்கொத்தினையும் கொண்டு வந்து இறைவனின் திருமேனியில் மீது நீராட்டியும் மலர்களை அணிவித்து மகிழ்ந்து வந்தது.

இவ்வாறு ஆனை வழிபட்டு வந்த காரணத்தால் திருஆனைக்கா என்று அவ்வூர் அழைக்கப்பட்டது. ஆனை வழிபட்டு வந்த இறைவர்க்கு மேல் வெயிலும், சருகும் விழாதவாறு ஞானமுடைய ஒரு சிலந்தி தன் வாய் நூலால் பந்தல் போன்று லிங்கத்திருமேனியின் மேல் கட்டியது. நன்றாக இழைத்து செய்த அச்சிலந்தி வலையை இறைவனை வணங்க வந்த யானை பார்த்தது. உடனே யானை தூய்மையற்ற வாய் பசையென அருவெறுப்பாக கருதி

(அநுசிதம்) அவ் வலையினை சிதைத்தது. முதலில் சிலந்தி யானை பூசை செய்யும் போது துதிக்கை சுழன்று வருவதால் யானைக்கு தெரியாமலே இப்பந்தலை கலைத்தது என்று நினைத்துக் கொண்டு புதிய பந்தலை வாய் நூலால் அமைத்தது. மறுநாள் பூசைக்கு வந்த யானை அச்சிலந்தி வலையினை மீண்டும் கலைத்தது.

இச்செயலை செய்த யானையின் மீது மிகுந்த கோபம் கொண்ட சிலந்தி எம்பிரான் திருமேனி மேல் சருகு விழாமல் இருக்க தான் வருந்தி இழைத்த இப்பந்தலை அழித்த இவ் யானையை கடிப்பது என்று முடிவு செய்து அதன் துதிக்கையில் உள்சென்று கடித்தது. அவ்வாறு சிலந்தி கடித்த வேகத்தில் யானை துடிதுடித்து தன் துதிக்கையை பூமியில் படும்படி அடித்து, குழைந்து விழுந்து இறந்தது. துதிக்கையின் உள்ளிருந்த சிலந்தியும் இறந்தது. சிவபெருமான், யானைக்கு வீடுபேறும் (முக்தி) சிலந்திக்கு சோழர் குலத்தில் உதித்து இப் பூவுலகை காத்து ஆட்சி செய்யும் சோழனாக பிறக்கும்படி இன்னருள் செய்தார்.

சோழர்குல மன்னரான சுபதேவன் அவரது மனைவியார் கமலவதி ஆகிய இருவருக்கும் குழந்தைபேறு இல்லாததால் தில்லை கூத்தபெருமானை வணங்கி பிள்ளை வரம் வேண்ட வேண்டுவர்க்கு வேண்டுவதே ஈவான் ஆகிய சிவபெருமான் வேண்டுவன ஏற்று அச்சிலந்தியின் மறு பிறப்பாக கமலவதியின் வயிற்றில் அழகிய மகனாக கருவுரும்படிச் செய்தார்.

கமலவதி நிறைமாதம் அடைந்தார். அவர் நெடுநாள் விரும்பிய மகப்பேறுக்கான நாள் வந்தது. அந்நிலையில் கணித

Koviloor Digital Library

மங்கல நூலோர் (சோதிடர்) ஒரு நாழிகை (22 நிமிடம்) கழிந்து இக்குழந்தை பிறந்தால் மூன்று உலகங்களையும் ஆட்சி புரியும் என்று கூறினார். அதுகேட்ட அரச மாதேவியார் ஒரு நாழிகைக்குள் பிள்ளை பிறவாமல் இருக்க தன்னை தலைகீழாக கட்டும்படி பணித்தார். அதன்படி தலைகீழாக தொங்கும்படி கட்டினர். சோதிடர் கூறிய சுப நேரம் வந்த உடன் தரையில் இறக்கி விட விழித்த நிலையிலேயே அருமணி போன்ற குழந்தை பிறந்தது. குழந்தையின் கண்கள் சிவந்த நிலையில் இருந்ததை கண்டு 'கோச்செங்கண்ணா' என்று பெயரிட்டு சிறிது நேரத்தில் தேவியார் இறந்தார்.

செங்கோற் சுபதேவ சோழன் தன் உயிரினிலும் மேலாக தன் அரும்புதல்வனை வளர்த்து மணிமகுடம் சூட்டி அரசு ஆட்சியினை ஒப்படைத்து தாம் விரும்பியபடி பெருந்தவத்தின் வழி, காட்டிற்கு சென்று தவம் செய்து சிவபெருமானின் திருவடியை அடைந்தார்.

வெற்றி மாலை சூடிய கோச்செங்கட்சோழர் ஆதி மூர்த்தியான சிவபெருமான் திருவருளால் முன் பிறவியில் செய்த சிவபக்தியை அறிந்து நல்லாட்சி செய்து வந்தார். சிவபெருமான் மகிழ்ந்து எழுந்தருளும்படி பல சிவாலயங்களை பெருங்காதலோடு எடுப்பித்தார்.

ஆனைக்காவில் தன் முன் பிறவியில் சிவபெருமான் தனக்கு அருளியதை அறிந்து, வெண் நாவல் மரத்தின் கீழ் இருந்த சுயம்புநாதருக்கு அழகிய திருக்கோயில் எடுப்பித்து திருப்பணி செய்தார். சோழநாட்டில் உள்ள பல ஊர்களுக்கு தனது மந்திரிகளை அனுப்பி திட்டமிட்டு காதலோடு பல சிவாலயங்களை கட்டினார்.

Koviloor Digital Library

இவர் எடுப்பித்த சிவாலயங்களில் இறைவர்க்கு தினவழிபாடு, சிறப்பு வழிபாடுகளை தவறாமல் தொடர்ந்து நடக்க தேவையான செல்வங்களை கொடுத்தும், செங்கோல் வழுவாது ஆட்சி செய்யும் காலத்தில் கூத்தப்பெருமானை வணங்க தில்லை (சிதம்பரம்) சென்று அடைந்தார். அத்திருக்கோயிலின் பொன் அம்பலத்தே நடனம் செய்யும் கூத்தப்பெருமானின் திருவடியை வணங்கி உள்ளம் உருக தொழுது போற்றி இருக்கும் நாளில், தில்லை வாழ் அந்தணர்களுக்கு மாளிகைகள் கட்டி கொடுத்தார்.

வான் உலகத்தவர்கள் அடி வணங்கி போற்றும்படியாக சிவத்தொண்டில் ஓங்கி, தென்நாடு முழுவதும் தனது அரசாட்சியை அமைத்து மாபெருஞ்சோழ குல சக்கரவர்த்தியாக வாழ்ந்து கோச்செங்கட் செம்பியர்கோன் சிவபெருமான் திருவடி நிழற்கீழ் சேர்ந்தார்.

கருத்து : அ. இன்று நாம் தேவாரத் திருமுறைகளை பாடுகின்றோம் என்றால் அதற்கு காரணமாக இருந்தவர் கோச்செங்கண்ணாயனார் ஆகும். நால்வர் பெருமக்கள் உலகிற்கு வரும் முன்னரே எழுபது மாடக்கோயில் அமைத்துக் கொடுத்துள்ள நாயன்மார் இவரேயாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் பலப் பதிகங்களில் கோச்செங்கண்ணாயனாரை புகழ்ந்து பாடியுள்ளனர். சம்பந்தபெருமான் திருஅம்பர் பெருந்திருக்கோயிலில் பாடிய "எரிதர" எனத்தொடங்கும் பதிகத்தில் 2,3,9வது பாடல்களில் கோச்செங்கண்ணாயனாரை "இறை" என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

Koviloor Digital Library

ஆ. அன்னதானம் என்பது ஆரம்ப நிலையிலான மக்களை வழிபாட்டிற்கு வரவழைப்பதற்கும், அம்மக்களின் வாழ்க்கை தரம் உயர (வித்யாதானம்) கல்வி சாலைகள் அமைப்பது போன்ற பணிகள் மனிதனை மனிதனாக வாழச் செய்யப் பயன்படுகிறது. திருக்கோயில் திருப்பணி செய்வது என்பது மனிதனை இறைநிலைக்கு உயர்த்தும் முயற்சியான ஞான தானத்தில் அடங்குகிறது. கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம் என்பது முதுமொழி ஆகும்.

எனவே பழைமை வாய்ந்த சிவாலயங்களை பாதுகாத்தும், சிதிலமடைந்த சிவாலயங்களை திருப்பணி செய்தும் வானம் பார்த்திருக்கும் சிவலிங்கத் திருமேனி கண்டால் அங்கு இறைவர்க்கு மேல் மேற்கூரையாவது அமைத்தும் தினவழிபாடு செய்ய முயற்சி செய்ய வேண்டும்.

இ. சிலர் சொற்பொழிவு செய்யும்போது கோச் செங்கண்ணாயனார் யானை நுழைய முடியாதபடியே மாடக்கோயிலாகவே கட்டினார் என்று கூறி வருகிறார்கள். அவர்களுக்கான அடியேனின் விளக்கம் வருமாறு : வெள்ளை யானைக்கு வீடுபேறு கொடுத்த சிவபெருமான் சிலந்திக்கு மட்டும் பிறப்பு கொடுத்த காரணம், யானை நினைத்திருந்தால் எளிதாக சிலந்தியை கொன்றிருக்கலாம். ஆனால் அவ்வாறு யானை செய்யவில்லை. சிலந்தி கோபம் கொண்டு யானையை கடித்தது. இவ்விரு உயிரின் செயலில் இறை பக்தி ஒன்றாகவே இருந்தது. ஆனால் சிலந்தியின் கோபம், வெறுப்பும், கடித்த செயலும், அன்பே சிவமான திருவடிக்கு செல்ல தடையாக இருந்தது. ஆகவே வெறுப்பு இல்லாத அன்பு நிலை வந்தால் மட்டுமே சிவபரம்பொருளை அடைய முடியும் என்பதை உணர்த்தவே சிலந்திக்கு பிறப்பை கொடுத்தார். மேலும் இறைவனுக்கு மேற்கூரை அமைக்கும் ஆசையை பூர்த்தி செய்யவும் அச்சிலந்தியை மன்னாதி மன்னனாக்கி, அதன் விருப்பத்தை பூர்த்தி செய்தார். அப்படி இருக்க யானை புகாமல்

Koviloor Digital Library

கோச்செங்கண்ணாயனார் மாடக்கோயில் கட்டி இருந்தால் எப்படி அவர் நாயன்மாராக சிவபெருமான் திருவடியில் சேர்ந்திருக்க முடியும்? ஆனை மீது அவருக்கு வெறுப்பே இல்லை. அவர் மாடக்கோயிலாக கட்டிய காரணம், இயற்கை சீற்றங்களால் அழியாமல் நிலைத்திருக்கும்படி மிக உயரமான அடித்தளம் அமைத்து அதன் மேல் திருக்கோயில் கட்டினார் என்பதே உண்மையாகும். உயிர் நிலையில் மூன்று அறிவு பெற்ற சிலந்தியின் சிவத்தொண்டு, அவ்வுயிரினை ஆறு அறிவு பெற்ற மனித நிலையையும், மாமன்னராகும் பேற்றினையும் (Double Promotion) இறைவன் வழங்கினார்.

ஈ. கோவில் கட்டும்போதே அக்கோயிலில் எழுந்தருளி யிருக்கும் சுவாமிக்கு தினபூசை செய்யும் சிவநேய செல்வர்கள் அவர்கள் குடும்பத்தோடு தங்கும்படியாக அக்கோயில் அருகிலேயே கோச்செங்கண்ணாயனார் வீடு கட்டி கொடுத்த செய்தி இவ்வரலாற்றின் மூலம் நாம் அறிய முடிகிறது. கோச்செங்கண் நாயனார் வழியில் நாமும் திருக்கோயில் திருப்பணி செய்யும் போது அக்கோயிலில் பூசை செய்பவர்க்கு வீடு கட்டாயம் அக்கோயில் அருகிலே அமைத்து தரவேண்டும்.

குறிப்பு : ஆந்திர மாநிலத்தில் பல மாடக்கோயில்கள் உள்ளது. திராட்ச ராமம் என்ற சிவாலயத்தில் சண்டேசுவரர் மூர்த்தத்தை கண்டு வணங்கினோம். சுவாமி பதினான்கு அடி உயரம் ஆகும். இது ஒரு மாடக்கோயில் ஆகும்.அடியவனின் கருத்து இக்கோயிலின் கட்டுமான அமைப்பு சண்டேசுவரர் மற்றும் நந்திதேவர் அமைப்பை பார்த்தால் கோச்செங் கண்ணாயனார் திருப்பணி செய்த உணர்வு வருகிறது. மேலும் குமரா ராமம் சுவாமி 16 அடி உயரத்திருமேனியாகவும், அமரா ராமம் 9 அடி திருமேனி உயரமும், பீமாராமம், சீதராமம் ஆகிய பஞ்சராம ஷேத்திரங்களை வணங்கி வருதல் சிறப்பு.

கோச்செங்கண்ணாயனார் திருவடிகள் போற்றி போற்றி

Koviloor Digital Library

கோச்செங்கண்ணாயனார் பெயரில் சிவத்தொண்டு சிவசபை, சென்னை – 600 081

அடியவன் இருபது ஆண்டுகளுக்கு முன்பு இலண்டன் வேதநாராயணன் ஐயா அவர்களால் பாடல் பெற்ற திருத்தல வழிகாட்டு நூலினை பெற்று திருக்கோயில்களுக்கு யாத்திரை செய்தும், சென்னையிலுள்ள சிவாலயங்களை வழிபட்டு, **"சென்னை சிவப்பதிகள் 444"** என்ற நூலினை திருவருளால் வெளியிட்டோம். சுவாமியை பார்த்துக் கொண்டே வரும்போதே பல கிராமங்களில் சிவலிங்கத் திருமேனி வெட்ட வெளியில் மழையில் நனைந்தும், வெயிலில் காய்ந்தும் இருப்பது அடியவனுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. பதினைந்து ஆண்டிற்கு முன்பு எனது தோழர்கள் சிவ.சதாசிவம், சிவ.பார்த்தசாரதி உள்ளிட்டோர்களுடன் முதலில் சென்னையில் சிறுதாவூர் என்ற கிராமத்தில் அருள்மிகு பசுபதீஸ்வரர் சுவாமிக்கு மேற்கூரை அமைத்தோம்.

இத்திருப்பணி தொடங்கியபோதே அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் சிவனருளால் எழுந்தது. அக்கனவு மூன்று ஆண்டிற்கு முன்பு சிவத்திரு மயிலை சிவக்குமார் ஐயா அவர்களின் வழிகாட்டுதலினாலும் சிவத்திரு இராச.வசந்தகுமார் ஐயாவின் நல்லாசியுடன் கோச்செங்கண்ணாயனார் சிவத்தொண்டு சிவசபை என்ற அமைப்பு 18.9.2012 அன்று திருவருளால் அமைக்கப்பட்டது. இச்சிவ சபை செய்துவரும் சிவப்பணிக்கு பல சிவநேயச் செல்வர்கள் உதவி செய்து வருகிறார்கள். அவர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை கூறுகிறோம். இந்நாள் வரை முன்னூறுக்கு மேல் மேற்கூரைத் திருப்பணிகள் நடைபெற்றுள்ளது. மேலும் இச்சபையின்

Koviloor Digital Library

திருப்பணித் தொடர வெட்டவெளியில் அருள் பாலித்து வரும் சிவலிங்கத் திருமேனி பற்றிய விவரம் அறிந்தால் தாங்கள் நம் சிவசபைக்கு தெரியப்படுத்தவும். நாங்கள் விரும்புவது ஒன்றே ஒன்று தான். மேற்கூரை திருப்பணி செய்த பிறகாவது தினமும் இறைவனுக்கு பூசை நடைபெறவேண்டும். இத்திருப்பணிக்கு இரவு பகல் பாராது தொடர்ந்து வருகை தரும் சிவ.பாலு, சிவ.பாபு, சிவ.அரவிந்த், சிவ.ராஜா, சிவ.முனுசாமி, சிவ.விக்னேஷ், சிவ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட அன்பர்களின் தொண்டிற்கு நன்றி கூறி வணங்குகிறோம்.

கோச்செங்கண்ணாயனார் சிவத்தொண்டு சிவசபையின் திருப்பணிகளை www.chennai sivapathigal. blog.spot.com என்ற இணைய தளத்தில் காணலாம். செல் : **9677226260.**

திருப்பணி செய்த ஊர்களில் ஒன்று

திருப்பணிக்கு முன்பு

திருப்பணி செய்த பின்

Koviloor Digital Library

௬௦. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் வரலாறு

சோழ நாட்டில் எருக்கத்தம்புலியூர் என்ற ஊரில் பாணர் மரபில் திருநீலகண்டர் என்ற சான்றோர் வாழ்ந்து வந்தார். அவரும் அவரின் மனைவியார் மதங்க சூளாமணியாரும் சேர்ந்து சிவபெருமான் எழுந்தருளி இருக்கும் சிவாலயங்களுக்கு இறைவனின் புகழைப்பாடும் பாடல்களை தங்களது யாழில் இசை அமைத்து பாடும் வழக்கம் கொண்டிருந்தனர். எனவே அவரை அனைவரும் திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்றும் அவரது மனைவியாரை பாணினியார் என்றும் அழைத்தனர்.

திருத்தல யாத்திரையாக சோழ நாட்டிலுள்ள சிவாலயங்களை வழிபட்டு (மதுரை) திருஆலவாய் என்று போற்றப்படுவதும், சொக்கநாதப்பெருமான், சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளி இருக்கும் திருக்கோயில் உள் செல்லாமல் கோபுரத்தின் வாயிலில் நின்றவாரே தனது யாழில் பல பண்களில் இசையமைத்து பாடினார். பிறந்த குலத்தின் மரபினை கடைபிடித்து திருக்கோயிலின் உள் வராத பாணனாரின் இச்செயலினை மாற்ற திருஉள்ளம் கொண்ட சிவபெருமான் திருக்கோயிலில் இருக்கும் திருத்தொண்டர்கள் அனைவரின் கனவிலும் தோன்றி பாணனாரை திருக்கோயிலின் உள் திருமுன்பு அழைத்து வரும்படி கட்டளையிட்டார். அதன்படியே மறுநாள் திருத்தொண்டர்கள் திருநீலகண்ட பாணனாரை வரவேற்று இறைவன் திருமுன்பு அழைத்து வந்தனர். பாணனாரும் இது சிவபெருமானின் அருட் கருணையே என்று மெய்யுணர்ந்த நிலையில் மதுரை

Koviloor Digital Library

சொக்கநாதப்பெருமானின் திருமுன்பு யாழில் இசையமைத்து சிவபெருமான் முப்புரங்களை எரித்த வீரச்செயல்களையும், அவ்வீரச் செயல்புரியும்போது தேர் முறிந்த வரலாற்றையும், ஆனையின் (கஜமுகாசூரன்) தோல் உரித்த செயலையும், மன்மதனை காய்ந்த (எரித்த) வரலாற்றையும், அடிமுடி காணாத அண்ணாமலையாக சோதி சொரூபமாக காட்சி தந்த வரலாற்றையும், இறைவன் அடியவர்களை ஆட் கொள்ளும் பொருட்டு எளியவனாக வந்த வரலாற்றையும் அனைவருக்கும் புரியும்படி விளக்கமாக பண்ணிசையில் பாடினார்.

இப்பாடலின் ஓசை விண்ணெல்லாம் நிறைந்தது. அவ்வேளையில் சிவபெருமான் அசரீரியாக தரையில் அமர்ந்து பாடுவதால் யாழின் நரம்புகள் குளிர்ச்சியால் சேதம் அடையும் என்று அழகிய பலகை (மணைகட்டை) இடும்படி தொண்டர்களை பணிக்க அவ்வாறே திருநீலகண்ட யாழ்ப்பாணனார் தொண்டர்கள் வழங்கிய அம்மணையில் அமர்ந்து பாடினார். பின் திருஆலவாயிலிருந்து புறப்பட்டு பாண்டி நாட்டு சிவப்பதிகளை வணங்கியவாறே திருவாரூர் சென்று பூங்கோயிலின் நுழைவு கோபுர வாயிலில் இருந்தபடியே மார்கண்டேயனுக்காக சுவாமி எமனை உதைத்து உருட்டிய செயலையும், பால் நினைந்து ஊட்டும் அன்னையை விட கருணையான சிவபெருமான் அடியவர்களுக்கு அருளிய அருமைப்பாட்டினையும் தனது யாழில் இசை அமைத்து பாடிக்கொண்டிருக்கும் போதே சிவபெருமான், பாணனார் திருக்கோயில் உள்ளே வரும்படி திருவுள்ளம் கொண்டு, பாணனார்க்காகவே திருக்கோயிலின் வடதிசையில் தனி வாயிலை ஏற்படுத்தி உள்ளே வரும்படி அருள, அவ்வாயில் வழி பாணனார் புற்றிடங்கொண்ட நாதரின்

Koviloor Digital Library

திருமூலட்டானத்தின் திருமுன்பு சென்று வணங்கினார். பல காலம் திருவாரூரில் தங்கி தம்பிரானை வணங்கி விடைபெற்று பல சிவாலயங்களை வழிபட்டு சிவஞானம் கலந்த பால் அடிசிலை உண்ட திருஞானசம்பந்தபெருமானை கண்டு வணங்க அவர் அவதரித்த சீர்காழி சென்று அடைந்தனர்.

திருஞானசம்பந்தர், பெரும்பாணனாரை வரவேற்று அவரின் பண்ணிசையை கேட்டு மகிழ்ந்தார். திருநீலகண்ட பெரும்பாணரும் அவரது மனைவியாரும் என்றும் தங்களை பிரியாது உங்கள் உடனே வரும் வரத்தினை தரும்படி திருஞானசம்பந்தப் பெருமானை வேண்டினர். சம்பந்தப் பெருமானும் அதனை ஏற்றுக்கொண்டார்.

அன்றிலிருந்து சம்பந்தப்பெருமானுடன் சென்று அவர் பாடும் பதிகத்திற்கு ஏற்றவாறு யாழில் இசை அமைத்து வந்தனர். திருநல்லூர் பெருமணம் என்று திருப்பதியில் நடந்த திருஞானசம்பந்தரின் திருக்கல்யாணத்தை கண்டு இன்புற்ற நிலையில் இருக்க, திருஞானசம்பந்தர், இங்கு புண்ணிய மனத்தின் வந்தார் யாவரும் என்பாற் சோதி இதனுள் வந்தெய்தவும் என்ற திருவாக்கின்படி திருநீலகண்ட யாழ்ப்பாணர் அவரது மனைவியார் மதங்கசூளாமணி அம்மையும் அச்சிவப்பரஞ் சோதியில் கலந்து சிவபெருமான் திருவடியில் சேர்ந்தனர்.

எருக்கத்தம்புலியூர் : புலிக்கால் முனிவர் (வியாக்ரபாதர்) வழிபட்டத்தலம். திருஞானசம்பந்தரால் பாடல் பெற்றத் திருத்தலம். பதிகத்தில் பாணனாரை புகழ்ந்து பாடியுள்ளார். தற்போது இவ்வூரின் பெயர் இராஜேந்திரபட்டினம். விருத்தாசலம் வழியே ஜெயகொண்டம் செல்லும் பாதையில் இவ்வூர் உள்ளது.

Koviloor Digital Library

கருத்து :

அ. தற்காத்துத் தற்கொண்டாற்பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

என்ற திருக்குறளின் வழி நடந்த மதங்கசூளாமணியார் தன் கணவரான திருநீலகண்டயாழ்பாணரோடு உடன்சென்று பாடிய செயல் பெண்ணின் பெருமைக்கு சான்றாகும்.

ஆ. அந்தண மரபில் தோன்றிய திருநீலநக்கர் நாயனார் இல்லத்தில் திருநீலகண்ட யாழ்ப்பாணரையும் அவரது மனைவியார் மதங்க சூளாமணியாரையும் தனி அறை கொடுத்து இரவு தங்கும்படி செய்தது, சிவனடியார்க்கு குல மரபு பேதம் கிடையாது என்பதை உணர்த்துகிறது. இவ்வாறு அனைத்து குல மக்களும் போற்றி வணங்கும்படி பக்தி, ஒழுக்கத்தில் சிறந்து விளங்க வேண்டும்.

இ. தினமும் பூசை தவறாது நடைபெற்று வரும் திருக்கோயிலின் மூலஸ்தானத்தை அடைந்து நானும் பூசை செய்வேன் என்று கூறுவது சரியன்று. ஆனால் பூசையில்லாத திருக்கோவிலில் மூலவர்க்கு நீராட்டுதல் செய்து மலரிட்டு தீபம் ஏற்றி வருவது தவறு அன்று. ஒருவன் அந்தணர் குலத்தில் பிறப்பதால் மட்டும் அந்தணராக முடியாது. அக்குலத்தின் பிறப்பு ஒழுக்கத்தை கடைபிடித்து வாழ்பவரே அந்தணர். உண்மையில் எக்குலத்தில் பிறந்தாலும் கொல்லாமை, புலால் மறுத்தல், எல்லா உயிரின் மீதும் இரக்கம் கொண்டிருத்தல், உடல் தூய்மையையும், உள்ளத் தூய்மையையும் கடைபிடித்து தினமும் இல்லத்தில் சிவபூசை இடைவிடாது செய்து வருபவரே

Koviloor Digital Library

அந்தணர். பல நூலாசிரியர்கள் கருத்து தாழ்ந்த குலம் என்று ஒதுக்கிய ஒரு சமுதாய மக்கள் அனைவரையும் சிவபெருமான் அழைக்கவில்லை. திருநீலகண்ட யாழ்ப்பாணரை மட்டும் அழைத்தார் என்று கூறுவது வருந்தத்தக்கது.

ஈ. ஒரு குடும்பத்தில் குழந்தை பிறந்தாலோ, அல்லது அக்குடும்பத்தில் இறப்பு ஏற்பட்டாலோ அக்குடும்பத்தினர் செய்து வரும் சிவபூசையை நிறுத்தாமல் தொடர்ந்து செய்து வரவேண்டும். சிலர் இறப்பு ஏற்பட்ட குடும்பத்தில் உள்ளோர் ஒரு ஆண்டுக்கு கோவிலுக்கு போகாமல் இருப்பதும் சரி அல்ல. இறைவனுக்கு தீட்டு என்பதே கிடையாது. சிவபெருமான் ரத்னாவதி என்ற பெண்ணுக்கு பிரசவம் பார்த்து திருச்சிராப்பள்ளியில் தாயுமானவர் என்ற திருநாமத்துடன் அருள்வதையும், சுடுகாட்டில் வெந்த உடலின் சாம்பலை பூசும் சுடலை ஈஸ்வராகவும் (வெந்த நீறு அணியும் விகிர்தன்) இறைவன் அருள்பாலிக்கிறார். ஆகையால் பிரசவம் பார்த்தவரும், சுடுகாடு வரை வருபவரான நமது தந்தை சிவபெருமானுக்கு ஏது தீட்டு மேலும் எண்ணுக. உண்மையில் தீட்டு எதுவென்றால் பிறர் மனைவியை விரும்புபவன், பிறர்பொருளை விரும்புபவன், கொலைபுரிபவன், சிவத்தை அறிந்தும் மாமிசம் சாப்பிடுபவன், உடலுக்கு தீங்கான உணவை உட்கொள்பவன், அன்பு இல்லா மனம் உடையவன் எவனோ அவனே தீட்டு உடையவன் ஆவான்.

ஈ. மற்றும் ஒரு சிந்தனை: விலங்குகளின் தோல் மற்றும் நரம்புகளே இசை கருவிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

Koviloor Digital Library

எனவே நம் முன்னோர்கள் இக்கருவிகளை கோவிலுக்கு வெளியே நின்றபடி பயன்படுத்த சொன்னார்களா? எண்ணுக.

குறிப்பு : திருஞானசம்பந்தப்பெருமானின் வரலாற்றில் திருநீலகண்டர் முக்கிய செய்திகளான

அ. சீர்காழியில் சம்பந்தரின் சந்திப்பு

(ஆ) எருகத்தம்புலியூர் வருகை

இ) தருமபுரம் பதியில் யாழ்முரிசெயல்

ஈ. திருநீலநக்கர் வீட்டில் நடந்தவைகள், விண்ணில் இருந்தபடி இருசிறைப்பறவையில் (பறக்கும் தட்டு) ஏகினங்கள் (ஏலியன்ஸ்) இவரது இசையினை கேட்டு ரசித்த செய்தி பற்றிய விபரங்கள் இந்நூலில் திருஞானசம்பந்தப்பெருமான் நாயனார் வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது. படித்து இன்புறவும்.

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் திருவடிகள் போற்றி!போற்றி!!

நாள்ஆய போகாமே நஞ்சு அணியும் கண்டனுக்கே
ஆள்ஆய அன்பு செய்வோம் மடநெஞ்சே அரன் நாமம்
கேளாய் நம் கிளைகிளைக்கும் கேடு படாத் திறம் அருளிக்
கோள்ஆய நீக்குமவன் கோளிலி எம்பெருமானே. 1.62.1

Koviloor Digital Library

61. சடைய நாயனார் வரலாறு

சிவபெருமானே தோழமையாக உனக்கு தந்தோம் என்று கூறிய தம்பிரான் தோழரான நம்பிஆரூரன் என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தந்தையாரே சடையனார் ஆவார். அவர் முப்போதும் திருமேனி தீண்டும் ஆதிசைவ மரபினை சார்ந்து தினமும் சிவபூசை செய்து அரன் அடியை அடைந்தார்.

கருத்து : ஒரு புண்ணியனை மகனாக பெறுவதற்கு எத்தனை புண்ணியம் செய்திருக்க வேண்டும். எத்தனையோ பிறவியில் செய்த சிவபுண்ணிய செயல்களே இதற்கு காரணமாகும். எனவே பிறந்த இப்பிறப்பில் சிவபுண்ணிய செயல்களை செய்து புண்ணியர்களாவோம்.

குறிப்பு : அறுபத்தி மூன்று நாயன்மார்களின் வரலாற்றை நாம் தெரிந்துகொள்ள காரணமான திருத்தொண்டர் தொகை பாடிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'அப்பா' என்று அழைக்கும் பேறு பெற்றவரே சடைய நாயனார் ஆகும்.

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் எனுஞ் சொல் – திருக்குறள்

சடைய நாயனார் திருவடிகள் போற்றி போற்றி!!

Koviloor Digital Library

62. இசைஞானியார் வரலாறு

திருநாவலூரில் மங்காத பெருமையுடன் வாழ்ந்த சடையனாரின் மனைவியாரே இசைஞானி அம்மையாராகும். சிவபெருமானால் தடுத்து ஆட்கொண்ட பெருமை பெற்ற நம்பி ஆரூரனை (சுந்தரமூர்த்தி நாயனார்) பெற்றெடுத்த தாயார் இவரேயாகும். சுந்தரமூர்த்தி நாயனாரை தன் வயிற்றில் சுமந்து நமக்கு வழங்கிய இசைஞானியாரை எப்படி புகழ்வது திருவருளால் அரன்அடியை அடைந்திட்ட இசைஞானியாரை புகழ வார்த்தைகளே இல்லை.

கருத்து : அ. சடையனாருடைய தந்தையாரின் பெயர் நம்பி ஆரூரன் என்பதாகும். அப்பெயரையே சடையனார் தன் மகனுக்கு இயற்பெயராக சூட்டினார். திருநாவலூரில் வாழ்ந்து வந்த குடும்பத்தில் எப்படி திருவாரூரில் வீற்றிருக்கும் இறைவனின் நம்பி ஆரூரன் என்ற திருநாமம் வந்தது என்பதை எண்ணிப்பார்த்தால் சடையனாரின் தந்தையை பெற்றவள் திருவாரூரை சேர்ந்த அம்மையாராக இருந்திருக்க வேண்டும் அவர்கள் சடையனாரின் தாத்தாவை மணம் முடித்து திருநாவலூரில் வசித்து வரும் நிலையில் தான் பிறந்த திருஆரூரனை மறவாது தன் மகனுக்கு நம்பி ஆரூரன் என்ற சுவாமியின் பெயரை சூட்டிருக்க வேண்டும் என்பது அடியவனின் கருத்து.

Koviloor Digital Library

ஆ. ஒவ்வொரு மனிதனின் உயர்வு, உழைப்பால் மட்டுமே அமைவதில்லை. நாம் முன் செய்த நல்வினை பயனாகிய புண்ணியம் இருந்தால் மட்டுமே அம்மனிதன் உயர்நிலையை அடையமுடியும். நாம் அன்றாட வாழ்வில் படிப்பும் கடின உழைப்பும் இல்லாதவர்களின் கீழே பல அறிவாளிகளும், கடின உழைப்பாளிகளும் வேலை செய்வதை நடைமுறையில் காண்கிறோம். இதற்கு காரணம் என்ன?

இவ்விரண்டுடன் மூன்றாவது ஒன்று சேர்ந்தால் மட்டுமே சிறப்புடையதாகிறது. அதுவே புண்ணியம் ஆகும். நாம் செய்யும் நற்செயல்களே புண்ணியங்களாக மாறி பிறவிதோறும் நற்பலன்களாக இறைவன் நமக்கு வழங்கி வருகிறார். அவ்வாறு புண்ணியம் செய்து பெற்ற பொருளையும், புகழையும் மேலும் நற்செயலுக்காக பயன்படுத்தி வந்தால், எப்படி வங்கியில் சேமிக்கும் தொகை கூடி வருவது போல், புண்ணியமும் கூடி நிற்கும். இறைவன் இப்பிறவியில் நமக்கு நல்லதோர் வாய்ப்பினை நல்கி உள்ளார். அவ்வாய்ப்பினை நழுவ விடாது நற்செயல்களை செய்து வர வேண்டும்.

மேலும் தீமையே செய்யாது வாழ்ந்தால் துன்பமே வாராது. நற்செயல்களை நாம் செய்யும்போது இச்செயல் சிவபெருமான் கருணையால் ஆனது என்று (வாயால் மட்டும் சொல்லக்கூடாது). உள்ளம் சொல்ல வேண்டும் அவ்வாறு வாழ்ந்து வந்தால் நம்முடைய எல்லா புண்ணியங்களும் சிவபுண்ணியங்களாக மாறி நம்மை சிவனடியில் சேர்க்கும்.

சிலந்தி செய்த சிறிய சிவப்புண்ணிய செயலை ஏற்று சிவபெருமான் மாமன்னனாக மாற்றி தன்னிடமே சேர்த்துக் கொண்டார் பாருங்கள். எனவே ஒரு சிவனடியார் ஒரு

Koviloor Digital Library

சிவலிங்கத் திருமேனிக்காவது மேற்கூறையாவது அமைத்து தினபூசை செய்ய முயற்சி செய்ய வேண்டும்.

மண் விரட்டி மழையிலே சேர்ந்து மண்ணிலே முளைத்து, செடியாலே விரட்டிய விதையாகி, தந்தைக்கு உணவாகி, என் தந்தை என்னை தாங்க முடியாமல் என் தாயிடம் விரட்டி, என் தாயும் என்னை பத்து மாதம் வைத்து விரட்டி விட நான் கல்விக்கும், பணத்திற்கும் விரட்டி அடிக்கப்பட்டு, இளமை என்னை விரட்டித் தள்ளி முதுமையும் வந்தது, அதுவும் என்னை விரட்டி அடித்து விடும். மண்ணிலே பிறந்து மண்ணாகி கழியும் எனக்கு நிலையான ஒரு இடம் நித்தியமானதும் பிறப்பு இறப்பு அற்ற பேரானந்தக் கடலான சத்சித் ஆனந்தமான சிவபெருமான் திருவடியை அடையும் வழி உண்டோ? உண்டு. சிவபுண்ணியம் செய் மனமே .

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித்தரளங்கள்
மன்னு காவிரி சூழ் திருவலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே

– திருஞானசம்பந்தர் 2.106.1

Koviloor Digital Library

63. தம்பிரான் தோழர், நம்பி ஆரூரன், சுந்தரமூர்த்தி நாயனார்

பொன்னார் மேனியிலே வெண்மையான திருநீறு அணிந்தார்போல காட்சி தரும் பனிமலையில் ஆதி அந்தம் இல்லாத முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் என்றும் வீற்றிருக்கும் மலையே திருக்கயிலை மலையாகும். அம்மலை புண்ணியங்கள் திரண்டு மலையானது போலவும், மேன்மை கொள் வான்மறை நாதமும், விண்ணவரின் வீணையின் ஓசையும், வேத நான்முகன், திருமால், இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் அனைவரும் திருக்கயிலாய நாதனின் திருக்கோயில் வாயிலின் வெளியே தரிசனத்திற்காக திருபிரம்பினை ஏந்தி நிற்கும் நந்தியம் பெருமானிடம் அனுமதி கேட்டு கொண்டிருக்கும் நிலையில், மானையும், மழுவையும் ஏந்திய சிவபெருமானையே எப்போதும் ஆர்வத்துடன் விருப்பமுடன் நினைத்துக் கொண்டிருப்பவரும், மாதவன் (கிருஷ்ணன்) தலைமேல் தன் பாதம் வைத்து சிவதீட்சை செய்தவரும், சிவபெருமான் அருளிய திருப்பாற்கடலில் பால் உண்டு வளர்ந்த உபமன்னிய முனிவர் பல்லாயிர யோகிகளும் முனிவர்களும் சூழ அமர்ந்திருந்தார்.

அப்போது அனைவரும் காணும்படி ஆயிரம் சூரியன் ஒன்றாக சேர்ந்தார் போன்ற பேரொளி திருக்கயிலை நோக்கி வர, அத்தனை யோகிகளும் அதிசயத்து உபமன்னிய முனிவரிடம் வினவினர். அம்மாமுனிவர் அனைவரின்

Koviloor Digital Library

வினாவிற்கு பதிலாக, கயிலையிலிருந்து சென்று மாதவம் செய்த திருநாவலூரில் அவதரித்து சிவபெருமானின் அருளால் மீண்டும் திருக்கயிலைக்கு வருகை தரும் வன்தொண்டராகிய நம்பி ஆரூரனே இப்பேரொளி என்று கூறிய உபமன்னிய முனிவர் எழுந்து தலைக்கு மேல் கைகளை கூப்பியவாறே அங்கம் முழுவதும் ஆனந்தம் மேலிட அப்பேரொளி வந்த தென்திசை நோக்கி சென்று வணங்கினர்.

இச்செயலை கண்ட முனிவர்கள் உபமன்னிய முனிவரிடம், சிவபெருமானை தவிர வேறு எவரையும் வணங்காத இயல்புடையவரான தாங்கள், இச்சோதி கண்டு தொழக் காரணம் என்ன? என்று கேட்டனர். நீண்ட சடையினை உடைய உபமன்னிய முனிவர் பதிலாக "சிவபெருமானை தன் உள்ளத்தில் தழுவும்படியான இயல்புடைய நம்பி ஆரூரன்" நாம் அனைவரும் வணங்கும்படியான தன்மையுடையவர் என்று கூற, நம்பி ஆரூரன் யார்? இப்பேரொளி செய்த தவம் யாது? என்பதை எங்களுக்கு இப்போதே கூறி அருள வேண்டும் என்று மிகுந்த விருப்பத்துடன் முனிவர்கள், உபமன்னிய முனிவரிடம் கேட்டனர்.

நடந்ததை நடந்தபடியே உபமன்னிய முனிவர் கூற ஆரம்பித்தார். இத்திருக்கயிலையில் ஆலால சுந்தரன் என்ற அன்பர் தினமும் சுவாமிக்கு மலர்களையும், திருநீற்றையும் கொண்டு வரும் வழக்கம் உடையவர். ஒருநாள் மலர் எடுக்க நந்தவனம் செல்லும்போது, அந்த நந்தவனத்தில் உமை அம்மைக்கு மலர் பறிக்க அனிந்திதை, கமலினி என்ற இருவர் ஆலால சுந்தரர் வருவதற்கு முன்பே ஈசன் அருளால் மலர் பறித்து கொண்டிருந்தனர். மாதவம் செய்த தென்திசையில்

Koviloor Digital Library

(தமிழ்நாட்டில்) வாழ்ந்து நாயன்மார்களை பற்றி உலகெலாம் அறியும்படியான "திருத்தொண்டர் தொகை" யினை நமக்கு தர, சிவபெருமான் அருளால் ஆலால சுந்தரர் அங்கு வர அவ்விருவரையும் கண்டு மனதை அவர்கள் மீது செலுத்த அவ்விருவரும் ஆலாலசுந்தரர் மீது அன்புள்ளம் கொண்டனர்.

பின் அவரவர் மலர் பறித்து சென்றனர். இறைவன் இச்செயலை கண்டு ஆலால சுந்தரரிடம் "பெண்கள் மீது மனம் வைத்ததால் தென்திசை நாட்டில் பிறந்து இவ்விரு பெண்களையும் திருமணம் செய்த பின் என்னை வந்து அடைவாய் என மொழிந்தார். இம்மொழி கேட்ட ஆலால சுந்தரர் கைகூப்பி கலங்கியவாறேசிவபெருமானிடம் தங்களின் திருவடியை நீங்கும் சிறியேன் ஆகிய நான், நெறியில்லா நெறியினை நினைக்கும் மயக்கம் உடைய மானுட பிறவியில் சிக்குண்டு இருக்கும்போது ஐயனே! என்னை தடுத்து ஆட்கொண்டு அருள் செய்ய வேண்டும் என வேண்டினார்.

இறைவனும் அவ்வாறே அருளிச் செய்தார். இவ்வாறு உபமன்னிய முனிவர் கூறியதை கவனமாக கேட்ட முனிவர்கள், எட்டு திசையிலும் பிறக்கும் இயல்புடைய நிலையில் தென் திசையில் பிறக்கும்படியாக அத்தென்திசை செய்த புண்ணியம் தான் யாது? எனக் கேட்டனர்.

புலிக்கால் முனிவர் வழிபட்ட ஆகாயத் தலமாகிய தில்லை (சிதம்பரம்), மாதோர் பாகனாக திருவாரூரில், வெளிப்பட்டதாலும், உமை பூசித்த காஞ்சிபுரம் வரையுள்ள சிவத்தலங்களும், நந்திதேவர் தவம் செய்த திருவையாறும், நம் சைவ ஆச்சாரியர்களில், தலைமையில் வைத்து

Koviloor Digital Library

எண்ணப்படும் திருஞானசம்பந்தப் பெருமான் திருஅவதாரம் செய்த திருத்தோணிபுரம் (சீர்காழி) ஆகிய இவ் ஐந்து திருத்தலங்கள் அமையப் பெற்றதாலேயே மாதவம் செய்த தென்திசை ஆயிற்று என பதிலுரைத்தார். இவ்வாறு உபமன்னிய முனிவர் நம்பிஆரூரரின் வரலாற்றையும் திருத்தொண்டர்களின் வரலாற்றையும் உடன் இருந்த முனிவர்களுக்கு கூறியதை அவ்வாறே, நம்பிஆரூரர் வழங்கிய திருத்தொண்டர் தொகையையும், திருமுறைகளை ஆதாரமாக கொண்டு இம்மண்ணில் வாழும் நமக்கு பெரியபுராணமாக சேக்கிழார் பெருமான் பின்வருமாறு உரைத்து அருளினார்.

தமிழ் பேசும் திருநாட்டில் திருநாவலூரில் ஆதிசைவ மரபில் வழிவழியாக சிவன் கழல் போற்றி வழிபட்டு வந்த சடையனார்க்கும், இசைஞானி அம்மையாருக்கும் நம்பி ஆரூரன் திருமகனாராக அவதரித்தார். இனிதே வளர்ந்து பூணூல் அணியும் மங்கலம் செய்யப் பெற்று பல கலைகளை கற்று ஓங்கி திருமணப் பருவம் அடையப்பெற்றார்.

தந்தையாராகிய சடையனார் சைவகுல அந்தண மரபுக்கு ஏற்ற சடங்கவி என்ற மறையவரின் மகளுக்கு தனது மகனை திருமணம் செய்ய நிச்சயித்தார். திருமண நாளும் வந்தது சடங்கவியின் ஊரான மணம் வந்த புத்தூரில் திருமண சடங்குகள் நடக்க அவ்வூரே விழாக் கோலம் கொண்டிருக்க நம்பி ஆரூரன் திருமண மாப்பிள்ளை கோலம் பூண்டு திருமணப் பந்தலின் உள் செல்லும்போது தடுத்து ஆட் கொள்வேன் என்று உரைத்த வாக்கின்படி சிவபெருமான் வயது முதிர்ந்த அடியார் வேடத்தில் கையில் மூங்கில் கொம்பும், காதில் ருத்ராட்ச மணியும், வெண்மையான உடையும்

Koviloor Digital Library

அணிந்து அத்திருமண பந்தலினுள் சென்று நான் சொல்வதை அனைவரும் கேளுங்கள் என்று கூறினார். திருமண மாப்பிள்ளையான நம்பி ஆரூரரை நோக்கி உனக்கும் எனக்கும் வழக்கு ஒன்று இருக்கிறது அதனை முடித்தபின் நீ திருமணம் செய்யென மொழிந்தார். நம்பி ஆரூரரும் உமது வழக்கினை கூறுங்கள் அவ்வழக்கை முடித்தபின் திருமணம் செய்வேன் என்று கூற அம்முதியோன் இந்த நாவலூர் நகர் நம்பி ஆரூரன் என் அடிமை என்று கூறினார். அம்மொழி கேட்டு நம்பி ஆரூரன் சிரித்தார். அந்நிலையில் அம்முதியோர் உன் தந்தைக்கு தந்தை எனக்கு எழுதிக் கொடுத்த அடிமை சாசன ஓலை என்னிடம் உள்ளது என மொழிந்ததை கேட்ட நம்பியாரூரர், அந்தணர்கள் வேறொரு அந்தணருக்கு அடிமை ஆதல் நீர் சொல்லித்தான் கேட்கிறேன். இவ்வாறு சொல்லும் நீர் பித்தரோ என்றார்.

அம்முதியோர் பித்தன், பேயன் என்று என்னை எப்படி சொன்னாலும் அதை பற்றி கவலையில்லை இவ்வாறு நீ பேசுவது என்னை நீ இன்னும் அறியவில்லை என்பதை காட்டுகிறது எனக்கு பணி செய்ய வா, என்றார்.

நம்பிஆரூரருக்கு முதியவரை பார்த்தால் உள்ளம் உருகுதலும் அவரின் பேச்சு கோபத்தை தூண்டும் வண்ணமும் இருந்தது. பின் முதியவரை நோக்கி அவ் ஓலையை காட்டும்படி கேட்க, இவ் ஓலையை சபை முன்பே அனைவரிடமும் காட்டுவேன் என்று முதியவர் கூறும்போது, நம்பி ஆரூரன் விரைந்து அவ்வோலையை பறிக்க முற்பட அச்செயலை கண்ட முதியவர் திருமணப் பந்தலின் உள் ஓட, திருமாலும், பிரம்மனும் அடிமுடி தேடி காண முடியாத சிவபெருமானை நம்பி ஆரூரன்

Koviloor Digital Library

விரட்டி பிடித்து அம்முதியோரிடம் இருந்த ஓலையை பிடித்து வாங்கி கிழித்திட்டார்.

சுற்றத்தார்கள் அனைவரும் கூடி இருவரையும் விலக்கி அம்மறை முதியோரிடம் உமது ஊர் எது? யென கேட்க அவர் அருகிலுள்ள திருவெண்ணெய்நல்லூர் என்று கூற அச்சுற்றத்தார் அனைவரும் அவ்வூருக்கு சென்று இவ்வழக்கை முடிக்கலாம் என்று கூற அம்முதியோரும் நம்பியாரூரரிடம், திருவெண்ணெய்நல்லூரில் உள்ள புனித நான்கு மறையவர்களிடம் நான் வைத்திருக்கும் மூல ஓலையை காட்டி உன்னை அடிமையாக கொள்வேன் என்று கூறி திருவெண்ணெய்நல்லூர் நோக்கி புறப்பட்டார். நம்பி ஆரூரரும், சுற்றத்தாரும் காந்தத்தால் இழுக்கப்பெற்ற இரும்பினைப் போல அம்மறை முதியோரின் பின் சென்றனர்.

திருவெண்ணெய்நல்லூர் அவைமுன் மறையவர்கள் நம்பியாரூரரிடம் ஓலையை கிழித்தது முறையோயென கேட்டனர். நம்பி ஆரூரர் ஐயா, ஆதி சைவ மரபினன் ஆகிய நான் அடிமையாவது எவ்வாறு? இவர் கூறுவது மாயையாக உள்ளது, எனக்கு ஒன்றும் புரியவில்லை என்று கூறக்கேட்ட அவையோர் முதியோரை நோக்கி சான்று காட்டுவீர் என்றனர். அவையோரை நோக்கி முதியவர் ஏற்கனவே கிழித்த ஓலையின் மூல ஓலை என்னிடம் உள்ளது அவ்வோலையை சபை முன் காட்டினால் முன்போல் கிழிக்காமல் பார்ப்பீர்களானால் அம்மூல ஓலையை காட்டுகிறேன் எனக் கூறக்கேட்ட சபையினர் நாங்கள் தீதுவராதபடி பார்த்துக் கொள்கிறோம் என உறுதி அளித்தனர்.

Koviloor Digital Library

அவ்வோலையை முதியோர் கொடுக்க, கரணத்தான் (எழுத்தர்) அச்சபையில் வாசித்தான். அதில் நாவலூரில் வாழும் ஆதி சைவனாகிய நான் பெருமுனி வெண்ணெய்நல்லூர்ப் பித்தனுக்கு நானும், கிளை கிளையாய் என் மரபில் வருவோரும் வழி வழியாய் தொண்டு செய்து வருவோம் இது உள்ளமும், செயலும் ஒன்றி எழுதி கொடுத்த சாசனம் இது என் கையெழுத்தென உறுதி செய்து மைகயெழுத்திட்டு இருப்பதையும் கூறினார். அதுகேட்ட சபையினர் சாட்சி கையெழுத்து உள்ளதா என்று சரி பார்த்தப்பின் நம்பி ஆரூரரின் பாட்டனார் கையெழுத்து அவருடையதா என சரி பார்க்க முந்நாளில் அவர் கைப்பட எழுதிக்கொடுத்த ஓலையை பாதுகாப்பு பெட்டகத்திலிருந்து கொண்டு வரச் செய்து அவ்வோலையில் உள்ள கையெழுத்தும் ஒன்றாக இருப்பது கண்டு நம்பியாரூரரை நோக்கி இனி இவ் வழக்கில் நீர் தோற்றீர் இம்முதியவரின் ஏவல்படி நடக்கவும் எனத் தீர்ப்புக் கூறினர். நம்பி ஆரூரரும் அத்தீர்ப்பை ஏற்றுக்கொண்டார்.

அச்சபையின் மறையோர் முதியவரை நோக்கி, உமது மூல ஓலையில் உங்களது ஊர் திருவெண்ணெய் நல்லூர் என்று உள்ளது எனவே நீவீர் வசிக்கும் வீடும் உமது வாழ்க்கையை எங்களுக்கு காட்டுவீர் என்றனர். அப்புண்ணிய முனிவர், என்னை ஒருவரும் அறியவில்லை சரி, என்னுடன் வாருங்கள் என்று மொழிந்து செல்ல, நம்பி ஆரூரரும் அனைவரும் பின் தொடர அம்மறை முதியோர் திருஅருட்துறை திருக்கோயில் புகுந்து மறைந்தருளினார். நம்பி ஆரூரர் சுவாமியை நினைந்து பெரு விருப்பத்தோடு

Koviloor Digital Library

அழைக்க விடை மீது உமையுடன் சிவபெருமான் காட்சி தந்து அருளினார்.

அப்போது சிவபெருமான் முன்பு நீ நமக்குத் தொண்டன் உன் விருப்பத்தாலே எனது கட்டளைப்படி பிறந்தாய், இம்மண்ணில் தொல்லை இரும்பிறவி உன்னை தொடராமல், அனைவரின் முன்பு உன்னை தடுத்து ஆட்கொண்டோம் என்றார். அம்மொழி கேட்ட சுந்தரர் ஈன்ற தாய் பசுவினை கண்ட கன்று போல் கதறி தொழுது தலைமேல் கை கூப்பியவாறே, கூத்தப்பெருமானோ என்னை ஆட்கொண்டது என்று கதறியபோது ஐந்துவித ஓசை முழங்க, விண்ணவர்கள் பூ மழை பொழிந்தனர்.

மேலும் சிவபெருமான் நீ என்னை வன்மொழிகளால் பேசியதால் வன்தொண்டன் என்று அழைக்கப்படுவாய். பாட்டு தான் எனக்கு அர்ச்சனை ஆகும் எனவே செந்தமிழால் நம்மை பாடு என்றார். நம்பி ஆரூரர், கோதிலா அமுதே குணப் பெருங்கடலே நாயேன் ஒன்றும் அறியாதவன் எப்படி உன்னை பாடுவேன் என உரைத்தார். இம்மொழி கேட்ட சுவாமி, முன் என்னை பித்தன் என்றே கூறினாய். ஆதலாலே பித்தன் என்றே பாடுவாயாக என்றார்.

வன்பெருந்தொண்டரான நம்பி ஆரூரர் **பித்தா பிறைசூடி** எனத் தொடங்கி உலகெலாம் உய்யும்படியாக திருப்பதிகம் பாடினார். அத்திருப்பதிகத்தை செவிமடுத்த சிவபெருமான் இவ்வுலகினில் நம் புகழ் பாடு என அருள் செய்தார். புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார் மகள் நம்பி ஆரூரனை நினைந்த படியே வாழ்ந்து வந்ததால் மிக எளிதாக சிவலோகம் அடைந்தார்.

Koviloor Digital Library

நம்பிஆரூரர் தனது பிறந்த ஊரான திருநாவலூரில் உள்ள திருக்கோயிலுக்கு சென்று திருப்பதிகம் பாடினார். பின் திருத்துறையூர் சென்று சுவாமி முன்பு "தவநெறி தந்து அருள்" என்ற பதிகம்பாடி, உழவாரப் படையாளி திருநாவுக்கரசர் பெருவிருப்புடன் கைத்தொண்டு செய்த திருவதிகை (பண்ருட்டி) நகரில் உள் செல்ல அஞ்சி அவ்வூரின் வெளியே உள்ள சித்த வடமடம் என்ற ஊரின் ஒரு மடத்தில் பல அடியவர்கள் உறங்கும் இடத்தில் திருவதிகை வீரட்டானேஸ்வரரை நினைந்தவாறே படுத்திருக்கும்போது அம்மடத்தின் உள் சிவபெருமான், முதிய அந்தண வடிவு கொண்டு நம்பி ஆரூரரின் தலைமீது கால்படும்படியாக வைத்து தூங்குவார் போல இருக்க நம்பி ஆரூரர் எழுந்து அரு மறையோரே உமது அடி என் தலைமேல் படுகிறது என்று கூறினர். அதுகேட்ட முதியோர், வயதான மூப்பு காரணமாக எனக்கு திசை தெரியாது போனது என மொழிந்தார்.

தமிழ் நாதனாகிய நம்பி ஆரூரர் தன் தலையை அப்பால் வைத்தபடி துயில்கொள்ள மீண்டும் அம்முதியோர் தலைமேல் படும்படி வைக்க நம்பி ஆரூரர் கோபம் கொண்டு என்னை பல காலம் மிதித்தீரே, நீர் யார் எனக் கேட்டார். அம்முதியோர் என்னை அறியவில்லையோ நீ என்று கேட்டு மறைத்தருளினார். சுவாமியை அறியாது இருந்தேனேயென "தம்மானை அறியாத சாதியார் உளரே" எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடினார். அங்கிருந்து திருமாணிக்குழி, திருத்தினைநகர் ஆகிய பதிகளை வணங்கி தில்லையில் வடக்கு வாயில் வழியே திருக்கோயில் உள்சென்று திருக்களிற்றுப்படி (யானையின் வடிவினை – இருபுறமும் வடிவமைக்கப் பெற்ற மூலஸ்தானத்து வாசற்படி) அருகில்

Koviloor Digital Library

சென்று கூத்தபெருமானை கண்டு பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மகிழ்ந்தார்.

அப்பதியிலிருந்து திருஞானசம்பந்தப்பெருமான் திருஅவதாரம் செய்த திருக்கழுமலம் (சீர்காழி) ஊருக்குள் தன்னுடைய கால்களை பதிக்க அஞ்சி எல்லையில் இருந்தபடியே வணங்கி அவ்வூரை வலமாக வரும் பொழுது உமையோடு வெள்ளை விடைமேல் சிவபெருமான் எதிர்காட்சி கொடுத்து அருளினார். ஆரூரர் அதுபோது "கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே" என்ற திருப்பதிகம் பாடி திருக்கோலக்கா, திருப்புன்கூர், மயிலாடுதுறை, அம்பர் மாகாளம், திருப்புகலூர் ஆகிய ஊரிலுள்ள சிவப்பதிகளை வணங்கி திருவாரூர் சென்றடைந்தார்.

ஆழிதேர் ஓடும் திருவீதியை உடைய திருவாரூர் அடியவருக்கு சிவபெருமான், ஆராத காதலினால் ஆரூரன் என்னை காண வருகின்றான் அவனை மகிழ்ச்சி பொங்க வரவேற்று எதிர் கொள்வீர் என்று அருள் செய்தார். உடனே வீதிகளில் நீர் தெளித்து, பந்தல், தோரணங்கள், அமைத்து மங்கல கீதம் பாட இன்னிசை முழங்க, பெண்கள் நாட்டியம் பயில திருவாரூர் நகரில் வாழ்வோர்கள் நம்பி ஆரூரரை எதிர்கொண்டு வரவேற்றனர். அத்திருக்கூட்டத்தினர் வணங்கும் முன் அனைவரையும் வணங்கினார் வன்தொண்டர். அவர்களிடம் சுவாமி என்னையும் ஏற்றுக் கொள்வாரா எனப்பொருள்பட திருப்பதிகம் இசைத்து திருக்கோயில் உள்சென்று தேவாசிரியன் திருமடம் வணங்கி திருமூலட்டானம் திருவாயிலில் நின்று தொழுது ஊனும் உயிரும் உருகும் அன்பால் கைகளை உச்சி மீது குவித்து

புற்றிடங்கொண்ட நாதரை கண்டு வணங்கி ஐம்புலனும் ஒன்றிய நிலையில் திருப்பதிகம் பாடினார்.

புற்றிடங்கொண்டநாதர் அருள்வாக்காக "தோழமை ஆக உனக்கு என்னை தந்தோம்" என்று கூறி எப்போதும் திருமண கோலமுடன் விருப்பம் தீர இவ்வுலகில் விளையாடி வருவாய் என்றார். அந்நாள் முதல் அடியவர்கள் நம்பி ஆரூரரை தம்பிரான் தோழர் என அழைத்தார்கள். மணக்கோலம் வடிவம் கொண்டு எப்போதும் இருந்தமையால் சுந்தரர் என்று அழைக்கப்பெற்றார்.

திருக்கயிலையில் இரு பெண்கள் ஆலால சுந்தரரை விரும்பியதையும் ஆலால சுந்தரர் அவ்விரு பெண்களை விரும்பியதையும் இவ்வரலாற்றின் முன் பகுதியில் கண்டோம். அவ்விரு பெண்களில் கமலினி என்பவர் திருவாரூரில் உருத்திரகணிகை மரபில் பரவையார் என்ற பெயருடன் பிறந்து மிகுந்த அழகுடைய பெண்ணாக வளர்ந்தார். அவர் ஒருநாள் புற்றிடங்கொண்ட நாதரை வணங்க பூங்கோயிலுக்குள் செல்லும்போது நம்பி ஆரூரர் திருக்கோயில் வழிபாடு முடிந்து அன்பர்களோடு வெளியே வரும் போது முந்தை நல்வினை கூட்ட பரவையாரை கண்டார். சிவனருளே நேரில் வந்தது போன்று பெருமகிழ்ச்சி அடைந்தார். பரவையாரும் பண்டைய விதி கூட்ட நம்பி ஆரூரரை கண்டு விருப்பம் கொண்டவராக மனதை கட்டுப்படுத்திக் கொண்டு மூலவரை வணங்கச் சென்றார்.

சுந்தரர் அருகில் இருந்தவர்களிடம் இந்த நங்கை யார் என கேட்க, அவர்கள் பரவையார் என்ற பெயருடைய இவளிடம் தேவ கன்னிகையரும் முன் நில்லார் என கூறினர். சுந்தரர்

Koviloor Digital Library

பரவையார் மீது அன்பு வெளிப்பட்டவராய் என்னை ஆட்கொண்ட பெருமானிடமே கேட்பேன் என்று மீண்டும் திருக்கோயில் உள்புகுந்து ஆரூரரை அடிபணிந்தார். அதற்கு முன்பே பரவையார் வழிபாடு முடித்து வேறு வாயில் வழியாக அவரது இல்லம் சென்றார். அது அறியாத சுந்தரர் திருக்கோயிலில் பரவையாரை தேடி காண முடியாமல் தேவாசிரியன் மண்டபம் அடைந்து பரவையாரை நினைந்தவாறே இருக்க இரவும் வந்தது. அரன்நாமம் ஐந்தெழுத்தை உணராத அறிவிலாதவர் நெஞ்சுபோல் இருண்டது வானம்.

பரவையாரும் தன் மனதில் சுந்தரர் மீது அன்பு வயப்பட்டவராய் தூக்கமின்றி தன் தோழியரிடம் நாம் இன்று வணங்க போகும்போது எதிர் வந்தவர் யார்? எனக்கேட்க, தோழியரும் அவர் சைவ முதல் திருத்தொண்டர், தம்பிரான் தோழர் அவரது பெயர் நம்பிஆரூரன் ஆகும் என்றார். அம்மொழி கேட்ட பரவையார், இறைவனிடம் திருத்தொண்டு செய்து வரும் சுந்தரரை தமக்கு திருமணம் செய்வித்து தரும்படி வேண்டினார். சிவபெருமான் அன்றிரவே திருவாரூர் அடியார்களின் கனவில் தோன்றி சுந்தரருக்கும் பரவையாருக்கும் திருமணம் செய்து வைக்கும்படி கூறினார். சுந்தரரின் கனவில் தோன்றி, மங்கை பரவையை உமக்கு தந்தோம். அடியார்கள் அறியும்படியும் செய்தோம் எனக்கூறி பரவையார் கனவில்சென்று நம்பி ஆரூரன் உன்னை மணம் முடிப்பான் என மொழிந்தார்.

மறுநாள் காலையில் திருவாரூர் அடியார்கள் ஒன்று கூடி நம்பி ஆரூரருக்கும் பரவையார்க்கும் திருமணம் முடித்து வைத்தனர். நம்பி அரூரர் மிக மகிழ்ந்து ஆரூரரை சென்று

Koviloor Digital Library

வணங்கி திருப்பதிகம் பாடினார். இருவரும் சேர்ந்து மகிழ்ந்து யோக நிலையில் இல்லறம் இனிதே நடத்தினார்.

இந்நாளில் ஒருநாள் வழக்கம் போல் திருவாரூர் பூங்கோயிலுக்கு நம்பி ஆரூரர் திருநீறு பூசியும் கையில் பொற்கோலும், காதினில் தோடும் அணிந்தவாறு உள்புகும் போது தேவாசிரியன் என்னும் திருமடத்தில் எண்ணிலா மிக்க சீருடைய சிவனடியார்கள் கூடி இருந்த காட்சியை கண்ட ஆரூரர் இவர்களுக்கு அடியேனாக ஆகும் நாள் எந்நாளோ என மனதில் நினைத்து ஒருவாறு தேவாசிரியன் மடம் செல்லாது ஒதுங்கியவாறு திருக்கோயில் சென்று நாதனை வணங்க உட்சென்றார்.

அந்நிலையில் அடியாரை வணங்காது செல்லும் நீயும் அடியவனோ? என்று விறன் மிண்ட நாயனார் என்ற அடியவர் கூறினார். தியாகேச பெருமான், சுந்தரருக்கு காட்சி கொடுத்து அடியாரின் பெருமையை உணர்த்தி அடியாரோடு நீ சேர்ந்திருப்பாய் என மொழிந்து அவ்அடியாரின் புகழை பாடும்படி கூற, நாவலூரரர் அடியாரின் பெருமையை பாடும்படி அருள்செய்யும்படி வேண்ட, சிவபெருமான் உலகம் உய்ய மறைகளை மொழிந்த திருவாக்கால் **தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்** என்ற வரியை எடுத்துக் கொடுக்க நம்பியாரூரர் திருத்தொண்டர் தொகைப் பதிகத்தை பாடி அருளிச் செய்தார்.

இப்பதிகமே நாயன்மார்களின் பெயர் வீடுபேறு அடையப்பெற்ற செய்திகளுக்கு முதல் சான்றாக அமைந்தது. இவ்வாறு திருவாரூர் பெருமானை மூன்று காலங்களிலும் வழிபட்டு வரும் நாளில்,

Koviloor Digital Library

குண்டையூரில் நெல்மலை அருளுதல்

திருவாரூர் அருகே குண்டையூரில் வாழ்ந்த அன்பர் தனது வேளாண்மை தொழில் வழிபெற்ற செந்நெல்லும், பருப்பும் மற்றும் பல பொருட்களையும் வன்தொண்டரின் (நம்பிஆரூரர்) மீது கொண்ட அன்பினால் பரவையார் மாளிகைக்கு கொண்டு வந்து தருவது வழக்கமாக கொண்டிருந்தார். அந்நாளில் வானம் பொய்க்க விவசாயமின்றி பஞ்சம் ஏற்பட்டது.

இதனால் குண்டையூர் அன்பர் வன்தொண்டருக்கு வழங்கி வரும் நெல் அனுப்புவது குறைகின்றதே என வருந்தி, உண்ணாது இரவு தூங்கினார்.அப்போது சிவபெருமான் கனவில் தோன்றி நம்பிஆரூரனுக்கு நெல் தந்தோம் என்று அருளி (குபேரன்) நிதிக் கோமானிடம் கட்டளையிட்டார். அவ் ஆணைவழி நெல் மலையை வான் தொடும் அளவு குண்டையூர் முழுவதும் நிரப்பி வைத்தார்.

மறுநாள் குண்டையூரர் விழித்து நெல் மலையை கண்டு அதிசயித்து நம்பி ஆரூரரை கண்டு தொழுது பல நாட்கள் நான் செய்த பணி இன்று நிற்கும் நிலை ஏற்பட்டது. ஆனால் சிவபெருமான் நெல்மலைகளை குவித்துள்ளார். அந்த நெல்மலைகளை மனிதர்களால் எடுத்துவர இயலாது எனக் கூறக்கேட்ட சுந்தரர் அந்த நெல் மலைகளை நேரில் சென்று பார்த்து வியந்து இந்நெல் மலைகளை பரவையார் இல்லத்திற்கு எடுத்துச் செல்ல பிறை அணிந்த பெருமான் அருளன்றி வேறுவழியில்லை என்று திருக்கோளிலி என்ற சிவாலயம் சென்று “நீள நினைந்து அடியேன்” எனத் தொடங்கும் பதிகத்தை பாடி திருவாரூர் அடைந்தார்.

Koviloor Digital Library

அன்றிரவே சிவபெருமான் பூதகணங்களை அனுப்பி அந்நெல் மலையை பரவையார் இல்லத்தில் சேர்த்த பின் திருவாரூர் முழுவதும் நெல் மலையாக்கினார். மறுநாள் காலை திருவாரூர் மக்கள் நெல்மலையை கண்டு அதிசயித்தனர். பரவையார் அம்மக்களுக்கு அவரவர் இல்லத்திற்கு உட்பட்ட இடத்தில் உள்ள நெல்லை அவரவர் எடுத்துக் கொள்க என முரசு கொட்டி அறிவித்தார்.

சிங்கடி, வனப்பகையாரை மகளாக ஏற்று அருளல்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூரிலிருந்து திருத்தல யாத்திரையாக திருநாட்டியத்தான்குடி செல்ல அவரை கோட்புலியார் எதிர்கொண்டு வணங்கி தனது இரு மகளையும் அடிமையாக ஏற்று அருள்வீர் என வேண்ட சுந்தரர் இவர்கள் இருவரும் எனது மக்கள் என மகளாக ஏற்று அருளி அவ்வூரில் உள்ள சிவாலயத்தை வணங்கி "பூண்நாண்" எனத் தொடங்கும் பதிகத்தை பாடி அருளினார். இப்பதியிலிருந்து திருவலிவலம் சென்று பதிகம் பாடி திருவாரூர் சென்றடைந்தார்.

திருப்புகலூரில் தங்கக்கட்டிகள் பெறுதல் :

திருவாரூரில் திருப்பங்குனி உத்திர திருநாள் வருவதற்கு மிக குறைந்த நாட்களே உள்ளது. அவ்விழாவிற்கு பரவையாரின் திருத்தொண்டிற்கு பொன் பெற்று வருவதற்காக சுந்தரர் திருப்புகலூர் சென்று அருள்மிகு அக்னீஸ்வரரை வணங்கி திருப்பதிகம் பாடினார். திருவருளால் உறக்கம் வர அத்திருக்கோயில் உள்ளே ஒரு ஓரத்தில் திருப்பணிக்கு பயன்படும் செங்கற்களை ஒன்று திரட்டி மேடை போல் உயரம்

Koviloor Digital Library

அமைத்து அதன் மீது வெள்ளை துணியை விரித்து துயில் கொண்டார். அவரை சுற்றி இருந்த அன்பர்களும் துயில் கொண்டனர். அப்போது வெற்றி விடையவன் அருளால் நம்பி ஆரூரர் படுத்திருந்த செங்கற்கள் அனைத்தும் தங்கக் கட்டிகளாக மாறின. உறக்கம் நீங்கி தங்க கட்டிகளை கண்டு பேரன்புடன் மீண்டும் திருப்புகலூரானை "தம்மையே புகழ்ந்து" எனத் தொடங்கும் பதிகம் படித்து இம்மையே இன்பம் தருவாரை வணங்கி தங்கக் கட்டிகளை உடன் கொண்டு திருப்பனையூர் சென்றார்.

கூத்தபெருமான் காட்சி தருதல்

திருப்பனையூர் திருக்கோயில் செல்லும் முன் கூத்தப்பெருமான் (நடராஜர்) எதிர்காட்சி தந்தருள நம்பியாருரன் வீழ்ந்து வணங்கி திருக்கோயில் உள்சென்று "ஆடுமாறு வல்லார்" என இறைவனை துதித்தார். அப்பனையூர் அடியவர்கள் தங்க கட்டிகளை சுமந்து வந்து திருவாரூர் பரவையார் இல்லத்தில் சேர்த்தனர்.

சுந்தரரின் கனவில் இறைவன் தோன்றி மழபாடி நினைக்க மறந்தாயோ? எனக் கேட்டருளல்

நம்பியாரூரர் பல சிவாலயங்களை வணங்கி திருவையாறு வணங்கி திருப்பூந்துருத்தி வழிபட்டு திருஆலம்பொழில் சிவாலயத்தை வணங்கி அங்கு இரவு பள்ளி கொண்டார். அப்போது கனவில் "மழபாடியினில் வருவதற்கு நினைக்க மறந்தாயோ?" என்று இறைவன் காட்சி அளிக்க விழித்தெழுந்து உடனே காவிரி வடகரை அடைந்து திருமழபாடியை அணைந்தார். திருக்கோபுரம் கண்டு வீழ்ந்து

Koviloor Digital Library

வணங்கி கருணையே வடிவான சிவபெருமானின் அருள்திறத்தினை போற்றி **“பொன்னார் மேனியனே”** எனத்தொடங்கும் திருப்பதிகம் பாடியருளினார்.

பொற்குவையை அருளுதல்

திருப்பாச்சிலாச்சிரமம் என்ற சிவபதியை வணங்கி பொன் பெற விரும்பி இறைவனை வேண்டி கிடைக்காத நிலையில் அன்பு நீங்கா அச்சமுடன் தோழமையை நினைந்து எலும்பு உருகும் அன்பினால் “பிரானார் மற்றிலையோ?” எனப்பாட இறைவர் ‘பொன்நிதிக்குவை’யை அளித்தருளினார்.

கங்காள வேடத்தை இறைவன் காட்டியருளல்

பல பதிகளை வணங்கி திருப்பைஞ்ஞிலி நாதரின் கோபுரம் பணிந்து வலமாக திருக்கோயிலை வலம் வர இறைவன் கங்காள வேடத்தினை காட்டியருளினார். கண்களில் காதல் நீர் வெள்ளம் போல் பாய கைகுவித்தபடி சுவாமி தாருகாவனத்து ரிஷிபத்தினிகளின் ஆணவத்தை நீக்க கங்காள வேடத்தை காட்டியது நினைவு கூர்ந்து அன்பர் நாயகரை பரவி “கார் உலாவிய” எனத் தொடங்கும் பதிகத்தை பாடினார்.

புகழ்பெற்ற நமசிவாய திருப்பதிகத்தை பாடி அருளியது

பல சிவாலயங்களை வணங்கி திருப்பாண்டி கொடுமுடி என்ற பதியில் வலங்கொண்டு வணங்கி சிவபெருமான் திருவடியை நான் மறக்கினும் என் நாக்கே நீ எப்போதும் நமசிவாயத்தை மறவாது சொல் என்று பொருள்பட **‘மற்றுப்பற்று எனக்கு இன்றி’** எனத் தொடங்கும் நமச்சிவாயப் பதிகத்தை உலகெலாம் உய்ய பாடினார்.

Koviloor Digital Library

தில்லை கூத்துடையான் காட்சியை பேரூரில் காணல்

கோயம்புத்தூர் அருகே பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரர் திருக்கோயில் உள்ளது. அத்திருக்கோயிலுக்கு நம்பியாரூரர் சென்று வலங் கொண்டு உள் செல்ல இறைவர் தில்லை கூத்தபெருமானின் திருக்காட்சியை இங்கு காட்சி தந்தருளினார். அப்போது நம்பியாரூரர் பெற்ற இன்பம் எவ்வாறு இருந்திருக்கும் என்று யாரால் உரைக்க இயலும். பற்பல சிவப்பதிகளை வணங்கி திருக்கூடலையாற்றூர் செல்ல நினைந்தவாறு அப்பதியை மறந்தவாறே திருமுதுகுன்றம் செல்லும் பாதையில் செல்ல,

வழித்துணையாக சுவாமியே உடன் வருதல்

அவ்வழியில் சிவபெருமான் வேதியர் வடிவில் நின்று கொண்டிருந்தார். நம்பியாரூரர் அவ்வேதியரை நோக்கி திருமுதுகுன்றம் செல்லும் வழியை எமக்கு சொல்லுங்கள் என கேட்க, வேதியர் திருக்கூடலையாற்றூர் செல்லும் வழியை காட்டி துணையாய் கோயில் வரை வந்து காட்டி மறைந்தார். தம்பிரான் தோழர் திகைத்தபடி ஆராத இன்பத்துடன் இறைவனை தொழுது “வடிவுடை மழு” எனத் தொடங்கும் பதிகத்தை ஏத்திப்பாடி திருமுதுகுன்றம் நோக்கி சென்றார்.

பன்னிரண்டாயிரம் பொன் பெறுதல்

(விருத்தாசலம்) திருமுதுகுன்றம் அடைந்து அருள்மிகு பழமலை நாதரை வணங்கி போற்றி பதிகங்களை பாடினார். சுந்தரரின் உள்ளத்தை அறிந்த பெருமான் பன்னிரண்டாயிரம் பொன் வழங்கினார். அப்பொன்னை பெற்ற நம்பி சிவபெருமானிடம் இப்பொன் எல்லாம் திருவாரூரில் உள்ளோர்

Koviloor Digital Library

அனைவரும் மிரண்டு வியந்து போகும்படி அங்கே வரவேண்டும் என்று வேண்டினார். வேண்டுவார்க்கு வேண்டுவதே ஈவானாகிய சிவபெருமான் இம் மணி முத்தாற்றில் இப்பொன்னை இட்டு திருவாரூர் குளத்தில் பெற்றுக்கொள் என பணித்தார். நம்பியாரூரரும் பொன் குவியலில் இருந்து சிறிதளவு பொன்னை வெட்டி மாதிரி பார்க்க (மச்சம்) எடுத்துக்கொண்டு, என்னை ஆட்கொண்ட அருளை இதன் மூலம் அறிவேன் என்று நினைந்தவாறே மணிமுத்தாற்றில் பொன் குவியலை புகவிட்டார்.(ATM)

திருத்தில்லையை தரிசித்தல்

புலிக்கால் முனிவர் பூசித்த பெரும்பற்ற புலியூராகிய தில்லை மன்றில் கூத்துடையானை கண்டு கும்பிட அருகிலுள்ள பல பதிகளை வணங்கி கடம்பூர் பதியை போற்றி தில்லை வீதி அடைந்து தலைமேல் கைகளை கூப்பியவாறே ஆனந்தக் கண்ணீர் கண்களிலிருந்து வர விழுந்து வணங்கி எமனார் தமர் செக்கில் இடும்போது தடுத்து ஆட்கொள்வான் என்று திருவாக்காக "**மடித்து ஆடும்**" எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடினார். தில்லை ஆனந்த கூத்தினை தரிசித்தவர்க்கு நரகமே வராது என்ற பொருள்பட அமைந்த பதிகமாகும்.

குற்றம் அறியாத பெருமான் வீற்றிருக்கும் கருப்பறியலூர் சார்ந்து "மனத்தினால் நினைத்த போது அவர் நமக்கு இனியவாறே" என்ற அற்புதமான வரியை கொண்ட திருப்பதிகத்தை பாடி, திருப்பழ மண்ணிப்படிக்கரை பணிந்து பல பதிகளை வணங்கி திருவாரூர் சென்றடைந்தார். நம்பியாரூரர் பூங்கோயிலில் உள்சென்று திருமூலட்டானம்

Koviloor Digital Library

பணிந்து தனது மனைவி பரவையாரின் மாளிகைக்கு சென்றார். திருவாரூர் பெருமானை வணங்கி வந்த நாட்களில் ஒரு நாள்

ஆற்றில் இட்ட பொன்னை குளத்தில் தேடுதல்

பரவையாரிடம் இறைவன் தமக்கு திருமுதுகுன்றத்தில் பன்னிரண்டாயிரம் பொன் வழங்கியதையும் அப்பொன்னை மணிமுத்தாற்றில் இட்டு நம் திருவாரூர் குளத்தில் எடுக்க இருப்பதை கூறி, பரவையாரை அழைத்துக் கொண்டு திருக்குளத்து அருகில் சென்று வடக்கு திசையில் பரவையாரை நிற்கும்படி கூறி சடையனாரை கைத்தொழுது வணங்கியவாறே திருக்குளத்தில் இறங்கி, அப்போது குளத்தில் போட்டு எடுப்பர் போல கையைவிட்டு தடவினார். அதனை கண்ட பரவையார் ஆற்றில் இட்டு குளத்தில் தேடும் செயல் சரியோ? சொல்லுங்கள் என்று கேட்டார்.

சுந்தரர் இறைவனை ஒன்றுபட்ட மனத்தால் நினைந்து பரவையார் தன்னை கண்டு நகைக்காது பொன்னை தாரும் என்ற பொருள்பட "திருமுதுகுன்றத்து பெருமானை நினைந்த வாறே **"பொன் செய்த மேனியினீர்"** எனத்தொடங்கும் திருப்பதிகத்தை பாடினார். அப்போது பொன் திரள் தானே குளத்திலிருந்து வெளியே வந்தது. அப்போது திருவாரூர் மக்கள் அதிசயத்து வணங்க, வானில் மலர் மழை பொழிந்தது.

அப்பொற்குவியலின் ஒரு பகுதியை எடுத்து தான் மச்சம் பார்க்க வெட்டி எடுத்த பொன்னோடு ஒப்பிட்டுப் பார்த்தார். அப்பொன் குவியலில் உள்ள பொன்மாற்று குறைந்திருப்பதை கண்டு, திருமாலும் நான்முகனும் தேடி காண முடியாத சிவபெருமான் திருவடியை நினைந்து பாட, அப்பொன் திரள்

Koviloor Digital Library

அனைத்தும் குறைவில்லாத தூய பொன்னாகியது. சுந்தரரும் அதனை எடுத்துக் கொண்டு கரையேறி பரவையார் மாளிகை சென்றார். திருவாரூர் புற்றிடங்கொண்ட நாதரை தொழுது பல கோயில்களை வணங்கி திருக்கோலக்கா அடையும் முன்

தில்லை அம்பலத்துள் ஆடும் கூத்தனை கோலக்காவில் காணுதல்

இறைவர் எதிர்க்கொண்டு திருச்சிற்றம்பல நாதராக திருக்கோலக்காவில் காட்சி அளித்தார். பெருமகிழ்ச்சி அடைந்து "புற்றில் வாள்" எனத் தொடங்கும் பதிகத்தில் திருஞானசம்பந்தப்பெருமான் சிவபெருமானிடம் பொற்றாளம் பெற்றதை சிறப்பித்து பாடினார். சீர்காழியை வலம் வந்து திருக்குருகாவூர் செல்ல,

இறைவன் பொதி சோறு தருதல்

நம்பியாரூரர்க்கு தண்ணீர் தாகமும், பசியும் வந்த நிலையில், கருத்து அறிந்து முடிப்பானாகிய சிவபெருமான் தண்ணீர் மற்றும் பொதி சோற்றுடன் மறை ஓதும் வேதியர் வடிவுடன் குளிர்ந்த பந்தலை அமைத்து நம்பியை எதிர்பார்த்து அமர்ந்திருந்தார்.

நம்பியாரூரர் அப்பந்தலில் நுழைந்து மறை வேதியரை கண்ட உடன் முதல் வார்த்தையாக "சிவாயநம" எனப் பேசினார். அவ்வேதியரும் மிகச் பசித்த நிலையில் உள்ளீர். பொதிசோறு தருகிறேன், உட்கொண்டு குளிர்ந்த குடிநீர் அருந்தி இளைப்பாறவும் எனக் கூறினார். அது கேட்ட வன்தொண்டர் மறைவேதியர் தரும் உணவை மறுத்தல் ஆகாது என, தன் உடன் வந்த அன்பர்களோடு உண்ண

Koviloor Digital Library

அப்பொதி சோறு குறையாது பெருகியபடி இருந்தது. சிவபெருமானின் திருவருள் போல் குளிர்ச்சியாக இருந்த குடிநீரை அனைவரும் அருந்தி மகிழ்ச்சி பொங்க திருவருளின் திறத்தை போற்றி மகிழ்ந்து, நம்பி ஆரூரும் அவருடன் வந்த அனைத்து அடியவர்களும் உறக்கம் கொண்டனர். ஆறுசேர் செஞ்சடை வேதியரும், பந்தலோடு மறைந்தருளினார். (சிவனடியார்களுக்கு பொதிசோறு கொடுத்தது சுவாமியே என்பதை உணர்த்தவே பந்தலோடு மறைத்தார்).

திருநாவலூர் மன்னரான நம்பியாரூரர் விழித்தெழுந்து பார்க்கும்போது வேதியரையும் பந்தலையும் காணாது இறைவன் தனக்காக செய்த அருட்செயலை நினைந்து மகிழ்ந்து "இத்தனை யாமாற்றை அறிந்திலேன்" எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி திருக்குருகாவூர் அருள்மிகு வெள்ளடை நாதரை வணங்கி பதிகம் பாடிய பின் திருக்கழிப்பாலை தொழுது ஏத்தி திருத்தில்லை அடைந்தார். கூத்தப்பெருமானின் தூக்கிய திருவடியை வணங்கி, திருச்சோபுரம் தொழுது திருநாவலூர் சென்று சேர்ந்தார்.

திருநாவலூர் பதிவாழ் மக்களின் வரவேற்பு

நம்பியாரூரர் அவதரித்த ஊரான திருநாவலூர் மக்கள் பெருவாழ்வு வந்தது இந்நாள் என்று வீதியை அலங்கரித்து வரவேற்று திருக்கோயில் சென்றனர். அப்போது அடியார் திருக்கூட்டத்தின் 'அர' என்ற ஓசை மூவுலகத்திலும் ஒலித்தது. திருநாவலூர் கோன் இறைவனை வணங்கி 'கோவலன் நான்முகன்' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி 'நாதனுக்கு ஊர், நமக்கு ஊர்' என்ற உண்மையை நமக்கு உணர்த்தி

Koviloor Digital Library

பதிகத்தை நிறைவு செய்தார். பின் பல பதிகளை வணங்கி திருக்கழுக்குன்றம் அடைந்து "சென்று சென்று தொழுமின்" என்ற திருவாக்கை உள் அடைத்த திருப்பதிகம் பாடினார். அப்பதியிலிருந்து திருக்கச்சூர் சென்று ஆலக்கோயில் வலம் கொண்டு வணங்கி வெளிவந்த போது சாப்பிடும் நேரம் ஆதலாலும், உணவு செய்வோரை உடன் அழைத்து வராததாலும் பசியோடு திருக்கோயிலின் வெளியே அமர்ந்திருந்தார்.

இறைவன் பிச்சேற்றி விருந்திட்டார்

வன்தொண்டரின் பசியை தீர்க்க மருந்தீஸ்வரர் அந்தண வடிவு கொண்டு நம்பி ஆரூரரின் முன் வந்து சிறிது நேரம் காத்திரு, நான் சென்று சோறு இரந்து வாங்கி வருகிறேன் என்று சொல்லி தூய வெண்ணீறும், ஒளிரும் பூணூலுடனும் கடும் நண்பகலில் தாமரை போன்ற தனது பாதங்கள் மண் மேல் படுமாறு திருக்கச்சூர் வாழ் மக்களின் இல்லம்தோறும் சென்று பிச்சேற்றி பெற்ற உணவை கொண்டு வந்து சுந்தரருக்கும் அவருடன் வந்த அடியவர்களுக்கும் விருந்தளிக்க, அனைவரும் திருஅமுது செய்து மகிழ்ந்தனர். அந்நிலையில் எங்கும் நிறைந்த சிவபெருமான் அங்கிருந்து மறைந்தருளினார். சுவாமி நண்பகலில் பாத சுவடு மண்மீது பட நடந்தனரேயென நினைந்து மனம் உருகி கண்ணீர் மழை அருவிபோல் விழ "முதுவாய் ஓரி" எனத் தொடங்கும் பதிகம் பாடினார்.

அப்பதியிலிருந்து காஞ்சிபுரம் அடைய, அவ்வூர் மக்கள் தோரணங்கள், கும்ப கலசம் வைத்து அழைத்தனர். அன்பர்கள் புடைசூழ அருள்மிகு ஏகம்பநாதரை கண்டு வணங்கி வீழ்ந்து

Koviloor Digital Library

எழுந்து திருப்பதிகம் பாடிய பின் காஞ்சிபுரத்திலுள்ள மற்ற பதிகளை வணங்கினார்.

பெருநிதி பெறுதல்

திருஓணகாந்தன்தளியில் எழுந்தருளும் ஓணகாந்தேஸ்வரரை வணங்கி இறைவன் தம்மை தோழமையாக கொண்டதை நினைந்தவாறே பொன் வேண்டி 'நெய்யும் பாலும்' எனத் தொடங்கும் பதிகம் பாட இறைவர் எண்ணில் அடங்காத வகையில் பெருநிதியை அளித்தார்.

அங்கிருந்து வன்பார்த்தான் பனங்காட்டூர் அடைந்து செம்பொற் செழுஞ்சுடரை வணங்கி 'விடையின் மேல் வருவான்' என்ற பதிகம் பாடி திருமாற்பேறு திருவல்லம் பதிகளை வணங்கி திருக்காளத்தி மலை சென்றார். கண்ணப்ப நாயனாரை இறைவன் ஆட்கொண்ட திறத்தை எண்ணிய வாறே திருக்காளத்தியப்பரை வணங்கி அடியவர்களுடன் மகிழ்ந்திருந்த நாளில், அங்கிருந்தவாறே ஸ்ரீ சைலம் (திருப்பருப்பதம்) திருக்கேதாரம் மற்றும் பல பதிகளையும் பாடி இப்புவியில் சிவலோகம் போல் திகழும் திருவொற்றியூரை சென்றடைந்தார்.

திருவொற்றியூர் ஆதிபுரீஸ்வரரை வணங்குதல்

அவ்வூர் மக்கள் தோரணம், நிறைகுடம் கொண்டு வரவேற்றனர். நம்பியாரூரர் வானளாவிய கோபுரத்தை வணங்கி ஊனும் உயிரும் கரைந்துருக உச்சிமேல் கைகுவித்தபடி ஆதிபுரி நாதரை தொழுது 'விடையவன்' எனத் தொடங்கும் பதிகம் பாடி நாள்தோறும் பூசை காலங்களில் வழிபட்டு இருந்த நாளில்,

Koviloor Digital Library

சங்கிலியாரை காணுதல் :

கயிலாயத்தில் மலர் பறிக்க சென்ற போது விரும்பிய இருவரில் ஒருவரான கமலினியை பரவையாராக ஆரூரில் பிறந்த நங்கையை மணம் முடித்ததை முன்பு கண்டோம். மற்றொருவரான அநிந்திதையார் இப்புவியில் ஞாயிறு (திருவொற்றியூர் அருகே உள்ள ஊர்) என்ற கிராமத்தில் ஞாயிறு கிழார் என்பவருக்கு மகளாக பிறந்து சங்கிலியார் என்ற பெயருடன் வளர்ந்து மணப்பருவம் அடைந்தார். சங்கிலியார் தாயார் ஞாயிறு கிழாரிடம் நம் குலத்திற்கு ஏற்ப மாப்பிள்ளை பார்த்து திருமணம் முடியுங்கள் என்று கூறினார். அம்மொழி கேட்ட சங்கிலியார் சிவபெருமானின் அருளில் தொண்டு செய்யும் அடியவரை நான் மணப்பேன் இது அறியாது அவர்கள் பேசுகிறார்களே? என நினைந்து மயங்கி விழுந்தார்.

பெற்றோர்கள் நீர் தெளித்து விழித்த பின் உனக்கு என்ன நடந்தது எனக்கேட்க, நீங்கள் பேசியது எனக்கு உடன்பாடு இல்லை. நான் திருவொற்றியூர் சென்று இறைத்தொண்டு செய்து சிவபெருமான் அருள் பெற்ற ஒருவரையே நான் திருமணம் செய்வேன் எனக் கூறினார். அம்மொழி கேட்ட அவர் பெற்றோரும் அதிர்ச்சியுற்று இவ்வாறு பேசியதை வெளியே கூறாது இருக்கும்போது, இந்நிலையில் அக்குடி மரபில் பிறக்காத பண்பு நலம் இல்லாத ஒருவன் சங்கிலியாரை விரும்பி திருமணம் பேச உறவினரை அனுப்பினான். உறவினர்கள் ஞாயிறு கிழாரை அணுகி பெண் பேச அதற்கு கிழாரும் அவர்கள் மனம் புண்படாத வகையில் ஏற்றவாறு மறுப்பு கூறி அனுப்பினர். மணம் பேச அனுப்பிய அப்போதே அவன் இறந்து போனான். இச்செய்தி கிழாருக்கு

Koviloor Digital Library

எட்டியது சங்கிலியாரின் சிவபக்தியின் திறத்தை உணர்ந்து, தன் மகளின் விருப்பப்படியே திருவொற்றியூருக்கு அழைத்து வந்து படம்பக்க நாதரின் திருக்கோயில் அருகே ஒரு கன்னி மாடத்தை அமைத்து எவரும் புகா வண்ணம் காவலும் செய்வித்து தன் திருமகளை விழுந்து வணங்கி தனது ஊருக்கு சென்றடைந்தார். சங்கிலியாரும் காலந்தோறும் படம்பக்க நாதரை வணங்கி பூ தொடுக்கும் திருப்பணியை பூ மண்டபத்தில் ஒரு ஓரமாக அமர்ந்து மாலை தொடுத்து பிறை சடையாரை அலங்கரிக்க காலம்தோறும் கொடுத்து வந்தார்.

ஒருநாள் நம்பியாரூரர் திருக்கோயில் வலம் வந்து இறைவரை வணங்கி திருத்தொண்டு செய்துவரும் அன்பர்களை சென்று வணங்கியவாறே, பூ மண்டபத்தில் நுழைந்து அத்தொண்டு புரியும் அடியவரை வணங்கும்போது, அப்பூ மண்டபத்தின் ஒரு ஓரமாக திரை அமைத்து பூத்தொடுத்த சங்கிலியார் தான் தொடுத்த பூவை இறைவருக்கு கொடுக்க திரையை விலக்கி மின்னல் போல வெளியே வந்து சென்றபோது நம்பியாரூரரின் முன் விதி திருவருளால் கூட்ட சங்கிலியாரைக் கண்டார்.

அப்பேரழகை கண்டவுடன் தன் உள்ளத்தில் ஆசை வயப்பட்டு இவள் யார்? என்று அருகில் உள்ளவரிடம் கேட்க, இவர் சங்கிலியார் என உரைத்தனர். அம்மொழி கேட்ட நம்பியாரூரர் இருவருக்காக இறைவன் இப்பிறவி தந்தான். ஒருவர் பரவையார், மற்றொருவர் இவரோ என வியப்பு எய்தினார். பின் திருக்கோயில் சென்று எழுத்தறியும் நாதரிடம் தனக்கு உயிரான சங்கிலியாரை மணமுடித்து தர வேண்டினார். இரவும் வர சங்கிலியாரை நினைந்தபடி இருக்க,

Koviloor Digital Library

அப்போது சிவபெருமான் எழுந்தருளி இவ்வுலகில் யாரும் பெற முடியாத தவமுடைய சங்கிலியை உனக்கு தருகின்றோம். கவலையை ஒழியென மொழிந்தார். நம்பியாரூரரும் ஆவணம் காட்டி ஆட்கொண்ட திறத்தை நினைந்தவாறே மகிழ்ந்திருந்தார்.

சிவபெருமான் சங்கிலியாரின் கனவில் வருதல்

சோதி வடிவான சிவபெருமான் அன்றிரவே சங்கிலியாரின் கனவில் தோன்றினார். அக்கனவின் காட்சியை கண்டவுடன் எழுந்து தொழுது விழுந்து வணங்க திருநீற்றுக் கோலத்துடன் சிவபெருமான் நேர் காட்சி அருளி, மிக தவமுடைய சங்கிலியே கேள், மேரு மலையை விட மேம்பட்ட தவமுடைய நம்பியாரூரன் உன்னை விரும்பி என்னிடம் விண்ணப்பித்தான். நீ அவனை திருமணம் செய்து கொண்டு மகிழ்ந்து இரு என மொழிந்தார்.

சங்கிலியார் சிவபெருமானிடம் விண்ணப்பித்தல்

அம்மொழி கேட்ட சங்கிலியார் மிகுந்த நாணத்துடன் வணங்கி, திருவாரூரில் தங்குதலே பெருவிருப்பாக கொண்டவர் அவர் என்பதனை தாங்கள் அறிந்ததே. எனவே அவர் திருவொற்றியூர் நீங்காது இருக்க வேண்டும் என வேண்டினார். அதை கேட்ட சிவபெருமான் நம்பியாரூரர் திருவொற்றியூரை விட்டு வெளியே போக மாட்டேன் என்று உனக்கு ஒரு சபதம் செய்து தருவான் என்றருளி அங்கிருந்து தோழரான நம்பியாரூரர் அருகே வந்து நீ அவளை திருமணம் செய்ய விரும்பும் நிலையை உரைத்தோம். அவள் அதற்கு என்றும் என்னை பிரியாது இருப்பேன் என்று நீ ஒரு சத்தியம்

Koviloor Digital Library

செய்யுமாறு கேட்கிறாள். அச்சத்தியத்தை இன்று இரவே செய்க என அருள் செய்தார். அம்மொழி கேட்ட நம்பியாரூரர் நெருப்பில் இட்ட மெழுகு போல் சங்கிலியார் மேல் மனம் உருகிய நிலையில், நாதன் மகிழ்ந்து அருளும் சிவாலயம்தோறும் செல்ல இச்சத்தியம் தடையாகுமே என உள்ளத்தில் நினைந்தவாறே, சுவாமியிடம், "நான் திருக்கோயிலின் உள்ளே தங்கள் திருமுன் சத்தியம் செய்யும்போது தாங்கள் மகிழ மரத்தின் கீழ் இருக்கும்படி" வேண்டினார். சிவபெருமானும் நீ சொன்னபடியே செய்கிறேன் என்று அருளினார்.

மீண்டும் சங்கிலியாருக்கு உறுதி சொல்ல இரவே எழுந்தருளல் :

சங்கிலியார் முன்பு எழுந்தருளி "நங்கையே உனக்காக ஆரூரன் சத்தியம் செய்ய ஒப்புக் கொண்டான். அச்சத்தியத்தை என்திருமுன்பு செய்ய ஒப்புக்கொள்ளாதே, மகிழ மரத்தடியில் சத்தியம் செய்யும்படி சொல்" என்று கூறியருளினார். அம்மொழி கேட்ட சங்கிலியார் தமக்காக இருமுறை இறைவன் எழுந்தருளியதை நினைந்து மகிழ்ந்தும், அதிசயமும் அடைந்து தன்னுடன் தூங்கிக் கொண்டிருந்த தோழியரை எழுப்பி எம்பெருமானின் செயல்களை உரைத்ததுமே அத்தோழியர்கள் அதிசயத்து சங்கிலியாரை வணங்கினார்.

நம்பியாரூரர் சத்தியம் செய்தல் :

அதிகாலையில் வழக்கமாக திருப்பள்ளியெழுச்சிக்காக இறைவருக்கு பூ தொடுக்க தோழியரோடு திருக்கோயிலில்

Koviloor Digital Library

சங்கிலியார் நுழைய அதற்கு முன்பே நம்பியாரூரர் நின்று கொண்டிருந்தார். ஆரூரர் சங்கிலியாரை நோக்கி இறைவன் அருளிச் செய்ததை கூற சங்கிலியாரும் சத்தியம் செய்யும் இடத்தை நேரே கூறாது. நாணமுடன் ஒதுங்கி திருக்கோயிலின் உள் புகுந்தார். ஆரூரரும் பின் சென்று உன்னை பிரியாது இருப்பேன் என்ற சூளுரையே இறைவன் திருமுன்பு (மூலஸ்தானம்) சத்தியம் செய்கிறேன் என்று கூறினார். அப்போது இறைவன் மொழிந்ததை சங்கிலியார் வழி கேட்டறிந்த தோழிகள் பேராயிரம் பேர் பரவி தொழும் நாதன் முன் சத்தியம் செய்ய வேண்டாம் எனக் கூற நம்பியாரூரர் அம்மொழி கேட்ட பின், நான் எங்கு சத்தியம் செய்ய வேண்டும் என்று கேட்க, தோழிகள் மகிழ மரத்தடியில் சத்தியம் செய்யும்படி கூறினர்.

ஆரூரர் மனம் கலங்கி முன்னுக்குப்பின் மாறுதலாக பேச முடியாத நிலையில் மகிழ மரத்தடி சென்று சேர்ந்தார். அம்மகிழ மரத்தை மூன்று முறை வலம் வந்து சங்கிலியார் முன்பு இங்கிருந்து அகல மாட்டோம் என்று சத்தியம் செய்தார். அம்மொழி கேட்ட சங்கிலியார் எம்பெருமான் சொல்ல இவ்வண்ணம் செய்யும்படி ஆனதென மனங்கலங்கி அயர்ந்தார். நம்பியாரூரரும் திருக்கோயில் உள் சென்று ஆதிபுரியை வணங்கி, இறைவனுக்கும் தனக்கும் மட்டுமே தெரிந்த மகிழ மரத்தடியில் அமர்ந்திருப்பதை எங்ஙனம் தோழிகளுக்கு தெரிந்ததெனென நினைந்தவாறு "செய்தது மிக அழகு இது" என மொழிந்து திருஐந்தெழுத்து ஓதியபடியே மகிழ்ந்து இருந்தார். சங்கிலியாரும் மலர் தொடுக்கும் பணி முடித்து கன்னி மடம் சென்றார்.

Koviloor Digital Library

சங்கிலியாரை மணம் புரிதல்

அன்றிரவே ஆதிபுரிநாதர் திருவொற்றியூர் வாழும் தொண்டர்களின் கனவில் தோன்றி நம்பியாரூரனுக்கும், நங்கை சங்கிலியார்க்கும் திருமணம் செய்து வைக்கும்படி பணித்தார். அத்தொண்டருக்கும் மறுநாள் இறைவன் அருளியபடி தேவர் பூ மழை பொழிய பெருஞ் சிறப்பாக திருமணம் செய்து வைத்தார்கள். திருமகள் போன்ற அழகுடைய சங்கிலியாரிடம் கண்டும், கேட்டும், உண்டும், உயிர்த்தும் இன்புற்று காலந்தோறும் படம்பக்க நாதரை வணங்கி மகிழ்ந்திருந்த நாளில்,

நம்பியாரூரர் திருவாரூர் செல்ல நினைத்தல் :

பொதிகை மலையின் தென்றலின் குளிர்ந்த காற்று திருவொற்றியூரிலிருந்த நம்பியாரூரர் மீது வீச அப்போது திருவாரூர் வசந்த உற்சவம் நினைவுக்கு வர அதனுடன் அவ்விழாவில் பரவையாரின் ஆடல் பாடல் காணவும் எண்ணியவாறு, திருவாரூர் புற்றிடங்கொண்ட நாதரை நினைந்தவாரே "பத்திமையும் அடிமையும்" எனத்தொடங்கி எத்தனை நாள் பிரிந்திருக்கேன் என்ற பொருள்பட திருப்பதிகம் பாடி மிக வருந்திருந்தார்.

ஆரூரரின் இரு கண்களும் மறைதல்

ஒருநாள் திருவொற்றியூர் பெருமானை வணங்கி, திருவாரூர் புற்றிடங்கொண்ட நாதரை காண திருவொற்றி நகரை தாண்ட, முன் செய்த சத்தியத்தால் தன் இரு கண்களும் மறைந்து மூர்ச்சித்தப்பின் தான் செய்த சூளுரையால் நிகழ்ந்தது எனக்கருதி எம்பெருமானை

Koviloor Digital Library

இத்துயர் நீங்க பாடுவேன் என்று "அழுக்கு மெய்கொடு" எனத்தொடங்கும் பதிகம் பாடி, திருமுல்லைவாயில் கோபுரம் முன் நின்று "சங்கிலிக்காக என் கண் கொண்ட பரமா" என்று பதிகம்பாடி திருவெண்பாக்கம் அடைந்து திருக்கோயில் கோபுரம் வணங்கி என் கண்மணியை மறைப்பித்தாய் இங்கு இருந்தாயோ என்ற பொருள்பட பதிகம் பாட, இறைவனும் ஊன்றுவதற்கு கோல் ஒன்று அருளிச் செய்து 'உளோம் போகீர்' என்றார். பின்

திருக்கச்சி ஏகம்பத்தில் இடதுகண் பெறுதல்

அங்கிருந்து பழையனூர் எனும் பதியில் அன்பர்களோடு தங்கினார். காரைக்கால் அம்மையார் வலங்கொண்ட பதியான திருவாலங்காடு சேர அஞ்சி பழையனூரில் இருந்தவாறே "முத்தி தரவல்ல" எனத் தொடங்கும் பண்ணிசைத் திருப்பதிகம் பாடி திருவூறல் வணங்கி திருக்காஞ்சிபுரத்தை அடைந்து திருஏகாம்பரநாதர் கோயிலின் முன் பிழை பொறுத்து என் கண் தந்து தருவாய் என வீழ்ந்து வணங்கினார்.

அப்போது தழுவ குழைந்த நாதரும் நம்பியாரூரக்கு இடது கண் கொடுத்தார். இறைவனின் திருக்கோலத்தை கண்டு களித்து 'ஆலந்தான் உகந்து' எனத் தொடங்கும் பதிகம் பாடி திருவாரூர் செல்ல மனம் கொண்டவராய் காஞ்சி நகர எல்லையில் திருவாரூர் பெருமானை நினைந்து "அந்தியும் நண்பகலும்" என்ற திருப்பதிகம் பாடியவாரே திருஆமாத்தூர், திருநெல்வாயில் அரத்துறை வழிபட்டு திருவாவடுதுறை அருள்மிகு மாசிலாமணியை வழிபட்டு "யார் எனக்கு உறவு" என்ற உணர்வினை வெளிப்படுத்தி பதிகம் பாடினார்.

Koviloor Digital Library

நம்பியாரூரின் அடுநோய் நீங்க பெறுதல்

ஆருரருக்கு உடலில் அடுநோய் வர மிக வருந்தியவாறு திருத்துருத்தி அருள்மிகு சொன்னவாறு அறிவாரை வணங்கி என் உடல் பிணியை நீக்கும்படி இறைஞ்ச இறைவரும் இப்பதியின் வடகுளத்தில் குளித்து வா என இறைவன் அருளிட அம்மொழி கேட்ட ஆருரரும் துருத்தியாரை வணங்கி அக்குளத்தில் மூழ்கி எழ, அவர் உடம்பின் அம்மை நோய் நீங்கி அனைவரும் காண ஒளி வீசும் திருமேனியாக குளத்திலிருந்து வெளியே வந்தார். அத்திருக்கோயில் உள்சென்று தொண்டர்களின் முன் ஏழிசையால் "மின்னுமா மேகங்கள்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தில் தனக்கு வந்த "அம்மை நோய் இம்மையே ஆசு அறுத்தானை" எனப் போற்றிப் பாடி தொண்டருடன் பல பதிகளை வணங்கி கடந்து கண்ணிறைந்த திருவாரூர் பூங்கோயில் கோபுரம் கண்டு நிலத்தில் வீழ்ந்து எழுந்து மாலைப்பொழுதில் திருவாரூர்ப் பரவையுன் மண்டளி என்ற பதியை வணங்கி 'தூவாயா' எனத் தொடங்கும் பதிகம் பாடி இரவு அர்த்தயாமத்து வழிபாட்டிற்கு திருவாரூர் புற்றிடங்கொண்ட நாதரை வணங்க,

திருவாரூரில் வலக்கண் பெறுதல்

அடியவரிடம் தனது ஏக்கத்தை வினாவாகப் "குருகு பாய" என்ற திருப்பதிகம் பாடியவாரே திருமூலட்டானம் சேர்ந்தார். அப்போது புற்றிடங்கொண்ட நாதரிடம் மற்றொரு கண்களை தாரீர் என்ற பொருள்பட "மீளா அடிமை உமக்கே" என்ற திருப்பதிகத்தை பாடினார். சுந்தரரின் வேண்டுதலுக்கு இரங்கிய சிவபெருமான் வலக்கண்ணை வழங்கினார். இரு கண்களாலும் இறைவனை கண்டு திருஅருளினை பருகி

Koviloor Digital Library

திளைத்தவாறே, திருக்கோயில் வலம் வந்து சீலமுடைய அடியார்கள் இருக்கும் தேவாசிரிய மண்டபத்தின் உள் சென்றார்.

பரவையாரிடம் சிவபெருமான் தூதுவராக செல்லல்

நங்கை பரவையாரும் திருத்தல யாத்திரைசென்ற நம்பியாரூரை நினைந்து வருந்திய நிலையில் அவர் சங்கிலியாரை மணந்து திருவொற்றியூரில் உள்ளார் என்ற செய்தியை கேட்டதிலிருந்து, உறங்காது, நில்லாது நம்பிஆரூரன் மீது கொண்ட அன்போ? கோபமோ? என அறியாதபடி இருக்க, நம்பியாரூரரும் பரவையாரை காணும் விருப்புடன் தனது ஏவல் செய்யும் அன்பர்களை அனுப்பினார். அவர்கள் பரவையார் இல்லம் சென்றனர். நடந்தவைகளை முன்பே அறிந்திருந்த பரவையாரின் பணியாட்கள் அவர்களை வெளியிலேயே தடுத்து அனுப்பி வைத்தார்கள்.

ஏவல் பணி செய்வோர் மீண்டும் சுந்தரரிடம் வந்து நடந்தவைகளை கூறினார்கள். அவ்வார்த்தைகளை கேட்ட வன்தொண்டர் மிக வருந்தி என்ன செய்வது என்று அறியாமல் கல்வி அறிவில் சிறந்த சான்றோரிடம் சென்று பரவையாருடன் சேர ஒரு தீர்வு சொல்லும்படி கேட்க, அவர்களும் பரவையாரிடம் சென்று இது தகுமோ? என்று பலவாறு அறிவுரைகளை கூறினார்கள். அதற்கு மறுமொழியாக அவர் செய்த செயலை மேலும் என்னை ஏற்கும் படி சொல்வீர்களேயானால் என் உயிர் நீங்கிவிடும் எனக் கூறக்கேட்ட அனைவரும் அஞ்சி அம்மனை விடுத்து நீங்கி நம்பியாரூரிடம் சென்று நிகழ்ந்ததை கூற, ஆரூரரும் மீளாத் துன்பத்தில் ஆழ்ந்தார். நடுஇரவும் வந்தது. அனைவரும்

Koviloor Digital Library

உறங்கும் நிலையில் நம்பியாரூரர் வருந்தி சிந்தனை செய்தவராய் இருக்க,

சிவபெருமான் நள்ளிருளில் தூது செல்லல்

அவர் முன்னே சிவபெருமான் எழுந்தருளினார். நம்பியாரூரர் வீழ்ந்து வணங்கி நடந்தவைகளை கூறி இரவே பரவையாரிடம் சென்று என்னை அவள் ஏற்கும்படி செய்து அருள்வீர் என வேண்டினார். அவ்வாறே சுவாமி தேவாசிரிய மண்டபத்திலிருந்து தூதனாக செல்ல அவர் முன் பூதகண நாதர்களும், முனிவர்களும், யோகிகளும் முன்பாக, குபேரனும் மகிழ்ந்து கும்பிட திருவாரூர் வீதியிலே திருவடி சிலம்பு ஒலிக்க பரவையார் இல்லம் சேரும்போது, திருவாரூர் திருமூலட்டானத்தில் பூசை செய்யும் தலைமை (அர்ச்சகர்) முனிவர் வடிவில் உடன் வந்தோரை இல்லத்தின் வெளியே விடுத்து தனியே பரவையார் இல்லத்தின் வாயிலில் சென்று, "பாவாய் கதவை திறவாய்" என மொழிய அது கேட்ட பரவையார் இக்குரல் நம் பூங்கோயிலில் பூசை செய்வார் குரலென நினைந்து இந்த நள்ளிரவில் அழைத்தது என்ன காரணம் என வியக்க, அர்ச்சகராக வந்த சுவாமி, நம்பியாரூரர் இங்கு வர நீ இசையவும் எனக்கூற பரவையார் "நன்றி நீர் சொன்னது" இவ்வாறு கூறியது உமது பெருமைக்கு தகாது. நான் இசைய மாட்டேன், நீரும் போங்கள் என்று சொல்ல வேதியராக வந்த சிவபெருமான் சிரிப்பை உட்கொண்டு நம்பியாரூரரின் தவிக்கும் நிலையை காண விருப்பினராய் திருவிளையாட்டாக பரவையார் மறுத்ததை சொல்ல, அம்மொழி கேட்ட நம்பியாரூரர், தங்களால் முடியாத செயல் என்று இவ் அண்டத்தில் ஒன்றும் இல்லை என்பதை நான்

Koviloor Digital Library

அறிவேன் என் பொருட்டு இரங்க தங்களுக்கு மனமில்லை சரி பரவாயில்லை. இனி நான் உயிரினை விடுவதை விட வேறு வழியில்லை என்று கூறினார்.

சிவபெருமான் மீண்டும் தூது செல்ல புறப்படுதல்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய சிவபெருமான் நம்பியாரூரருக்காக மீண்டும் பரவையார் இல்லம் சென்றார். இறைவன் அருளியபடி பரவையாரும் வேதியர் வடிவில் வந்தது பெருமானே என்பதை உணர்ந்த பரவையாரும் வருந்திய நிலையில் இருக்க அப்போது பரவையாருக்கு தன்னை உணர்த்த பூத கணங்களும், தேவர்களும், முனிவர்களும் பின்னே வர கொன்றை மாலை அணிந்த சிவபெருமான் பரவையாரின் மாளிகையின் உள் நுழைந்தார். அம்மாளிகை கயிலாயம் போல் காட்சி அளித்தது.

பரவையார் உடல் நடுக்கத்தோடு மிகுந்த மகிழ்ச்சி பொங்க இறைவன் திருவடியில் வீழ்ந்து வணங்கினார். இறைவனும் உன்னை பிரிந்த நிலையில் நம்பியாரூரன் மிக வருந்துகிறான் அவனை ஏற்பாயாக என மொழிய, பரவையார் சுவாமி முன்பு வேதியர் வடிவில் வந்தது தாங்கள் தான் என்று அறியாது இருந்தேன். அன்பருக்காக தாங்கள் இரவு முழுவதும் அங்கும் இங்குமாய் உழன்று இருக்கும்போது அடியவள் இதற்கு இசையாது என் செய்வேன் என்றார்.

சிவபெருமான் இச்செய்தியை நம்பியாரூரக்கு சொல்ல திருவாரூர் வீதியில் விரைந்து வரும்போது அவர் சடையிலிருந்த கங்கை ததும்பிட, முன்னும் பின்னும் சிவகணநாதர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். எதிர்கொண்டு காத்திருந்த நம்பிக்கு இறைவர் பரவையாரின் ஒப்புதலை சொல்லி, இப்போதே பரவையிடம் சென்று சேர்வாயாக என

Koviloor Digital Library

கூறினார். இப்படி இறைவனை தூது செல்ல அனுப்பினோமே என வருந்தி பந்தமும், வீடும் படைப்போனாகிய சிவபெருமானை வீழ்ந்து வணங்கினார்.

பரவையாரின் இல்லம் சேர்தல்

நம்பியாரூரர் அழகிய பட்டு உடுத்தி ஏவலர்கள் முன் செல்ல, மின்னொளி போன்று ஒளிவீசும் மலர்களை வானவர்கள் தூவ பரவையாரின் மாளிகை வாயிலை அடைந்தார் தம்பிரான் தோழர். அவரை பரவையார் தனது மாளிகையை தீபத்தால் அலங்கரித்து நிறைகுட தீபத்துடன் ஆரா காதலுடன் எதிர் நின்று அழைக்க நம்பியாரூரரும் பரவையாரின் கைகளை பற்றியவாறே மாளிகைக்குள் சென்றார். இருவரும் இறைவன் நமக்கு அருளிய திறம் பற்றி புகழ்ந்து பேசி இன்ப வெள்ளத்தில் ஒன்றி அன்பினில் கலந்தனர்.

திருவாரூர் கமலக்கோயிலில் எழுந்தருளிய நாதரை தொடர்ந்து போற்றி செஞ்சொல் பதிகம் பாடி வரும் நாளில், இறைவனை தூதுவராக அனுப்பிய செய்தியை அறிந்த ஏயர்கோன் கலிக்காமர் எனும் அன்பர் நம்பியாரூரர் மீது மிகவும் கோபம் கொண்டார். அக்கோபத்தை இறைவன் எப்படி மாற்றி இவ்விருவரையும் நண்பர்களாக இருக்கச் செய்தார் என்பதை இந்நூலில் ஏயர்கோன் கலிக்காம நாயனார் வரலாற்றில் விரிவாக எழுதப்பட்டுள்ளது. படிக்கவும் திருப்பெருமங்கலத்திலிருந்து திருவாரூர் மீண்டும் அடைந்தார்.

சேரமான் பெருமானை வரவேற்று உபசரித்தல்

இறைவன் திருவருளால் சேர மன்னன், நம்பியாரூரைக் காண திருவாரூர் வருவதை அறிந்த ஆரூரர் அவரை

Koviloor Digital Library

வரவேற்று விருந்தளித்தார். (இதுபோது நடந்தவைகளை விரிவாக சேரமான் புராணத்தில் விளக்கப்பட்டுள்ளது)

இருவரும் திருத்தல யாத்திரையாக செல்லும்போது பெருகிய காவிரி விலகி வழிவிட்டு நிற்க திருவையாறு வணங்கி பின் பல சிவாலயங்களை வணங்கி மூவேந்தர் களுடன் பாண்டி நாட்டு பதிகளை வணங்கினார்.

இறைவன் காளை வடிவுகொண்டு காட்சி அருளல் :

திருச்சுழியல் வணங்கி மகிழ்ந்து அன்றிரவு பள்ளிக் கொள்ள இறைவன் கனவில் காளையார் வடிவுகொண்டு வந்து சிவந்த கைகளில் பொற்செண்டும் திருமுடியில் சுழியுடன் எங்கும் காணாத வடிவத்துடன் தன்னை காட்டியருளி “யாம் இருப்பது கானப்பேர்” என மொழிய கேட்ட சுந்தரர் விழித்து சேரமானிடம் கூறி மகிழ்ந்து திருக்காளையார் கோயில் சென்று வணங்கி திருப்பதிகம் பாடினார். பின் திருப்புனவாயில் வணங்கி திருவாரூர் சென்று அடைந்தனர்.

நம்பியாரூரர் சேர நாடு செல்லல்:

இருவரும் திருவாரூரில் மகிழ்ந்து புற்றிடங்கொண்ட நாதரை வணங்கினர். சேரமான் பெருமானின் வேண்டுதலை ஏற்று காவிரி கரையிலுள்ள பதிகளை வணங்கி, கொங்கு நாட்டு பதிகளை வணங்கியவாறே சேரநாட்டு எல்லையை அடைய, வீதியெல்லாம் விழாக்கோலம் பூண்டு படை வீரர்களின் அணி வரவேற்புமாக நம்பியாரூரர் திருஅஞ்சைக்களம் திருக்கோயில் சென்று அஞ்சைகளத்து அப்பரை வணங்கி ‘முடிப்பது கங்கை’ எனத் தொடங்கும் பதிகம் பாடி சேரமான் பெருமானின் அரண்மனைக்கு செல்ல நம்பியாரூரை யானை மீது ஏற்றி தாமும் பின் ஏறி

Koviloor Digital Library

அரண்மனையை அடைந்தனர். நம்பியாரூரை சிம்மாசனத்தில் அமரச் செய்து தனது அரசியை அவர் திருப்பாதத்திற்கு நீர் வார்க்கச் சொல்லி சேரமான் தனது கைகளால் பாதம் கழுவி அடியார் பூசனை செய்து திருஅமுது செய்வித்தார். காலந்தோறும் கொடுங்கோளூர் பெருமானை வணங்கி வரும் காலத்தில் ஒருநாள் திருவாரூர் பெருமானை மறக்கலுமாமே? எனப்பொருள்பட புற்றிடங்கொண்ட நாதரை நினைத்தபடியே "பொன்னும் மெய்ப்பொருளும்" எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி திருவாரூர் செல்ல முற்பட, சேரமான் தன் தோழரான சுந்தரரிடம் மிக வருந்தி இத்திருநாட்டை தங்கள் உரிமையாக்கி இங்கேயே இருப்பீராக என வேண்டினார். திருவாரூர் பெருமானை மறக்க முடியாது என உரைத்ததை கேட்ட சேரமான் பொன்னும், பொருளும் அளித்து அதனை தூக்கிச் செல்ல பணியாட்களையும் அமர்த்தி அவர்கள் முன் செல்ல நம்பியாரூரரின் பொற்பாதத்தை பணிந்து ஆரத் தழுவி விடையளித்தார்.

பொன்னும் பொருளையும் வேடுவர்கள் கொள்ளை யடித்தல்

பல நாடும் மலையும் கடந்து திருமுருகன் பூண்டி என்ற பதியின் எல்லையில் வரும்போது, சிவபெருமானின் ஆணைப்படி சிவபூதகணங்கள் எல்லாம் வேடுவர் போல் வடிவு கொண்டு நம்பியாரூரர் கொண்டு செல்லும் பொருட்களை யெல்லாம் வழிமறித்து கொள்ளை அடித்துச் சென்றன. நம்பியாரூரர் அவ்வூரின் உள் நுழைந்து திருக்கோயிலை வலங்கொண்டு "எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே" என்ற பொருள்பட "கொடுகு வெஞ்சிலை" எனத் தொடங்கும் திருப்பதிகத்தை பாடினார்.

Koviloor Digital Library

(இறைவன் துன்பமில்லாத வாழ்வு பெற இப்பதிகத்தினை சுந்தரர் வழி நமக்கு அருளிச்செய்தார்)

இறைவன் அருளால் வேடுவர்களால் பறிக்கப்பட்ட பொருட்கள் சற்றும் குறையாது மலைபோல் சுந்தரர் முன் குவிந்தது. தம்பிரான் தோழரும் மிக மகிழ்ந்து அப்பண்டாரத்தை பெற்று திருவாரூர் சென்றடைந்தார்.

சேரநாடு செல்ல விழைதல்

நம்பியாரூரர் சிவயோகம் கூடி முதிர்ந்த நிலையில் எல்லையில்லாத சிவபெருமானை மனதில் கொண்டவாரே சேரமான் பெருமானை காணும் விருப்பம் கொண்டு திருவாரூர் புற்றிடங்கொண்ட நாதரை வணங்கி விடைபெற்று, பொன்னித்திருநாட்டிலுள்ள பல பதிகளை வணங்கி கொங்கு நாட்டுத் திருத்தலமாகிய திருப்புக்கொளியூர் அவினாசி பதியை அடைந்தார்.

முதலை விழுங்கிய பாலகனை மீட்டு தந்த அற்புதம்:

அவினாசி திருவீதியில் அந்தணர் வாழும் வீடுகளில் ஒருபுறம் ஏழு வயதில் நடைபெறும் பூணூல் அணியும் சடங்கு நடந்துக் கொண்டிருக்க அவ்வீட்டில் அனைவரும் மகிழ்ந்திருந்ததையும், அவ்வீட்டின் எதிரில் அமைந்த வீட்டில் அழுகை ஒலியும் கேட்பதை பார்த்த நம்பியாரூரர் இரக்கம் கொண்டு அங்கிருந்த அந்தணர்களை கேட்க அவர்களும், ஒரே வயதுடைய இருபாலர்கள் ஐந்து வயதில் மடுவில் விளையாட சென்றவர்களில் ஒருவனை முதலை விழுங்கி விட்டது. தப்பித்த ஒருவனுக்கு இன்று உபநயனம் நடந்து கொண்டிருக்கிறது. இவ்வுரை கேட்ட நம்பியாரூரர் அழுகை ஒலி வந்த வீட்டின் அருகே செல்ல அம்மகனை பெற்றோர்

Koviloor Digital Library

இருவரும் ஆரூரரின் திருவடியில் விழுந்து வணங்கினர். அப்போது தம்பிரான் தோழர் தன் மனதில் முதலையுண்ட இவர்கள் மகனை மீட்டு தந்த பிறகே அவினாசி அப்பனை காண திருக்கோயில் செல்வேன் என்று உறுதிகொண்டு, வீதியிலிருந்த அந்தணர்களிடம் முதலை விழுங்கிய மடுவினை (குளம்) காட்டுங்கள் எனக்கேட்டு அம்மடுவின் அருகில் சென்று "எற்றான் மறக்கேன்" எனத்தொடங்கும் பதிகத்தில் "கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே"என்ற விண்ணப்பத்தை இறைவன் திருச் செவிக்கு சாற்றினார். அப்பதிகம் நிறைவு பெறுவதற்கு முன் மலைபோன்ற தோள்களை உடைய எமன், அம்மகனின் உயிரை கொண்டு வந்தான். நிலத்தில் இருந்தால் பெறும் இரண்டு ஆண்டின் வளர்ச்சியும் பெற்று ஏழு வயதுடைய பாலகனாக முதலை வாயிலிருந்து வெளியே வந்தான். உயிர் பெற்று வந்த பாலகனை அவனின் தாயார் அணைத்துக் கொண்டார். தந்தையும், தாயும் உயிர் கொடுத்த நம்பியாரூரரின் திருவடியில் வீழ்ந்து வணங்கினார்கள். வானில் மலர் மழை பொழிந்தது. அனைவரும் அவினாசி அப்பரை வணங்கினார்கள். பின் நம்பியாரூரர் அச்சிறுவனுக்கு வெண்ணூல் பூட்டு கல்யாணம் செய்வித்தார்.

மலைநாட்டினை அடைதல்

சேரநாடு செல்லும் வழியிலுள்ள சிவாலயங்கள் எல்லாம் வழிபட்டு வருவதை அறிந்த சேரமான் பெருமான் முதலை விழுங்கிய பாலகனை வரச்செய்த செயலையும் ஆரூரர் வருகை தரும் செய்தியையும் கூறிய சிவனடியார்களுக்கு பொன்னும், பொருளும் வாரி வழங்கினார். செய்வது ஒன்றும் அறியாது சிந்தை மகிழ்ந்து "ஐயன் அணைந்தான், என்னை

Koviloor Digital Library

ஆளும் அண்ணல் அணைந்தான், சைவன் அணைந்தான், என் ஆரூயிர் தலைவன் அணைந்தான் என்று முரசு கொட்டி சேரநாட்டு மக்களுக்கு ஆரூரர் வருவதை பறை சாற்றினார்.

சேரமான் எதிர்கொண்டு அழைத்து சுந்தரரை யானை மீது அமரச்செய்து, தானும் உடன் ஏறி பின் அமர்ந்து வர, வேத ஒலியும், நாதப்பறையும், வெண்குடை, கவரி வீசியவாறு மாளிகை உள் புகுந்தனர். இனிதிருந்து மலைநாட்டு சிவப்பதிகளை இருவரும் வணங்கி மீண்டும் மகோதயம் (கடற்கரைப்பகுதி) உள்ள சேரமான் மாளிகைக்கு திரும்பினார்கள்.

பலநாள் சென்றபின் நம்பிஆரூரர் ஆறுசேர் செஞ்சடை பரமரை சேரும் பெரும் விருப்பம் எய்தபெற்ற அந்நிலையில் திருஅஞ்சைகளம் திருக்கோயிலிற்கு சென்று கோயிலை வலங்கொண்டு, நினைப்பவர் நெஞ்சில் கோயிலாக கொண்ட சிவபெருமானின் திருவடிகளை போற்றி "வெறுத்தேன் மனை வாழ்க்கையை விட்டொழிந்தேன்" என்ற விண்ணப்பத்தை இறைவன் திருமுன்பு "தலைக்குத் தலைமாலை அணிந்தது என்னே" எனத் தொடங்கும் பதிகம் பாடினார். சிவபெருமான் திருக்கயிலையில், ஒரு நிலைய மனம் வைத்து உணர்ந்த நம்பியாரூரனை இந்திரன், திருமால், பிரம்மன், முப்பத்து முக்கோடி தேவர்களையும் சென்று வெள்ளை யானையின் மேல் அமர்த்தி இங்கு அழைத்து வாருங்கள் எனப் பணித்தார்.

திருஅஞ்சைகளத்து அப்பரை வணங்கி நம்பியாரூரர் வழிபாடு நிறைவு செய்து வெளியே வரும் வாயிலை அடையும் போது தேவர்கள் எதிர்கொண்டு இறைவனின் அருள் ஆணையை கூறினர். நம்பியாரூரர் அவ் ஆணையை ஏற்று மகிழ்ந்து வெள்ளை யானை மீது அமர்ந்தார். விண்ணில்

Koviloor Digital Library

சென்றபடியே தனது தோழரான சேரமான் பெருமானை நினைக்க, சேரமானும் உள்ளத்தில் உணர்ந்து குதிரை மீது ஏறி அஞ்சைக்களம் வர சுந்தரர் விண்ணில் செல்வதை கண்டவுடன் சிவமந்திரத்தை குதிரையின் காதில் ஓத, அக்குதிரை விண்ணில் விரைந்து பறந்து வெள்ளை யானையை வலம் வந்தவாறே முன் செல்ல, அப்போது சேரமான் மன்னனை தொடர்ந்து வந்த சேர நாட்டு வீரர்கள் மன்னனை காணாது அவர் மீது கொண்ட அன்பால் சிலர் தங்களை மாய்த்துக் கொண்டனர்.

திருமலையை நோக்கி யானை மேல் செல்ல இமையவர்கள் எல்லோரும் முன் செல்ல, **“தான் எனை முன் படைத்தான்”** என்ற தமிழ் மாலைப்பாடியபடியே வன்தொண்டர் திருக்கயிலையில் தென்திருவாயிலை அடைந்தார். தேவர்கள் போற்றி செய்ய, தம்பிரான் அருளாலே சிவபெருமான் திருமுன்பு நின்று, பசுவினை பிரிந்த கன்று அதன் தாயினை அடையும்படியான காதலினால் நின்று போற்றிய தனிப் பெருந்தொண்டரை “ஊரனே வந்து அணை” என்று கூறி, நம்பியாரூரை முன்போல் திருக்கயிலையில் அணுக்க தொண்டராகவும் சேரமான் பெருமானை கணநாதராகவும் சேர்ப்பித்தார் சிவபெருமான்.

பரவையாரும், சங்கிலியாரும் இறைவன் திருவருளினால் திருவடிப்பேறு பெற்றனர். நம்பியாரூரர் திருக்கயிலை செல்லும் வழியில் பாடிய பதிகத்தை வருணன் தாங்கி நாம் உய்யும் பொருட்டு இப்புவியில் திருஅஞ்சைகளத்தில் அமர்ந்தருளும் அஞ்சையப்பரின் திருவடியில் சேர்த்தார்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியாரவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்

– தெய்வச்சேக்கிழார்

Koviloor Digital Library

கருத்து :

அ) சிவநேயச்செல்வர்கள் எப்படி வாழவேண்டும் என்று அனைத்து நாயன்மார்களும் வாழ்ந்து காட்டினார்கள். சுந்தரர் மட்டும் சிவநெறிக்கு வந்தபின் எப்படி வாழக்கூடாது என்று நமக்கு தன்னையே காட்டி அருளியுள்ளார். மேலும் நடைமுறை ஒழுக்கத்தின் உயர்வை தானே நேரில் வந்து நமக்காக நடித்து காட்டினாரே அன்றி அவர் தனக்கென்று எந்த பந்த பாசமும் அற்ற நிலையிலே கயிலையில் இருந்தார்.

இச்செயலுக்கு ஆலாலசுந்தரரே ஏற்றவர் என்ற கருத்திலே சிவபெருமான் அவருக்கு இத்திரு அவதாரத்தை தந்து ஆட்கொண்டார். ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின் என்ற திருமூலரின் பாடல் வரிகள் திருஐந்தெழுத்து ஓதி, திருநீறு பூசி திருக்கண்டிகை அணிந்து, ஈசன் அன்பராக ஆனப்பிறகும் இவ்வுலகியல் ஆசை வந்தால் பிறப்பு வளரும் என்ற உண்மையை இவ்வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

ஆ) நம்பியாருரரின் தாத்தா கொடுத்த வாக்கை காப்பாற்ற அதன்படி சென்ற தமிழ் இனம் எங்கே?

இ) நம்பியாரூரரின் தாத்தாவின் கையெழுத்தை ஒப்பிட அவர் எழுதிய மற்றோர் ஆவணத்தை கொண்டு வந்து பார்த்தது. அக்காலத்திலேயே ஆவணப் பாதுகாப்பு முறை உள்ளது தெளிவாகிறது.

ஈ) சுந்தரரின் யோக நெறி பரியாங்கி யோகத்தில் அடங்கும். அகத்தியர், லோபமுத்திரை இருவரும் சேர்ந்து இந்நெறியில் நின்று இறைவனை அடையப்பெற்றனர்.

Koviloor Digital Library

உ) நண்பரிடத்தில் மறைத்து பேசலாகாது என்ற நீதியை தோழமையாக கொண்ட இறைவனிடம் பல சிவன் கோயில் சென்று வழிபடும் தன் விருப்பத்தை மனத்தின் உள் வைத்து சுவாமியிடம் கூறாமல், சத்தியம் செய்ய ஒப்புக்கொண்ட சுந்தரரின் நிலையை எண்ணுக.

ஊ) இவ்வுலகத்தின் பொருட்களை எல்லாம் நாம் அனுபவித்து இன்புற்று இருப்பது, பொம்மைகளை கிடைப்பதற்கு அரியது என நினைத்து அதனுடன் விளையாடும் குழந்தையின் நிலையை போன்றது தான். அவ்வாறு விளையாடும் குழந்தைக்கு பசி எடுத்தால் தன் தாயிடம் உணவுக்காக அத்தனை பொம்மைகளையும் போட்டு விட்டு ஓடிவிடும். அதுபோல யாருக்கு இறைவன் திருவடிக்கு செல்ல விருப்பம் வருகிறதோ அவனே ஞானப்பசியுற்றவன், அவனே இறைவன் திருவடியை அடைய தகுதி உடையவன்.

எ) இறைவன் சுந்தரருக்கு கேட்கும் போதெல்லாம் பணம் கொடுத்தார் என்பதை படித்து விட்டு நாமும் இனி இறைவனிடம் வேண்டியதை கேட்டு பெறலாம் என்ற முடிவிற்கு நாம் வரக்கூடாது. இறைவனிடம் கேட்க வேண்டியது ஒன்றே ஒன்று எதுவென்றால் சுவாமி மீது என்றும் மாறாத தூய அன்பு மட்டுமே. இவ்வுலகில் வாழ நமக்கு வேண்டிய செல்வத்தை உழைத்துப் பெற வேண்டும். எத்தனை புண்ணியம் செய்திருந்தால் இறைவன் தோழமையாக சுந்தரரை ஏற்றார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்....

தெய்வச் சேக்கிழார் துதி

தில்லை வாழ் அந்தணரே முதலாக சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத்தொகையடியார் பதம் போற்றி
ஒல்லையவர் புராண கதை உலகறிய விரிந்துரைத்த
செல்வமலி குன்றத்தூர் சேக்கிழார் அடி போற்றி

Koviloor Digital Library

அறுபத்து மூவர் குரு பூசை விபரம்

எண்.	நாயனார் பெயர்	குலம்	பிறந்த தலம்	முக்தித் தலம்	பூசை நாள்
01	அதிபத்தர்	பரதவர்	நாகைப்பட்டினம்	நாகைப்பட்டினம்	ஆவணி–ஆயில்யம்
02.	அப்பூதி அடிகள்	அந்தணர்	திங்களூர்	திங்களூர்	தை – சதயம்
03.	அமர்நீதி நாயனார்	வணிகர்	பழையாரை	திருநல்லூர்	ஆனி – பூரம்
04.	அரிவாள்தாயர்	வேளாளர்	கணமங்கலம்	தண்டலைநீள்நெறி	தை – திருவாதிரை
05.	ஆனாயநாயனார்	இடையர்	திருமங்கலம்	திருமங்கலம்	கார்த்திகை–அஸ்தம்
06.	இசை ஞானியார்	ஆதிசைவர்	திருவாரூர்	திருநாவலூர்	சித்திரை–சித்திரை
07.	இடங்கழிநாயனார்	அரசர்	கொடும்பாளூர்	கொடும்பாளூர்	ஐப்பசி–கார்த்திகை
08.	இயற்பகைநாயனார்	வணிகர்	பூம்புகார்	சாய்க்காடு	மார்கழி– உத்திரம்
09.	இளையான்குடிமாறர்	வேளாளர்	இளையான்குடி	இளையான்குடி	ஆவணி–மகம்
10.	உருத்திரபசுபதியார்	அந்தணர்	திருத்தலையூர்	திருத்தலையூர்	புரட்டாசி–அசுவனி
11.	எறிபத்தநாயனார்	தெரியவில்லை	கருவூர்	கருவூர் (கரூர்)	மாசி–அஸ்தம்
12.	ஏயர்கோன்கலிகாமர்	வேளாளர்	திருபெருமங்கலம்	திருபெருமங்கலம்	ஆனி–ரேவதி
13.	ஏனாதி நாதர்	சான்றார்	ஏனநல்லூர்	ஏனநல்லூர்	புரட்டாசி–உத்திராடம்
14.	ஐயடிகள்காடவர்	காடவர்	காஞ்சிபுரம்	தெரியவில்லை	ஐப்பசி–மூலம்

Koviloor Digital Library

15.	கணநாதர்	அந்தணர்	சீர்காழி	சீர்காழி	பங்குனி–திருவாதிரை
16.	கணம்புல்லர்	தெரியவில்லை	பேளூர்	தில்லைபுலீச்சரம்	கார்த்திகை–கார்த்திகை
17.	கண்ணப்பர்	வேடர்	உடுப்பூர்	திருக்காளத்தி	தை–மிருகசீருஷம்
18.	கலியநாயனார்	செக்கார்	திருவொற்றியூர்	திருவொற்றியூர்	ஆடி–கேட்டை
19.	கழறிற்றறிவார்	அரசர்	கொடுங்கோளூர்	திருஅஞ்சைக்களம்	ஆடி–சுவாதி
20.	கழற்சிங்கர்	அரசர்	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்	வைகாசி–பரணி
21.	காரிநாயனார்	அந்தணர்	திருக்கடவூர்	திருக்கடவூர்	மாசி – பூராடம்
22.	காரைக்காலம்மையார்	வணிகர்	காரைக்கால்	திருவாலங்காடு	பங்குனி –சுவாதி
23.	குங்கிலியகலயனார்	அந்தணர்	திருக்கடவூர்	திருக்கடவூர்	ஆவணி–மூலம்
24.	குலச்சிறையார்	மணமேற்குடி	மணமேற்குடி	மதுரை	ஆவணி–அனுடம்
25.	கூற்றுவர்	அரசர்	களப்பால்	-----	ஆடி–திருவாதிரை
26.	கலிக்கம்பர்	வணிகர்	பெண்ணாகடம்	பெண்ணாகடம்	தை–ரேவதி
27.	கோச்செங்கட்சோழர்	அரசர்	உறையூர்	உறையூர்	மாசி–சதயம்
28.	கோட்புலிநாயனார்	வேளாளர்	நாட்டியத்தான்குடி	நாட்டியத்தான்குடி	ஆடி–கேட்டை
29.	சடைய நாயனார்	ஆதிசைவர்	திருநாவலூர்	திருநாவலூர்	மார்கழி–திருவாதிரை
30.	சண்டேசுவரர்	அந்தணர்	சேய்ஞலூர்	ஆப்பாடி	தை–உத்திரம்

Koviloor Digital Library

31.	சக்தி நாயனார்	வேளாளர்	விரிஞ்சையூர்	விரிஞ்சையூர்	ஐப்பசி– பூசம்
32.	சாக்கியர்	வேளாளர்	திருச்சங்கமங்கை	திருச்சங்கமங்கை	மார்கழி–பூராடம்
33.	சிறப்புலிநாயனார்	அந்தணர்	ஆக்கூர்	ஆக்கூர்	கார்த்திகை–பூராடம்
34.	சிறுத்தொண்டர்	மாமாத்திரர்	செங்காட்டங்குடி	செங்காட்டங்குடி	சித்திரை–பரணி
35.	சுந்தரர்	ஆதிசைவர்	திருநாவலூார்	திருஅஞ்சைக்களம்	ஆடி–சுவாதி
36.	செருத்துணையார்	வேள்ாளர்	கீழத்தஞ்சை	திருவாரூர்	ஆவணி–பூசம்
37.	சோமாசிமாறர்	அந்தணர்	அம்பர்	திருவாரூர்	வைகாசி–ஆயில்யம்
38.	தண்டியடிகள்	தெரியவில்லை	திருவாரூர்	திருவாரூர்	பங்குனி–சதயம்
39.	திருக்குறிப்புதொண்டர்	ஏகாலியர்	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்	சித்திரை–சுவாதி
40.	திருஞானசம்பந்தர்	அந்தணர்	சீர்காழி	நல்லூர்பெருமணம்	சைகாசி–மூலம்
41.	திருநாவுக்கரசர்	வேளாளர்	ஆமூர்	திருப்புகலூர்	சித்திரை–சதயம்
42.	திருநாளைப்போவார்	புலையர்	ஆதனூர்	தில்லை	புரட்டாசி–ரோகிணி
43.	திருநீலகண்டர்	குயவர்	தில்லை	தில்லைபுலீச்சரம்	தை–விசாகம்
44.	திருநீலகண்டயாழ்பாணர்	பாணர்	எருக்கத்தம்புலியூர்	நல்லூர்பெருமணம்	வைகாசி–மூலம்
45.	திருநீலநக்கர்	அந்தணர்	சாத்தமங்கை	நல்லூர்பெருமணம்	வைகாசி–மூலம்
46.	திருமூலர்	இடையர்	சாத்தனூர்	திருவாவடுதுறை	ஐப்பசி–அசுவினி

Koviloor Digital Library

47.	நமிநந்திஅடிகள்	அந்தணர்	ஏமப்பேறூர்	திருவாரூர்	வைகாசி–பூசம்
48.	நரசிங்கமுனையர்	அரசர்	திருநாவலூர்	திருநாவலூர்	புரட்டாசி–சதயம்
49.	நின்றசீர்நெடுமாறன்	அரசர்	மதுரை	மதுரை	ஐப்பசி–பரணி
50.	நேச நாயனார்	சாலியர்	காம்பிலி	காம்பிலி	பங்குனி–ரோகினி
51.	புகழ்ச்சோழர்	அரசர்	உறையூர்	கருவூர்	ஆடி–கிருத்திகை
52.	புகழ்த்துணையார்	ஆதிசைவர்	அரிசிற்கரைபுத்தூர்	அரிசிற்கரைபுத்தூர்	ஆவணி–ஆயில்யம்
53.	பூசலார்	அந்தணர்	திருநின்றவூர்	திருநின்றவூர்	ஐப்பசி–அனுடம்
54.	பெருமிழலைகுறும்பர்	குறும்பர்	பெருமிழலை	பெருமிழலை	ஆடி–சித்திரை
55.	மங்கையர்கரசியார்	அரசர்	பழையாறை	மதுரை	சித்திரை–ரோகிணி
56.	மானக்கஞ்சாறநாயனார்	வேளாளர்	கஞ்சாறூர்	கஞ்சாறூர்	மார்கழி–சுவாதி
57.	முருக நாயனார்	அந்தணர்	திருப்புகலூர்	நல்லூர்பெருமணம்	வைகாசி–மூலம்
58.	முனையடுவார்	வேளாளர்	நீடூர்	நீடூர்	பங்குனி – பூசம்
59.	மூர்க்கநாயனார்	வேளாளர்	திருவேற்காடு	கும்பகோணம்	கார்த்திகை–மூலம்
60.	மூர்த்திநாயனார்	வணிகர்	மதுரை	மதுரை	ஆடி–கார்த்திகை
61.	மெய்ப்பொருள்நாயனார்	அரசர்	திருக்கோவிலூர்	திருக்கோவிலூர்	கார்த்திகை–உத்திரம்
62.	வாயிலார்நாயனார்	வேளாளர்	திருமயிலை	திருமயிலை	மார்கழி–ரேவதி
63.	விறன்மிண்டர்	வேளாளர்	செங்கண்ணூர்	தெரியவில்லை	சித்திரை–திருவாதிரை

Koviloor Digital Library

ஓம் திருச்சிற்றம்பலம்

பன்னிரு திருமுறை விளக்க அட்டவணை

திருமுறை	அருளியவர்	பதிகம் எண்ணிக்கை	பாடல் எண்ணிக்கை	நூலின் பெயர்
1ம் திருமுறை	திருஞானசம்பந்தர்	136	1469	திருக்கடைகாப்பு 4158 பாடல்
2ம் திருமுறை	திருஞானசம்பந்தர்	122	1331	
3ம் திருமுறை	திருஞானசம்பந்தர்	125	1347	
	திருவிடைவாய் பிற்சேர்க்கை	1	11	
4ம் திருமுறை	திருநாவுக்கரசர்	113	1070	தேவாரம் 3066 பாடல்
5ம் திருமுறை	திருநாவுக்கரசர்	100	1015	
6ம் திருமுறை	திருநாவுக்கரசர்	99	981	
7ம் திருமுறை	சுந்தரர்	100	1026	திருப்பாட்டு 1026
8ம் திருமுறை	மாணிக்கவாசகர்	51	658	திருவாசகம்
			400	திருக்கோவையார்
9ம் திருமுறை	அ.திருமாளிகைதேவர்	4	45	திருவிசைப்பா
	ஆ.சேந்தனார்	4	47	திருவிசைப்பா, திருப்பல்லாண்டு
	இ. கருவூர்த்தேவர்	10	103	திருவிசைப்பா

Koviloor Digital Library

திருமுறை	அருளியவர்	பதிகம் எண்ணிக்கை	பாடல் எண்ணிக்கை	அழைக்கப்படும் பெயர்
9ம் திருமுறை	ஈ. பூந்துருத்தி நம்பிகாடநம்பி	2	12	திருவிசைப்பா
	உ.கண்டராதித்தர்	1	10	திருவிசைப்பா
	ஊ. வேணாட்டடிகள்	1	10	திருவிசைப்பா
	எ. திருவாலிய அமுதனார்	4	42	திருவிசைப்பா
	ஏ. புருடோத்தமநம்பி	2	22	திருவிசைப்பா
	ஐ. சேதிராயர்	1	10	திருவிசைப்பா
10ம் திருமுறை	திருமூலர்			3000 திருமந்திரம்
11ம் திருமுறை		அருளிய நூல்கள்		பாடல் எண்ணிக்கை
	அ.திருஆலவாய் உடையார்	திருமுகப்பாசுரம்		1
	ஆ.காரைக்கால் அம்மையார்	மூத்த திருப்பதிகம் இரட்டை மணிமாலை அற்புதத் திருவந்தாதி		143

Koviloor Digital Library

திருமுறை	அருளியவர்	அருளிய நூல்கள்	பாடல் எண்ணிக்கை
11ம் திருமுறை	இ. ஐயடிகள் காடவர்கோன்	சேத்திரத் திருவெண்பா	24
	ஈ. சேரமான் பெருமான்	பொன்வண்ணத்து அந்தாதி திருவாரூர் மும்மணிக்கோவை திருக்கயிலாய ஞானஉலா	131
	உ. நக்கீரதேவர்	கயிலைபாதி காளத்திபாதி திருஈங்கோய் மலை எழுபது திருவலஞ்சுழி மும்மணிக்கோவை திருஎழுக்கூற்றிருக்கை பெருந்தேவபாணி கோபப்பிரசாதம் கார் எட்டு போற்றிக்கலிவெண்பா திருமுருகாற்றுப்படை திருக்கண்ணப்பதேவர்திருமறம்	199
	ஊ. கல்லாடதேவர்	திருக்கண்ணப்பதேவர் திருமறம்	1
	எ. கபிலதேவர்	மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை சிவபெருமான் திருவந்தாதி	157

Koviloor Digital Library

திருமுறை	அருளியவர்	அருளிய நூல்கள்	பாடல் எண்ணிக்கை
11ம் திருமுறை	ஏ.பரணதேவர்	சிவபெருமான் திருவந்தாதி	100
	ஐ.இளம்பெருமான்.அடிகள்	சிவபெருமான் திருமும்மணிக்கோவை	30
	ஓ. அதிராவடிகள்	மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை	23
	ஓ. பட்டினத்து அடிகள்	கோயில்நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக் கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருஏகம்பம் உடையார் திருவந்தாதி, திருவெற்றியூர் ஒருபா ஒருபது	192
	ஔ. நம்பியாண்டார் நம்பி	திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை கோயில் திருப்பணியர் திருவிருத்தம் திருத்தொண்டர் திருவந்தாதி ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி ஆளுடைய பிள்ளையார் திருச்செண்டை விருத்தம் ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை ஆளுடைய பிள்ளையார் திருஉலா மாலை ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை திருநாவுக்கரசுதேவர் திருஏகாதசமாலை	384
12ம் திருமுறை	சேக்கிழார்	பெரியபுராணம் (திருத்தொண்டர்புராணம்)	4273
	ஆதாரம் தருமை ஆதீனம் பதிப்பு		

Koviloor Digital Library

சைவ சித்தாந்த மெய்கண்ட ஞான சாத்திர நூல்களின் வரலாறு

சிவபெருமான்

↓

நந்திதேவர்

↓

சனற்குமாரர், சனகர், சனந்தரர், சனாதரர்

↓

சத்தியஞானதரிசினி

↓

பரஞ்சோதியார்

சந்தானம் என்பது உபதேச பரம்பரை என்று பொருள். சிவபெருமானால் உபதேசிக்கப் பெற்ற நந்திதேவர் முதல் பரஞ்சோதியார் வரை கயிலையில் நிகழ்ந்தததால் அகச்சந்தானம் எனவும், பரஞ்சோதியார் பூலோகத்தில் (திருவெண்ணெய்நல்லூர்) இறங்கி மெய்கண்டார்க்கு உபதேசிக்க அக்குருவழி உமாபதிசிவம் வரை இப்புவியில் நிகழ்ந்ததால் புறச்சந்தானம் என்றும் கூறுவர். இவர்கள் எழுதிய நூல் சித்தாந்த சாத்திரம் ஆகும். சாத்திரம் என்பது உயிரின் தன்மை, பாசத்தின் நிலை, பாசத்தில் கட்டுண்டு கிடக்கும் உயிர், இறைவனை அடையும் நெறி, இவைகளை தெளிவு செய்வதே சாத்திரம் ஆகும்.

புறச்சந்தானம்

மெய்கண்டார்

(இயற்பெயர் – சுவேதவனப்பெருமாள், ஊர்–பெண்ணாகடம்;காலம்1232

எழுதிய நூல் – சிவஞானபோதம்)

↓

அருணந்திசிவம்

ஊர் : திருத்துறையூர்

இயற்பெயர் : சதாசிவ சிவாச்சாரியார்

சகல ஆகம பண்டிதர்

இயற்றிய நூல் : சிவஞான சித்தியார்,இருபா இருபஃது.

மனவாசகம் கடந்தார்

ஊர் – திருவதிகை

இயற்றிய நூல் :

உண்மை விளக்கம்

Koviloor Digital Library

மறைஞானசம்பந்தர்

(ஊர் – பெண்ணாகடம் நூல் – எழுதவில்லை)

உமாபதி சிவம்

ஆண்டு –1313. ஊர் – தில்லை (கொற்றவன்குடி).இயற்றியநூல்–சிவப் பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றி பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, சங்கற்பநிராகரணம் ஆகிய ஏழு நூல்கள் மற்றும் உண்மை நெறி விளக்கம் – ஆசிரியர் :சீர்காழி தத்துவநாதர்

மச்சு செட்டியார் வழியில் 8வது மாணவர் குருஞானசம்பந்தர் தருமை ஆதீனம் நிறுவினார். திருக்கயிலாய பரம்பரை என போற்றப்படுகிறது. (தற்போது 27வது பட்டம்)

அருள்நமசிவாயர்

↓

சிவப்பிரகாசர்

↓

நமசிவாய மூர்த்திகள்

↓

திருவாவடுதுறை ஆதீனம் 1360 ஆண்டு நிறுவினார். தற்போது 24வது பட்டம் (திருக்கயிலாய பரம்பரை) என போற்றப்படுகிறது

மெய்கண்டார்க்கு முன் தோன்றிய சாத்திர நூல்கள்

திருவியலூர் உய்ய வந்த தேவநாயனார் இயற்றிய திருஉந்தியார், 14 சாத்திர நூலில் இடம்பெற்றுள்ளது

திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் இயற்றிய திருக் களிற்றுப்படியார் 14 சாத்திர நூலில் இடம் பெற்றுள்ளது.

Koviloor Digital Library

சிவசிவ

சித்தாந்த சாத்திர நூல் விளக்கம்

1. திருஉந்தியார்	–	45 பாடல்கள்
2. திருக்களிற்றுப்பாடியார்	–	100 பாடல்கள்
3. சிவஞானபோதம்	–	12 நூற்பா (சூத்திரம்)
4. சிவஞானசித்தியார்		
பரபக்கம்	–	301 பாடல்கள்
சுபக்கம்	–	328 பாடல்கள்
5. இருபா இருபஃது	–	20 பாடல்கள்
6. உண்மை விளக்கம்	–	54 பாடல்கள்
7. சிவப்பிரகாசம்	–	100 பாடல்கள்
8. திருவருட்பயன்	–	100 பாடல்கள்
9. வினாவெண்பா	–	13 பாடல்கள்
10. போற்றி பஃறொடை	–	95 தொடை
11. கொடிக்கவி	–	5 பாடல்கள்
12. நெஞ்சுவிடு தூது	–	129 கண்ணி கொண்டது
13. உண்மை நெறி விளக்கம்	–	6 பாடல்கள்
14. சங்கற்ப நிராகரணம்	–	9 பகுதிகள் கொண்டது

ஆதாரம் தருமை ஆதீனம் பதிப்பு

வாழ்த்து

வாழ்க! அந்தணர் வானவர் ஆனினம்;
வீழ்க ! தண்புனல்; வேந்தனும் ஓங்குக !
ஆழ்க ! தீயது; எல்லாம் அரன் நாமமே
சூழ்க ! வையகமும் துயர்தீர்கவே ! – திருஞானசம்பந்தர்

Koviloor Digital Library

ஓம் சிவாய நம

சிவாய நம ஓம் சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் சிவாய நம ஓம்

அண்ணாமலை சிவ சிவாய நம ஓம்
அருணாசல சிவ சிவாய நம ஓம்

ஆலங்காடா சிவாய நம ஓம்
ஆரூர் அரசே சிவாய நம ஓம்

இன்னம்பர் ஈசா சிவாய நம ஓம்
இன்றெனக் கருள்வாய் சிவாய நம ஓம்

ஈங்கோய் மலையாய் சிவாய நம ஓம்
ஈங்கெழுந்தருள்வாய் சிவாய நம ஓம்

உ ண்ணாமலை சிவ சிவாய நம ஓம்
உண்மைப்பொருளே சிவாய நம ஓம்

ஊனம் ஒன்றில்லாய் சிவாய நம ஓம்
ஊழி ஏழானாய் சிவாய நம ஓம்

எழுத்தறி நாதரே சிவாய நம ஓம்
என்றும் இளையாய் சிவாய நம ஓம்

ஏகம்பம் மேயாய் சிவாய நம ஓம்
ஏடகத்துறைவாய் சிவாய நம ஓம்

ஐந்தெழுத்து உருவாய் சிவாய நம ஓம்
ஐயாறு மேயாய் சிவாய நம ஓம்

ஒற்றியூர் உள்ளாய் சிவாய நம ஓம்
ஒண்பொருளே சிவ சிவாய நம ஓம்

ஓண காந்தேஸ்வர சிவாய நம ஓம்
ஓலம் அடிகேள் சிவாய நம ஓம்

சிவாய நம ஓம் அபாயம் யாவும் போம்
அபாயம் யாவும் போம் உபாயம் அறிவோம்

உபாயம் அறிவோம் உள்ளமது தெளிவோம்
உள்ளமது அறிவோம் சிவாய நம் ஓம்

சிவ சிவ என்போம் சிவகதி பெறுவோம்
ஹர ஹர என்போம் அவன் தாள் பணிவோம்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

அறுபத்து மூன்று நாயன்மார்கள் வரலாறு